508 | நூ-தொ | வை-வா-யோ
138 | 1. | ஞா-திரட்டு.

வைத்தியவாதயோகஞானத்திரட்டு.

பக்கம் 264. பாகம் 1.

V. 160
S-5/
598

உ

குமரன்றுணை.

## தேவரிஷி முனி சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

## வைத்திய வாத யோக

# ஞானசாஸ்திரத்திரட்டு

ஒன்பதாம்பாகப் புஸ்தகம்.

இஃது

மதுரை வித்துவான்

த. குப்புசாமி நாயுடு அவர்களால்

பரிசோதிக்கப் பெற்று:

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்

இ. ராம.

## குருசாமிக் கோனர்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசி வீதி

ஸ்ரீராமச்சந்திர விலாசம் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1917

*Registered Copy Right.*

இதன் விலை — ரூ 1-4-0

உ

குமாரகுருபரன்றுணை.

## தேவ, ரிஷி, முனி, சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

55/88DC

## வைத்திய வாத யோக

# ஞான சாஸ்திரத் திரட்டு.

"ஒன்பதாம்பாகம்."

## கருவூரார் சிவஞானபோதகம் சஙு.

சதிராக அரனிடமா யிருந்தாளாத்தாள்
சாட்சியடா வொருத்தியிவ ளண்டமெல்லாம்
சதிராகக் காலாலே யுள்ளங்கையாற்
றுனடக்கஞ் செய்துசிவ சூட்சமானுள்
சதிராக மலையேறி நிலையாக்கேணித்
தண்ணீரைத் தலையாலே காலால்வாரிச்
சதிராக ஒருபுறமாய்க் கரையில்நீந்தித்
தான்படித்தா ளிருதாளே சரணந்தானே. (1)

தானேதோ முகமாநாற் பிரணவமுஞ்சொன்னுள்
தான்சொன்ன தலமேதோ முகமேயாறு
கோனேதா னுயிரம்பேர் குறியாம்வாசிக்
குதிரையடா அங்கவடி கொண்டேயேறி
நானேநீ யென்றவுப நிடதசோதி
நகாரமடா பட்டணத்துள் நாலாம்வீதி
மானேதான் குருதேசி தேவிவாலை
மகராசி விசுவாசி மவுனியாமே. (2)

மவுனியவள் நிராமயமா யிருந்தாளாத்தாள்
மதிகுறையாக் கன்னிசிறு பிள்ளையப்பா
புவனமதிற் செகசால வித்தையாடிப்
புவனைதிரி புரையெனவே நின்றாள்வாலை
சிவமயமா யிரண்டெழுத்தா யசபையாகி
ஸ்ரீகோணக் குறியாகிச் சித்தர்க்கெல்லாம்
மவுனமென்ற வுபதேச மகண்டவீதி
மணிகனக கெவுனமஞ்ஞ மணியாம்பாரே. (3)

பாரப்பா ஐவருக்கும் பாரியென்றாள்
பவுரணையிற் பக்கமமா வாசியென்றாள்
பாரப்பா அஷ்டசத்தி யெட்டுமானாள்
பகரரிதாய்ப் பூரணமாய் நிறைந்தாளாத்தாள்
பாரப்பா அஷ்டசித்து மிவளேயானாள்
பதிவான தீட்சைபதி ஞென்றுமானாள்
ஆரப்பா யிவளுடைய சொரூபந்தன்னை
யறிந்தவர்கள் சொல்லாரம் பரமாமென்னே. (4)

அம்பரமே பராபரமா யேதுமில்லா
அனாதியிவ ளென்றதினால் தீட்சையானாள்
அம்பரமே பரஞ்சுடராய் மூளைத்தாளுடே
ஆத்தாளே சிவக்கொழுந்தா யெழுந்தாளப்பா
பம்பரமே ஆடிடும்போற் கண்ணலாட்டிப்
பரமசிவ னிடப்பாக மானாள்பாரு
தம்பரமே திகம்பரமாய்ப் பிராணயம்பண்ணச்
சமத்தியிவள் மதிக்கண்ண லொளியைப்பாரே. (5)

ஒளியாகிக் குண்டலியாய் மூலந்தன்னில்
உதித்தெழுந்த முக்கோண சட்கோணத்தில்
வெளியாகி வெளிநிறைந்த வகண்டமாகி
வேதாந்தச் சிவனிடமாய் விளங்குந்தேவி
அழியாத கன்னிகையா மாத்தாளாத்தாள்
அரூபவொளி சிறுபெண்ண மருமைக்கன்னி
சுழியாகிச் சுழிகண்ட சித்தர்க்கெல்லாஞ்
சுத்தமசுத் தஞ்சுத்தஞ் சொல்வாள்தானே. (6)

தானான வுருத்திரன்று ளெட்டுமென்றுள்
        தானவர்க்கும் ஐவருக்குந் தாரமென்றுள்
மானான ரூபியிவ ளரூபமானாள்
        மவுனசத்தி நிருவாணி மாயாரூபி
தேனான சொல்லுடையா ளுமைப்பெண்ணும்
        சிவரூபி பேரிளம்பெண் பருவமப்பா
ஊனான அகாரத்தில் முதலாஞ்சோதி
        உகாரசத்தி பத்துடையாட் குண்மைதானே. (7)

உண்மையிவ ளொருத்திநிலம் நீர்தீகாற்று
        யுயர்வானு யிருசுடரா யுயிராஞ்சத்தி
உண்மையிவ ளொன்றாகி விண்ணுமாகி
        ஓகோகோ பூரணியாய் மூலத்தூணி
உண்மையிவள் பதினாறில் நாலுமாகி
        ஓங்காரப் பூரணமா யொளித்தாளாத்தாள்
தண்மையிவள் தண்மையென்ற சித்தர்க்கெல்லாம்
        சதாநித்தந் தாயாகி யிருந்தாள்பாரே. (8)

பாரடா பூரணத்தை யுன்னாலெட்டு
        பகரரிய முன்னாலே பின்னாலப்பா
பாரடா கருவானு ளுமையாள்தேவி
        பருவமோ ரெட்டாகி விட்டாளாத்தாள்
பாரடா அகாரமுதல் உகாரங்கொண்டு
        பரிசுத்தந் தொக்காகிச் சூட்சமானாள்
பாரடா மனம்பூண்டா லுறவேயானாள்
        பஞ்சவர்ண ரூபியிவள் சூட்சம்பாரே. (9)

சூட்சமதா யூஞ்சலிலே யொயிலாயாடி
        சொரிகுழலில் மாதளம்பூ,கொன்றைசூடி
ஆட்சியிவ ளொருகாலே மடித்துநீட்டி
        அங்கையிலே வீணைகொண்டு கரத்தால்மீட்டி
தாட்சியில்லா தறுபத்து நாலுராகம்
        சமர்த்தியிவ ளனுராகம் பாடிப்பாடி
காட்சிபெற அாளுரு மாடலாடக்
        கன்னியிவ ளதிகமா யாடினளே. (10)

ஆடினதோ ருஞ்சலிலே ஆத்தாளாட
அண்டபகி ரண்டமெல்லாங் குலுங்கியாட
ஆடினதோர் மாலயனுந் தேவராட
அசையாத மணிபூர மசைந்தேயாடத்
தேடியதோர் சதாசிவனுந் தேடியாடச்
சித்தருடன் முனிவோர்கள் சேரவாடப்
பாடியதோ ராத்தாளைப் பார்த்துப்பார்த்துப்
பரமசிவன் பணித்தாடப் பணிந்தார்பாரே. (11)

பாரப்பா சிறுபிள்ளை மெத்தப்புத்தி
படித்ததொழி லெம்மாலே சொல்லப்போமோ
நீரப்பா மண்காலால் வெளியிற் றீயால்
நெருப்பாறு மயிர்ப்பால மதின்மேற்காலை
சீரப்பா வொருகாலை யஞ்சுகாலாய்த்
திருநடன மாடியவள் தீர்ந்தகூத்து
ஆரப்பா கண்ணாலே பார்க்கப்போறார்
அவள்லீலி நாடகமா யாடினாளே. (12)

ஆடியதோ ராறுபத்து நாலுகூத்தும்
அரைச்சணத்தி லாடிமறு தொழிலைக்கேளு
பாடியதோர் கைவீணை யெட்டுராகம்
பதித்தமெட்டி லடக்கிமறு தந்திமீட்டி
நாடியொரு கலைநாலு ராகம்பாடி
நாலுமறை பதித்தயெட்டு ராகத்தோடே
கூடியது தெரியாமல் வெளியிலாடக்
குறையாத கூர்மையினா ளாடினாளே. (13)

நாளொன்றுக் கறுபதுநா ழிகையாமஞ்சில்
நமசிவயம் ஓமெனவே மாறிமாறிக்
கேளென்று ஆதார மாறுமொன்றுப்க்
கேசாத்திற் கூடியங்கே ஆடுங்கூத்து
மாளென்று மனமாண்ட சித்தர்காண
மாசற்ற சோதியென நின்றாளாத்தாள்
கேளென்று யின்னமொரு காரணந்தான்
கேசரியாள் பரவெளியி லாடுங்கூத்தே. (14)

கூத்தான தொன்றுமில்லை மெத்தமெத்தக்
கூறுதற்கு நாவுமுண்டோ கூறப்போமோ
பாத்தாளே சிறுபிள்ளை பிராயம்பத்துப்
பக்குவத்தாற் கணவனன்றிப் பெற்றாள்பிள்ளை
காத்தாளே தீய்க்கொளுத்தி வீட்டைச்சுட்டுக்
கைத்திட்டங் காமானஞ் சுட்டவீட்டை
ஆத்தாளே திரும்பவதை யெடுத்துக்கட்டி
அஞ்சரையி லாறரையாய்க் கட்டினாளே. (15)

கட்டியதோர் வீடெடுத்தாள் கட்டுமெட்டாய்க்
காலுமது யிருகாலை முக்காலாக்கி
கட்டநடு வீதியிலே வீட்டைக்கட்டி
நல்லவள்போல் நால்பேரும் பார்க்கப்பார்க்கச்
சுட்டியிவள் மாமணைதான் மதியவேளை
சுகமாக வனுபோகங் கொண்டாள்கேளு
கெட்டிகெட்டி யிவளுடைய மார்க்கமெல்லாம்
கேட்டவர்க்குப் பரிசுகெட்ட கேள்விதானே. (16)

தானவளா யிருந்துகொண்டா ளஞ்சும்மூன்றுந்
தானணைத்தா ளிருதாளுங் கட்டிச்சேர்ந்தாள்
மானவள்தா னிப்படியுஞ் செய்ததல்லால்
மறுபடியுஞ் சிறுபிள்ளை நான்தானென்றாள்
தேனவள்சொல் மொழியுடையா ளிவளைப்போலே
சித்தருக்குக் கிடையாது செகத்திலப்பா
கோனவளாய் நின்றாள்தான் குருவுமானாள்
கூச்சமென்ன யின்னமிவள் கோலங்கேளே. (17)

கோலமென்ன நிருவாணி யாத்தாள்கோலம்
கொண்டவனை யம்பலத்தி லாட்டங்கொண்டு
மாலயனுந் தேவர்களும் முனிவர்சூழ
வந்துநின்று செயசெயெனப் பார்த்துநிற்கச்
சாலமொரு காலையவ ளென்காலாடச்
சமமுனையி லொருகாலைச் சுழித்துஆட்டி
மேலொருகா லேறியவள் நடனஞ்செய்து
வெற்றியென்ற முக்காலாய்ச் சமைந்தகூத்தே. (18)

சமைந்தவளு மாடுகின்ற சமயந்தன்னிற்
சம்பிரம அம்பலவ ரும்பர் காணச்
சமைந்தவளைக் காண்பதற்குச் சமயங்காணச்
சாயுச்யம் பெற்றதொரு ஞானிகாண
உமைந்தெழுகால் முன்னோடி யெட்டுச்சாரி
உபநிடமாய்ப் பரசமய மாடித்தீர்ந்து
அமைந்தரனு ராடினதோர் கூத்தைக்கண்டு
ஆத்தாளுங் கண்டுமெச்சிச் சிரிப்பாள்பாரே. (19)

சிரித்ததொரு ஆத்தாளை யரனார்மெச்சத்
தேவர்களும் மாலயனும் முனிவோர்மெச்சக்
குறித்திவர்க ளிருபேரு மாடுங்கூத்தைக்
கூறும்வெற்றி தோர்வையது மிச்சமேது
திறத்துடனே ஆடினதோ ரந்தக்காலத்
தீர்க்கமிதை யறிந்தவனே யோகசித்தன்
மறத்திபிவ ளுரைத்தசிவ னிரண்டுமெட்டாய்
வந்தகுறி பத்தாய மாடுதானே. (20)

மாடான ரிஷபமதி லீசனேறி
வருகிறது கண்டகண்ணி யஞ்சாங்கூத்து
ஆடான முதலாறுங் கூடுங்கள்ளி
அளவற்ற பெயரையெல்லா மாயையாலே
கேடான வழிமார்க்கஞ் செய்துதள்ளிக்
கேசரத்திற் பாய்ந்தேறி யீசனோடே
தேடாமற் சேர்ந்திரண்டு மெட்டுமொன்றாஞ்
சித்தாதி சித்தனென்றாற் றெரியுங்காணே. (21)

காணாது சத்திசிவ மிரண்டுங்கூடிக்
கலந்துநின்ற கூர்மையினாற் கசிவதாகித்
தோணாம லாடுகின்ற சூட்சங்கண்டு
சோதியவள் பரஞ்சோதி யாட்டங்கண்டு
பூணாமற் பூண்டுகொண்டு மனமேபூணப்
பூரணமாய் நிராமயமாய் நிறைந்தாளாத்தாள்
ஆணான ஆண்பிள்ளைச் சித்தனானால்
ஆத்தாளைப் பூசைபண்ணி யறிவான்பாரே. (22)

அறிவான அறிவுவர வென்னசொன்னேன்
ஆத்தாளை யடிதொழுது வணங்கச்சொன்னேன்
குறியான குறிகண்டு கூடச்சொன்னேன்
குகைவாச லறிவோடே காக்கச்சொன்னேன்
நெறியான பூசைவிதி பண்ணச்சொன்னேன்
நிசமாக மனமாண்டு போகச்சொன்னேன்.
பிறியாமல் மவுனமுற்றே யிருக்கச்சொன்னேன்
பெண்களொரு கோடிகொண்டு கொன்றுபூணே (23)

கொன்றுகொன்று பூணுவது கோடிக்கொன்று
கொல்லுவது மாரையினிக் கொல்லப்போமோ
நன்றுநன்று கருவிகளைக் கொன்றுதின்னு
நட்டமென்ன பட்டமரம் பால்போற்பச்சை
ஒன்றுமில்லை யென்றுமில்லை உற்றுரப்பா
ஓகோகோ வுட்புகுந்து பாருபாரு
அன்றுமின்று மொருநாளு மழியாக்கன்னி
ஆகாகா கொடுசூரி யறியார்க்கென்னே. (24)

என்னவிதி கருமமிது கருமமெட்டு
மேழரையி லாடுமிது ஆருஞ்சொல்லார்
சொன்னமொழி கருமறைப்பாய்ச் சொல்லவில்லை
சூட்சமிதை யறிந்தவர்க்குக் காயஞ்சித்தி
இன்னதென்று தெரியவில்லை யென்னவேண்டாம்
ஏகமொன்ருய்ச் சோதித்து விடையம்பாரு
தன்னமைநீ முன்னமேதா னென்றுபோலே
சற்குருவை வெளிதோணக் காணுவாயே (25)

காணுவது வாதமொடு யோகஞ்சித்தி
கைகண்ட கிரியையொன்று சொல்லக்கேளு
சாணுமொரு முழமாகும் பாகமொன்று
தன்பாகங் கைபாகம் நெறியாய்ச்செய்யத்
தோணுமது சத்தியுட பூசைதன்னிற்
சொற்குற்றம் பொருட்குற்றம் மனத்தியானந்
தாணுவுடை மூன்றெழுத்தை யிடத்திலோதிச்
சமரசமா யஞ்செழுத்தை வலத்திலோதே. (26)

ஓதுசரஞ் சுழிமுனையி லெட்டுஞ்சேர்த்து
ஓகோகோ ஓதிடவே தாயைப்போலே
மாதுஅவ ளாத்தாள்தான் கன்னிகன்னி
மயக்கறுத்துக் கற்பமுண்ண அமுதமீய்வாள்
கோதுபழு தில்லாத பூசைசொல்வாள்
குமரகுரு பரனையவள் பெற்றதேவி
காதிலுப தேசமதைக் கேட்கச்சொல்வாள்
கருவிடையஞ் சொல்லியவள் காட்டுவாளே. (27)

காட்டுவாள் சரியையொடு கிரியைரெண்டும்
கண்காட்டித் தள்ளிவிட்டு யோகஞ்செய்ய
மூட்டுவாள் குண்டலியாஞ் சத்திசத்தி
முதலான அடிநடுவு முடிவுமொன்றாய்
ஆட்டுவாள் கால்காட்டித் தீயைமூட்டி
அங்கிகதிர் மதியாமண் டலங்கள்மூன்றும்
பூட்டுவா ளாதிசத்தி பத்துத்தீட்சை
புனிதமிவள் பத்துப்பே ரானாள்தானே. (28)

தானென்ற மூலமதில் முக்கோணத்துள்
தடைவாச லுட்கதவு பூட்டுமாகி
ஊனென்ற தியானமது திறவுகோலாய்
ஓமெனவே தடைவாசல் திறக்குங்காலாய்
மானென்ற கன்னியவள் மூலத்தீயால்
மனோமணியா யாறுவரை கடக்கமுத்தி
தேனென்ற மொழியாள்குண் டலியாஞ்சத்தி
திரிகரண சுத்திசெய்யுந் தேவிதானே. (29)

தேவியவள் முதல்வீடாய் யாறுவீடும்
செய்துஒரு சிறுவீடாய் மூன்றுகோணம்
ஆவியுயிர் பூரணமாய்ச் சூட்சம்நாலாய்
அடிப்படையில் மூலபில மானாளாத்தாள்
தாவிவினாய்ப் பத்தியிதை யறிந்துகொள்வோன்
சத்திசிவ மசைவான தெட்டுரெண்டாய்
கூவியொன்றாய் விளையாடுஞ் சூட்சங்கண்டு
கூடினவன் தன்னையுந்தா னறிவான்தானே. (30)

தானெனவுந் தன்னையுந்தா னறிந்தானானற்
றானசைப அசையாமல் இருந்துகொண்டு
நானெனவு மெழுத்தறிந்து ஊமைப்பேச்சை
நானீநா னென்றுசொல்லி யுண்மைபேசித்
தேனெனவு மமுதமது பானமுண்டு
செகமெல்லா மொன்றுமில்லை யென்றுபூண்டு
கோனெனவும் பராபரத்திற் சேர்ந்துகொண்டு
கோடியுகம் ஊழிவரை யிருப்பார்காணே. (31)

இருப்பதற்கு வீணாசை கொண்டாற்சும்மா
எளிதாமோ யிதற்குமுற்கா லறியப்போமோ
கருப்பிறக்கு முன்கூடி முற்கால்நின்ற
கன்னிக்குள் ளெட்டான காலிரண்டை
விருப்பமுட னிரண்டாய்த் திருப்புநாலை
விட்டகுறை மார்க்கமிதை யறியப்போமோ
சிரிப்பதற்கு உடம்பெடுத்து வாய்வீண்பேசித்
தேசத்தி லலைவார்கள் திருடர்தாமே. (32)

திருடர்பல விதமாய்ச்சாஸ் திரங்கள்கற்றுத்
தீனுக்காய்ச் சாஸ்திரத்தின் குறிதோணாமற்
குருடனவன் வகைதெரியா தெழுத்தைச்சொல்லிக்
குருக்களென்று வேடமதைப் பூண்டுகொண்டு
வருடியவன் பெண்மாயை மயக்கத்தாலே
மதிகெட்டு உபதேசஞ் சொல்வானப்பா
மூடனவன் கசுமால மட்டிமாண்பன்
முத்தியென்று செத்தெழுத்தைச் சொல்வான்பாரே. (33)

சொல்லுவா னுபசாரம் பணங்கள்வாங்கிச்
சொர்க்கமிந்தா யிருக்குதென்பான் சொத்தைத்தின்பான்
புல்லுவான் பெண்களைத்தான் கழுத்தைக்கட்டும்
புத்திகெட்ட சவங்களப்பா பேச்சுக்கஞ்சான்
சல்லியாய் வாய்ப்பேச்சே ஞானமென்று
தாட்டோட்டுச செய்துகுரு நான்தானென்பான்
செல்லுவா னூர்தோறுங் கூட்டங்கூடிச்
சிவதவங்கள் செய்தறியா மடையன்தானே. (34)

மடையனிவ னென்றுசொல்லிப் பொன்னீய்ந்தாலும்
வாங்கியவன் மகாராஜன் நீயேயென்பான்
விடையமவ னஞ்செழுத்தை விடையம்பார்த்து
மெய்ப்பொருளைப் போற்றாத வீணனப்பா
சடைவொருநாட் சடையாம வில்லங்தோறும்
தருகாமல் நடந்துபொருள் பறிப்பான்மட்டை
அடையாள மவன்றனக்குச் சொல்லவென்றால்
அவன்பிறவி முற்செனனங் கழுதையாமே. (35)

கழுதையது தன்னாலுங் கிரிகையுண்டு
கசடனவன் தன்னாலே யொன்றுமில்லை
முழுதுமவன் மூதேவி முகத்தில்நீயும்
முழியாதே யவன்பேச்சைப் பேசவேண்டாம்
பழுதறவே பெரியோர்கள் பாதம்போற்றிப்
பத்தியுடன் முக்காலும் முத்திபார்த்துத்
தொழுதுகதி யேறுதற்கு மனதைக்கொன்று
தொல்லைவினை தீருதற்குத் தன்னைப்பாரே. (36)

தன்னையுந்தான் நீயேதான் தனித்துப்பாரு
தன்மத்துக் காய்ச்சொல்வேன் குறியைக்கேளு
முன்னையுந்தான் நான்சாகப் பச்சைநாவி
முக்காலு முண்டதைநீ கண்டுகண்டு
பின்னையுந்தான் நாவிபச்சை வேகமெத்தப்
பிரட்டல்ல கன்னியைத்தான் சிங்கமப்பா
அன்னையெனக் கன்னிகையே ராசியாக
ஆனாலுங் கண்டுகண்டு தேறுதேறே. (37)

தேறுதற்கு நவமியிலே முதலாம்பக்கம்
சிறந்தவெழிற் பவானியாம் அம்மாவாசி
ஆறுதற்குக் கன்னிமுதல் மீனமேழும்
அசுபதியாம் நாலேழிற் புனர்பூசத்தில்
மாறுதற்கு அனுகமுதல் பவுனத்தியானம்
மாறியிதைக் கால்முதலா யாருமோதக்
கூறுதற்குச் சற்குருபோ லாத்தாள்கன்னி
குமரியவள் நமசிவயங் கூடினாளே. (38)

கூடினு ரஞ்சுமொன்ருய் ஓம்ஓம்யென்று
 கூறுமவ ளுள்ளாவள் குமரியப்பா
ஆடியவள் அமர்ந்திருந்த இடமுங்காணுர்
 அந்தரங்க மென்றபொருள் வெளியாய்ப்போச்சு
தேடினதோர் பொருள்வாய்த்துக் காலிற்றட்டிச்
 சென்றெடுத்துக் கொண்டதுபோல் வாய்த்துக்கொள்ளும்
ஓடினதோ ரோட்டமெல்லாங் காலைக்கொண்டு
 உட்காலைச் சித்தனென்ருல் மடக்கிக்கொள்ளே. (39)

மடக்குங்கா லறிந்துமுக்கால் மடக்கிக்கொள்ள
 மவுன்முதல் மதியமுதஞ் சிக்கிக்கொள்ளும்
அடக்கமென்ற கன்னியவ ளந்தா அந்தா
 அங்கையத்தி முகனெனவே அங்கைநாளாய்த்
தொடுக்குமந்தக் கைநாலும் வரைகளாறும்
 தொங்கலில்லாத் துதிக்கையா லமுதம்வாங்கிக்
கொடுக்குமது அங்கையப்பா வங்குசிங்கு
 கூடிநின்ற மங்கையவ ளங்கையாமே. (40)

அங்கையது தங்கையென்ற சங்கையப்பா
 அடிநடுவாய் முடிவான தங்கையங்கே
முங்கையொரு முடிவான பாகமங்கே
 முத்திதரும் நாற்பான்முக் கோணமங்கே
திங்கள்மதி கதிர்வன்னி செங்கையங்கே
 சிவசிவா சிவசத்தி யாடுமங்கே
அங்கையங்கை யென்றமொழி தோற்றுமங்கே
 அரகரா ஆறுமுக மானதங்கே. (41)

ஆருறு பனிரண்டு தலமுமங்கே
 ஆதிசதா சிவமாகி நின்றதங்கே
தேருத சித்தர்மனந் தேறுமங்கே
 சித்தாதி சித்தர்மனந் தெளிந்ததங்கே
ஓருறு தலமதிலே ஐம்பத்தொன்றும்
 ஓமெனவே சொல்லிவிளை யாடுமங்கே
பேருன பேறுபெற்ற ஞானமுற்ற
 பேறுபெற்ற தலமுமங்கே கண்டுபேசே. (42)

கண்டுகண்டு பேச்சாலே வாய்ப்பேச்சாலே
காணாது காணாது தோணாதப்பா
தண்டுமுண்டு பேசாமற் பானங்கொண்டு
சதாநித்த முறையோடே தாயைப்போற்றித்
தொண்டுபண்ணுந் தொண்டரவர் கண்டுகொள்வார்
சோதிதனைப் பார்த்துநித்தந் தொந்தத்தாதி
உண்டுவுண்டு கண்டுகொண்டாற் சண்டனேது
ஒப்பாரு மில்லையப்பா ஞான்முற்றே. (43)

கருவூரார் சிவஞான போதகம் ௪௩.

முற்றிற்று.

சாப்பிட்டூர் பெரியசாமிபூசாரி குமாரர், வயித்தியர் பெரிசாமி பூசாரியவர்களிடமிருந்து வாங்கின யேட்டுப்பிரதியின் படி யிந்தசாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

147-வது

கருவூரார் திருவாய்மலர்ந்தருளிய

# பூரணஞானம்.

வெண்பா.

மானங் குலமறிந்து வைத்த மலமூன்றுந்
தானந் தவமதனிற் றாக்காதே—ஞானக்
குணமாலை யைநாடிக் கூத்தாடல் கண்டு
மணமாலை சாற்று மனம். (1)

தோப்பழிந்து வெளவாலுஞ் சுற்றமறத் தின்றதே
மாப்பழுத்து வீணே மடியுதே—தோப்புடையா
ரில்லா மையினா லிருபொழுதுங் காக்கவே
வல்லா ரொருவரில்லா மல். (2)

எந்தவகை கொண்டிலிருத்தா னீடேறப் போகிறீர்
விந்து நிலையறியா வீணரே—அந்தமில்லா
தாண்ட குருவை யறிந்தா லறியலாம்
பூண்ட வகையின் பொருள். (3)

அஞ்செழுத்தும் மூன்றெழுத்தும் அவ்வுமுவ்வு மல்லாமல்
முஞ்சுமினி யொன்று முதலெழுத்து—மிஞ்சு
சிவஞான போதகமுஞ் சேர்ந்தபொருள் மூன்றின்
தவஞானஞ் சொல்லுவது தான். (4)

சொல்லு மெமக்குமந்தச் சோதி யுதிப்பிடமும்
அல்லும் பகலு மமர்ந்திடமும்—நல்லோர்
முகமறிந்து தந்தைக்கு முன்னேதான் தோன்றி
மகன்பிறந்து வந்த வகை. (5)

அப்புத் தெளிவு நல்ல வாத்துமத்தி லேயறிவும்
அப்புமுப்புந் தேத்தானி னவ்விரையும்—செப்பிலே

தேற்றினார்க் கல்லவோ தீரும் பிறப்பதனை
மாற்றினார்க் கின்பம் வரும். (6)

இராகுவென்றுங் கேதுவென்று மேபாம் பிரண்டுண்
டிராகுவிலே கேது விரங்காதே—பாராபரத்தில்
காட்டியுற்ற மந்திரத்தாற் கால்வீசி யுள்விட்டி
லாட்டிபிருந் தாலிருக்க லாம். (7)

நஞ்சிருக்கு மஞ்சுகலை நாகத்தின் கண்திறந்து
அஞ்சனமு மெண்ணெயுமார்த் தாட்டுங்கோ—ளஞ்சாமற்
றாண்டுங்கோள் வேழக் துதிக்கையைக்கொண் டேவிரும்பி
வேண்டுங்கோள் வீடேறுங் கோ. (8)

காலிருக்கப் பொய்க்காலைக் காட்டிப் பொருள்பறிக்குங்
கோலக் குருக்களைப்போய்க் கும்பிட்டுக்-கால்பிடித்துக்
கையறிந்து போற்றிட்டுக் கண்ணறிந்து முக்காலுங்
கொய்வர்மனஞ் சுத்தமென்றுங் கொல். (9)

நினைப்பு மறப்புடனே நின்றதுவும் போன
தனைத்தா னறிந்ததனைச் சாராப்—பிணைத்தானே
சாத்திரங்கள் பொங்கியுண்ட சட்டிகளைக் கிட்டவைத்துப்
பார்த்திருந்தாற் போமோ பசி. (10)

சாத்திரத்தின் சாரந் தனையறிந்து நிட்டைசெய்து
சூத்திரத்தி னுள்ள சுருக்கெல்லாம்—பாத்திருங்கோ
கோளெல்லாந் தீருங் குருவி னருள்பெருகும்
வாழலா மென்று மகிழ்ந்து. (11)

சவ்வுண்டு நாடிமுனைக் காலால் கனலெழுப்பி
லவ்வுதனை உவ்வுமவ்வாய் மாட்டாமற்—றெய்வ
மொருவனே யென்பார்க ளோரா யிரம்பேர்
திரிவரவர் வீணே தினம். (12)

நித்திரையிற் காட்சி நிமைமுடிக் கண்டதுவுங்
குத்திரங்கா ணித்தனையுங் கூடாதே—நித்தநித்தங்
கண்ணார நாட்டமிட்டுக் காலால் வழிதேடிப்
பெண்ணாரைக் கூடிப் பிழை. (13)

கல்லைப் பிளந்து கரைகண்ட பேர்க்குறுதி
அல்லும் பகலு மனுகாது—எல்லார்முன்
தான்வாழச் சீடன் சடங்குசெய்ய வேடமிட்டுக்
கோனுவான் பொய்மைக் குரு. (14)

தண்ணீர்க்கும் பாவை தனையிழந்து நின்றாற்போல்
எண்ணிக்கண் மூடி யிராதேநீ—தண்ணீர்
ஒளியோடி நின்றயிட முண்மைகண்டா பின்னும்
விழிமூடி நிற்பதுவும் வீண். (15)

வித்திலே வேரிருக்குள் வேரிலே கொத்திருக்கும்
அத்திலே நின்றங் கறியாதார்—சித்திலே
காண்போம்னும் உண்மை கனத்த திருவடியைப்
பூண்போம் னுப்என்பதெல்லாம் பொய். (16)

சைவரென்ப தாரென்னிற் றன்னை யறிந்தவரே
சைவமில் லார்தவங்கள் தள்ளாட்டம்—தெய்வநிலை
சாரப் புலமைவரத் தன்கவியைக் கொள்ளாதார்
சேரார் குருவீட்டிற் சென்று. (17)

சிவத்தை யறியீர்நீர் சித்தறியீ ரொன்றுந்
தவத்தை யறியாமற் றுக்கும்—பவத்தினிப்
பேசாப்பாற் கொள்ளுகின்ற பித்தரே உம்முடைய
ஆசாரங் காசாகு மா. (18)

வாய்பேசா மாவூ வகையற்ற கோமணவா
பேய்கொண்டு சீலைவிட்ட பித்தனே—தாய்முலைப்பா
லுண்டுபெற்ற பிள்ளைதனக் குண்டுபல பொக்கிஷங்கள்
கண்டுரைத்தாற் கல்லோ கருத்து. (19)

பாடிப் படித்துமே பண்ணிப் பொருளாய்ந்து
தேடிப் பரத்தின் றிருவடியிற்—கூடியினிக்
கொள்ளாமற் காதிரண்டுங் கூப்பிட்டாற் கேட்டிருந்தும்
விள்ளா திருப்பதெல்லாம் வீண். (20)

மாய்கிறீர் வீணே மனத்திருக்கும் மெய்பறிந்து
தேயு வுணர்ந்துபதஞ் சேராமல்—வாயுவைத்தான்

கும்பித் திருந்தாற் குடலு முடலுயிரும்
வெம்பி யுலர்ந்து விடும். (21)

சாத்தி லுருக்குமணற் றங்க மதுபோலக்
கோத்ததொரு கொல்லன் குழல்வழியே—யூத்தைவிழிக்
காற்றை யடைக்கவுற்ற காட்டுகிறீர் காயமினிச்
சோற்றைவிட்டாற் குண்டோ சுகம். (22)

குழைத்திடுவீர் முன்னுக்குக் குப்பிடுவீர் வப்பிற்
சுழித்திடுவீர் முக்காலுஞ் சுற்றுங்—குளத்தில்
தண்ணீ ரிறைப்பீர் தட்டுவீர் கையிரண்டு
மெண்ணுவீர் விட்டேகு வீர். (23)

என்னேர மென்று மிடுங்கோ திருநீற்றை
என்னேர மென்றுமினி யேத்துங்கோ—என்னேரம்
அத்தனார் தில்லைதனி லம்பலத்து ளாடுகின்ற
நித்தனார் தம்மை நினைத்து. (24)

தேறுதில்லை தேகந் தெளியுதில்லை சிந்தையைய
லாறுதில்லை கன்ம மகலுதில்லை—கூறரிய
தேரடிக்கே நின்று தியங்குநிலை செய்வதென்றோ
மாரடிக்கக் கண்ட மனம். (25)

காசிக் கிறையைக் கலந்துகரை காணாரே
வாசிகொண்டும் ஏறுவகை மாட்டாரே—பேசித்
தலைவளர்த்துத் தாடிசடை தாவடங்கள் பூட்டி
உலையில் மெழுகதுபோ லுற்று. (26)

நாவிக் கமலம் நடுவறிந்து உள்ளமதி
லாவிப் பிடித்தங் கடையாமற்—பாவிகாள்
கண்ணுங் திறவாமற் கையைவிட்டுப் பையதுக்குள்
எண்ணுகின்ற யெண்ணங்க ளேன். (27)

சத்திக் கணபதியுந் தன்மக் கணபதியும்
நித்தக் கணபதியும் நின்மலனுஞ்—சித்தமதி
லீன்ற அருள்விளக்கா எய்ந்தகணபதிதாள்
தூண்டு விளக்கறிந்து சூட்டு, (28)

செந்திற் பதியுஞ் சிறந்தவடி யாருளமு
முந்துமலர்த் தாளுள் ளுறையாமல்—வந்தென்
நடிப்பையிட்டு மெய்ஞ்ஞான ஞதரென்று சொல்லிப்
படிப்பதனு லென்ன பலன். (29)

கடையு மமுநத்திற் கண்திறக்குந் தாளி
உடைவதற்கு முன்னின் றுரைக்கிலீர்—அடைவுபெற
வெண்ணெய் படக்கடைந்து மீண்டுருக்கி நெய்யானல்
மண்ணிற் பிறவார்கள் வந்து. (30)

ஆண்ட குருபரனு ரையார் திருவடியை
வேண்டி யறியாமல் வீணிலே—மாண்டு
மறந்துசெத்தா லென்ன வரும்பிறவி யுண்மை
யறிந்துசெத்தா லீடேற லாம் (31)

கைப்புப் புளிப்பதனைக் கண்டுகரை யேறலாந்
தெப்பக் கிடைச்சின் திரைமேலே—ஒப்பவரே
பண்ணுண் டுயிரைப் பசையிரா வேண்டுமனம்
மண்ணுண்டு போமதைத்தான் வந்து. (32)

மூலக் கிழங்கின் முடிப்பை யறிந்துசென்று
சூலச் சுடர்தன்னிற் சுட்டோர்கள்—மேலே
வெளிகண்டு கொண்டிருந்தார் மேவியொன்ருய்க் கூடிக்
களிகண்டு கொண்டிருந்தார் காண். (33)

சிவபெருமான் நெற்றித் திலதபெரு மானந்
தவபெருமா னன்றுமறை சாற்ற—அவம்பேச
லொண்ணுது காண்கெடுவீர் ஒன்ருக வேனினையா
நிண்ணுர்கள் தம்மை நினைத்து. (34)

நெத்தி யிருக்கும் நினைவறியீ ருத்தளமாப்
பத்தியுடன் பூசப் படிப்பதென்ன—நெத்தித்
திருநீற்றின் மேலே திலதமிட வந்த
விருநீறு பூசு மிடம். (35)

நாம மிருக்கும் நடுவறியீர் நாமமிடுந்
தாம முகத்தின் தலமறியீர்—போமளவும்.

ஏமமன்றிச் சாமம் இரவன்றி ஓயாமல்
நாம முரைப்பதுவே நன்று. (36)

சிவலிங்க பூசைசெயச் செல்வமிக நல்குந்
தவலிங்க சோதியிடஞ் சாதகமாம்—அவம்பேசி
வீணில் மதியழிந்து மெய்கெட்டுப் போகாமுன்
காணவிதி வேணுமின்பங் காண். (37)

தேவதர மான சிவமதனைப் பூசித்தா
லாவதுதா னின்பென் றறியீரோ—கோவின்
சிலையறிந்து நானறிந்து செங்கைகுவித் தன்பின்
நிலையறிந்து நிற்குகிலீர் நீர். (38)

அன்ப தெழுத்துடனே அஞ்செழுத்து மவ்வெனவே
ஒன்பதுபத் தாறுரு முண்மையே—முன்பு
தருவா ரிரவுபகல் தத்துவங்க ளெல்லாங்
குருவிருக்கு மாசனத்தின் கூறு. (39)

மோசமில்லா வாசனங்கள் முப்பத்தா றும்விரிக்கில்
ஆசனங்கள் தொண்ணூற்று றுகுமே—நேசமுடன்
கண்டுகொள்ள மாட்டாமற் கால்வாங்கி யுள்ளடக்கித்
தண்டுமுண்டு பண்ணுவரோ தான். (40)

விளைமுளையின் வேரிடத்தின் வித்தறிய மாட்டாய்
வளைகரணம் போட்டலை மாய்ப்பாய்—விளைகரண
மாசனத்துக் கட்டிலுறும் அந்தக் கரணமற
வாசியைக்கட் டிடேறுவாய். (41)

அஞ்செழுத்து மொன்றும் அகாரமுத லானதுவுங்
கஞ்சமல ரோனெழுத்துங் காணுதார்—மிஞ்சத்
தவமறிவோமென்றுபொய்யே சாற்றுமவை யெல்லாம்
அவமதுவூ தாரி யறி. (42)

ஓரெழுத்தும் வேரெழுத்தும் ஒன்றறிந்து கண்டதிலே
சீரெழுத்தைத் தான்பிடித்துச சேராதார்—பாரிடத்திற்
பெற்றேம்நா முண்மையென்று பேசியவர் வாதனைகள்
கற்றதினு லென்னபலன் காண். (43)

சாக்கிரத்திற் சத்தி சிவமொடுங்குஞ் சார்வறிந்து
போக்குவரத் தில்லாப் பொதுத்தலத்தில்—நோக்கறியச்
சித்தமு மங்கே சிவநிலையுந் தானங்கே
அத்த னிருக்கு மமர்ந்து (44)

அத்தலத்தி லேயெழுந்த ஆதார மாறறிந்து
புத்தமுதா மஞ்சு பொருள்மூன் றுஞ்—சித்தமதிற்
றேற்றுபொருள் மூன்றுந் தொழிலறிந்து நின்றோர்க்கு
மாற்று மவர்பிறப்பை வந்து. (45)

கருத்திருத்தி வைத்தொருவர் கைதே ரறிவு
முருத்திருத்தி வைத்தவுயிர்க் கோகோ—ஒருத்திபெற்ற
பிள்ளை தனக்குப் பெரும்பொருளைத் தானளியார்
கள்ளர்தொழில் மூன்றிதுவே காண். (46)

எடுத்தணைத்து மார்பி லிருதனத்தின் பாலைக்
கொடுத்துமுத்தி சீராட்டிக் கொஞ்சி—யடுத்தவள்தான்
அத்தனுக்குத் தேவியுமாம் ஐவருக்குத் தோழியுமாம்
பெற்றவளே யென்றுணர்ந்து பேசு. (47)

ஆணுடலும் பெண்ணுடலு மாரு மிடமறிந்தால்ப்
பேணு மறிவினுண்மை பேசுவதென்—தாணுவினை
டொன்றுமின்றி ரண்டுமின்றி யொன்றுரெண்டு மின்றாகி
யென்றும் நுகர்ந்திருப்பா ரின்பு. (48)

கருவின் நிலையறிந்து கண்ணார நந்தி
யுருகும் படியறிந்தே வூதி—பெருகிவரு
மானந்த வெள்ளத் தழுந்தி யமுதுண்டோன்
தானந்த முங்கடந்தான் றான். (49)

சுத்தமகச் சுத்த மறிந்து வெளியடையார்
சித்தந் தனையறிந்து சேராதார்—நித்தநித்தம்
விண்டதினா லென்ன விறைத்திருகண் மூடிக்
கொண்டதினா லென்ன குணம். (50)

வெற்றிப் பிரமன்மகா விட்டுணுவும் ருத்திரனும்
மற்றுங்க ரோவ்வா மயேசுரனும்—உற்ற

குறியாஞ் சதாசிவத்திற் கூடி யிருந்தும்
அறியா ரகத்தஞ்சு மே. (51)

அறிந்தாலு மஞ்சு மறிந்தாலு முண்டோ
பிறிந்தாலும் பேசாப் பெருமை—செறிந்தாடல்
பார்த்தாருக் கல்லோ பரம குருபதத்திற்
சேர்த்தாருக் கல்லோ திறம். (52)

மாவைப் பிடித்தந்த வாசிதனிற் சேராமற்
பாவக் கிரிகையுள்ளம் பாராட்டி—யேவற்
பணிவிடைசெய் தீபமிடு பத்திபுரி யென்னத்
துணிவதுதா னென்ன தொழில். (53)

ஏற்றி யிலம்பையிட்டு எல்லோருங் காணவுமே
போற்றி மணியாட்டிப் பூசிப்பார்—மாற்றிற்
சுமைக்கொருவர் தாம்பிறக்கச் சும்மா திரிவார்
தமக்குப் பிரீதியென்னோ தான். (54)

ஊனே மிகவருந்தி உள்ளுயிருக் கின்பமுறத்
தானே மலரெடுத்துச் சாற்றினால்—மானை
யிடப்பாகம் வைத்தா ரிரங்கித் தமக்குக்
கொடுப்பா ரவர்பலத்தைக் கொண்டு. (55)

மூல முறுநெருப்பு முக்கோணத் துச்சிகளுங்
காலுங் தலையுங் கலைமதியும்—சாலயினி
நெஞ்சகத்தை விட்டொருநாள் நீங்காது காண்கெடுவீர்
மிஞ்சியினிப் பார்ப்பதெல்லாம் வீண். (56)

அரிபிரம ரெத்தனையுண் டத்தனைபே ரெல்லாந்
திரிபுரத்தைச் செத்தசிவ ரூபம்—குருவிருத்தி
யாள்வித்தா னந்த அரிபிரம ரத்தனையும்
வாழ்வித்தா னெப்போதும் வைத்து. (57)

சிவமா முமையந்தத் தீக்கா லறியா
தவமாக நீங்க ளலைவீர் தவமாக
வாயிற்புகழ்சின் மயத்தை யறிவீரேல்
ஓயும் பிறப்பதுநல் லூழ். (58)

தெரியா துபதேசஞ் சிவவழி யோர்க்கே
யரிதா மறிவீ ரறிவீர்—பெரியோர்போல்
காவியிட்ட சீலைசெம்பு காட்டிப் பொருள்வாங்கும்
ஆவிதுணை காணு ரவர். (59)

19 NOV

சொருகிக் கிடக்குந் துறையறிந்து நாடி
உருகிக் கிடந்தமுத முண்ண—வருவழியிற்
கூத்தினித்தஞ் சேற்றை யருந்தாமற் கூடுவீர்
ஆத்துமத்தி லுண்டறியுங் கோ. (60)

சாதகமும் பேதகமுஞ் சாயை யறியாம
லேதகத்திற் செல்ல யிருக்கிறீர்—பேதகங்கள்
தேடுகிறீர் வட்டத் தெரிசனத்தைப் பார்த்திருந்தும்
வாடுகிறீர் வீணே மனம். (61)

எட்டெழுத்தும் மூன்றெழுத்தும் யீரெழுத்தி னூடேறிப்
பட்டெழுத்தி னவ்விற் பயின்றீரே—முட்டயினிப்
பட்டினியும் விட்டுப் பறந்துபா லுண்பீரேல்
விட்டகுணங் கெட்டு விடும். (62)

எட்டெழுத்தும் பத்தெழுத்து மேழெழுத்து மஞ்செழுத்துந்
தொட்டெழுத்துக் தோன்றுந் துறையிலே—கிட்டரிய
பாதந் தனைப்பிடித்துப் பற்றவுநீர் மாட்டாமல்
வேதம் படிப்பதெல்லாம் வீண். (63)

உறியிற் றயிரிருக்க வோர்மத் திருக்க
அறியாமல் வெண்ணெய்க் கலையும்—நெறியாய்க்
கறந்து கொள்ளல் விட்டய்யோ காலனூர் வந்தால்
இறந்துவிடப் போறீ ரினி. (64)

கிழமிளமை யாமருந்து கிட்ட யிருக்க
வளமிளமைக் காவேன் மலைவீர்—பழமலையில்
வெற்றி விழியருகே வெண்சாரை யொன்றுண்டு
உற்றகரு நெல்லியங்கே யுண்டு. (65)

அவயோகத் தாற்சிறிது மாகாது உள்ளச்
சிவயோகத் தாற்குருவைச் சேர—நவயோக

நீட்டிக் குறைக்கில் நெடுவாகை வாசிதனை
ஓட்டிப் பிடியுங்கோ வுற்று. (66)

பொடிமூடிக் கொண்டு பொதிந்ததழ லுள்ளம்
விடியாம லேஅலைந்து விட்டீர்—பொடியழலை
ஒன்றுங் குழல்வழியே யூதி விளங்கிடுவீர்
நன்றாய் விடியும் நமக்கு. (67)

காயுங் கதிராய்க் கலையா யிரங்கிரணம்
ஆயு மனிதருயிர் அக்கினியாந்—தோயுங்
குலமறிந்து கால்பிடித்துக் கூடும்வகை நந்தி
நலமிதுதா னென்றறிந்து நாடு. (68)

வேதக்கால் நாலு விளங்கும் புகழ்பெரிய
சாதக்கால் தானாறு சாஸ்திரமும்—நாதச்
சித்துக்கால் வெந்ததினாற் சீவன்காற் காற்றாது
பத்துக்கா லான படி. (69)

தகையில்லா வாயுவுதான் தன்குணத்தின் மாணம்
பகையதுவாய் நின்று பலிக்கும்—வகைதொகையாய்ப்
பத்துக்கால் தன்னைப் பதையாமல் வைத்துநின்ற
வித்துக்கால் கூடா விடில். (70)

வித்துக்கால் நின்றக்கால் வேதக்கால் தானாகி
செத்துப் பிறந்து திரியுங்கால்—மத்துக்கால்
தாக்கா துரைக்குருதன் சார்வாகும் வாசிதனை
ஏற்கு மெனவே யியம்பு. (71)

மருத்துமா வைக்காட்டி வாசிவிடு வித்துக்
கருத்தறிந்து ஏறியினிக் காணு—வருத்தமுதம்
வாகாந் தெரிசனத்தின் வாசி தனைநாடி
நோகாம லேறலாம் நூல். (72)

கண்கண்ட தூரமெல்லாங் கைக்கெட்டு மோகெடுவீர்
கண்கண்ட தூரங் கடப்பீரோ—கண்ட

விழிகண்ணைக் காணாதே வீணரே யேக
வெளிபெருக்கங் காண்பதெல்லாம் வீண் (73)

மந்திரமாந் தந்தையுரை மாதா வெனுங்கோவில்
தந்திரத்தைக் காணாத் தவமேது—வந்து
மதியில்லா ரில்லார் மகாபெரியோ ரென்னும்
விதியில்லார் சொல்வதெல்லாம் வீண். (74)

மெய்த்தலையி னுள்ளே வெளியில் நடுவிருக்கப்
பொய்த்தலையி லேனோ பொருந்துகிறீர்—மெய்த்தலையிற்
காலறிந்து கற்பங் கனகற்ப மண்டலத்திற்
கோலறிந்து கொண்டாடுங் கோ. (75)

கெடும்பயனைப் பற்றிக் கெடுகிறீ ரோடிப்
படும்பயனைக் காணாதே பாதி—நடுவிற்
றிரைநீக்கி நிற்பார் சேர்குருவி னுண்மை
உரைநீக்கி யிட்டமுற்றாலாம். (76)

ஆத்துமத்தைத் தான்பிடித்து அன்புகொண்டு சுத்திசெய்து
ஆத்துமத்தைக் கூடி யடையாம—லாத்துமத்தை
ஓடவிட்டுப் பார்த்திருக்கு மூதாரிகாளும்மைத்
தேடவொட்டு வானோ சிவன். (77)

அஞ்செழுத்தை யுன்ன அறிந்தாயே நெஞ்சேயிவ்
வஞ்செழுத்தும் நற்றுணைக ளல்லவோ—அஞ்செழுத்தைக்
கூடாய்நீ அந்தக் குருவசுத்தை வீடாக்கி
நாடாய்நீ யீடேற நாடு. (78)

பொருத்தம்மண்ணை யேபொருளாய்ப் பூசிக்கும் பூசாய்
பருத்தவத்தில் வேதம் படிப்போர்கள்—கருத்திலுண்மை
சோறுகண்டாற் பூசை துணிந்துகொண்டு நீறிடுவீர்
தூறுகண்டி ரிந்தத் தொழில். (79)

அரியோ மெனப்பூசை யாரறிவார் வீணே
பெரியோர்க ளென்றும் பிலுக்கர்—அரியோம்
குறித்தபொருள் மூன்றினுண்மைக் கொள்கையற்ற பேரைப்
பிரித்தெமக்குப் பேசும் பிளாய். (80)

புட்பந் தனையெடுக்கும் பூசகரே பூமரங்கள்
நுட்பமல்ல வோவுடம்பு நோகாதோ—இப்படித்தான்
கொன்று வுயிர்போகுங் குற்றமல்ல வோபறித்தால்
பொன்றுகும் பூவாசம் பேசம். (81)

பற்பா சனத்திருந்து பார்த்து மலரெடுத்தப்
பொற்பூத் தொடுத்திறைவைப்பூசியார்—இப்படித்தான்
வாசித்தா லென்னபலன் வாடும் மலரெடுத்துப்
பூசித்தா லென்னபலன் பொய். (82)

நித்தங் குருவை நினையுங்கோ நேசமுடன்
பத்தியுட னின்பம் பருகுங்கோ—சுத்தமாய்
ஆவி யகலுமுன்னே ஆத்மாவு மீடேறக்
கோவிலுள்ளே பூசைசெய்யுங் கோ. (83)

சுழிமுனையாம் மூச்சுத் துறையறிந்து நாடி
அழிவுசெய்யும் வாசி யருந்தாதே—தெளிவுசெய்ய
மாட்டா ருலகமதில் வார்த்தைவிற்று உண்டதனும்
கோட்டாலைப் பட்டார் குரு. (84)

நாலவரும் கூடும் நடுவறிந்தே அம்பலத்திற்
காலறிந்து கொண்டுபொருள் காணுகார்—சாலப்
பறந்துகெட் டோடிடுவார் பாரிற் றிரிந்து
இறந்துகெட்டி டாதறிவீ ரே. (85)

நடம்புரிந்து மேகாமல் நாதாந்த ஞானத்
திடம்புரிந்து கொண்டதிலே சேர்ந்தால்—சடம்புரியீர்
பேசிற்று னென்ன பேசா திருந்தென்ன
நாசித் தலையான நாள். (86)

நாசித் தலைதனையும் நாதாந்த மும்மறிந்த
நேசர் கருத்திலே னின்றதனைப்—பேசத்
துணிந்தாலுஞ் சொல்லுந் துணியா திருந்து
தணிந்தாலுஞ் சொல்லுமுண்மை தான். (87)

சொம்பைநம்பிப் பூட்டிச் சுமையாச் சுமந்துகொண்டே
யம்புவிக்கு ளேன்காண் அலைகிறீர்—நம்பியதைக்

கெட்டாக வுண்மை கிடப்பீ ரெழுநரகம்
நட்டார் கலியுகத்தூ நண்பு. (88)

வாதபித்த சேத்துமங்கள் வாய்த்த வுலைமுகத்தி
லாதபித்த சேத்துமங்கா லோடுமே—போதக்
குளிகை சிவத்திருக்குங் கூடியதங் கொன்று
மளிகடையோ ராவதில்லை யங்கு. (89)

சீவனைக்கொண் டாத்துமத்திற் சேர்த்துத் திருவடியில்
காவலிட்டுக் கொண்டிருந்துங் காணாகார்—நாவா
லுரைப்பதுவுந் தண்மையதா யொக்குமென்று சொல்லி
விரைப்பதுவுங் காணுமது வீண். (90)

அடங்காத விண்ணிலாங் காரமா தித்தன்
ஒடுங்குந் தலமறியா ஊமை—யிடும்புகள்தான்
போமோ எவர்க்கும் பிறவாப் புதுநெறிப்பே
றுமோ தவமெளிதா மோ. (91)

குருவிருக்கு மண்டலமுங் குண்டலமுந் தண்டுங்
கருவிருக்குஞ் சூத்திரமுங் காணார்—பெருமைவிட்டுக்
கொண்டினித்தா னுண்மை குறிப்பறிவோ மென்றார்கள்
விண்டதெல்லாம் கர்ம வினை. (92)

பாவ மறுக்கும் பரமாத்மா விற்குருவின்
சீவாத்மா நேரே தெளிவுற்று—மேவியுமே
தன்னையறி வித்துத் தலைவனையுங் காட்டாதார்
என்னறியப் போரு ரினி. (93)

விளக்கொளியைப் பாராமல் வீட்டொளியைப் பார்க்கப்
பழக்குகின்ற நிர்மூடப் பாவி—விளக்கொளியை
நீட்டினு லொத்த நிமலனருள் வீட்டொளியைக்
காட்டினன்றே காண்டலுமாங் காண் (94)

நவ்வு சலமதிலே நாமறிந்து போகாமல்
வவ்வுதனை வாசிகொண்டு வாங்கியே—அவ்வோடுங்
கண்டறிந்தும் ஆனந்தக் கண்ணாற் கனிபறித்துங்
கொண்டவருக் கல்லோ குணம். (95)

பூசித்து நிற்பனவும் போற்றியுரு வேற்றுவதும்
வாசிப்ப தெல்லாம் மனோன்மனிக்கே—நேசமுற்றுத்
தாக்கச் சிவக்குருத்தர் தாண்டவமா னந்தமுறும்
பார்க்கக் கிடைக்கும் பரம். (96

தலையிருக்குஞ் சத்தி தருமமிர்தந் தன்னை
முலையிருந்து முள்ளமுகம் வாடும்—புலையீர்
உருக்க மருந்தறியீர் ஓகோகோ நீங்கள்
பெருக்கமய லாழ்விரென்ன பேறு. (97)

மின்னுங் கருவும் வெளியாகு மார்க்கத்தில்
உன்னு மளவிலுணர் வொன்றுபடாப்—பன்னும்
பருத்தி படாப்பாடு பன்னிரண்டு பட்டுத்
திருத்தியிலீ ரேறுவிர்மெய் தேர்ந்து (98)

குளம்நிரம்பி நிற்குங் கொளும்புனலைப் பார்த்துக்
குளத்தோடு தேக்கவென்றுற் கூடும்—குளத்திற்
குடமெடுத்து மோந்துகொண்டு கும்பித்துத் தேக்கில்
அடர்ந்தபசிக் காக்கியுண்ண லாம். (99)

விட்ட குறையும் விதியுநமக் குண்டானால்
எட்டு பிரண்டும்வந்திங் கெய்தாதோ—முட்ட
விதியுள்ளா ராமாகில் விந்து வசமாம்
மதியுள்ளார்க் குண்டே மணம். (100)

கருவூரார் பூரண ஞானம் ௱.

முற்றிற்று.

மதுரை பாத்திரக்கடை வியாபாரம், ந. ராம. கணபதியாபிள்ளை அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை

148-வது

கருவூரார் திருவாய்மலர்ந்தருளிய

# தசதீட்சை ௩௯.

பாவென்ற மூன்றான வெழுத்தினுள்ளே
        பாருமக்காள் தசதீட்சை யோகஞ்செய்வார்
மாவென்ற ஓரெழுத்து நாமமாச்சு
        மகத்தான பூரமென்றே மாட்டுமோட்டு
தாவென்ற அடியதுமூன் றெழுத்துமாச்சு
        தாக்கப்பா வெட்டுடனே ரெண்டுமாகக்
காவென்ற மூன்றெழுத்து மீரெழுத்தும்
        கருணைபெருந் துறையானை காப்புகாப்பே. (1)

காப்பென்றே கருவூரான் சொன்னபோது
        காகமுனி தசதீட்சை யாமேயென்றார்
மாப்பென்றே கொங்கணவர் மகிழ்ந்துகூற
        வாய்பேசா மந்திரமு மிதுவேயென்றார்
ஏப்பென்றே சதாசிவன்று னெனக்குச்சொன்னார்
        எல்லோருங் கண்டாக்கா சித்தராவார்
வீப்பென்றே யிதனையுமீ யடக்கிக்கொள்ளு
        மேகவண்ணங் கருவூரார் சாய்கையென்றே. (2)

என்றெனவே கொங்கணவர் முனிவர்தாமும்
        எடுத்தணைத்துக் கருவூரா யிதுதானென்ன
ஒன்றெனவே மனமகிழ்ந்து செப்புசெப்பு
        ஊவென்ன எட்டுடனே யுகந்துகூறு
நன்றெனவே திருநடன மிட்டசோதி
        நாதமென்ன கண்மணியே சொல்லுசொல்லு
கன்றெனவே மூக்கோடே அணைத்துக்கொண்டு
        கருவூரார் தசதீட்சை கலந்துகூறே. (3)

கூறுமென்றீ ரென்முனியே சொல்லக்கேளுங்
    கூடாது கூடாதா ராலுமப்பா
வீறுமென்ற பிருதிவியி லடங்கும்பீடம்
    வெட்டவெளி யாகவல்லோ சொன்னார்சொன்னார்
தேறுமென்ற தசதீட்சை யாராலாகும்
    திருவெழுத்துங் கண்டவர்கள் தேறச்சொல்வார்
மாறுமென்ற உவரியல்லோ யிதுக்குநாமம்
    மகத்தான பிண்டத்தி லிருக்குந்தானே. (4)

தானென்ற கருவூரா யிதுதான்போக்கு
    சடுதியிலே கண்டுகொண்டாய் மூடுமூடு
வானென்ற பூமியில்வித் தேதுசொல்லு
    மாட்டுவதோ ரினமேது மகிழ்ந்துகூறு
தேனென்ற ஆதியந்த மேதுசொல்லு
    தெளிவாக வெந்தனுக்கு மகிழ்ச்சியாகக்
கோனென்ற அடிமுடியைச் சொன்னயானுற்
    குடிபோவோம் வனந்தனிலே கூறத்தானே. (5)

கூறவென்ற முனிவர்களே சொல்லச்சொன்னீர்
    கூகூகூ வென்றல்லோ கூறச்சொன்னேன்
ஆறவென்ற விரிவுரைத்துச் சொல்லக்கேளும்
    அடிதொடுத்துச் சொல்லுகிறேன் அன்பாய்க்கேளும்
மீறவடி பெருத்துநுனி சிறுத்துமேதான்
    மேருமகா வூரல்போம் மட்டிமட்டி
வாறுகொண்ட கன்னையுநா லெழுத்தேஐயா
    மந்திரமா மூன்றெழுத்தி ரெழுத்துஞ்சேரே. (6)

சேரென்ற போதகுரு முனிவர்தாமும்
    தெசதீட்சை வந்ததப்பா உனக்குதானே
பாரென்ற வெளியிடையே தென்றுசொல்லும்
    பாங்கண்டால் தசதீட்சை ஆச்சுஆச்சு
நீரென்ற மதியமுதந்தாயைக் கண்டு
    நிலைத்தருந்தக் காயமதும் நிலைத்ததையா
வாரென்ற கும்பமுனி சுவாமிகேளும்
    வாகான கால்நாலும்ரெண்டுமொன்றே. (7)

ஒன்றனவே கால்நாலு துதிக்கையொன்றும்
உயர்ந்திருக்குங் கழுத்துடனே சிரசுமையா
நன்றெனவே உடலுயிரும் விஷமதாகும்
நாயகமே அதுகுறிப்பு நன்றாய்க்கேளும்
வென்றெனவே பிண்டமது ரெண்டுங்கூட்டில்
விதிமுடிஞ்சு போகுமது விஷங்களெல்லாம்
இன்றெனவே தசதீட்சை அடக்கமையா
ஏகவெளி யாவுரைத்தே னிரங்குவீரே. (8)

இரங்குமென்றே சென்னதென்ன கருவூரானே
என்னசொல்லப் போறீரும்நா மிதற்கொப்பாகத்
தரங்கமென்ற மிளகுகடுக் காய்வல்லாரை
தானமுரி கொண்டேறித் தயங்கவேணும்
நிரங்கமென்ற ஓராண்டு கொண்டுதேறி
நிச்சயமாய்த் தசதீட்சை பூட்டவேணும்
கரங்கமன்றி முன்சொன்ன தீட்லசயப்பா
கைமுறையாய்த் தசவருஷங் கலந்துவுண்ணே. (9)

உண்ணெனவே குருமுனிவ ரிதுதான்சொல்ல
உகந்துமதிக் கொங்கணவர் நன்றேயென்ன
விண்ணெனவே கருவூரா னடிபணிந்து
மேதினியில் தசதீட்சை யிதுதானென்று
எண்ணெணவே எட்டுரெண்டு மெனக்குச்சொன்னீர்
இதுதனக்குப் பத்தியந்தா னேற்கச்சொல்லும்
கண்ணெனவே மூக்குமொன்றாய்க் கருத்துள்நோக்கக்
கலந்தவுப்பும் புளியுங்கொள் கசப்புத்தள்ளே. (10)

தள்ளேதாம் பசுவினுட சுத்திகொள்ளு
தளராமல் விந்துவுடன் பூசைபண்ணு
வள்ளலென்ற வாலை திரி யுரையைநீயும்
மகத்தான பூசையொடு மறக்கலாகா
துள்ளபடி கருவூரா னுன்னைப்போல
ஒளித்துவிட்ட பேருமில்லை யுலகத்தோர்கள்
கள்ளமன்றி யுனைப்போலே கருவைத்தானும்
கண்டறிவா ரில்லையப்பா சற்பமுண்ணே. (11,

கற்பமென்றே சொல்லுவார் கோடாகோடி
கலந்தகருக் கற்பமொன்றுங் காணமாட்டார்
சொற்பமென்று தள்ளிவிட்ட சொரூபநாதம்
தொல்புவியிற் கண்டவரே ஞானியாவார்
அற்பமன்று தள்ளிவிட்டா லதுவேமெய்யாம்
அறிந்தவற்கே தசதீட்சை யாகுமாகும்
விற்பமது பிண்டமது ரெண்டுஞ்சாய
வெளியான ஓரெழுத்தும் நாலுந்தாக்கே. (12)

தாக்கப்பா பிண்டமஞ்சு வெளியிலஞ்சு
தானுகந்த தசதீட்சை பத்துமாச்சு
போக்கப்பா முன்புசொன்ன நாலுங்கொண்டு
புகழ்படவே தசதீட்சை யென்றுஞ்சொல்வார்
நோக்கப்பா கருவுடனே விரித்துச்சொன்னேன்
நோக்காம லெட்டுரெண்டும் நுகர்ந்துஆடும்
ஆக்கப்பா கும்பமுனி மூலநாதர்
அருளான கொங்கணவ ரதுசொன்னாரே. (13)

சொன்னாரே யெல்லோரும் மறைத்துவைத்துச்
சொரூபமுள்ள தசதீட்சை வெவ்வேறாகக்
கண்ணார வெட்டிடனே ரெண்டும்பார்த்தாற்
கருணைபோல் பொங்குதச தீட்சையப்பா
வண்ணான்காண் சவுக்கார மதுவேயாச்சு
வளர்ந்துதப்பா காயமதும் அநேகங்கோடி
உண்ணாத ணடிமுடியைக் குருவைப்போற்றின்
உற்றவெட்ட வெளியசவுக் காரமாச்சே. (14)

ஆச்சப்பா தீட்சைவிதி யில்லையில்லை
அருளான பரனெழுத்து மூன்றைப்பாரு
ஆச்சப்பா அதிலேயோ ரெழுத்தைப்பாரு
அடங்காத யியெழுத்தோ டுவைப்பாரு
ஆச்சப்பா கல்லுப்பு மூன்றெழுத்தே
அடியதுதா னடியதுதா னகாஆஆ
ஆச்சப்பா யோகமுதல் கெவுனஞ்சித்தி
அடுத்தடுத்து மனமதிலே அடங்கிப்போச்சே. (15)

போச்செனவே கருவூரான் தீட்சையென்றே
புகட்டிவைத்தேன் தீட்சைதச தீட்சையென்றும்
ஆச்செனவே தசதீட்சை சுத்தியென்றும்
அடிமுடியைச் சொல்லிவிட்டேன் சொல்லிவிட்டேன்
ஏச்செனவே பிள்ளையென்று லிருந்திப்பார்ப்பான்
யெனைப்போலப் பார்ப்பவனே சித்தனுவான்
மூச்சைவிட்ட பாவியென்று லெய்தாதப்பா
மூவண்டச் சவுக்கார முறையுந்தானே. (16)

தானென்ற சவுக்காரம் பூரமாச்சு
தாண்டவமே ஆடுதற்கு வகையேதப்பா
மானென்ற மூலமதி லிருந்தபீடம்
மகத்தான பூவேதான் யோகம்பார்த்தேன்
தேனென்ற மனோன்மணியாளிருந்தவீடு
செகமறிய ஊவென்ற நாதமாச்சு
கோனென்ற மழுத்தரித்தோ னெனக்குச்சொன்னார்
குறியாகத் தேறுவதுங் கடினமன்றே. (17)

மன்றென்ன பூவென்ன மகிமையென்ன
மகத்தான சாரமென்ன காரமென்ன
நன்றென்ன தீதென்ன நாதமென்ன
நாதாந்த யோகமொடு வேதமென்ன
இன்றென்ன நாளையென்னவிங்கங் கென்ன
எழுந்ததென்ன விருந்ததென்ன போனதென்ன
அன்றென்ன ஆதியிலே வந்ததென்ன
அழகான யெட்டுரெண்டு மாகப்பத்தே (18)

பத்தோடே யேறிகல்லா ஊணிப்பாரு
பாங்காகச் சிவதீட்சை பதிவதாச்சு
இத்தோடே குருவையெல்லாந் தேடிச்செல்லு
யிதமாகக் கண்டுடனே வணக்கஞ்செய்நீ
கொத்தோடே யவரறிய மாட்டாராகில்
கூடிமெள்ள அவருடனே நயந்துபேசு
சித்தோடே யறிந்தவன்காண் சீஷனப்பா
செகமறியக் கருவூரான் மைந்தனென்னே (19)

மைந்தனென்ற அவனுக்கு நாமமாச்சு
மகத்தான தசதீட்சை யறிந்தானப்பா
சிந்தனென்று யோகவிதிச் சித்தனப்பா
தெளிந்தவகை யவனைப்போ லாருமில்லை
கந்தனென்று மவன்பேரு வன்னிக்கொப்பாங்
கண்டதில்லை யவனுடைய கருத்துமுள்ளே
சந்தெனென்ற சித்தனுக்குப் பூவேயானுன்
சகலவிதி யோகவிதி யறிந்ததெட்டே. (20)

சூத்திரம் சுருக்கம்.

எட்டுடன் ரெண்டு யிசைந்ததோர் பத்தாம்
குட்டுடன் பார்த்துக் குறிப்பறிந் தவர்க்குத்
தெட்டுட னீசன் தெளிவை யுரைப்பார்
மெட்டுடன் வேத வெளியென்று மீயே. (21)

யீயென்னும் பத்தில் யீயென்ன வொன்றைப்
பாயென்ன வூட்டிப் பழுதறச் சென்றால்
காயென்ன தேகங் கழிந்துடல் போகா
மாயென்ன யீசன் வகுத்தமுறையே. (22)

முறையென்ன சொல்லு மூடர்க்கே ஐயா
வறையென்ன பேசி வகுத்தவை வெய்துவர்
தறையென்ன பூவின் தாண்டவம் புரிந்தே
மறையென்ன பேசி வகுத்த துரையே. (23)

உரைசெய்த பொருளை ஊமைய துவைக்
கரையென்னப் போற்றிக் கருவையறிந்தே
திரையென்ன நீக்கித் தெளிவை யுணர்த்தும்
புரையென்னச் சடையோன் பூவென்னு மொன்றே. (24)

ஒன்றென்னப் போற்றி உகந்த பிருதிவி
நன்றென்ன வெளியில் நாடோ ரெழுத்தது
சென்றென்ன எழுத்தைத் திறந்தென்ன வுண்டு
அன்றென்ன உவரி அதுவுடன் சேரே. (25)

சேரே மூன்றுடன் திறப்பட்ட ரெண்டும்
நேரே யதுவென்ன நிறைந்ததோர் சிவமாம்

பூரே யதுகொண்டே புறப்பட்ட சித்தர்
ஊரே திருமூலர் உண்டுண்ட வாரே. (26)

வாரென்ன யானும் மருவியே கண்டேன்
தேரென்ன கும்பர்த் தெளிந்தே யுரைத்தார்க்
கூரென்ன சித்தர் கொங்கணவ ரோடு
ஆரென்ன கொண்டு அமைந்தவர் கோடியே. (27)

கொடியெனத் தேர்ந்து கொண்டவர் ஞானிப்
படியெனப் பூரணம் பகர்ந்ததோர் சித்தாம்
வடிவென்ன தேகம் வச்சிர காயமாம்
குடியென்ன யீசன் கொள்கை யிடமே. (28)

இடமே யவரிடம் எல்கை மறவார்
தடமே மகாமேரு சார்ந்துடல் தோன்றும்
படமேவு தேகம் பன்னிரு கோடியாம்
வடமேரு கிரியாம் வளர்ந்த மகரமே. (29)

மகரமென்ற மூன்றுகும் ராசிதன்னில்
　　மதியென்ற பூரணந்தான் வளரும்பாரு
தகரமென்ற அண்டத்தில் நேர்ந்துபாரு
　　தாரணியிற் பூமியதிற் பொங்கும்பாரு
உகாரமென்ற பிண்டத்தில் நகாரம்நின்று
　　ஊடுருவப் பூவதுவே யதுவுமாமே
அகரமென்ற பிருதிவல்லோ குருவுமாச்சு
　　அடியதுதான் முடிவல்லோ காலுமாச்சே. (30)

காலுமென்ற உவரியல்லோ மூன்றெழுத்து
　　கண்டபின்பு ஓரெழுத்து மதியுமாச்சு
நாலெழுத்துக் கூடியல்லோ காலுமாச்சு
　　நன்றாக உயிரெழுத்து நாட்டிப்பாரு
மாலுமென்ற வுயிரெழுத்து ஒன்றேயாகும்
　　மகத்தான காலாறு மருவிக்காணும்
வாலுகத்தி லடிமுடியை யேத்தியேத்தி
　　மருவியல்லோ ஓரெழுத்தை மாட்டுவாயே. (31)

மாட்டுவா யிதுதனக்குட் டீக்கருப்புப்போட்டு
வளர்ந்தேற ஓராண்டு மருவித்தாண்டி
காட்டுவாய் தாண்டிமீ னந்தொட்டேற
கருவேகாக் காலுமென்று ஊணிக்கொள்ளு
திட்டுவாய் மேதையென்ற வுடலுக்கப்பா
திரைதிரப் பசுவினுட சுத்திகொள்ளு
ஆட்டுவாய் மேதையிதில் மேதைசேரும்
அருளான தீட்சையது பத்துமென்றே. (32)

என்றலவோ யிப்படியோ ராண்டுக்கொண்டு
இதமாகப் பற்பமிட்டுச் சுன்னஞ்செய்வாய்
அன்றலவோ சந்திரகிரி யமுதமப்பா
அருள்பெருகி உதரத்தி லிரங்கும்பாரு
மன்றலவோ வெயில்காற்றுப் பேசலாகா
மருவியதோர் மிளகோடு சுத்திகொள்ளு
நன்றலவோ உடல்மீறித் தாமரைபோல்
நரைதிரைக ளற்றல்லோ போகுங்காணே. (33)

காணேதான் மீனமென்ற பூரணத்திற்
கருவறிந்து பூவலவோ உண்டுபாரு
ஊணேதா னறுசுவையு மதுக்குமுன்னே
ஒளித்துவிட்டு வல்லாரை யுண்டுதேறி
வீணேதான் செய்யாமற் கருவைப்பார்த்து
வேதாந்த சாரப்பூ ரணத்திலூட்டித்
தேனேதா னூரல்சென்று அமுதங்கக்கும்
திரண்டதொரு குமரியப்பா உண்டுபாரே. (34)

பாரென்ற தசதீட்சைக் கருவையானும்
பால்போல வுந்தனக்குச் சொன்னேனப்பா
நேரேதான் பூரணத்திற் சென்றுயேறி
நிசமாகத் தீட்சையதைப் பூட்டவேணும்
ஊரேவுட் கருவுட்பிற் கருவுஞ்சொல்லார்
உள்ளபடி யானுரைத்தே னுண்டுதேறி
ஆரேதா னென்றுசொல்லி யிருந்தாயானால்
அழிந்திடுங்காண் காயமது அறிந்துகொள்ளே. (35)

கொள்ளேதா னுடலுயிரு மெனக்குச்சொன்னீர்
குருமுனியே நல்லதுவே சரணமையா
மெள்ளெனவே கொண்டேறி நித்தன்பாதம்
மேவுதற்குப் புத்தியது என்றுசொல்லி
உள்ளவே யவர்பதத்தைப் போற்றிக்கொண்டு
ஊவென்னு மாவென்னு முகந்துகொண்டேன்
தெள்ளெனவே சீர்பாத மடிபணிந்து
சிவசிவா வென்றல்லோ தெளிவுதானே. (36)

காரணம்.

வாரணத்தின் பூவேது ஓடிச்செல்லாய்
வனந்தனிலே பெரியோரை மருவிச்சென்று
காரணத்திற் கும்பமுனி பாதம்போற்றிக்
கருணைமொழி ஞானதிரட் டெல்லாம்பார்த்துப்
பூரணத்திற் சித்தருட னேகமாகிப்
புதுமைபெறு மீசதெரி சனையுங்கண்டு
தாரணத்திற் கற்பமுறை யெல்லாமுண்டு
சகலகுரு சித்தரடி பாதங்காப்பே. (37)

காப்பெனவே யானென்று மறியேனையா
கருணைமொழி சதாசிவன்றான் சொன்னதாகும்
கோப்பெனவே யெந்தலையு முருவதாக்கிக்
கொள்கைபெரு சரஸ்வதியும் நடனமாக
ஏப்பெரிய பெரியோர்கள் பாதங்காப்பு
இன்பமுள்ள மதியினுட பாதந்தன்னைத்
தாப்பெனவே நானுரைத்த பாடல்தன்னைச்
சகலகுரு சித்தாதி பாதந்தானே. (38)

தானென்ற தசதீட்சை யடக்கிப்போட்டோம்
தாரணியி லுண்டோதான் மக்காள்கேளு
வானென்ற பொருளதுதான் தீட்சையப்பா
மகத்தான குருவைத்தான் தொண்டுபண்ணு
தேனென்ற பூவையொன்று அவர்தான்சொல்வார்
திருட்டுமெனக் குருக்களென்றுற் சொல்லார்சொல்லார்
மானென்ற திருவெனவே யிருந்தநாதம்
வாய்பேசா ஊவெழுத்து வகுத்தவாறே. (39)

கருவூரார் தசதீட்சை ௩௯,

முற்றிற்று.

உ

குருவேதுணை.

149-வது:

கருவூரார் திருவாய்மலர்ந்தருளிய

# நாடிதாரணை சமாதி ௰௨.

பாவென்ற நகாரம் பகர்ந்தது நந்தி
காவென்ற உந்திக் களிகொடி சூதம்
தாவென்ற மேரு தயங்கிய வாய்வு
ஊவென்ற எட்டில் உடலொன்று ரெண்டே. (1)

ரெண்டென ஒன்றும் ரேசக மூன்றும்
தண்டுடன் மூக்குத் தனஞ்செயன் வாயுவை
உண்டென நம்பி ஒளிவுற நாட்டினுற்
கொண்டுடன் சமாதிக் குருவதுக் காமே. (2)

ஆமே யிதுமூன் றருள்பெற் றென்றுந்
தாமோ ரெழுத்துச் சதாசிவ மேயாம்
ஓமே யெழுத்தை உயிரதைக் கண்டால்
ஏமே சமமா யிருத்துஞ் சமாதியே. (3)

சமாதி யளவுக்குத் தனிப்படக் கேளு
அமாதி பலன்தூக்கும் அதுநே ரிடைநாதம்
வமாதிக் கிடையிடு வகைப்பட மூன்றும்
இமாதி சரியி டீக்கறுப்புத் தாக்கே. (4)

தாக்கியே யொன்ருய்த் தனிப்பட வைக்க
நோக்கிய பாண்டம் நுண்ணிமை நாகமாம்
வாக்கினிற் ரூபு மகிழ்ந்திடு மூடியும்
பாக்கியஞ் செய்திடிற் பலனதுள் வையே. (5)

வையென மூடி வளர்பெத்தக் குழியினில்
ஐயனே பற்ப மரைமட்டும் பாதிக்

கொய்யென யிட்டுக் குறிப்பட நிருவி
செய்யென வைத்துத் திறப்பட மூடே. (6)

மூடென யிருச்சாண் முழமென உயர்த்தி
ஊடென லிங்கமும் உருப்படச் சத்தியும்
பேடென வகுததுப் பிறப்பது வாலையைத்
தேடெனப் பூசித் தெளிந்தச மாதியே. (7)

சமாதியில் மண்டலந் தனிப்படப் பூசி
யிமாதி கழித்தா லெடுத்துநீ பாரு
யுமாதி பொருளா முருப்பட்ட தயிலம்
அமாதிக் கொருநேர மாண்டுநீ கொள்ளே. (8)

கொள்ளேதா னுண்டு குறிப்பொரு காசிடை
உள்ளேதா னவர் உருப்பெற்ற காயமாம்
விள்ளேதான் காந்தி மேவிடப் போமோ
தெள்ளேதான் யுகங்கள் தெளிவுற்ற ஞானியே. (9)

ஞானி யிருப்பிடம் நாதாந்த மெய்த்தலம்
வானீ ரமுத மாரசங் கட்டுணும்
தானிய அழுக்குச் சதகோடி வேதையாம்
ஊனி லிருளறும் உம்பர்கோன் குனவன். (10)

ஆவென சமாதி அடைவுடன் நோக்கிட
ஓவென நாசியில் வாவென வுன்னிக்
காவென வுந்தியிற் கருத்துட னோக்கினுற்
சீவென மூக்கடி சினத்துடன் நோக்கே. (11)

நோக்கியே சமாதி நுகர்ந்திட மண்டலம்
ஆக்கிய பொருளது அழுக்கறக் கண்டிடும்
வாக்கிய நேர்மை வளர்ந்திடும் பொருளது
தாக்கியே யிம்முறை தான்முன்பின் செய்யே (12)

கருவூரார் நாடிதாரணை சமாதி ௰௨.

முற்றிற்று.

உ

குமரன்றுணை.

150-வது:

கருவூரார் திருவாய்மலர்ந்தருளிய

# முப்பூசூஸ்திரம் ௩௰.

வெண்பா.

திருவாக்குஞ் செய்கருமங் கைகூடுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருகும்—உருவாக்கும்
ஆதலால் வானோரும் யானைமுகத் தைங்கரனைக்
காதலால் கூப்புவர்தன் கை.

மூவா யிரத்தில் முழுப்பாடல் முந்நூறும்
பாவா யுரைத்தநொண்டிப் பாவிற்—பூவான
முப்பூவின் செய்கை மொழிந்தரச வாதவித்தை
முப்பத் தொருபா மொழி. (1)

மொழிந்ததடி முப்பூவும் மூடருக்குக் கிட்டா
தெழிந்த துளிரே சிகப்பு—கழிந்ததொரு
கங்கைசுத்தி தன்னைக் கருத்தா யறிந்தவர்க்கு
அங்கையினெல் லிக்கனியே யாம். (2)

ஆமே ரசவாதம் அட்டசித்தும் முப்பூவை
நாமே யுரைத்துவிட்டோம் நன்றாகப்—பூமே
லறுபத்து நாலுசித்து மாடலாங் கண்டீர்
குருவைத்த வாக்கியத்தைக் கொண்டு. (3)

குறிக்குஞ் சடலத்தின் கூரேழ் வகையாய்ப்
பிறிக்கும் வகையறிந்து பேசச்—சுறக்கும்
மடியாம் வழலை மகத்தான வுப்பின்
படிகம்பி மாட்டார் பழி. (4)

பழிகொள் வழலையெனும் பாம்புகடி யுண்டால்
ஒழிய மருந்தில்லை ஓகோ—கழியான
சுண்ணங் கடுசாய் சுரதோஷம் போகுமப்பா
வெண்கார வுப்படையின் வேர். (5)

உப்பை முறையா யுயர்கங்கை நீரதனால்
வெப்பமுட னேகரைத்து வெய்யோனிற்—றப்பாமல்
காய்ந்த பிறகு கடுசாம் வழலைக்கு
வாய்ந்தகத்தை நீரைவிட்டு வை. (6)

காய்ந்து குருக்கக் கதிரவன்கண் ணானபுடம்
வாய்ந்திருந்த உப்பாம் வழலையே—ஏய்ந்திடவே
அப்புவத்த உப்புரைத்து செப்பெடுத்து மிக்குள்வைத்
தப்பிரகச் சுண்ணமிது வாம். (7)

மதுவான பூவும் வழலையுப்புப் பூநீர்
மதியான நீராய் வளரும்—விதியான
வீரன் முறைதிரையில் மீறுமது சுண்ணமதாம்
காரமிடு சூடனது காண். (8)

காணாத சுண்ணக் கருவை யொழிக்கவில்லை
நாணா துனக்கிதுவே நாட்டினேன்—வீணல்ல
தொட்டசரக் கிட்டமுடன் பட்டுவிடுங் திட்டமதாய்க்
கட்டவகை கைமுறையே காண். (9)

முறைமறக்க லாகுமோ மூப்பூவின் மார்க்கம்
அறைதிறக்க லாகுமே அப்பா—வுரையும்
அமுதந் தனையருந்த ஆதியடி பூரக்
குமுதவொளி யாகுங் குணம். (10)

குணமான பூவுங் குறித்தவெடி யுப்பும்
உணர்வாம் புளிநாலு மொக்கத்—தணுவான
இந்துப்புப் பூரமொவ்வொன் றிடித்தாட்டிச் சம்பழத்தில்
வெந்திடக் காடைபுடம் மேல். (11)

மேலான சுண்ணமொடு மீறுநவச் சாரத்தை
நாலப் பொடித்துநீர் நாட்டவே—மால்செல்மாம்
முந்த வுலர்த்தியதை மூசைதனில் வைத்தூத
அந்தமிகு வாதிகுரு வாம். (12)

குருவோடு வீரங் குறித்தாச கற்பூரம்
சரியாய்முப் பூவுஞ் சமனாய்—அருமாவின்

வீத மெனப்புகழாய் மெய்ப்பக் கலைபொதிந்து
பாதகமில் லாதவகை பார். (13)

பார்க்கநல்ல சுண்ணம் பகருங் கரியுப்புச்
சேர்க்கவிது பாகஞ் சிதருதே—ஊர்க்குள்
முதலியார்தும் பைச்சாறு மூக்கிற் பிழிந்தாட்டப்
பதையாத சூதம் படும். (14)

சூதமிது கட்டுந் துறையொக்கும் வேளைச்சாற்
கோதி யிடுகுளிகை கோமளமே—பாதமதிற்
கோசமுடன் பீசங் குகையிற் பொதிந்தூத
நாசமாஞ் சுண்ண ரசம். (15)

ரசமீறு சுண்ணம் நயமுட்டைக் கிட்ட
வசமாயோர் பொட்டிட்டால் மாயுமே—கசமான
அண்ட மெழுகு மதிவீர னைப்பொதிந்து
கண்டவணல் வாட்டமெழு காம். (16)

மெழுகு கழஞ்சி வெடியிற் பொதிந்து
வழுகிதீ வாட்ட வதுவும்—பழுதில்லா
வங்கந்தான் பத்துக் கொருவீத மாட்டிடவே
தங்கவய தொன்பதரை தான். (17)

தானான பாதமதிற் சற்குருதா னாருகத்
தானுங் கரியுப்புத் தானூறு—கோனான
பூர மிருபதுடன் போட்டாட்டி யெமுழத்தில்
ஓர்புடத்திற் சுண்ணமிது வோர். (18)

ஒல மிடுபூர மொன்றுக்கு நாலாகச்
சீலமுடன் சேர்க்கச் செயலாமே—வாலையெனும்
வீரனையே சேர்த்து விசையாய்ப் பொடித்தாட்டி
மாரியும்பின் பச்சையிடு வாய். (19)

இடுதுருசின் மேலே யிருபூ வினவுமப்பா
கொடுஞ்சுண்ணங் காடையிலே கூடும்—திடமான
சீதேவி செத்தாள் சிறுநாகஞ் சென்றதினால்
மாதா நிமிளையிலே மால். (20)

மாலாம் நிமிளை வடிவுள்ள சுண்ணமாம்
பாலான சாரமது பட்டுதே—கோலான
வீரமுங் கட்டுண்ணும் வெள்ளைக்கு மிப்போக்கு
காரமுடன் சேகரித்தாக் கால். (21)

அக்காரச் சுண்ண மதில்வீரங் கூட்டிச்ச
வுக்காரத் தெல்ணெய் யுடனோடு—இக்காரம்
கொன்றான் வழலை குளத்திற் பெருநீரால்
சென்றான் கவர்கள்மிகச் செல். (22)

செல்லநீ ரப்பா திறமான வேதையிது
சொல்லப் படாதென்ற சொர்னமே—வல்லதொரு
மேரும் பழுக்குமிந்த வேதையது தப்பாதேன்
கார வரைச்சரக்கைக் கார். (23)

அதுவே குறிப்பாம் அழகான வேதை
சதநீர் தனித்தனியே தாவும்— சிதறாது
மால்தேவி சுண்ணமுடன் வாள்வீர னைச்சேர்த்துப்
பால்வெள்ளி தன்னிலீப்ப பத்தாம். (24)

பத்துமாத் தாகும் பகிரதியும் பற்பமாம்
உத்ததொரு செம்பதனி னூடுருவிச்—சத்தியமாய்ப்
பொன்னுவய தேழரையாய்ப் பூபுகலு மாமப்பா
தன்போக்குச் சுண்ணத் தடி. (25)

அடிதா னறியா ரசட்டுரச வாதி
முடிதா னறியார் முடிப்பக்—கொடிதான
நீரை யறியார் நிலையத்த அவ்வாதி
வேரையார் கண்டோர் விடம். (26)

விடமான நஞ்சதினால் வெள்ளையாங் கொள்ளை
தடமான வீரனதிற் சாரத்—திடமான
செந்தூரம் வெள்ளியிலே சென்றால் சிவப்பெட்டாம்
செந்தூரம் செம்பிலே சேர். (27)

செம்பினிலே சேர்க்கத் திரமான வெள்ளியதாம்
செம்பான சேதியல்ல செப்பினேன்—வெம்பாதே

வெள்ளிமாத் தைம்பதுவாம் வீரன் முடிகூடி
வெள்ளியஞ் சேர்ப்பாய் விரைந்து. (28)

விரைக்காரஞ் சேர்த்துமே மீளஞ் சரைநாள்
அரைத்துக்கோ ழிப்புடத்தி லாகும் — துரைச்சுண்ணம்
நாகத்துக் கப்பி நயமாய்ப் புடந்தனிலே
நாகத்தைக் கட்டுமதி னால். (29)

அதினால் ரசங்கட்டு மப்போபோன் னிட்டுப்
பதையாதே வீரனையும் பாய்ச்சி—நிதிகாண
தானுபதி யேமேவத் தானே களங்காகும்
ஊனைங் குகையினிலே யூது. (30)

ஊதுபற்பம் வெள்ளியிலே ஒன்ப தரைமாத்து
நீதியடி பூரணத்தில் நேருவாய்—பாதமது
சித்தியாந் தேகமுமே சீரமுதங் கோடியாம்
முத்தியாம் முப்பத்தொன் றே. (31)

கருவூரார் முப்பூசூஸ்திரம் ௩௰

முற்றிற்று.

மம்மதுசாயபுபுரம் அழகுமுத்துப் பண்டிதரிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

கடவுள் துணை.

151-வது:

கருவூரார் திருவாய்மலர்ந்தருளிய

# பூஜாவிதி ௨௰.

காப்பு.

தெளிவுதனில் தெளிவுதரும் அருளுங்காணும்
கூடிணத்திலே சிவமையஞ் சேரத்தோணும்
வழியதனில் நல்லவழி ஞானங்கூடும்
மகத்தான வேதாந்தஞ் சித்திகாட்டும்
ஒளிவுதனி லொளிவுதரும் உறுதிசொல்வார்
உற்பனத்தி லுற்பனமா யுறுதிதோணும்
வெளியதனில் வெளியாகி நாதத்துள்ளே
விளங்கிநின்ற வாலைப்பெண் ணாதிகாப்பாம்.

ஆதியென்று வாலையவ ளிருந்தவீடு
ஆச்சரியம் மெத்தமெத்த வதுதான்பாரு
சோதியென்று நடுவீடு பீடமாகிச்
சொகுசுபெற வீற்றிருந்த துரைப்பெண்ணாத்தாள்
வீதியென்று ஆறுதெரு வமர்ந்தவீதி
விளையாடி நின்றவெகு மானிகண்டாய்
பாதியென்ற மதிசூடி யிருந்தகாமி
பத்துவய தாகுமிந்த வாமிதானே. (1)

வாமியிவள் வர்மம்வைத்துப் பூசைபண்ண
மதியுனக்கு வேணுமடா வதிகமாகக்
காமியிவள் வெகுகாமி சிவகாமிரூபி
காணரிது சிறுபிள்ளை கன்னிகன்னி
ஆமிவளை யறிந்தவர்கள் சித்தர்சித்தர்
அறிந்தாலு மனதடக்க மறியவேணும்
நாமிவளைப் பூசைபண்ண நினைத்தவாறு
நாட்டிலே சொல்வமென்றால் நகைப்பர்காணே. (2)

காணப்பா யிவளுடைய கற்புமெத்த
    கண்டவர்க்குப் பெண்ணரசு நானேயென்பாள்
ஊணப்பா அமுர்தமிவ ளூட்டிவைப்பாள்
    உள்வீட்டுக் குள்ளிருந்து மேலேயேற
பூணப்பா மனமுறுத்து வாவாவென்பாள்
    புத்திரனே யென்மகனே யென்றுசொல்லி
வேணப்பா வேணதெல்லாந் தருவேனென்பாள்
    வேதாந்த சூட்சமெல்லாம் விளங்குந்தானே. (3)

தானென்ற வாலையிவள் ரூபங்காணச்
    சமர்த்துண்டோ ஆண்பிள்ளை தானுமுண்டோ
பானென்ற வர்மத்துக் குள்ளேயப்பா
    பராபரையாள் பலகோடி விதமுமாடித்
தேனென்ற மொழிச்சியிவள் சித்தர்க்கெல்லாம்
    சிறுபிள்ளை பத்துவய துள்ளதேவி
ஊனென்ற வுடலுக்குள் நடுவுமாகி
    யுத்தமியாள் வீற்றிருந்த வுண்மைதானே. (4)

உண்மையிவள் நாணமில்லா திருந்தவீடு
    ஊருக்குள் நடுவீடு வுற்றுப்பாரு
செம்மையாய்க் கண்டவர்கள் உண்டோவப்பா
    ஜெகஜால வித்தையிவ ளாடும்வித்தை
உண்மையடா பஞ்சவர்ண மாகிநின்ற
    உலகதனி லலைந்தவர்கள் கோடிகோடி
நின்மயமாய்க் கண்டவர்கள் சொல்லாரப்பா
    நேசமுட னெனக்குரைத்த நிசங்கண்டேனே. (5)

கண்டதொரு பூரணத்தின் மகிமைசேரு
    கால்மேலுந் தலைகீழும் நடுவுமாகி
அண்டரொடு முனிவர்களுங் கண்டுபோற்ற
    ஆதவனு மம்புலியு மதிலேநின்று
தொண்டுபண்ணு மைவர்களில் நாலுபேர்கள்
    சுகம்பெறலா மென்றுசொன்ன வாசல்நாலு
கொண்டவர்கள் கண்டுவந்த தொண்ணூற்றாறு
    கொள்கையெனக் காத்திருந்த குறிப்பைப்பாரே. (6)

பார்த்தவர்கள் செய்தொழிலு மனதுவேருய்ப்
பலநூலைப் படித்துபடு குழியில்வீழ்வார்
ஏற்றபடி மனம்போனல் பத்திபோச்சு
ஏழைமதி போகாதே யென்தாய்பாதம்
போற்றுதற்கு ஐவரையு மனதிலொன்ருய்ப்
புத்திசித்த மோர்நிலையி னிறுத்திவாசம்
பூத்தமல ரெடுத்துதிருப் பாதம்போற்றப்
பொறியைந்துங் கருவிகர ணுதிபோமே. (7)

போச்சுதடா மனமாய்கை வீறுபோச்சு
பொறியைந்துங் கருவிகர ணுதிபோச்சு
ஏச்சுதடா வென்றுமன மிறக்கலாச்சு
எனக்கொருவ ரிணையில்லை யென்றபேச்சு
வாச்சுதடா மனமடங்க வங்கென்ருேர்சொல்
வாய்பேசா மவுனத்தை யதிலேசேர்க்கக்
காச்சுதடா பூத்தமலர் கருத்தையூணு
கனியாகு மக்கனியைக் கண்டுகொள்ளே. (8)

கொள்ளுதற்கு இன்னமொரு குறிப்பைக்கேளு
கோடையிடி மின்முழங்குங் கண்ணைமூடு
விள்ளுதற்கு மனமடங்காப் பூதங்காணும்
விள்ளாதே யுள்ளபடி சிங்கென்ருேர்சொல்
விள்ளவுமே யுபாயமதாய் நடுவேநில்லு
வேகமெல்லா மொடுங்குமடா சத்தம்போச்சு
கள்ளரைப்போல் மயங்காதே மவுனத்தூணு
கண்ணையுநீ திறக்காதே கருதிப்பாரே. (9)

பாரேது புனலேது அனலுமேது
பாங்கான காலேது வெளியுமாகும்
நாரேது பூவேது வாசமேது
நல்லபுஷ்பந் தானேது பூசையேது
ஊரேது பேரேது சினமுமேது
ஓகோகோ வதிசயந்தா னென்னசொல்வேன்
ஆரேது குளமேது கோயிலேது
ஆதிவஸ்தை யறிவினு லறியலாமே. (10)

ஆமெனவும் ஊமெனவும் ரண்டுங்கூட்டி
அப்பனே ஓமென்ற மூன்றுமொன்றாய்
நாமெனவுந் தாமெனவு மொன்றேயாகும்
நல்லவர்க ளறிவார்கள் மற்றோர்காணார்
வாமம்வைத்துப் பூசைபண்ண யிங்கமார்க்கம்
வந்தவர்க்குச் சத்திசிறு பிள்ளைவாலை
சோமமதி யமிர்தமுண்ண வாவாவென்பாள்
சுகமுனக்குப் பரமசுக மருள்செய்வாளே. (11)

செய்குவாய் பூசையது செய்யும்போது
செய்குறிகள் தவறாமல் நடக்கவேணும்
உய்குவாய் பெண்ணரவங் கடியாவண்ணம்
ஊமையென்ற நடுத்தீயை யதிகங்கொண்டால்
பைகுவா யரவுவிஷம் பொசுங்கிப்போகும்
பங்கமுனக் கில்லையடா அங்கமீதில
ஐகுவா யுள்ளடங்கிப் பேச்சைவிட்டு
அழைத்திடவே யஞ்சுமது கொஞ்சுங்காணே. (12)

காணாத காட்சியெல்லாங் கண்ணிற்காணும்
கலங்காதே மெய்மயக்க மெத்தவாகும்
பூணாக பணிபூண்டு சிறுபெண்ணாகப்
போதமெனும் பொருள்பறிக்க வருவாள்கண்டாய்
வாணாலை மடக்கியிவள் ரூபங்கண்டு
மயங்காதே மவுனத்தில் நில்லுநில்லு
கோணாதே முக்கோணக் குறியைப்பாரு
கூசாதே கண்கூசுங் கூசுங்காணே. (13)

கூச்சமற்றுப் பார்க்கையிலே யிருள்போல்மூடும்
கொள்ளிகொண்டு கொளுத்தியதை வெளிச்சம்போடு
வாய்சமர்த்துப் பேசாதே மவுனத்தூணு
வாவாவென் றேநீயும் வருந்திக்கூவு
சூட்சமது விருந்தவிடஞ் சொல்லப்போமோ
சொல்லுதற்கு வாய்விட்டுச் சொல்லலாமோ
தாய்ச்சமர்த்துப் பாராதே தாயைப்போற்றுச்
சற்குருபோ லுற்பனத்தைத் தாய்சொல்வாளே. (14)

சொல்வதற்கு இவளையல்லால் சுகம்வேறுண்டோ
சூட்சமெல்லா மிவளைவிடச் சூட்சமுண்டோ
நல்லவர்க்கு நடுவில்வினை யாடும்வல்லி
நாதவிந்து ஓங்கார நிலையுங்காட்டி
வல்லவர்க்கு வல்லவளும் நானேயென்பாள்
வரமவர்க்கு வேணதெல்லாம் வழங்கும்ரூபி
புல்லருக்கு ஆயுதமும் புல்லையாகும்
புத்திகெட்ட லோபிகட்குப் புகலொண்ணாதே. (15)

புகலுவார் வேதமெல்லாம் வந்ததென்று
பொய்பேசிச் சாஸ்திரங்கள் மிகவுங்கற்று
அகலுவார் பெண்ணாசை விட்டோமென்று
அறிவுகெட்டு ஊர்தோறுஞ் சுற்றிச்சுற்றி
சகலமுமே வந்தவர்போல் வேடம்பூண்டு
சடைமுடியுங் காஷாயந் தன்னைச்சாற்றி
இகலுமன மடங்காமல் நினைவுவேறாய்
எண்ணமெல்லாம் பெண்ணாசை பூசைதானே. (16)

பூசையது செய்வமென்று கூட்டங்கூடிப்
புத்திகெட்டுக் கைமுறையின் போக்கைவிட்டு
பாஷையது மிகப்பேசிப் பாட்டுப்பாடி
படிப்பார்கள் மந்திரத்தின் பயனைக்காணார்
ஆசையது பெண்ணாசை மயக்கத்தாலே
அங்கிருந்த மர்மத்தைப் பங்குபோட்டுப்
பேசையிலே மனம்வேறாய் நினைப்பான்பாவி
பிரட்டுருட்டாய் நினைவுதப்பிப் பேசுவானே. (17)

பேச்சென்றால் வாய்ச்சமர்த்தாய்ப் பேசிப்பேசிப்
பின்னுமுன்னும் பாராமல் மதமேமீறி
நீச்சென்றும் நிலைப்பென்று மேதுங்காணார்
நிர்மூட ரனேகவித ஜாலங்கற்று
ஆச்சென்று லதினாலே வருவதேது
ஆத்தாளைப் பூசித்தோ னவனேசித்தன்
மூச்சென்ன செய்புமடா நரகிற்றள்ளும்
மோசமது போகாதே முக்காலபாரே. (18)

முக்காலும் பொருந்துமென்று சொன்னபோதே
மோசமில்லை சூட்சமது மொழிந்துகூடும்
தக்காமற் போனபேரனேகருண்டு
சமர்த்தறிந்தா லவன்வாமி யவனேசித்தன்
எக்காலும் நடந்திருநீ காலுமுன்னி
யிருந்தடங்கி யுள்ளிருந்து வெளியிற்போன
அக்காலைக் காணும லலைந்தேயோடி
அழிந்துகெட்டுப் போவார்க ளறிந்துகொள்ளே. (19)

அறிந்தகுறி யடையாளங் காணவேணும்
அக்குறியிற் சொக்கிமனந் தேறவேணும்
அறிந்தவன்போ லடங்கிமன மிறக்கவேணும்
அலகையது வழிபாதை யறியவேணும்
மறைந்தவரை நின்றனந்த வரைநீர்காண
மயக்கத்தைக் கண்டுணையு மதிக்கவேணும்
நிறைந்தமதி குறைந்தவகை யறியவேணும்
நிச்சயத்தை யறிந்தவர்க்கு முத்திதானே. (20)

முத்திதரு மென்றுமனம் பத்தியற்று
மோசமது போகாதே பாசங்கையில்
சித்தமதில் சந்திரனை நிறுத்திக்கொண்டு
செந்தியி லுன்தீயை நடுவில்வாங்கி
சுத்தியுடன் ஆதியந்தம் மனதில்வைத்துச்
சொல்லாத மந்திரத்தின் தீயைமூட்டி
நித்தியமல ரர்ச்சனைசெய் பாதம்போற்றி
நீயுமதி மதியுமதி லதிகமாமே. (21)

மதிபெருகுங் கெதிபெருகும் வாதம்வாதம்
வருந்தாதே யந்தமுறை யாகாதப்பா
நிதிபெருகு மிவள்குறியே வாதமாகும்
நிர்மூட ரறியாமல் வகாரம்பேசி
நதிகள்தனை யறியாமல் சலத்தில்மூழ்கி
நானேநா னென்றுவாய் மதங்கள்பேசி
உரியபொரு ளுள்ளதெல்லாஞ் சுட்டுச்சுட்டு
உட்பொருளைப் பாராம லழிந்திட்டாரே. (22)

இட்டகுறி நாதவிந்து ரூபங்காண
        இயலறியாச் சண்டாளர் சுட்டுமாய்வார்
விட்டகுறை வந்ததென்றால் தானேயெய்தும்
        விதியில்லார்க் கெத்தனைதான் வருந்தினாலும்
பட்டுமன மாய்வதல்லால் வேறொன்றில்லை
        பதியில்லார்க் குரைத்துமனம் பாழ்போக்காதே
திட்டமாய்ப் பானம்வைத்துத் தேவிபூசை
        சீர்பெற்றார் பதினெட்டுச் சித்தர்தாமே. (23)

எட்டிரண்டு வொன்றுமது வாலையென்பார்
        இதுதானே பரிதிமதி கழினையென்பார்
ஒட்டிமுறிந் தெழுத்ததுமுக் கோணமென்பார்
        உதித்தெழுந்த மூன்றெழுத்தை யறியாரையோ
கொட்டுமொரு தேனுருவாய் நிற்கும்பாரு
        கூட்டமிட்டுப் பாராதே குறிகள்தோணும்
சுட்டசுடு காடுமது வெளியுமாகும்
        சொல்லுதற்கு வாய்விளங்காச் சூட்சந்தானே. (24)

சூட்சமிவள் வாசமது நிலைத்தவீடு
        சொல்லுதற்கு யெங்குமாய் நிறைந்தவீடு
தேசமதில் போய்விளங்கு மிந்தவீடு
        சித்தாதி சித்தரவர் தேடும்வீடு
ஓசைமணி பூரமதி லுதிக்கும்வீடு
        ஓகோகோ வதிசயங்க ளுள்ளவீடு
ஆசுகவி மதுரமது பொழியும்வீடு
        அவனவளுங் கூடிவிளை யாடும்வீடே. (25)

வீடுமது தலைவாச லதுமேல்வாசல்
        வெளியான சுழிக்கதவு அடைக்கும்வாசல்
தேடுகிற மூவருமே வணங்கும்வாசல்
        திறமான பன்னிருவர் காக்கும்வாசல்
ஆடுகிற புலியாகி நின்றவாசல்
        ஆரகரா சிவசிவா வாசிவாசல்
கூடுகிற முக்கோணப் பரங்களாங்க்
        குறுகிமதி பெருகுமதி கூறொண்ணாதே. (26)

ஒண்ணாகி யிரண்டாகி விளைவுமான
        உத்தமியாள் உட்கருத்தை யறியப்போமோ
திண்ணாத விடக்கெடுத்துத் தின்னச்சொன்னாள்
        செத்தசவம் போலிருந்து செபிக்கச்சொன்னாள்
பண்ணாத பணக்கோட்டி பண்ணிவைத்தாள்
        பார்த்திருந்து கழுத்தறுக்கப் பார்த்தாள்பாவி
எண்ணாது எண்ணிமனம் ஏங்கிநானும்
        ஏதுனக்கு அபயமென வெயழுந்திட்டேனே. (27)

எழுந்திட்டே னிவள்பார்த்துத் தொடர்ந்துகூடி.
        யென்னையுமே யிழுத்துமடி பிடித்துக்கொண்டு
கொழுந்துவிட்டு வளர்ந்தெரியு மனலைமூட்டிக்
        குடிகேடி சத்துருபோல் கூச்சலிட்டாள்
அழுந்தேனே முந்தியினி யந்தவூரில்
        அரகரா துணையெனக்கு யாருமில்லை
எழுந்திட்டா ரெல்லோரு மோடிப்போனார்
        என்னசெய்வேன் தனித்திருந்து யேங்கினேனே. (28)

ஏங்கினேன் வீடழிந்தேன் கூடமற்றேன்
        என்னையுந்தான் கண்டவர்கள் சீசீயென்ன
தூங்கினேன் காலறிந்து மடக்கமாட்டேன்
        துணையெனக்கு யாருமில்லை சூட்சியாக
வாங்கினேன் காலறிந்து மடக்கவேண்டி
        வகையாக வெனக்கொருத்தி யுறுதிசொன்னாள்
தேங்கினேன் முன்னுமவள் பின்னுமாசத்
        திடமெனக்குச் சொன்னதிந்த தெளிவுதானே. (29)

தெளிவதற்குச் சூட்சமிது தெளிவாய்ப்பாரு
        சிவனிருந்து விளையாடுந் தெருவைப்பாரு
மொழிவதற்கின் னாலைவிட வேறொன்றில்லை
        முன்னாதி யந்தமொடு நடுவுஞ்சொன்னோம்
சுழியதற்குள் சுழியிருந்த சூட்சஞ்சொன்னோம்
        சொல்லாத மவுனமுதற் கருவுஞ்சொன்னோம்
ஒளிபிறக்கு முறுதியந்த வுறுதிசொன்னோம்
        உற்பனமாய்ப் பார்த்தவர்கள் சித்தர்தானே. (30)

கருவூரார் பூஜாவிதி ௩௰.

முற்றிற்று

உ

குமரகுருபரன்றுணை.

152-வது:

கருவூரார் திருவாய்மலர்ந்தருளிய

# திருமந்திர சூஸ்திரம் ய௧

பாடுகிறேன் திருமந்திர சூத்திரந்தான்
பாங்கான பார்வதித்தாய் பாதம்போற்றி
நாடுகிறோம் நகாரமுதல் மகாரந்தொட்டு
நலமான சிகாரமது அதற்குட்காணும்
தேடுகிறோ மாதுமுத லுப்புக்காய்ச்சி
செகசால மாடுகிற கருவுங்கூட்டி
ஆடுகிறோம் குகைசெய்து சூதமிட்டு
ஐந்தெருவிற் புடம்போடச் சிகப்புமாமே. (1)

ஆமப்பா துலாத்தோருக் செழுத்துக்காணும்
அப்பனே கன்னியென்ற ராசியோர்க்குத்
தாமப்பா ரெண்டாண்டி லெழுத்துக்காணும்
சாதகமாய் நகாரமுதல் மகாரந்தானும்
காமப்பா ஒளிக்கறியோம் சிங்கென்றாணி
நாட்டுவாய் சுழிமுனையில் நாட்டம்வைத்துத்
தேமப்பா குருபதத்தை அடுத்துக்காத்துத்
தெரிசித்துச் செகசாலத் தொழிலைக்கேளே. (2)

கேளப்பா முந்தியதோர் பிராணபந்தான்
கேசரியி லிடவலமா யாட்டித்தீரும்
நாளப்பா லட்சமுருச் செபித்தாயானால்
நலமான சுழிமுனைதான் திறக்கும்பாரு
நீளப்பா யிப்படியே செய்தாயானால்
நிலைத்துதப்பா உன்சடலம் நிரூபியாவாய்
வாளப்பா கற்பமது முன்னேகொண்டால்
வகையான தீட்சையெல்லாம் வருகுந்தானே. (3)

தானென்ற குளிகையது சொல்லக்கேளு
சதிரான மூன்றெழுத்தில் விந்துநாட்டிக்
கானென்ற பத்துலட்ச முருவேசெய்தால்
கடலேழுந் தாண்டுமப்பா கெவுனவேகம்
வானென்ற குளிகைசா ரணையைத்தீர்த்து
வகையான குருபதத்தை வணங்கிக்காத்துத்
தேனென்ற வாய்ப்பேச்சை மயக்கஞ்செய்யும்
ஜெகசாலச் சீடனையுஞ் சேர்த்திடாதே. (4)

சோராதே துஷ்டர்களை யடுத்திடாதே
செந்தூர மெழுத்தறியார்க் கீய்ந்திடாதே
காராத சீஷனுக்கு யிடங்கொடாதே
கருத்தறியா மூடருக்கு உரைத்திடாதே
பேரான பெரியோர்க ளறிந்தவித்தை
வெரும்வீணர்க் கோதாதே வேதம்வேதம்
ஆராலு மறியாத ஆயிபாதம்
அனுதினமும் மனதறிவிற் கிட்டுந்தானே. (5)

காட்டான குருபதத்தை யடுத்துக்காரு
கனகமவர்க் கெய்தெல்லாங் கனிந்துநேரும்
பூட்டாமைங் கோணமுத் திரையைக்கேளு
பொருந்தியதோ ரிரண்டெழுத்தி னுட்டைக்கேளு
தேட்டான தேட்டெல்லா மவள்தன்தேட்டு
செகஜாலத் தாய்பதத்தைத் தினமும்போற்று
பாட்டான தீட்சைவிதி பிராணாயந்தான்
பாங்கான வணிகருக்குச் சொரூபியாமே. (6)

ஆமப்பா அஷ்டமா சித்திகேளு
அழகான அகாரமது முன்னேநாட்டித்
தேமப்பா யெட்டெழுத்து மிரண்டுங்கூட்டித்
தியானிக்க மோகனந்தான் தெளிந்துபாரு
ஓமப்பா ஓரெழுத்து மிருபத்தஞ்சு
உத்தமனே சுழிமுனையில் நிறுத்திப்பாரு
நாமப்பா யிதினாலே யெட்டோடெட்டும்
சாதகமா யறுபத்தி நாலுமாச்சே. (7)

ஆச்சிந்த வகையாலே சித்தர்செய்தார்
ஆதியென்றும் பராபரத்தா யருளைப்போற்றிப்
பூச்சிந்த ஆயியுட வித்தையெல்லாம்
புகழான குருவருளாற் கண்டுதேற
ஏச்சந்தக் குருவருளை வாங்கிக்கொண்டால்
இயலான பரகெதிக்கு யிடமுமாகும்
பாச்சியே யெட்டினுட பொருளையெல்லாம்
பாங்கான மனதுவைத்துப் போத்துவாயே. (8)

போத்தப்பா வைப்புக்கு அஞ்சுலட்சம்
புகழான யெட்டெழுத்தும் புகட்டிநாவில்
வாத்தப்பா குளிகைக்குப் பத்துலட்சம்
வாகான வாதத்துக் கெட்டுலட்சம்
சாத்தப்பா மவுனத்துக் சொன்றேலட்சம்
சதாகோடி சாபத்துக் கதுவேயாகும்
ஏத்தப்பா பச்சிலைகள் சாபத்துக்கும்
எய்தியதோர் பீடைக்கோர் லட்சமாமே. (9)

ஆமப்பா துலாத்திலொரு விநாடிதாழ்ந்தால்
அப்பனே ஓராண்டு யீராண்டாகும்
ஓச்சப்பா கன்னியென்ற ராசியோர்க்கு
உத்தமனே யிக்குறியும் உண்டானுக்கால்
ஏச்சப்பா ரெண்டாண்டு நாலாண்டாகும்
எய்தியதோர் வேதையிவ் வளவேயாகும்
மூச்சப்பா உங்கிலியுங் கிலியுஞ்சவ்வும்
மூட்டுவாய் பாதாள முருவுந்தானே. (10)

உருவான கெந்திக்குச் சரியேசூதம்
உத்தமனே மூன்றெழுத்தஞ் செழுத்துங்கூட்டிக்
குருவான ஆதியென்ற வுப்புங்கூட்டிப்
புகழான யெருக்கலம்பால் விட்டுஆட்டி
எருவான ஐந்தெருவிற் புடத்தைப்போடு
அப்பவல்லோ ஐயிரண்டு காட்சியாச்சு
பருவான திருமந்திர சூஸ்திரந்தான்
பதினெண்பேர் பதம்நினைக்கப் பலிக்குந்தானே. (11)

கருவூரார் திருமந்திர சூஸ்திரம். ௰க.

முற்றிற்று.

உ

குமரவேள் துணை.

153-வது:

கருவூரார் திருவாய்மலர்ந்தருளிய

# மெய்ச்சுருக்கம் ருக.

குருமுனியே நந்தி குருபாதம் முன்கொண்
டுறுதிபெற மெய்ச்சுருக்க மோதக்—குருமுனியைக்
கொண்டாடி யேழிற் குறிப்பறிந்து முப்பொருளைக்
கண்டார்க்குப் பூரணமாங் காப்பு.

பத்தெட்டும் பத்தாகிப் பாரெட் டிருசுழிபாய்ச்
சித்தெட்டுஞ் சித்திக்கச் செய்குவோம்—பத்தெட்டைக்
கண்டார் கருவேழிற் கற்பகமே மெய்ச்சுருக்கம்
கொண்டார் கணபதியாங் கூறு.

அண்டமுதற் பிண்டமென்ற தெட்டினாலே
ஆத்தாளும் பரமான தெட்டினாலே
கண்டதொழி லாடுவது மெட்டினாலே
கரைகாணு தாட்டமெல்லா மெட்டினாலே
தொண்டுசெய்யும் வழிமுறைக ளெட்டினாலே
சொல்லாத உபதேச மெட்டினாலே
பண்டுறுதி யமைப்பதுவு மெட்டினாலே
பராபரமாம் வெளியான தெட்டுந்தானே. (1)

எட்டிரண்டுங் கூடியல்லோ வயதுபத்தா
யிருந்தாளே யென்னுத்தா ளழியாக்கன்னி
கட்டழகி யவள்வயது பத்துக்குள்ளே
கற்பகம்போ லெனையீன்று ளந்தவேளை
திட்டமுடன் யான்பிறந்தேன் ராசிகன்னி
சிவசிவா நட்சேத்திரஞ் சோதியாகும்
விட்டகுறை பூருவமாந் தசமிநாளில்
மெய்யான காரணமா மையன்பேரே. (2)

பேருசொல்லி யெனையழைத்தா ளாத்தாள்கன்னி
பிரணவத்தோ டாறுதல முறையுஞ்சொன்னாள்
ஊருசொன்ன போதகுடி புகுந்தேன்வாழ்ந்தேன்
உறமுறையார் தொண்ணூத்தி யாறுபேரும்
சீருசொன்னே னிணங்குதற்கு மாட்டோமென்றார்
தீக்கொளுத்திச் சுட்டுவிட்டே னய்யோஅய்யோ
ஒருஜாதி யானேனா னொருவனானேன்
உறவின்முறை சனங்களொன்று மில்லைதானே. (3)

தானேதான் தனித்தேனே யாத்தாளாத்தாள்
சன்னதிநா னடக்கவுந்தா னிதுதானென்றேன்
மானேதான் பேசப்பனி ரண்டேயாண்டு
வாய்திறக்கச் சென்றுதடா பேச்சிலூமை
தானேதா னவள்கண்ட வூமைப்பேச்சு
தாயறிவாள் நானறிவேன் சொல்வேன்சொல்வேன்
தேனேசொல் மொழியுடைய தேவிவாலை
செப்புமொழி ஓமென்றா ளாமென்றேனே. (4)

ஆமென்றே னோமென்றாள் திரும்பப்பேச
ஆண்டொன்று மாச்சுபதி மூன்றேயாண்டு
ஓமென்று சொல்லுதற்கு ஆண்டுசென்றால்
உரையேது மறுபேச்சு உரைப்பதேது
ஊமென்று சொல்லியபின் பின்னுஞ்சொன்ன
உற்பனத்தா லாறுதலங் கண்டேகொண்டேன்
ஓமென்று பதின்மூன்று கோணத்துள்ளே
உவந்திருந்த சூக்ஷமது அதீதந்தானே. (5)

அதீதமிவள் குடியிருந்த பதியின்வீடு
அரனோடு புருவமையத் துருமையாலே
அதீதமிவள் அரனோடே யாடுங்கூத்தே
அகண்டபரி பூரணமாய்க் காலைக்கண்டேன்
அதீதமிவ ளாட்டுக்கால் காலைச்சொல்ல
யாருக்குந் தெரியாது துரியாதீதம்
அதீதமிவள் சிரசஞ்சால் முக்காலாகி
ஆட்டுக்கா லெனக்களித்த அதீதந்தானே. (6)

ஆட்டுக்கால் மூலமடா ஆதிமூலம்
ஆதிதிரு நடனவெளி சத்திமூலம்
நீட்டுங்கால் மடக்குங்கா லறியவேணும்
நேரறிந்து நிறைசெலுத்திக் கொள்ளவேணும்
மாட்டுங்கால் வழிபார்த்து நடக்கவேணும்
மதியறிந்து கலைதெரிந்து வாழவேணும்
பூட்டுக்கால் திறவுகோ லறியவேணும்
பூரணத்தி னுட்கலந்த புதுமைதானே. (7)

புதுமைவெகு பழமையது சத்தவெள்ளம்
பொன்னகரங் கொள்ளாமல் வெள்ளமிஞ்சி
புதுமையிது ஆறுதலம் பொங்கிமற்ற
பூரணமாய்க் கரைமாறு மந்தவேளை
புதுமையது ஆனந்தத் திரிகோணத்துள்
பூரணமாய்ப் பிரளயத்திற் பதினெண்பேரும்
புதுமையது நலமாகி யாதிமூன்றாய்ப்
பொய்யாம லருபுனலில் மூழ்கினாரே. (8)

ஆறான திருமூன்று பேருமொன்றாய்
யாருக்குந் தோணாமற் சபித்தாரப்பா
ஏறாத வார்த்தைசொல்லி யிடுக்கம்பேசி
யேச்சுப்போட் டார்களப்பா பேசப்போமோ
பேறான விட்டகுறை மார்க்கங்கண்ட
பெரியோர்க்குச் சாபநிவா ரணமேசெய்யக்
கூறாக அட்சரத்தைச் செபிக்கச்சொல்லிக்
கூறினா ருபதேசங் கூறினாரே. (9)

கூறினா ருபதேச மெழுத்தோ அல்ல
கொண்டதுவே கொள்கையென்ற பெரியோர்க்கல்லால்
தாருமா றாகயிதைப் பழித்துப்பேசும்
சண்டாளப் புலையனுக்குத் தோணாதப்பா
ஆறினா லறுமூன்று பேருஞ்சொன்னார்
ஆச்சரியம் யான்கண்டே னதீதங்கண்டேன்
தேறிமன தொன்றான தோற்றங்கண்டேன்
செடிபூடு கல்காடு யெல்லாம்நீரே. (10)

நீராச்சு கண்கனலாற் பற்பமாச்சு
நேரறிந்தோர் நிறைசெலுத்த நிசமுமாச்சு
பேராச்சு முப்பொருளு மொன்றாய்ப்போச்சு
பேச்செல்லா மரைச்சணத்தி லொழிந்துபோச்சு
வீராச்சு லாகிரிகொண் டேறலாச்சு
மெய்யாச்சு பொய்யென்ற தெல்லாம்போச்சு
தூராச்சு உலகத்தி லறிந்தபேச்சு
சொல்லாச்சு அச்சொல்லும் பொய்யாய்ப்போச்சே. (11)

போச்சென்று போகாமல் நூலைப்பாரு
பூரணத்தின் சூக்ஷமெல்லாம் வெளியாய்ப்போச்சு
ஆச்சரிய மென்னூலைப் பார்த்தாயானால்
அதீதமென்ற பொருளுனக்கு அதுவேயாகும்
பேச்சாலே வருவதென்ன பேசலாமோ
பேருலகத் தோடுறவு செய்யலாமோ
மூச்சாலே மூச்சற்ற யிடமேகாண
முக்காலுந் தப்பாது யிந்தநூலே. (12)

இந்தநூ லைம்பத்தி யொன்றேயாகும்
இணக்கமுடன் பார்க்கப்பன் மூன்றேயாகும்
இந்தநூல் சுருக்கமடா ஐம்பத்தொன்று
எட்டெட்டா மட்டசித்தி யிதிலேசித்தி
இந்தநூ லைம்பதுக்குள் மெய்யாய்நின்று
இணங்கிவிளை யாடுமிது தப்போயில்லை
இந்தநூற் கருவறியார்க் கொன்றுமில்லை
எட்டாலே ரெண்டாக யிணங்கிப்பாரே. (13)

இணங்காதா ரிணங்குவரோ நூலைப்பார்க்க
எட்டிரண்டும் பாராத மட்டிமாண்பர்
இணங்காரோ டிணங்காதே மைந்தாகேளு
யிவ்வேளை முத்திபெறச் சித்தியாக
அணங்காசி வாலைபதி மூன்றுக்குள்ளே
ஆச்சரிய மதியமுர்த மங்கேயுண்டு
பணங்காசு பொருள்தேடிப் புதைத்துவைத்துப்
பாழ்நரகில் வீழாதே பதியைப்பாரே. (14)

பதியறிய விந்நூலைப் பகுந்துபாரு
பதஞ்சித்தி மனதுபூ ரணமேயாகும்
கெதிபெறவும் நிதிபெறவும் யிதிலேயாகும்
கேட்டதெல்லாங் கொடுக்கும்பதி மூன்றேகோணம்
விதியுனது தலைவிதியி னமைப்பேதோணும்
விட்டகுறை யறியவுமே யெட்டுந்தோணும்
நதிபதியாம் மூன்றில்மலங் களையமூழ்கி
நல்லபதம் பெற்றிருக்கச் சித்தியாமே. (15)

ஆமிந்தப் பதிமூன்று பதியிற்குள்ளே
அழுத்தமாய்ப் பார்த்துநா னுணர்ந்துக்கொண்டு
போமந்தப் பூரணத்தைப் போகாமற்றான்
புத்தியுட னுட்கொண்டா லினிமேற்கேளு
தாமந்தக் கரணமுடன் பவுத்திரத்தாற்
சாட்சிமனக் கடைக்கண்ணை யழுத்திப்பாரு
ஓமிந்த ஒளிபோலே ஒளியோவீசும்
ஓகோகோ அப்பாலுஞ் சொல்லக்கேளே. (16)

சொல்லக்கே ளுதையாதி சூரியன்போல்
சோதிசுடர்ப் பிறபைபோ லொளியேவீசும்
சொல்லக்கேள் மண்டலந்தா னிதுவேயாகும்
சோதிகுரு பாதமது சரதஞ்சொன்னேன்
சொல்லக்கே ளதுவேதான் முத்தியாச்சு
சொரூபசித்தி நிசமாச்சு மெய்யுமாச்சு
சொல்லக்கேள் தப்புமொழி சொல்லவில்லை
சோதித்துப் பார்த்துனக்குச் சொன்னேன்பாரே. (17)

சொன்னேனான் மெய்ச்சுருக்கம் நிசமேசொன்னேன்
சுழன்றுமன மிளையாதே கழறும்விந்து
சொன்னேன்பார் கழறாது கெச்சனித்தால்
சூக்ஷிமிதி வின்னமொரு கருவைக்கேளு
முன்னேதா னவள்பெருக்கிக் கழன்றுவீழும்
முழுதுமதைப் பீங்கானில் வாங்கிக்கொண்டு
சொன்னேனான் மதியினுப்பு சூதத்தோடு
சூக்ஷமடா பொரிகாரம் மூன்றுந்தானே. (18)

தானிந்த மூன்றுமொரு சமனேயாகும்
தசநாதத் துட்போட்டுப் புழுகுசேரு
தானிந்தக் கருவைந்திற் கருவைக்கேளு
சம்பழத்தின் சாறுவிட்டுப் பலந்தான்கெந்தி
நானிந்த யேழுக்குட் கண்டேன்வேதை
ரகசியமாய்ச் சொல்லவில்லை மறைப்போயில்லை
ஆனந்த ஆச்சரிய மிந்தவிந்தை
ஆத்தாளே கண்டுமெச்சிக் கொள்வாள்தானே. (19)

தானென்ற யேழுக்குட் நமிவைந்துந்தான்
சம்பழத்தின் சாறோடே நாதம்ரெண்டும்
ஏனென்ற பூச்சியடா விந்த்ரகோபம்
எட்டான கருவப்பா யெட்டுயெட்டு
தானென்ற நமியாகு மெட்டாற்கொண்டு
தானரைக்கும் போதுமண்ணில் வேந்தன்சாற்றைக்
கோனென்ற சாறுஒரு துளியும்விட்டால்
கொண்டசரக் கத்தனையும் மாண்டுபோமே. (20)

மாண்டுபோம் சொரூபத்தில் நாலுமாளும்
மதியுள்ள பிள்ளாய்நீ யறிந்துகொள்ளு
தாண்டவம்போ லாடுவது மிந்தவேதை
சணத்திலே யிருக்கிருக்கக் குருவாம்பாரு
ஆண்டுகொள்ளும் பூரணந்தா னுன்னையங்கே
அய்யனே யானுரைத்தேன் பொய்யோயில்லை
சாண்டுபோச் சென்றிருந்தால் மாண்டுபோவாய்
சத்தியமே யிந்தநூ லறிந்துகொள்ளே. (21)

கொள்ளாத பசுவுக்குக் கண்ணங்கேது
கூறரிய கருவேது மதியங்கேது
விள்ளாத பொருளுனக்கு விண்டேன்பாரு
வெளியாக ஒளியாமற் றெளிவாய்ச்சொன்னேன்
கள்ளான மெய்ச்சுருக்க முனக்காய்ச்சொன்னேன்
கருச்சொன்னேன் குருசொன்னேன் உற்றுப்பாரு
விள்ளாதே நிலப்பயிர்தான் சாதிநாலு
மெய்யான பத்மினிதான் மெத்தநன்றே. (22)

மெத்தனமாய்ப் பாராதே யிந்தநூலை
மெய்யான முதற்சாதி கிடையாவிட்டால்
பத்தியுடன் ரெண்டான சாதிபாரு
பார்தனிலே தானதுவுங் கிடையாவிட்டால்
முத்தியடா மூன்ருன சாதிக்குள்ளே
முக்காலும் மூலமடா மூன்றுமாகும்
பத்தியுடன் புத்திகொண்டு உற்றுப்பாரு
பத்மினியாம் மூன்ருன சாதிதானே. (23)

சாதிமுத லாகியடா வசியங்கோடி
சவுசன்ய சலசால சங்கவோசை
ஆதிமுதல் சங்கினிக்கோ சங்கைகேளு
அறுசங்கம் வேளையிலே யன்புண்டாகும்
காதுகிழிந் தொலிமுழங்கும் பெரியசத்தம்
கண்டறிநீ செவியடைக்குங் காரணந்தான்
நாதமென்ற சுரதநீர் வெகுவாய்ப்பாயும்
நவிலாதே உன்மனது மவுனங்கொள்ளே. (24)

கொள்ளென்ற மச்சமுனி யெழுத்தைக்கூறக்
கூரறிந்து கொண்டதச நாதம்நாதம்
உள்ளபடி விள்ளாதே முன்னேசொன்னேன்
உற்பனமாம் நவமூல மொன்ருய்ச்சேர்த்துக்
கள்ளமின்றிச் சொல்லுகிறே னின்னமொன்று
கைகண்ட சித்தியடா கருதிக்கேளு
உள்ளமது மனதறிந்த உள்ளம்உள்ளம்
ஒன்பதுக்குட் பிரவாத முண்டுபாரே. (25)

உண்டுபிடி வாதசித்தி யொளிப்போயில்லை
ஓரெட்டு ரெண்டாலே ரசந்தான்கட்டும்
கண்டுகண்டு மனந்தேறிக் கையுமெய்யாய்
கருவறிந்த உருப்பாரு குருவுமாச்சு
தண்டுமுண்டு செய்யாதே நூலைப்பார்த்துச்
சரோருகமாய்க் கண்டறிநீ மனமேசாக்ஷி
விண்டொருநாட் சொல்லாதே உலகத்தோர்க்கு
மெய்ச்சுருக்கம் பொய்யாது விளம்பினேனே. (26)

விளம்பினேன் திருவுளமாய்க் குருவுமாச்சு
மேருவொரு அணுவாகும் அணுவும்மேராம்
விளம்பினேன் உள்ளத்தின் மவுனத்தாலே
விளாவிப்பார் குருமுடித்த கருவைநன்றாய்
விளம்பினதோ ரரும்பொருளாய் நின்றசோதி
மெய்க்குருவாய் விளங்குமிது ஐம்பத்தொன்று
விளம்பினது பொய்யாது யிந்தநூலில்
விவேகவிர்த்தி யறிவாலே அறிந்துபாரே. (27)

அறிந்தறிவை யறிவிஞ லறிந்துபாரு
அறிவறிவே அதீதமாந் துரியாதீதம்
அறிந்துமனங் குவிந்துசிவ பொருளைக்காண
ஆனந்த சொரூபமதி லமுதமுண்ண
அறிந்தறிவைப் புணர்ந்துகொள்ளு முத்தியாச்சு
ஆச்சரியம் மனதடங்கா அதீதமாச்சு
அறிந்துபார் பாராமல் ரூபாரூபம்
ஆனந்த ரூபமடா சொரூபந்தானே. (28)

சொரூபமது கயிலாச தேகந்தேகம்
சூக்ஷமிதை யறியசிவ யோகியாவாய்
அரூபமடா காரணந்தான் தோன்றுமிந்நூல்
அன்னையுன்னை யெடுத்தமுர்த மீவாளீந்தால்
சொரூபமடா மறுபிறவி யில்லையில்லை
சுருக்கத்தி லனேகமுண்டு யிதுபோலில்லை
அரூபமடா மெய்ச்சுருக்கம் நிசமேசொன்னேன்
யார்க்குமொரு மார்க்கமெனக் காக்கமாமே. (29)

ஆக்கமென்ன அறுபத்தி யிரண்டேயாகும்
அதுயெழுத்து யிருபத்தொன் பதுவேயாகும்
ஆக்கமென்ன கண்கண்ட தவனேநீயாம்
அகமறிந்த சூக்ஷநிலை அறிவதாச்சு
ஆக்கமென்ன நீராலே ஆக்கமென்றேன்
அச்சூக்ஷ மறிந்தமெய்ச் சுருக்கமிந்நூல்
ஆக்கமென்ற நுணுக்கத்தி லகத்தைக்கண்டு
அதிசூக்ஷ மாச்சரிய மைம்பத்தொன்றே.

ஒன்றான திருபத்தி யொன்றேயாகும்
உத்தசிவ லிங்கமென வந்தமூலம்
குன்றான மறைகளுக்கும் எட்டாமூலம்
குருவருளாற் றெரிந்தாக்கால் அதுவேஞானம்
நன்றான சுயம்பதுதா னிருபத்தொன்று
நவசித்தர் கிரிகையென்ற சருவசித்தி
மன்றுமுத லாகாச மென்றமூலம்
மறுத்தொன்று மில்லையிதின் மூலந்தானே. (31)

மூலமென்ற நவமூல மிதுவேயாச்சு
முன்னவன்றன் முன்னின்று முடிந்தபேச்சு
மூலமது சூக்ஷத்தா லெல்லாமாச்சு
முப்பொருளு மொன்றான ரூபமாச்சு
ஆலவிஷ மதியமுர்தம் கற்பமாச்சு
அறியாட்டா லெழுநரக மிதுவேயாச்சு
பாலமுர்தம் மயிர்ப்பாலம் நெருப்பாறுச்சு
பதியறியக் கெதியாச்சு யிந்தப்பேச்சே. (32)

பேச்சென்றும் பேசாத பேச்சைப்பேசப்
பேச்சறிந்து திரிவதுபோ லாச்சுபாரு
மூச்சென்ற மூச்சடக்கிக் குருவைத்தொட்டு
முடிந்ததொரு கருத்தொட்டு மூலந்தொட்டு
ஆச்சென்று தொட்டதெல்லாம் பொன்னுமாகும்
ஆமென்று குருசொன்னார் அரனுஞ்சொன்னார்
வீச்சென்ற மடப்புத்தி யாலேநீயும்
விளம்பாதே விளம்பினல் நரகந்தானே. (33)

நரகத்தி லழுந்தாமல் நூலைப்பாரு
நாலான பூரணத்தின் காலைப்பாரு
பரகதியாம் முத்திசித்தி வெளியாமின்னால்
பாதைவழி காட்டாட்டா லெட்டும்பாரு
கருவெட்டு ரெண்டாலே விந்தைக்காட்டும்
கால்நூலாய்ச் சொன்னதிந்தக் கருவைப்பாரு
திருவெட்டு மெழுசமய மேழுக்குள்ளே
சிவசத்தி யிரண்டேயாம் செம்மைதானே. (34)

19 NOV 1927

செம்மைமன துற்றமுத்தாஞ் சித்தர்மெச்சச்
செப்புகிறேன் மறைப்புவித்தை தீர்க்கமாகச்
செம்மையது மாதளம்பூ மலரும்பத்து
செப்புதற்கோ பூவாதி யேகபோகம்
தம்மையது மறைத்தபொருள் ஆர்க்குந்தோணு
சமுசயங்க ளில்லைபதிற் சொல்லவில்லை
அம்மைசிவ காமிவல்லி யருளாற்புத்தி
அறிவினாற் கண்டுணர்ந்து தொழிலேசெய்யே. (35)

செய்யும்வகை முப்பூபேய்ப் பீக்கிமூலம்
சித்தாம ணக்குரசம் நாலுமொன்றாய்ச்
செய்யும்வகைக் கோர்நிறையா யரைத்துவாங்கிச்
செப்புகிறே னின்னமொரு கருவைக்கேளு
வையமதில் மணவாள னிறந்தபோது
மாதழுத கண்ணீரு முண்ணுப்பாலும்
உய்யும்வகை யிரண்டும்முற் கருவிற்சேர்த்து
உறுதிபெறத் திரும்பவுமே யரைத்துவாங்கே. (36)

வாங்கியந்தக் குளிகைதனை அஞ்சுபத்து
வருத்துப்போட் டதின்பிறகே ரண்டத்தெண்ணெய்
ஓங்கியிந்தக் கருவேழு மொக்கக்கூட்டி
உற்பனமா யிருட்டறையில் கலசத்தூரில்
வாங்கியிதை மத்திக்கும் போதுசொல்வேன்
மறைநாலு வேதமொழி மறையோன்சொன்ன
நாங்கிறுக்கும் யேகசுழி ஊமைஊமை
நாலுமறை யறியாத யெழுத்தையுன்னே. (37)

உன்னியே மத்தித்தால் நிறமேசெம்மை
உறுதியிலே பரப்பிர்ம வித்தையாகும்
கன்னியே யொருத்திமா தளம்பூவாலே
கருமறைத்து உருமறைத்த கருவைக்காட்டி
இன்னமொரு கருத்தொழிலை யெனக்குச்சொன்னாள்
இயல்பாய்ச்சோ தித்தேன்மெய்ச் சுருக்கமாகச்
சொன்னதிலே யெள்ளளவுந் தப்போயில்லை
சுகபோக மனுபோக மிதிலேகாணே. (38)

காணாத கருமையைச் செம்மையாகக்
கருவேழிற் கருமெச்சிச் சிமிழில்வைத்துக்
கோணமற் ருய்பதத்தில் வைத்துநீயும்
குறியறியச் சொல்லுகிறேன் தியானங்கேளு
வாணளாய் நின்றவுயிர் சரீரத்துள்ளே
மறைபொருளு மிருசுழியு மொன்ருய்நின்ற
நாணமற் சொல்லுகிறேன் ராசிமூலம்
நந்திகுரு வானபொரு ளம்மாவென்னே. (39)

அம்மம்மா என்னுடைய தாயேதேவி
அகமேழும் மறைபொருளே தெரிவைபூவை
அம்மம்மா ஆயிளேயே ரூபாரூபி
ஆத்தாளே பூத்தாளே பூவேயான
அம்மம்மா பரம்பரையே யாதிசத்தி
அணுகியே வினுதியே வாசிவாசி
அம்மம்மா மூலத்தி னுலேயேழில்
அறுவரையின் பொருளான அருளேயென்னே. (40)

அருளான முப்பொருளு மொன்றேயான
அங்கரியே சங்கரியே உங்கேயெங்கே
பொருளான சற்குருபூ ரணமேதேவி
பூமலரே மாமலரே பொய்யாத்தேனே
மரைபொருளே யெனதறிவே மறைக்கும்வித்தை
மாசில்லாப் பொன்னொளியே தங்கமான
நிரைநிரையே மூலமனே மணியின்தாயே
நிர்க்குணமே சகலசித்தும் நீயேயென்னே. (41)

நீயாகி நானுகி யேகமாகி
நிரஞ்சனமா மவுனமுறும் நீயேயாகித்
தாயாகிச் சேயாகி யேதுமில்லாத்
தனியேக வெளியாகி யொளியுமாகித்
தீயாகிக் காலாகிப் புனலுமாகிச்
செகமாயை யினிதென்ற ஆசையாகிக்
காயாத பூவாகிக் கனியுமாகிக்
கருவெளியி லுருமறைத்த கருவேயென்னே. (42)

கருவான திருவுருகா ரணமேயென்று
    கைமுறைசோ டசவுபசா ரத்திேைனாடு
கருவான மவுனத்தா லெழுதாநின்ற
    கருத்தறிவால் தியானத்தால் மவுனங்கொண்டு
கருவான கருவிருந்த சிமிழைப்பாரு
    கண்ணுக்குத் தோணுமல் மறைந்தேநிற்கும்
கருவான திப்படியாம் சொன்னசேதி
    கண்டறிநீ சிமிழ்தோணத் தியானங்கேளே. (43)

கேளுமே யெழுசபையி லடங்கிநின்ற
    கிரிமாவே லகிமாவே அணிமகிம்மாவே
கேளுமே பிராத்திபிரா காமியந்தான்
    கிளரீசத் துவமோடு வசித்துவந்தான்
கேளுமே மசிமசி வாவாவென்று
    கிரிகையாய் மறைந்தசிமிழ் மெய்யதாகக்
கேளுமே கடிகைக்குள் தோற்றும் தோற்றும்
    கெணிதம்வைத்து அறிந்ததைத்தான் அறிந்துபாரே. (44)

பாரேநீ யிப்படியே சொன்னபேச்சைப்
    பழுதுபட நினையாதே வங்கினீயை
பாரேநீ புருமையுடன் புருவமையம்
    பணவிடைதான் வமலியு மிட்டுப்பார்த்தால்
பாரேநீ வயிரியுந்தா னுர்தான்காண்பார்
    பரவெளியை யுருக்கண்டால் வயிரிகாண்பார்
பாரேநீ யிதுபார்க்கச் சேதமென்ன
    பாடுபடக் குருவருளாற் பலிக்குங்காணே. (45)

பலிக்கும்யே மலியிடவே பசாசுபூதம்
    பகலிரவு வயிரியஞ் சிகமேதோணும்
பலிக்குஅயி ராம்வித்தை யெதிலுமில்லை
    பரிசனங்கள் கூட்டமிட்ட சபையினூடே
குலிக்கிநடை நடந்துசத்தங் கூச்சல்போட்டுக்
    கூப்பிட்டுச் சபையூடே திரிந்தாலுந்தான்
சலிக்குமுன்வாய் சலிக்குமல்லா லொருவர்காணர்
    சந்தேக மில்லையிதிற் கண்டுபாரே. (46)

கண்டபா ரிதினுடைய பெருமைமெத்த
        கருவூரார் நந்திதிரு மூலர்மைந்தா
கண்டபா ரன்றுசெய்த அயிராம் வித்தை
        கருச்சொன்ன ரனுபோகங் கண்டேன்யானும்
கண்டபா ரனுபோகம் விடாதுசொன்னேன்
        காணுமிது வேளையுனக் கிதுவேவேளை
கண்டபார் முக்காலும் நிசமேசொன்னேன்
        கருவறிந்து பார்க்கிலனு போகிதானே. (47)

தானென்ற தொடக்கினியாம் அயிராம்வித்தை
        தான்பலிக்கு மல்லாது உலகோர்காணர்
தானென்ற சிவயோகிக் கிந்நூல்வேணும்
        தரணிதனி லுள்ளோர்கள் மனிதர்க்காகா
மானென்ற மாதுசிறு பெண்ணுள்வாலை
        மாதளம்பூ வங்கினியாம் அயிராமிந்நூல்
தானென்ற தவயோக சித்தர்க்கெல்லாம்
        சகலசித்து மாடமங் கினியாமையே. (48)

மையான வங்கினியைப் போகநாதர்
        மனதறிந்த திதுவெனவே சொன்னாரப்பா
மெய்யான இரேதசுவின் கருவைக்கண்டால்
        வேதாந்த சிரோமணியாஞ் சித்தர்க்கெய்தும்
மெய்யான சித்தனென விளங்கச்செய்யும்
        விகற்பமாய்க் கற்பமுண்ணச் செய்யுஞ்செய்யும்
பொய்யாமற் பூரணத்தோ டுள்ளேதானாய்
        பூவேழில் மூவேழு மறியலாமே. (49)

அறியலாம் பாரப்பிரம சத்திரூபம்
        ஆனந்த மதியமூர்தப் பதியுந்தோணும்
அறியலா மேகநிரா மயத்தின்சூட்சம்
        அப்பாலும் முப்பாழுக் கப்பால்நீயும்
குறியெல்லாம் நிர்க்குணத்தின் குதியைக்காணக்
        குறியாகச் சற்குணமா மூலகத்தோர்க்கு
அறியலா மவரவர்கள் பேதாபேதம்
        அறிந்தகுரு வுபதேசத் தருளதாமே. (50)

அருளான அருள்பெறவுங் குருவுமாவாய்
அட்டசித்தும் புரியட்ட மெட்டிற்காண
இருளான இருளெல்லாம் விலகிப்போகும்
எடுத்ததொரு காரியங்க ளெதுவும்சித்தி
பொருளான தொன்றுக்கு ளெட்டெட்டாடும்
போக்குவரத் துட்சூக்ஷ மையன்சொன்ன
தெருளான பொருளறிவா யைம்பத்தொன்றில்
சீரறிவா யிருப்பாய்மெய்ச் சுருக்கமுற்றே. (51)

கருவூரார் மெய்ச்சுருக்கம் ருக.

முற்றிற்று.

சுந்தரபாண்டியம் முத்தாண்டித்தேவர் மகன் பெருமாள்தேவர் அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

பரமபதிதுணை.

154-வது:

கருவூரார் திருவாய்மலர்ந்தருளிய

# வாதகற்பம் ௱௧.

ஆதியா மெந்தன் தாயை யன்புடன் போற்றி செய்து
நீதியாம் வாத கற்பம் நிகழ்த்தினே னைம்பத் தொன்றாய்
வாதிகட் கிந்த நூலை மயக்கறச் சொல்லி விட்டேன்
சோதியா மாதி நாதன் துணையடி பாதங் காப்பு.

பாதரூந் தலையு மொன்றாய்ப் பாரிலே பழமை கொண்ட
நாதமே யறிந்த வர்க்கு நன்மையுங் கையி லுள்ளே
வேதமே இரேதசுங்கள் விளங்குமே பெண்மூலந்தான்
காதிலே பலிக்கச் சொன்னார் கருவூரார் நாதன் தானே. (1)

தானென்ற உப்பே சோதித் தாயுடன் செம்பு வெள்ளி
போனென்ற புழுகு சேர்த்துப் பூசியே கனலி விட்டால்
மானினி வயக்க மாகும் வங்காளத் தேச மெல்லாம்
சீனியே சிறந்து நிற்குஞ் சிதம்பர மாடலாமே. (2)

ஆடலாம் கைக்குள் வாதம் அறிந்தவர் வெளியிற் சொல்லார்
தேடலாம் வீரம் சூதம் திகட்டிடுந் தேனு முப்பூ
சூடலாம் பிச்சி மாலை தொடுத்திட வாச மேறும்
ஓடலாம் கடையில் சுக்கே உரைத்திடு மாதி தானே. (3)

ஆதியா முப்பூ தன்னை யறிந்தவ னவனே வாதி
சோதியாம் வெள்ளி யப்பா சொர்னமுப் புளியுமாச்சு
சாதியாஞ் செம்புத் தீவில் சத்தியைக் கண்ட றிந்து
வாதியாம் அறுசங் கத்தில் வாங்கலாம் பாதந் தானே. (4)

வேறு.

பாதமாம் பெருக்கிப் பழித்திடும் வேதையில்
நாதமாம் வெள்ளி நலம்பெறச் செம்புதான்

கோதைதான் பெற்ற குழந்தையுங் கண்டிடாய்
சாதியுஞ் சேர்ந்து தானமு மாடியே. (5)

ஆடிய சூதமு மழகான கெந்தியும்
தேடியு நல்லபூ திரமான புளியுந்தான்
நாடிய வெள்ளி நயம்பெறத் தங்கமாம்
கோடிக்கு மிந்தக் குருபாக மாகுமே. (6)

பரமான விந்து பகட்டும் இரேதசு
திரமான இரேதசை சேர்த்திடச் சத்தியாம்
உரமான தங்கம் உருப்படுஞ் செம்புபோல்
அரமான வித்தை அறுமூலந் தானே. (7)

தாயான தங்கம் தாக்கிடு வெள்ளியில்
மாயான செம்பை மாத்திடும் வங்கந்தான்
ஆயான சத்தி யணிந்திடும் வெள்ளியில்
காயான கூட்டம் கலந்திடுஞ் சிவமே. (8)

சிவமான வெள்ளி செம்பீயத் தங்கமாம்
அவமான சத்தி அதுவே வளர்ந்திடும்
தவமான வித்தை தாரில் விரைத்திட
சிவமாக்கு முப்பூ சிந்தையிற் காணுமே. (9)

காணுமே கண்ணில் கயிலாச பருவதம்
தோணுமே சத்தி சொர்னக் கிரியாம்
பூணுமே செம்பைப் பொசிக்கின்ற சிங்கம்
நாணுமே கெந்தி நலம்பெறச் சத்தியே. (10)

சத்தியே கெவுரி சதாசிவன் வெள்ளி
முத்தியாஞ் சாய முகத்தி லணிந்திடும்
பத்தரை மாத்தாய்ப் பரிவான சுண்ணத்தால்
முத்திரி மோதிரம் முன்கையி லாகுமே. (11)

ஆகுமே சுண்ண மழகான பாஷாணம்
போகுமே தூரம் புகழ்ந்திடுந் தண்ணீரும்
சாகுஞ் சரக்குச் சணத்தில் பரிட்சிக்கும்
ஆகுமே குளிகை அகாரதகின் சத்தியே. (12)

சத்திபைச் செம்பில் தான்சேர்க் கறிந்தால்
சத்தியே மஞ்சள் சதாசிவ னுப்பாம்
வெத்தியாம் வாசம் விரித்திடக் காடையில்
வெத்திலை பாக்கு விலைகொள்ள லாமே. (13)

கொள்ளலாம் ரெண்டு கோரக்கர் மூலிதான்
துள்ளலாம் சத்தி சோதியு மொன்றதை
அள்ளலாம் வித்தை அளவிடா வெளிதான்
தள்ளலாங் காலனைத் தாய்தவ றாதே. (14)

தவறாமற் சொன்னேன் சத்தி சதாசிவம்
அவராரு மறியார் அறிந்தவன் வாதி
கவராப் பிரியுங் கனகமும் வெள்ளியும்
எவருங் காணார் இசைந்துநீ பாரே. (15)

வேறு.

நெத்தியில் முத்துச் சூட்டி நீதமாங் காதில் வாளி
பத்தவே மஞ்சட் பூசிப் பல்லினில் சாய மேற்றி
மத்தள தாளங் கூட்டி மங்கையர் முன்னில் வந்து
நிர்த்தனஞ் செய்வாள் சொன்னேன் நித்தியங் காண லாமே (16)

வேறு.

காணலாம் பொன்னே கடையிலே வெள்ளியும்
காணலாம் வாசல் கனத்ததோர் செம்புடன்
காணலாம் வங்கம் கண்டறி சுண்ணமாம்
காணலாம் இரேதசு கற்பமி தாமே. (17)

ஆமே சவிக்கு மடிகொண்ட காலும்
போமே இரும்பு புடத்திலே வெந்திடும்
நாமே யறிவோம் நம்பிய பேர்க்கு
ஓமே கலையும் உகந்தபச் சிலையே. (18)

இலையான தங்க மிருபங்கு சேர்த்திடு
மலையான வெள்ளி வார்த்திடு பத்திலே
நலமான செம்பை நாவிற் புணர்த்திடு
துலையாங் கலையுந் தூரமு மில்லையே. (19)

இல்லையே கள்ளி இருந்திடம் வெந்திடும்
கொள்ளையே வைத்துக் குடிபோன வீட்டிலே
கள்ளனும் வந்தான் காவலு மில்லையால்
மல்லிகை பூத்து மால்தேவி யாச்சுதே. (20)

தேவியாள் பாதஞ் சிறந்துநீ பாரடா
ஆவிபோல் காணும் அவள்வைத்த குருமுறை
சாவிலே ரெண்டு சரக்குமொன் றாகும்
வாவென் றுரைத்திட வருமே வகாரமே. (21)

காரமுஞ் சாரமுங் கனத்தபா ஷாணமும்
வீரமும் நாவியும் விரியுவருப்பும்
ஓரிடை யாக உலர்த்திடு வில்லையாய்
நீரடா வாய்நீர் நேர்விட் டரைத்திடே. (22)

அரைத்தபின் கேளா யம்பது புடமாய்
நிருத்தே யெடுத்திடு நேராகச் சாரமும்
சரியாகச் சேர்த்திடு சாரத்திற் சுண்ணமும்
மரத்திலே தேங்காய் மாகெங்கை யாமே. (23)

கெங்கையாம் நீரில் கிடக்கின்ற வீரன்
திங்க ளூறமாய்ச் செயம்பரிச் சல்லியும்
மங்கையர் பாதம் வளமாகச் சித்திக்கும்
இங்கிதஞ் சொன்னேன் எமனீ ரிதுவே. (24)

இதுவே மகாகுரு எளிதமென் றெண்ணாதே
சதியாகக் கொல்லும் சரக்கைத் தொடுமுன்னே
பொதிவாய் மெழுகாகும் பொருளாய்க் களங்கமாம்
சதவேதை யப்பா சமுத்திரந் தானே. (25)

வேறு.

தானேநீ சூதம் வங்கம் தனித்ததோர் சாரங் கெந்தி
சீனமும் கெவுரி வெள்ளை சிங்கிமால் தேவி யோடு
ஊனதாங் காந்த துத்தம் உப்புசே ரிவைக ளெல்லாம்
வானமே முக்கி வாட்ட மாமெழு காகும் பாரே. (26)

ஆகுமே மெழுகு காணி ஆயிரத் தெட்டி லீய
போகுமே மாத்துப் பத்தாய் பொங்குமே ராஜ தாணி

நாகமே முக்கி வாட்டி நலமதாஞ் செம்பி லீய
ஏகமாம் புடமும் போட வெட்டரை காணும் பாரே. (27)

பாரடா மெழுகு தானும் பட்டிடஞ் சொர்னமாகும்
நீரடா கெங்கையாகும் நீசமறு வகையு மாகுங்
காரடா குருபாதத்தைக் கண்டுநீ சற்பமுண்டு
பூரடா மலைக்குகைக்குள் பூவையு மெடுக்க வாசம். (28)

வேறு.

வாசமான செம்புவெள்ளி மடையனென்றும் வகைகளைத்
தேசமே நடந்தலைந்து தெரியவேணும் பூரியைத்
தோசமற்ற சரக்குமூன்றுந் தொந்தமாக மாட்டவே
காசுமாத்துத் தோணுமேமுன் கண்பிரகாச மாகுமே. (29)

ஆருமென் றறிந்திருந்து மலையவேண்டா மடையரே
சாகவேணு மென்றுதித்துச் சரக்குத்தொட்டு நீத்தவே
மோகினீ பதம்வணங்கி முக்கித்துள்ளி யாடுமே
யோகமான வாதவித்தை உலகமெக் களிக்குமே. (30)

அளிக்குமே அறுவகையில் அங்கிதொட்ட சரக்குகள்
களிக்குமே ஒன்றுபத்து காச்சசாதி லிங்கமும்
வெளிக்குமுன் னுன்குமாத்து வெள்ளிநூறு வெடியுடன்
பழுக்குமட்ட லோகமும் பருத்தஏம நீரிலே. (31)

நீரிலே விளைந்ததப்பா நேசமுத்துப் பவளமும்
பாரிலே நிறைந்திருக்கும் பானுமூடிக் கொண்டதே
ஏரிபச்சை குதிரைதன்மே லேறிக் கொண்டாரவுத்தன்
மாரினில் பதக்கமற்று மாயமாகப் போவனே. (32)

போவனென்று முத்தகட்டில் பூசிமெழுகை வாட்டவே
சீவனத்தை வேறுவெள்ளி சித்திசுண்ண மாகுமே
சாவிலாத செம்புநூற்றில் தாக்கச்சுண்ணங் காணியே
காவிகயி லாசமேவு கண்டபாதந் தோணுமோ. (33)

தோணுமைகள் சுண்ணத்தாலே துத்தநாகம் நீறுமே
காணுமட்ட லோகமெல்லாங் கட்டித்தங்க மாகுமே
காணுமெய்யில் நீறுவந்து கட்டிநீறும் வலியுமே
ஆணும்பெண்ணு மறிந்தவர்க்கு அட்டசித்தி லபிக்குமே. (34)

வேறு.

சொல்லுவேன் பஞ்சலோகச் சுண்ணமுங் கெங்கை தன்னிற்
சில்லியாய் நொருக்கிப் போட்டுச் சிறக்கவே ரவியில் வைப்பாய்
தில்லைபொன் வெள்ளி நாகம் செம்பயம் பஞ்ச லோகம்
மல்லிகைப் பூப்போ லோங்கி மலர்ந்திடுஞ் சுண்ணந் தானே. (35)

பாரடா சுண்ண மூலைசப் பாங்கதாய்ச் செய்து கொண்டு
வாரிடு மண்ணுங் கல்லும் வழியாக நீத்து வோர்க்கு
ஆரடா சொல்லப் போறூர் ஆதியாம் வாத கற்பம்
நாரடா பூத்தொ டுக்கு நாதனை யறிய லாமே. (36)

அறிந்தவ னுண்மை பேசான் அறிவுறச் செய்து கொள்வான்
மருந்திட வசீக ரத்தின வழிதனை யறிந்து சத்தி
பரிந்துடன் குகையி னிற்றூன் பத்தியாய் ரசத்தை வாரு
பறந்திடப் பச்சி யாகும் பரத்திலுங் குளிகை கட்டே. (37)

வேறு.

கட்டினே னிந்தமட்டும் வாதகற்பம்
கருணைபெற்ற போகரப்பா மெச்சிக்கொண்டார்
சுட்டினூர் வாதமுறை சித்தரெல்லாம்
தொடக்கினியை யொழித்துவிட்டா ரறியவென்று
திட்டமாய் வாதமுறை நான்சொல்நூலிற்
சிவசிவா ஒருமயமாய்ப் பாடல்தோறும்
சட்டமா யண்டபிண்ட மறிந்திடாத
சரக்கப்பா மூன்றுக வெவ்வேறுமே. (38)

வேறுமே வெள்ளியொன்று சத்தியொன்று
விரிந்திடுமே நாகமொன்று அண்டமூன்றும்
காருமே பிண்டமிப் படியேபாரு
கற்பமடா அறிந்தவர்க்குச் சாவோயில்லை
கூறுன வீதியிலே உப்புதன்னை
குடிபோன வீடப்பா புலியூராகும்
ஆறுமே வீரமொடு பூரங்காரம்
அணிந்திடுவாய் திருநீறுந் திலதம்போடே. (39)

போடுவாய் பாஷாணக் கட்டிதன்னில்
பொருளான அறுவகைநீ ராட்டிக்கொண்டு
சாடுவாய் ரவிதனிலே சுண்ணமாகும்
சத்துள்ள முன்சொன்ன சுண்ணங்கூட்டி
ஈடுவாய் நூற்றெட்டி லொன்றேபோடு
யியமப்பா வலிந்திடுமே பதினாறாக
ஆடுவா யிப்படியே மஞ்சட்போக்கு
அவ்விதமே நாகமப்பா அறிந்துபாரே. (40)

வேறு

பாடகந் தண்டை யிட்டுப் பச்சையும் புழுகு பூசிச்
சூடவே பவனக் கோட்டை துருசறச் சாய மேற்றி
சோடசம் சென்ற மங்கை சொர்ப்பனஞ் சொல்லிப் போனாள்
நாடகம் முடிந்து தப்பா நட்டுவன் தாள மிட்டான். (41)

தாளகச் சத்தி மேடம் சாரமும் வில்லின் மேலே
மாளுமே வெடியுஞ் சீனம் மகாரமும் பொன்னின் கும்பம்
மூளவே வீரஞ் சிங்கம் முரிந்திடுங் கெந்தி தன்னில்
ஏழடா பிறப்புச் சொன்னேன் யேமநீர் மனதிற் காணே. (42)

காணலாங் கனக வித்தை கைமுறை யறிந்தா னாகில்
தோணவே பலிக்குஞ் சொன்னேன் துருசுதான் தங்கச் சுண்ணம்
நாணியே மூன்றுஞ் சொன்னேன் நறுகெங்கை வழலைநீராம்
மேனியாஞ் சரக்குக் கேற்ற வேந்தனைக் காண லாமே. (43)

வேறு

ஆமப்பா தொட்டதெல்லாஞ் சித்தியாகும்
ஆகாசக் குருவாகும் கெங்கையப்பா
ஓமப்பா ஒவ்வொன்றிற் கோடிவித்தை
உப்புடனே புளிகூட்டி உண்ணலாகும்
நாமப்பா கைமுறையாய் உரைத்துவிட்டோம்
நாகமடா பாலுண்டு விஷத்தைக்கக்கும்
தாமப்பா விஷமுண்டு கண்டாரானால்
சங்கரியு மங்கிலியுஞ் சார்ந்தார்பாரே. (44)

பாரான உப்புமுதற் சிலைவரைக்கும்
பரிவாகக் கட்டுதற்குத் தயிலங்கேளாய்
நேரான கூவிளத்தின் பட்டைபத்து
நேசமுடன் வெள்ளரளி மூலம்பத்து
தூரான கொடிவேலி மூலம்பத்து
சுக்குடனே நாய்ப்பாகல் மூலம்பத்து
காரான சீந்துடனே வேம்புபத்து
கருத்துள்ள காஞ்சிரையின் மூலம்பத்தே. (45)

பத்தான மஞ்சளப்பா பலமோபத்து
பாங்கான சேங்கொட்டை கடுக்காய்பத்து
உத்தான பெட்டியுடன் தேற்றான்பத்து
உரைத்திட்ட இவ்வகையைச் சரியாய்த்தூக்கி
சத்தாக உலர்த்திடுவாய் மூன்றுதிங்கள்
சாதகமா யிடித்திடுவாய் தூளாம்பாரு
மத்தான பொடிதன்னிற் கெந்திவீரம்
மகத்தான காந்தமுடன் சீனம்போடே. (46)

போடப்பா பலமொன்று கெந்தகந்தான்
புகழாக யிவ்வகையைச் சரியதாக
நாடப்பா சாதிக்காய் இரும்புபத்து
நயமுடனே கன்னிப்பால் விட்டுஆட்டிச்
சூடப்பா வேப்பெண்ணெய் சாமமாட்டு
சுகமாக அறுவகையிற் சாமமாட்டு
ஏடப்பா வில்லையாய்ச் சேர்த்துக்கொண்டு
ஏகாந்த ரவிமுகத்தில் உலர்த்திடாயே. (47)

உலர்த்திட்ட வில்லைகளை கலசத்திட்டு
உருப்பாகத் தயிலமது வாங்கிக்கொண்டு
மலத்திடுவீ ரம்பூரம் பொடித்துத்தூவு
மாறாக முன்சொன்ன நீறுங்கூட்டு
கலத்திட்ட சோறப்பா உண்ணலாகும்
கரியுடனே செகமெல்லாம் நிறைந்துபோகும்
வளர்த்திடுநாய் போலேகிலப் பயிருமப்பா
வசமாக விரும்பிவரும் வழிசொன்னேனே. (48)

வழியாகச் செய்தவர்க்கு வாதந்தானும்
வந்திடுமே வகைதுகைக ளறிந்துகொண்டால்
ஒளியாதே முன்சொன்ன லோகமூன்றும்
முக்குருவா மறுவகையின் சலத்தினாலே
களியாதே வங்கிட்டால் வாதப்போச்சு
கருத்துள்ள சுண்ணம்விட்டால் குருவும்போச்சு
ஒளியான துருசுவிட்டால் தங்கம்போச்சு
உத்தமனே வகைசொன்னே னறிந்துபாரே. (49)

வேறு

பாரிலே வளர்ந்த போகர் பாதமே தொழுத சற்கு
நேரிலே பெயரிட் டென்னை நிலக்கரு வூராரென்றார்
காரிலே வாத கற்பம் கட்டினே னைம்பத் தொன்றில்
மாரிலே யணிந்த பச்சை வயிரமும் பதக்கந் தானே. (50)

தானமே செய்ய வேணும் தருமமே கருத வேணும்
ஏனமே யறிய வேணும் யீசனைக் காண வேணும்
மானமே காக்க வேணும் மாநிலப் பயிரைத் தானும்
பானமே கொள்ள வேணும் பார்வதி பாதம் முற்றே. (51)

கருவூரார் வாதகற்பம் ௫௧

முற்றிற்று.

பழனிமலையில் வசிக்கும் ஸ்ரீ கைலாசதெண்டாயுதபாணி ரிஷீஸ்வர சுவாமியவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

பரமபதிதுணை.

155-வது:

கருவூரார் திருவாய்மலர்ந்தருளிய

# கெவுன சூஸ்திரம் ௩௨.

உரைக்கிறேன் மறைப்பைவிசித் திரமதாக
உலகத்தோர் பிழைக்கதொடக் கினியதெல்லாம்
திறக்கிறேன் சிவஞானந் தங்கிற்ருனல்
சித்திமுத்தி யிரண்டுமுண்டாம் பாருபாரு
துறக்கிறேன் திரிலோகஞ் செயிக்கலாகும்
சொற்பெரிய அதிசயத்தின் வித்தைதானும்
தரைக்கிறே னறிவுடனே செய்துபாரு
சாஸ்திரத்தின் தொடக்கினியைச் சொல்வேன்பாரே. (1)

பாரப்பா யோகமொடு கண்டகங்கள்
பலகலையும் பாடினர் சித்தரெல்லாம்
நேரப்பா தொடக்கினியின் சூட்சமெல்லாம்
நிசமாக வாதகற்பந் தள்ளிச்சொன்னர்
ஆரப்பா யென்தம்பிக் கொப்புமுண்டோ
அலையாதே யிந்நூலைப் பாருபாரு
காரப்பா வயிரவனு முமையினேடு
கணபதியைத் தியானித்துப் பூசைசெய்யே. (2)

செய்யப்பா வாதகற்ப வித்தையெல்லாம்
சீருடனே சனிகையுட பேரண்டத்தை
கையப்பா வாங்கியதைக் காளிகோவில்
கனக்கவே அருக்கியின்மேல் மண்ணைப்போட்டு
பொய்யாமல் தேவியுட மந்திரத்தைப்
பொங்கமுடன் செபித்துநன்ருய்க் கட்டிக்கொண்டு
எய்யாமற் கருத்தவகை அஞ்சுமூலி
இதமாக அதன்வித்தை யிரைத்திடாயே. (3)

வித்தாக உளுந்துடனு மத்தைக்குன்றி
விரைவுடனே காக்கணத்தி கருத்தெள்ளஞ்சும
சத்தாகப் போட்டதிலே தண்ணீர்வாரு
சாதகமாய் வாலைபுட உருவுமேத்திச்
சித்தாகச் சேளுமதிற் காயுமுண்டாம்
சிதறுமற் றவறுமல் வித்தைவாங்கி
மத்தாக அரைத்திடவே அளிஞ்சிநெய்யால்
வயணமுடன் செம்பருத்தம் பஞ்சினூட்டே. (4)

ஊட்டியே திரிதிரித்துக் கொளுத்தியையை
உரமுடனே இரும்பினுட சிமிழில்வைத்துக்
காட்டியே குழப்பிஅஞ் சிகத்திற்போடு
கடந்திடுமே மூன்றுலகச் செய்தியெல்லாம்
சூட்டியே தெரிசிப்பார் சித்தரெல்லாம்
சூட்சமிது வைத்தபொருட் கையிலாகும்
நாட்டியே செய்துவிட்டாற் சாவுபோகும்
நமனில்லை யின்னம்வங் கினியைக்கேளே. (5)

கேளப்பா கருக்குருவி தன்னைவாங்கிக்
கெடியாகத் தேங்காயி னுள்ளேவைத்து
வாளப்பா மின்மினியைச் சிரங்கையிட்டு
வாடாத சூதமதிற் களஞ்சுபத்து
தாளப்பா மண்டலந்தான் அருக்கிப்போடு
தவமென்ன தயிலமதி விரங்கும்பாரு
சூளப்பா மண்டலந்தான் கழிந்தபின்பு
தூங்காம லெடுத்ததனைக் கல்வத்தூட்டே. (6)

ஊட்டுவாய் சாமமொன்று அரைத்தபின்பு
உத்தமனே சூதமொன்று நாகமொன்று
சாட்டுவா யரைக்கையிலே மெழுகுமாகும்
சட்டமாய்ப் புழுகோடு வீரம்பூரம்
கூட்டுவாய் அரைத்தெடுத்து வைத்துக்கொண்டு
குருவாலை யுடபூசை செய்தபின்பு
நீட்டுவாய் பிரமியிலே எமலியிட்டால்
நீவயிரி யிந்திரனுங் காணார்பாரே. (7)

காணாத பொன்வெள்ளி கண்டகங்கள்
கைமுறையாய்ச் செய்ததுதான் பலிக்குமப்பா
பூணாத மெழுகுதன்னை வைத்துக்கொண்டு
புவியிலுள்ள பொருள்களெல்லா மிவனையாள்வான்
காணாத தொடக்கினியை வெளியிற்சொன்னேன்
கண்கெட்ட வாதிகளே யின்னங்கேளு
ஆணாது மெழுகுகுரு மூலமப்பா
அறியலாம் மூன்றுலகு திறந்துபோமே. (8)

திறந்துபோம் யின்னமொரு அயிராம்கேளு
திறமாகப் பேய்ப்பீர்க்குச் சமூலம்வாங்கிப்
பறந்துபோ காமலல்லோ பொடித்துக்கொண்டு
பாங்காய்ப்புல் லாமணக்கின் நெய்யிலூட்டிச்
சிறந்துபோம் வில்லையாய்த் தயிலம்வாங்கிச்
சிறப்பாக வேகவைத்துச் சக்கிற்போடு
மறைந்துபோம் வயிரிதான் தெரியாதப்பா
மாநிலத்தி லுள்ளதெல்லாம் வசத்திலாமே. (9)

வசமான வசம்பையதி லரைத்துநன்றாய்
வளமாகத் திரிலோகம் குளிசமாடி
வசமாக வைத்திருக்கச் சயிந்தவத்தில்
மைந்தனே தேவருக்குந் தெரியாதப்பா
வசமாக வாலையைத்தான் செபித்தாயாகில்
வளர்ந்திடுவாள் தாகுள்ள பேர்க்குஞ்சொல்லாள்
வசமான வித்தையொன்று சொல்லக்கேளு
வரிசையுட னைவிரலி வித்தைவாங்கே. (10)

வாங்கியே வித்ததனைத் தூளதாக்கி
மைந்தனே நெய்க்குராணித் தயிலமூட்டித்
தாங்கியே அரைத்துநன்றாய்த் தயிலம்வாங்கிச்
சாதகமாய்த் தயிலமதில் வகையைக்கேளு
தூங்கியே போகாதே சூதமொன்று
துருசொன்று மால்தேவி கெந்தியொன்று
வாங்கியே அவுரியுட சாருங்கூட்டி
மாட்டியரை சாமமொன்று மெழுகுமாமே. (11)

ஆமப்பா பிரமியிலே எமலிபோடு
    ஆருமப்பா வாமினிகள் தேவர்தானும்
சாமப்பா சரக்கெல்லா மோடுமென்னே
    தாரணிக்குட் குளிகையென்ன கோடாகோடி
வாமப்பா வலிந்திடுமே வங்கலோகம்
    வகையேது போக்கேது நானுங்காணேன்
தாமப்பா சிவமான மெழுகுதன்னைச்
    சாதகமாய்த் தின்றுவிட்டாற் சாவுபோச்சே. (12)

சாவான ஜென்மங்க ளெடுத்தாலென்ன
    தாரணியிற் றவமென்ன யோகமென்ன
ஓவான சிவங்காணத் தங்கவேணும்
    ஒப்பிலாக் குருவெல்லா மறியலாகும்
தேவான சிவலிங்கம் பூசித்தாக்கால்
    சித்தரெலாம் வணங்கிநிற்பார் தேவனுவான்
மாவான தாமரையின் மூலம்வாங்கி
    மத்திப்பாய் தேனுடனே சாமம்நாலே. (13)

நாலப்பா மால்தேவி சூதங்கெந்தி
    நலமாகச் சிலையுடனே பூரம்வீரம்
நாலப்பா துருசுடனே மடையன்சீனம்
    நலமான சாதிலிங்கங் கெவுரிவெள்ளை
நாலப்பா களஞ்சுவிதங் கல்வத்திட்டு
    நாரிபால் கூட்டிடவே மெழுகுமாகும்
காலப்பா செம்பருத்தம் பஞ்சிலூட்டிக்
    காரெருமை நெய்விட்டு விளக்குமேத்தே. (14)

ஏத்தியே பேரண்டம் மையைவாங்கி
    இன்பமுட னுத்தாளைச் செபித்துநன்றாய்
ஊத்தியந்த நெய்குழப்பிச் சக்கிலிட்டால்
    உத்தமனே வாமினிகள் தேவர்தோணும்
சாத்தவே மூன்றுலகுஞ் சென்றுலாவும்
    தாரணியில் வைத்ததெல்லா மிவனேயாள்வான்
மாத்திலே கடுகெண்ணெய் கூடக்கூட்டி
    மத்திக்கத் தூசுவுந்தான் திறக்கும்பாரே. (15)

பாரப்பா இன்னமொரு திருக்கிகேளு
பாங்கான கருங்குன்றி வித்தோபத்து
வாரப்பா தாமரையின் மணியோபத்து
மைந்தனே நெல்லியுட மணியோபத்து
நேரப்பா அவுரிச்சா றதனாலாட்டி
நிர்ணயமாய் வில்லைசெய்து ரவியிற்போட்டுக்
காரப்பா கலசத்திற் றயிலம்வாங்கிக்
கமலத்தில் நூல்திரியி லூட்டிப்பாரே. (16)

ஊட்டியே ஐயதனை வாங்கிக்கொண்டு
உத்தமனே மாவிலிங்கஞ் சிமிழில்வைத்து
நாட்டியந்த நெய்விட்டுக் குழைக்கும்போது
நயமாகச் சூதமொடு கழஞ்சுபோட்டால்
சாட்டியே ரேகித்துக் கூடிப்போகும்
தப்பில்லை சிமிழதுதான் காணுதப்பா
மாட்டியே நிரப்பிநன்று யெடுத்துக்கொண்டு
மைந்தனே அக்கமுன்றி விட்டுப்பாரே. (17)

பாமான வாலையைத்தான் கருதிக்கொண்டு
பாரடா யிதுதனையே காணமாட்டார்
வரமான குத்திரைய மெடுத்துக்கொண்டு
மைந்தனே காயசித்தி செய்வானாகில்
விரதமாம் பூரணத்தை அறியலாகும்
வேதாந்த சிவஞானம் தங்கிப்போகும்
உரமான கயிலாச மேருதன்னில்
உகந்திருக்கும் சைவமடா யோகந்தானே. (18)

யோகிதன்னை யடுத்துநன்றாய்க் காத்தானாகில்
உரைத்திடுவார் மூலமெல்லாம் உறுதியாகும்
போகிகளா யலைந்துவிட்டா லொன்றுமில்லை
பொருள்காணார் மடையரா யலைவார்தானே
யோகமுற்ற தேகமப்பா யிருக்கவேணும்
உலகத்திற் காட்சியெல்லாங் காணவேணும்
ஏகாந்த மின்னமொரு ஐயைக்கேளு
எலிச்செவியுஞ் செந்தொட்டிச் சமூலந்தானே. (19)

மூலான தூதுவளை கண்டங்காரி
முள்ளியுட னஞ்சுவகை வாங்கிக்கொண்டு
சேலான தனிவேப்பின் நெய்யிற்கூட்டிச்
சேர்த்தரைத்து வில்லையது கழஞ்சியாகக்
கோலான தயிலமப்பா யிரங்கும்பாரு
குருபரமாய்ப் பீங்கானில் வைத்துக்கொண்டு
வாலான சூதந்தா னவ்விடைக்கு
வார்த்திடுவாய் கூசாமற் கூடிப்போமே. (20)

போமப்பா கண்ணாடிச் சில்லிலேதான்
பூகுடியம் மஞ்சாடித் தரியந்தன்னைப்
போமப்பா வெகுதூரம் காகானந்தான்
போக்கேது குத்திரையங் கையிலாகும்
போமப்பா உடுகளவு கண்ணிற்றேய்த்தால்
புட்பம்போல் மிதித்திடுவான் புகழுங்காணும்
போமப்பா பொன்வெள்ளி பலமோவொன்றிற்
புகழான தயிலமதிற் பலந்தானென்றே. (21)

ஒன்றாக உரைத்திடவே மருந்தைக்கேளு
உறுதியாய்ச் சவ்வீரம் கழஞ்சுபத்து
நன்றாக வேபூரம் கழஞ்சுபத்து
நலமுடனே சாதிலிங்கம் கழஞ்சுபத்து
சென்றாய்ச்சம் பழச்சாறு கூடவிட்டுச்
சேரவே யரைத்திடுவாய் சாமம்நாலு
வென்றாகத் தேனுடனே அமுரிவிட்டு
விருப்பமுட னரைத்திடுவாய் மெழுகாம்பாரே. (22)

பாரப்பா தொட்டதெல்லாம் மேருவாகும்
பரிவாகச் சிவலோகஞ் சித்தியாகும்
நேரப்பா தொடக்கினியைச் சொல்லிவிட்டேன்
நீதியுள்ள வாதிகளே செய்துபாரு
காரப்பா கெந்திதுலாம் ஒன்றுக்கேதான்
கருவாகப் பணவிடைபூ சிடுவாய்தன்னைக்
கூரப்பா ஆட்டையிலே மெழுகுமாகும்
குருவென்ன குளிகையென்ன லைசவந்தானே. (23)

சைவமாம் சேர்மானச் சரக்குமூன்றும்
சத்தியுடன் சிவமதுவும் நாதமாகும்
தெய்வமா மிதுதானும் வாதிக்கப்பா
திறங்கெட்ட வாதிகளே கருதிப்பாரு
ஐவராந் தாமப்பா சேர்ந்ததென்றால்
அதிஷ்டமா யுருப்பட்டு விளங்கிவித்து
கைவந்து காணப்பா நூலுக்கெல்லாம்
கலங்காதே யின்னமொரு அய்யைக்கேளே. (24)

கேளப்பா நிலப்பனையுங் கிழ்காய்நெல்லி
கெடியாகப் பேய்ப்பீர்க்கிக் கருத்தக்குன்றி
வாளப்பா தூளாக்கி யுலர்த்திக்கொண்டு
மைந்தனே அவுரிச்சா றதனாலாட்டி
நாளப்பா வில்லைசெய்து தயிலம்வாங்கி
நலமாகத் தயிலத்தில் மருந்துசேரு
நீளப்பா சிலையோடு சூதங்கெந்தி
நீலமதைச் சரியிடையாய்த் தூக்குதூக்கே. (25)

இடையாகப் போட்டிடவே கூடிப்போகும்
இரவினுட பஞ்சதிலே திரித்துக்கொண்டு
மடியாமல் விளக்கேத்திப் பேரண்டத்தில்
வங்கினியைத் தயிலமதிற் குழைப்பிப்போடு
தடியாமல் வாலைதனைச் செபித்துத்தொட்டால்
தாரணியி லுள்ளோர்கள் வைத்ததெல்லாம்
குடியாதே கொண்டிடுமே எமலிபோடக்
குருப்பிடமாய்க் காணார்கள் தேவர்தானே. (26)

தேவனு மிதனைப்பார் எமலிபோட்டால்
தெரிசிக்கும் மூன்றுலகஞ் சென்றுலாவும்
சாவனு மிதைவிட்டாற் கற்பமில்லை
சாரணையுந் தம்பனமும் கலந்துலாவும்
ஆவனும் விட்டவகை யோகியெல்லாம்
அப்பனே சிவஞானந் தங்கிற்றானால்
தேவனுங் கருவெல்லாம் ஒளிக்கவில்லை
தியானிப்பாய் வாலைதான் சொல்வாள்பாரே. (27)

வேறு.

நாகமும் ரசமு மொன்றாய் நாட்டிய வெள்ளீ யத்திற்
பாகமா யுருகும் போது பாய்ச்சடா மேனிப்பாலேச்
சாகவே வலியும் நீறும் தவளமாய் நிறக்கும் வெள்ளி
யூகியாய்க் கருதிப் பாரு உற்பனங் காண லாமே. (28)

காணலாம் வெள்ளி தங்கம் கதிரவ னொளிபி னாலே
பூணலாம் கலையும் பத்துப் புகலவே துவாத சந்தான்
வாணலாம் கண்ட நாகம் வங்கமே தலக்கி வைக்கும்
நாணுமே வாத மெல்லாம் நற்குரு விதனைப் பாரே. (29)

பார்க்கவே பலவி தங்கள் பாடலுங் கண்டு தூக்கிச்
சேர்க்கவே அறியான் மட்டை சேர்வழி யுருவுங் காணான்
தீர்க்கமாய்ப் பேசிக் கொள்வான் செய்யவு மாட்டா னப்பா
மார்க்கமு மிதனிற் சொன்னேன் வாதமாங் கெற்பம் பாரே. (30)

பாரிலே விளையும் பச்சை பவளமும் நீல முத்துங்
கூரிய தங்கஞ் செம்பு குடவனு மாறு மாச்சு
காரியம் நாலுஞ் சொல்லார் காணலா மஞ்சு நாதம்
ஆரியே தின்றா னாகில் அனுகூல மாகும் பாரே. (31)

ஆகுமே வாத கற்ப மதிற்குரு வெல்லாஞ் சொன்னேன்
யோகமே லோகஞ் சித்தி உப்பினிற் பிறவி யெல்லாம்
சாகுமே சாரஞ் சத்தி சதாசிவ நாமங் கேட்டாற்
போகுமே பாவ மெல்லாம் போக்குடன் செய்வாய்முற்றே. (32)

கருவூரார் கேவுன சூஸ்திரம் ௩௨.

முற்றிற்று.

திருமங்கலம் அருணாசலம் பிள்ளையவர்கள் குமாரர் வைத்தியம் சுப்பிரமணிய பிள்ளையவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

பராசத்திதுணை.

156-வது:

கருவூரார் திருவாய்மலர்ந்தருளிய

# குருநூல் சூஸ்திரம் ஈம.

சீர்பெருகும் வேதாந்த சூஸ்திரத்தைத்
தெட்சணா மூர்த்திபதந் தொழுதுபோற்றிக்
கார்பெருகும் ஆயியுட பாதம்போற்றிக்
கயிலாசத் திருமூலர் கழல்கள்போற்றிப்
பேர்பெருகும் போகமுனி சட்டைநாதர்
பிரமர்வியாக் கிரமர்பதஞ் சவிகோரக்கர் ✓
ஏர்பெருகும் நாதாக்க ளடியைப்போற்றி
இயல்பாகப் பாடுகிறே னிந்தநூலே. (1)

இந்தநூல் கருவூரா னெனும்பேர்கொள்ள
இயல்பாகப் பாடுகிறேன் மறைப்பில்லாமல்
இந்தநூல் யாவருமே போற்றத்தக்க
இடரெல்லாம் போக்குவிக்கும் இதுக்கீடில்லை
இந்தநூல் கருக்கிடையுங் குருக்கிடையுமாகும்
இனிமையென்று நாதாக்க ளிதயம்மெச்சும்
இந்தநூல் கற்றோர்கள் பெரியோராவர்
என்மகனே யெட்டெட்டு மிதனுள்ளாமே. (2)

ஆமப்பா சாரவித்தை சொல்லக்கேளு
அப்பனே சாரமொன்று கட்டிவாங்கி
ஓமப்பா வெள்ளாட்டின் ஊனில்வைத்து
உறவாக எட்டுநா ளூறப்போடு
வேமப்பா யெடுத்துபழச் சாறுவிட்டு
விரவியதை ரவிதனிலே உலரவைத்துத்
தாமப்பா கொமட்டிக்காய் விதையைப்போக்கிச்
சாதகமாய்ச் சாரமந்தக் காய்க்குள்வையே. (3)

வைத்ததொரு வாழையிலைச் சருகாற்சுத்தி
வாகாகத் தெரியாமற் பொதிந்தபின்பு
மைத்ததொரு காற்பலநூல் கொண்டுசுத்திக்
காலையொரு படியுமியை கிலத்திற்கொட்டி
நைத்ததொரு உமிபஞ்சு படிமேற்கொட்டி
நயமாயிப் படியைந்து புடமேபோடு
மைத்ததொரு செம்புவெள்ளி யேழுமூன்றில்
வரைந்தூட்டு மோரிடையின் மெழுகுதானே. (4)

தானென்ற இரும்பியம் முறையைக்கேளு
சாதகமா யிறகுபோ லிரும்பைத்தட்டி
வானென்ற வளையலுப்பைக் கீழ்மேலிட்டு
வாகாக வுருக்கிடவே சத்துமாகும்
கானென்ற பெருந்தும்பைச் சாற்றுக்குள்ளே
கலந்திதனைச் சாய்த்திடவே யீயமாகும்
வேனென்ற அயத்தாம்பூ ரத்தைச்சொல்வேன்
மேலான பொற்கையான் தளையும்வேரே. (5)

வேரிலையுங் கற்றாழை மடலும்வேரும்
வீறான அழுக்கிறு செங்கத்தாரி
வேரிலையுங் கருஞ்சூரை சமனாய்ச்சேர்த்து
வெங்காரங் கூட்டிவிட்டு ஆட்டிவாங்கி
வேரிலையுஞ் சவ்விலையும் பிசறிவைத்து
மிஞ்சியதோர் மருந்தெல்லாங் கீழ்மேலிட்டு
வேரிலையுஞ் சீலைசெய்து கெசபுடந்தான்
மேற்போட லோகமது செம்புமாமே. (6)

ஆமப்பா சூதமொன்று கெந்தியொன்று
அப்பனே வெள்ளீய மொன்றுவாங்கி
ஓமப்பா குகைபிலிட்டு உருக்குநன்றாய்
ஒருதுள்ளி நல்லெண்ணெய் உறவாய்ச்சேரு
சாமப்பா கட்டிநிற்கும் (மத்தம்) விதைத்தயிலம்
சாதகமாய் வாங்கியதைக் கரண்டிதன்னில்
வேமப்பா உருக்கிடவே நீரையுண்ணும்
வெள்ளீயம் பின்புருக்க வெள்ளியாமே. (7)

வெள்ளியென்ற ரசிதமஞ்சு தரமுருக்கில்
மேன்மையென்ற சருகுவெள்ளி யிதற்கொவ்வாது
வள்ளியொடு தாரமாம் வகைகள்ரெண்டும்
மயங்காதே சத்திசிவன் இவைகள்ரெண்டும்
கொள்ளியென்று கொள்ளாட்டா லடங்குவாளோ
கூர்ந்துநின்ற வேதாந்தத் தடங்கல்வேணும்
தள்ளிவிடும் மாயையென்ற நூலைப்பாரு
சாதகமாம் அருளோடு பொருளுமாமே. (8)

பொருளான செம்பொன்று வெள்ளியொன்று
பூட்டியே யுருக்கியொரு கிண்ணிவார்த்து
அருளான சூதமொன்று நாகமொன்று
அப்பனே சமனுய்க்கிண் ணிக்குளிட்டு
மருளான சிறுஅடுப்பி லேற்றிநன்றாய்
மைந்தனே தீபத்தைக் கீழேவைத்துச்
சுருளாமற் கள்ளியரைப் படிபால்கொண்டு
சுருக்கிடவே நாகரசங் கட்டிப்போமே. (9)

கட்டியதோர் மணியைச்சட் டிக்குள்வைத்துக்
கட்டுவாய் கிண்ணிகொண்டு மூடிப்பின்பு
கெட்டியதோர் நாழிமண லதன்மேற்கொட்டிக்
கீழாக மறுசட்டி கொண்டுமூடித்
திட்டியதோர் சந்துவாய் மண்ணுஞ்செய்து
சேரவென்றால் இருசாமம் அடுப்பில்வைத்து
மட்டியதோர் கமலவன்னி யாகமூட்டி
மைந்தனே ஆறினபின் னெடுத்துக்கொள்ளே. (10)

எடுத்தொரு கிண்ணியிலே நாகசூதம்
இடைசமனு யிடைக்கிடைக்கு இரும்புச்சல்வி
கொடுத்ததொரு உலையில்வைத்தே உருக்கச்செம்பாம்
குற்றமறும் செம்பொன்று வெள்ளியேழிற்
கடுத்ததொரு வெருஞ்செம்பு மூன்றுங்கூட்டிக்
கலந்துமிவை பதினொன்றும் உருக்கிவாங்கித்
தொடுத்ததொரு மாத்துமிரு மூனுருக்கச்
சொல்லாதே யித்தொழிலைத் தொடர்ந்துநோக்கே. (11)

சொல்லாதே சூத்திரத்தை வெளியாய்ச்சொன்னேன்
சொற்கடங்காக் கருவெல்லாஞ் சூட்டிப்போட்டேன்
வெல்லாதே பெரியோரை வணங்கிநில்லு
வேதாந்த மறியாரை விரும்பவேண்டாம்
செல்லாதே யீராறு சமயத்துள்ளே
சேர்ந்தாக்கால் சித்தாந்த நிலையில்நில்லே
கொல்லாதே ஜீவஜெந்து வென்றதெல்லாம்
குற்றமறும் புலையோடு கொலைபாகாதே. (12)

கொலையில்லை புலையில்லை குலமுமில்லை
கூறான மானமொடு யீனமில்லை
நிலையில்லை உலையில்லை நேசமில்லை
நினைப்பதுவும் மறப்பதுவும் இரண்டுமில்லை
கலையில்லை சிலையில்லை காட்சியில்லை
காரணமும் பூரணமும் யாதுமில்லை
சிலையில்லை காலில்லை தலையுமில்லை
சித்தாந்த மொழிந்துநின்ற சித்தத்தோர்க்கே. (13)

சாதிலிங்க மெழுகு

சித்தாந்தம் இன்னமொரு தொழிலைக்கேளு
திறமான சாதிலிங்க மெழுகுதன்னைச்
சத்தாந்த முசலெலும்பைப் பாண்டத்திட்டுச்
சாதகமாய்ச் சிறுநீரை நிரம்பவிட்டு
வைத்தாந்த மெரித்திடவே தயிலமாகும்
மகத்தான தயிலமப்பா ஒன்றில்வாங்கு
சுத்தாந்த லிங்கமொரு பலந்தான்வாங்கித்
தூளாட்டித் தயிலமிந்தப் பொடியிலூட்டே. (14)

ஊட்டியதை வில்லைசெய்து தினமூன்றப்பா
உலரவே ரவியினிலே போடுபோடு
நீட்டியதை வெண்கருபொற் றலையின்சாறும்
நேர்சமனாய்த் தானாட்டி வில்லைசெய்து
மாட்டியதைக் குகையிலிட்டுச் சில்லுப்போட்டு
டண்சீலை செய்துஎருப் பன்னிரண்டிற்
பூட்டியதைப் புடம்போடு உருகிநிற்கும்
பொற்குளம்பாம் ஆறினபின் மெழுகுமாமே. (15)

லிங்கவகை

மெழுகாகு மின்னமொரு முறையைக்கேளு
மேலான குப்பிவைப்பு லிங்கம்வாங்கி
ஒழுகாத சட்டியிலே குமரிச்சாறு
உத்தமனே தேனுடனே படியொன்றப்பா
விழுகாது வத்தவத்தச் சுருக்குப்போடு
வேதையென்ற மெழுகாகும் யிடுக்கமில்லை
அழுகாதே வீணருட மொழியைக்கேட்டு
அடிக்கடிநீ மயங்காதே இன்னங்கேளே. (16)

கேளப்பா சூதமது கழஞ்சுபத்து
கெடியான பீங்கானில் விட்டுமைந்தா
ஆளப்பா வெத்திலையின் சாறுவிட்டு
அப்பனே நாற்கடிகை கையால்மத்தி
கோளப்பா வெத்திலையைத் தொன்னையாக்கிக்
கூடுமொரு வேட்டியால் தொட்டிகட்டி
வேளப்பா வெத்திலைச்சார் தொன்னைக்குள்ளே
விட்டுப்பின் தொட்டியிலே சூதங்கூட்டே. (17)

கூட்டியே தொட்டியில்வை தொளாந்த்ரமாகக்
குமிரவிடு சிறுநீரை நன்றாய்நீயும்
நீட்டியே இப்படித்தான் தினமூன்றப்பா
நீரைவிட்டு ஆட்டியபின் சாறுகேளு
தீட்டியே குதம்பைப்பூ நெரிஞ்சிப்பூவும்
திறமான ஓரிலைத்தா மரையின்சாறும்
ஆட்டியே மூன்றுநாள் சுருக்குப்போடு
அப்பனே இன்னமுண்டு தாக்குதாக்கே. (18)

தாக்கவே நெரிஞ்சிக்காய் தட்டிவாங்கிச்
சாதகமாய்ச் சிறுநீரிற் பிசறிக்கொண்டு
தேக்கவே மூன்றுதினம் சுருக்குப்போடு
தேவிதனைத் தியானித்துக் குகையில்வைத்துத்
தூக்கியே யாட்டிடவே யிருக்குஞ்சூதம்
துரும்புகுத்திப் பார்த்திடவே வெண்ணெய்போலாம்
தோக்கியந்த யிலையாட்டி யிதனைவைத்துச்
சூட்டுவாய் கீழ்மேழு யிலையைப்போடே. (19)

இலையடக்கிச் சிலைசெய்து மண்ணும்பூசி
ஈஸ்வரிதன் பதமிறைஞ்சித் தியானஞ்செய்து
மலையடக்குங் காடையென்ற புடத்தைப்போடு
மைந்தனே உருகியது மணிபோலாகும்
சிலையடக்குஞ் செம்புதனை யாரவைத்துத்
திரும்பவதைக் காரமிட்டு உருக்கும்போது
இலையடக்கும் மணியங்கே யெட்டிலொன்றில்
யீயத்தி லீயவது யெட்டுமாத்தே. (20)

மாத்தாகும் சுரபியென்ற குளிகைசொல்ல
மைந்தனே பலக்கொன்று கொண்டுவந்து
ஈத்தாகும் அதன்னோரைத் திறந்துருத
மிட்டதனை நூல்கொண்டு தைத்துநன்றாய்க்
கோத்தாகும் பாண்டத்தின் நடுவேகட்டிக்
குமிரவிடு பானைரெம்ப உப்புத்தானும்
மாத்தாகும் வெளியிலெரு வடுக்கிப்பாண்டம்
வைத்ததின்மேற் கொண்டுதெரி யாமல்மூடே. (21)

மூட்டியே யெருவடுக்கிக் கச்சைமட்டும்
முதிரவே கணபுடமாய்ப் போடுபோடு
நாட்டியே ஆறினபின் னெடுத்துப்பாரு
நலம்பெரிய மணியாக வுருண்டுநிற்கும்
கூட்டியே அதனுள்ளே வங்கந்தன்னைக்
கொடுத்துநன்றா யுருகிநின்று ஆடும்போது
வாட்டியே மணியையும்வங் கத்திற்போடு
மைந்தனே நீரையுண்டு துள்ளும்பாரே. (22)

துள்ளியதோர் குளிகைதனை யெடுத்துக்கொண்டு
சூட்டுவாய் ஆவின்பாற் குள்ளேஅப்பா
நள்ளியதோர் வங்கத்தை யெடுத்துப்பாரு
நல்லவெள்ளி சரிகைவெள்ளி யிதற்கொவ்வாது
உள்ளியென்ற குளிகைக்குச் சாரணைகள் தீர்ந்தால்
வாரியுனைக் காத்தோடே வரைகள்தாண்டும்
கள்ளியென்ற பலகளிம்பை நொண்டிக்குள்ளே
காட்டா கருவையெல்லா மிதிற்சொன்னேனே. (23)

சொன்னேனான் கமலினியைச் சூட்சமாகச்
சூட்டுதைத வேளைவேர் நீரிலாட்டிச்
சொன்னேனான் குகைக்குள்ளே சூதம்விட்டுச்
சுகமான முன்மருந்தை மேலேஅப்பு
சொன்னேனா னிதற்குநிக ருண்டோவென்று
தொல்லுலகோர் ஆச்சரிய மடையவேண்டிச்
சொன்னேனான் கரியோட்டி லூதும்போது
சூதகெந்தி யிரண்டும்நின்று துடிக்குந்தானே. (24)

துடித்திடமுன் வேரேயிள நீரிலாட்டிச்
சுகமாக மருக்காரம் பழமுமாட்டிப்
படித்திடவே குகைக்குள்ளே முன்போலப்பிப்
பண்பாகக் குகையதற்குள் சூதம்விட்டு
மடித்திடவே முன்னரைத்த (மருந்து)பழமும்வேரும்
வாகாகக் குகைமேலே மறையவப்பிக்
கடித்திடவே சீலைசெய்து மண்ணுஞ்செய்து
காட்டனலிற் குளிகைமன வேகியாமே. (25)

மனவேகி யின்னமொரு குளிகைசொல்வேன்
மாவுலிங்கிற் சிமிழிரண்டு வசமாய்ச்செய்து
அனவேகி யதனிலையை யாட்டிவாங்கி
அப்பனே சிமிழிவிட்டுச் சூதம்விட்டு
வனவேகி மாச்சாறு கூடவிட்டு
வாய்மூடிச் சீலைசெய்து புடமூன்றப்பா
இனவேகி குக்குடத்துப் புடந்தான்போடு
இயல்பாக யீசர்விந்து குளிகையாச்சே. (26)

ஈசனென்ற சூதத்தைக் குளிகைசெய்ய
இயம்புகரு மத்தின்சாற் படிதான்நாலு
நேசனென்ற அயக்கிண்ணி வாங்கிக்கொண்டு
நேராக அதற்குள்ளே சூதங்கேளு
வாசமுடன் பதினாறு கழஞ்சுவிட்டு
மத்தியா வரைமிளகுச் சாறால்வாகாய்ப்
பாசமுடன் மூன்றுநா ளானபின்பு
பண்பாகப் புடம்போடக் கட்டிப்போச்சே. (27;

போச்சென்ற குளிகைதனைச் சொன்னேன்பின்னும்
பூமிநிதி தெரியக்கண் டகத்தைக்கேளு
வாச்சென்ற கிலுகிலுப்பை தனித்துநின்றால்
மைந்தனே கண்சட்டிக் குள்ளேவைத்து
ஆச்சென்று கருக்கியதைத் தூளாயாட்டி
அப்பனே ஏரண்டத் தயிலம்மூட்டி
பேச்சொன்று வாராமற் சிமிழில்வைத்துப்
பெரியபுகழ் பிராட்டிமுன்பு வைத்திடாயே. (28)

வைத்ததொரு வங்கினிக்கு விபரங்கேளு
வாகாகத் தீண்டும்விளக் கெண்ணெய்போட்டு
நைத்ததொரு வங்கினியை யதன்மேற்போட்டு
நாயகியாந் தாயார்க்குப் பூசைசெய்து
பொய்த்ததொரு அஞ்சிகத்தி விட்டுநன்றாய்ப்
பொருந்தியே நீபார்க்கிற் றிறக்குமதூசு
எய்த்ததொரு நிலத்திற்றூ பித்துவைத்து
இருக்கிறதோர் தூசுபணி யெடுக்கலாமே. (29)

எடுக்கவே யானைக்கண் சட்டித்தூரில்
இயல்பான மேனிச்சார் வற்றவற்ற
அடுக்கவே யோரிலையின் சாறுந்தோய்த்து
அப்பனே கீழ்காயின் சாறுந்தோய்த்து
கொடுக்கவே நிழலில்வைத்துக் காய்ந்தபின்பு
கொளுத்திடுவாய் ஏரண்ட நெய்யிற்றீபங்
கடுக்கவே யெரித்தவங் கினியைவாங்கிக்
கனமாகச் சிமிழதனி லடைத்துவையே. (30)

வைத்ததொரு வங்கினியைத் தியானஞ்செய்து
வாகாக வெற்றிலைக்குள் நடுவேதேய்த்து
மொய்த்ததொரு மண்டியுத்து இமையாட்டாதே
முழித்திருக்கில் கைதிறந்து ஓடுந்தூரம்
மைத்ததொரு தூசுலே பனியுந்தோன்றும்
வாகான தண்ணீருந் தேவுங்காணும்
பைத்ததொரு ஆயியுட பூசைவேணும்
பண்ணாட்டா லநுளோடு பொருள்காணுதே. (31)

பொருளான அவுரிவேர் கீழ்காய்நெல்லி
புகழான ஆடுதின்னாப் பாளைதானும்
மருளான கவுதும்பை பேய்க்கும்மட்டி
மைந்தனே சமமாகக் கருக்கிமுன்போல்
இருளான வரண்டத் தயிலமூட்டி
இளக்கிநன்றாய்ச் சிமிழிலே யெடுத்தடைத்து
ஒருளான உடக்கையது தன்னில்தேய்க்க
உத்தமனே வெகுதூர மோடுந்தானே. (32)

தூரம்போங் கையிலே இருந்துகொண்டு
சூட்டினார் குமரிமட்டுங் காணலார்க்கும்
ஆரம்போங் கழுகுமுதல் முதலைமீயாடு
அப்பனே பழந்திண்ணும் வௌவாற்சக்கும்
வீரம்போ மிதுவெல்லாம் நிழலுலர்த்தி
விபரமுடன் பொடிசெய்து கலையிலூட்டி
வாரம்போம் திரியாக்கி யேரண்டத்தில்
வங்கினியைப் பார்ப்பதற்கு வரிசைகேளே. (33)

கேளப்பா திரிகொளுத்திப் பேரண்டத்தில்
கெட்டியா யெரித்ததனை வழித்துக்கொண்டு
வாளப்பா சிறுதேன்சித் தேரண்டத்தில்
வகையிரண்டி லொன்றதனிற் குழைத்துவைத்து
ஆளப்பா கரத்தில்வட்ட மாகத்தேய்த்து
அப்பனே சத்திதனை வணங்கிக்கொண்டு
நீளப்பா நோக்கிடவே பனிகளெல்லாம்
நீதியுட னடையலாம் சேரும்பாரே. (34)

சேருகிற வித்தையொன்று சொல்லக்கேளு
செப்பரிய கூகைசக்கு வலதுசொட்டை
ஊருகிற சுகக்கனியும் தொடைகள்தானும்
உத்தமனே தனித்தனியே பொடித்துக்கொண்டு
மாருகிற திரியில்வைத்துப் பேரண்டத்தில்
மைந்தனே யெரித்ததனை வழித்துக்கொண்டு
சாருகிற யேரண்டத் தயிலம்விட்டுச்
சாரித்துக் கையிலிடத் திறக்கும்பாணி. (35)

திறந்தபின் பதிசயங்கள் செப்பக்கேளு
தெய்வமென்ற பூதமெல்லாந் தெரியலாகும்
மறைந்திருந்த தேவரொடு ரிஷிகள்காணும்
மைந்தனே பிதுர்முதல்முன் னோர்கள்தோன்றும்
இறந்திருக்கும் பேர்கள்முதல் லெல்லாந்தோன்றும்
ஈஸ்வரிக்குப் பூசைநன்றாய்ச் செய்யவேணும்
திறந்திதனை யாவருக்கும் விள்ளவேண்டாம்
சேர்சரக்கு வங்கினியின் சூட்சந்தானே. (36)

சூட்சமொரு கண்டகத்தைச் சொல்லக்கேளு
சுகமான கூகைசக்கும் நப்பும்வாங்கி
சூட்சமுறப் புத்துத்தேன் விட்டுஆட்டித்
துருசாகக் கையிலிட்டுப் பார்க்கும்போது
சூட்சமிந்தத் தூசுலே அருக்கிவைத்த
சுகமான பரினியெல்லாஞ் சொல்லப்போகா
சூட்சமிந்த பனிகாட்டும் சுருதியந்தம்
சுத்தருக்கா மிந்தமுறை சுருதிதானே. (37)

சுருதியா யின்னம்வங் கினியைக்கேளு
சொற்பெரிய புலிச்சக்கும் கரடிச்சக்கும்
சுருதியாம் நாய்ச்சக்கும் மேதிச்சக்கும்
சூட்சமாய் அஞ்சனக்கல் எடுத்துப்பின்
சுருதியா யிதுவெல்லாஞ் சமமதாகச்
சுயமான சிறுதேனி லாட்டிக்கொண்டு
சுருதியாய்ப் பாணியிட்டுப் பரியும்போது
தோற்றுமப்பா சதுர்வகையுஞ் சொல்லக்கேளே. (38)

சொல்லுகிறேன் துகைவகையாந் தூரச்செய்தி
சொர்னமொடு காரிலுள்ள தெல்லாந்தோற்றும்
வெல்லுகிறேன் கருங்காக்கை தாப்புஞ்சக்கும்
மேலான யெருக்கினுட பஞ்சில்வைத்துச்
செல்லுகிறேன் திரியாக்கி ஆட்டுநெய்யில்
சென்னிவலை தனிலெரித்து மையைவாங்கி
நல்லுகிறேன் பாணியிட்டுப் பார்க்கும்போது
நல்லசிகை துகைகாதம் வழிமேயோடும்மே. (39)

ஓடாது பச்சோந்தி நப்புவாங்கி
    ஓடைரிகோ ரோசனேபுத் தேனிலாட்டி
வாடாது ஆயிபதம் பூசைபண்ணி
    வண்மையுடன் பாணியிட்டுப் பார்க்கும்போது
நாடாது கடலாறு குளங்கிணற்றில்
    நலமாக வைத்தபனி யாவுங்காணும்
தேடாது வாதமென்ன அத்தைவிட்டுச்
    சீமைதொருந் திரிந்தலேந்து நடந்திடாதே. (40)

நடவாது வெரும்வீணர் மொழியைக்கேட்டு
    நாய்போலே வீடுதொறு மலேந்திடாதே
அடவாக இருவினையும் மீறிக்கொண்டு
    அப்பனே இருக்கையிலும் நினேத்ததேது
கடவாதே பானத்தை மீறிமைந்தா
    சுதியேது ஞானத்தார்க் கெய்தும்வாக்கு
விடவாதே யுள்நமியைத் திருக்குண்டாக்கும்
    வேதாந்தி யானுக்காற் சொல்லுசொல்லே. (41)

சொல்லுகிறேன் கையானேப் பசுவின்நெய்யிற்
    சுகமாக வேகவைத்துப் பொருக்தும்நாளிற்
சொல்லுகிறேன் அண்ணுக்கிற் றெட்டுஆட்டிச்
    சோர்வன்றிப் பெருவிரலேச் சுழற்றியேத்திச்
சொல்லுகிறே னிப்படிநாற் பதுநாட்செய்யச்
    சூட்சமென்ற கபஞ்சிந்தித் திறந்துபோகும்
சொல்லுகிறே னதிசயங்க ளநேகங்காணும்
    துரியமென்ற நெறியினுள்ளே துடர்ந்துகூடே. (42)

நெறியுள்ள வகையொன்று சொல்லக்கேளு
    நேரான நாகமப்பா ஆறுதூக்கு
குறியுள்ள குகையிலிட்டு உருக்கிவாங்கு
    கூறுகிறேன் சவ்வீரப் பலகையாக
வெறியுள்ள விராகனென்று நாலுசூதம்
    மிஞ்சாம லிந்தயிடை நிறுத்துக்கொண்டு
முறியுள்ளே விட்டுநன்றாய்க் கிண்டிமூடி
    மூன்றெழுத்தைப் பூசித்து வைத்துக்கொள்ளே. (43)

வைத்தங்கே குருவிலோர் பணந்தான் தூக்கி
மாட்டிடுவாய் நூறுபங்கு சூதத்துள்ளே
மொய்த்தங்கே நீர்விட்டு அரைக்கும்போது
முதிர்ந்தாவின் வெண்ணெய்யைப்போற் றிரளுங்கண்டாய்
கைத்திடவே குடகரியிற் காரமூட்டிக்
காய்ச்சிடவே யுருகியது மணியுமாகும்
எய்த்தங்கே போகாது உப்பில்வைத்து
எரித்திடாய் கடிகையொன்று யெரித்திடாயே. (44)

எரிப்பேது சட்டிக்குள் ளுப்பையிட்டு
இயல்பாகச் சட்டிகொண்டு மூடிமைந்தா
எரிப்பேது கமலவன்னி யிரண்டுசாமம்
எரித்தாறிப் பார்த்திடவே நிறத்தைக்கேளு
எரிப்பேது செந்தூரம் முருக்கம்பூப்போல்
இருக்குமடா சிமிழதனி லடைத்துக்கொண்டு
எரிப்பேது இருபோது பூசைபண்ணு
இல்லாட்டா லொன்றுமில்லை வாதம்பொய்யே. (45)

வாதமென்ற செந்தூரம் லோகத்துள்ளே
மாட்டுவாய் பத்தொன்று தூக்கிநீதான்
நீதமென்ற மாத்தேது பதினாறும்
நினைவோடே பணவிடைதான் தேனிலுண்ணு
வேதமென்ற சடலமப்பா வச்ரதேகம்
வித்தறியார் வெவ்வேறே விரித்துச்சொல்வார்
போதமென்ற சாத்திரமும் பூவென்னாவிற்
பொருந்திநின்று மீறியது பொங்குந்தானே. (46)

பொங்கமென்ற பேய்மிரட்டி கீழ்காய்நெல்லி
புருவைதீண் டாப்பாளை அவுரிவேரும்
பங்கமென்ற கவுதும்பை வேரினோடு
பாங்கான ஆலைக்கண் சட்டிக்குள்ளே
அங்கமென்ற யேரண்டத் தயிலமூட்டி
அப்பனே அஞ்சிகத்தி விட்டுநீயும்
சுங்கணமாய்ப் பார்த்திடவே கைதிறந்து
காணுமடா தலைதூரங் காணுந்தானே, (47)

காணவே முதலைக்கோ கழுகதன்கோ
கருதிப்பார் பழந்தின்னும் வவ்வாலின்கோ
பூணவே சமபாகம் நிழலுலர்த்திப்
பொடிசெய்து துணியிலிட்டுத் திரியதாக்கித்
தோணவே திரியதனைச் சிற்றேரண்டஞ்
சூழ்தயிலம் விட்டெரித்துப் பேரண்டத்தில்
காணவே வங்கினியை வழித்தெடுத்து
நாலுதினம் பூமிக்குள் வைத்திடாயே (48)

வைத்ததொரு வங்கினியைச் சிறுதேன்விட்டு
வாகாகக் குளப்பிவைத்துப் பார்நீயோடும்
எய்த்ததொரு மனமடக்கி யிமையாடாமல்
ஈஸ்பரியைப் பூசித்து யிறைஞ்சியேத்தப்
பொய்த்ததில்லை கைதிறக்கும் புவியிலுள்ள
பொருளெல்லாங் கண்டிடலாம் மெய்யேமெய்யே
மொய்த்தவிந்த முறைகளெல்லாந் தவர்வதில்லை
முக்கண்ணி பூசைசெய்து பார்த்திடாயே (49)

பார்த்திடுவாய் கூகைக்கோ வலதுசொட்டை
பாங்கான குரங்கினுட னப்புங்கூட்டிச்
சேர்த்திடுவா யிவையுடனே பொடித்துநன்றாய்த்
திரித்துப்பே ரண்டமதில் ஐயைக்கூட்டிக்
காத்திடுவா யீசனையும் போற்றிக்கொண்டு
கார்பெரிய யேரண்டத் தயிலமூட்டிப்
பேத்திடுவாய் கையிலிட்டுப் பொருளைப்பாரு
பேர்பெறவே காணலாம் பொருளின்போக்கே (50)

போக்குடனே கூகைக்கோ கூகைநப்பும்
புத்துத்தேன் விட்டரைத்து வழித்துக்கொண்டு
நோக்குடனே சாயமிட்டுப் பார்க்கும்போது
நொடியிலே தூசுகளும் பிளந்துகாணும்
வாக்குடனே கருங்காக்காய்ச் சக்கும்நெஞ்சும்
மாமுதலைத் தாப்புடனே கோங்கின்பிஞ்சு
தாக்குடனே திரியாக்கிப் பேரண்டத்திற்
றுன்முன்போல் மையெடுத்துப் பார்த்திடாயே (51)

பார்த்திடவே வரைசிகையுந் தொகையுமோடும்
பச்சோந்தி கொண்டுவந்து நப்பெடுத்துப்
பார்த்திடவே கோரோச ஊெய்யும்நேராய்ப்
பாங்காகச் சிறுதேனி லரைத்துக்கொண்டு
பார்த்திடவே அக்கினிட்டுப் பார்க்கும்போது
பாரதனிற் கைதிறக்கும் க்ஷணத்தினுள்ளே
பார்த்திடவே ஜெலங்களிலும் வாரிக்குள்ளும்
பலபரிணி கண்களினுற் காணவேறே. (52)

வேறுநின்ற செங்கிழுவை சூதம்கூட்டி
வீராகச் சமனுக நிறுத்துக்கொண்டு
ஆறுதிங்கள் கழித்திருக்குங் காடிவாங்கி
ஆட்டியே மயினம்போ லரைத்துநீயும்
வேறுகின்ற செப்பாறு வெள்ளியெட்டு
வேதித்து வுருக்கையிலே காரங்கூட்டிக்
கூறுகின்ற தகடுதட்டி மருந்துதன்னைக்
குமுறவே ஆறுறு தடவிவையே (53)

தடவியே குகையிலிட்டுச் சீலைசெய்து
தாய்பதத்தைப் பூசித்துக் கசபுடந்தான்
படவியே போட்டுப்பார் மாத்தேழாகும்
பாரிதற்கு குருநூல்சூத் திரந்தான்சொன்னேன்
விடவியே யிதிற்சொன்ன முறைகளெல்லாம்
வேறொருவர் நூல்களிலே சொல்லவில்லை
படவியே படபடத்துத் திரியவேண்டாம்
பரபூசை சிவபூசை பணிந்துசெய்யே. (54)

பணிந்திட்டாற் கலியுகத்தி லருளுண்டாகும்
பணியாட்டாற் பிறவியென்ற நரகிற்றள்ளும்
துணிந்திட்டாற் கருணையா னந்தங்கேளு
துவாதசமா மூலத்திற் சொக்கிச்சேரும்
அணிந்திட்டா லென்னூலை மாலையாக்கும்
அறியவுண்மை யெல்லாமிந் நூலிற்சொன்னேன்
தணிந்திட்டால் பெரியோர்க ளருள்தான்கிட்டும்
தணியாட்டா லொன்றுமில்லை சளந்தான்காணே (55)

சளமென்றார் ஞானமகத் தீசரன்று
சண்டாள ரறியார்க ளவரோநல்லோர்
விளமென்றாற் கொல்லுமோ கடித்தாற்கொல்லும்
வேதாந்திக் கல்லாமல் மற்றோர்க்காகா
களமென்றால் முடிந்தவிடஞ் சுழிணைக்குள்ளே
கண்டவர்க்குத் தொண்டுசெய்வா யெல்லாமெய்தும்
வளமென்றா லுவரொடுகல் லுப்புச்சுண்ணம்
வாகான இந்துவுடன் முப்பூவாமே. (56)

முப்பூவின் சாரத்தைச் சேர்த்துஆட்டில்
முத்துப்போற் சலமாகும் மோசமில்லை
அப்பூவே வாதசித்தி காயசித்தி
அறியாமல் வழலையென அறைந்திட்டார்கள்
இப்பூவால் மூன்றுபொருள் முடிக்கலாகும்
இதற்குவலு வேதென்றா லுவருப்பாகும்
கொப்பூவே பலவாகு மரமொன்றாம்போற்
குறியொன்று நெறியொன்று கூர்ந்துபாரே. (57)

கூர்ந்துபார் வங்கென்று அடிமூலத்திற்
குமுறவே சிங்கென்று நடுவேமூடி
ஆர்ந்துபார் அங்கென்று முடிமேல்மூட்டு
அப்பொழுதில் ஈராறு கலையுங்கூட்டித்
தீர்ந்துபார் நங்கென்று மங்கென்றுந்தான்
தீராட்டாற் கிரியுமென்று திறத்தில்நில்லு
தேர்ந்துபா ரிரண்டோடே யெட்டுஞ்சோர்ந்தால்
சின்மயத்தின் சொரூபத்திற் சேர்ந்துபோமே. (58)

சேர்ந்ததொரு நாகமொரு பலந்தான் தூக்கித்
திறமாக யிலுப்பைநெய்யி லுருக்கிச்சாய்த்துச்
சார்ந்ததிந்த விதமூன்று தரமேசெய்து
சாதகமாய்த் திருகுகள்ளிப் பாலுழக்கு
ஆர்ந்ததொரு வெள்ளைக்கற் சுண்ணம்வாங்கி
அடியிலே பாதியிட்டு நாகம்வைத்துக்
கார்ந்ததொரு சுண்ணத்தால் மேலுமூடிக்
கள்ளிப்பால் கறந்தங்கே சேருசேரே. (59)

சேரப்பா அதன்பிறகு சுண்ணக்கல்லால்
சிறக்கவே வாய்மூடித் திறமாய்நீயும்
வாரப்பா திப்பிலியால் துவாரம்மூடி
வாகாகச் சீலைசெய்து கெசத்தைப்போடு
ஆரப்பா புடம்மூன்றில் நாகவெள்ளை
அப்பனே தாம்பிரத்தை லேசாய்த்தட்டிச்
சாரப்பா சிறுகவதை நறுக்கிக்கொண்டு
தனிவேம்பு புளியிலையும் தகட்டிலப்பே. (60)

தகட்டிலே புளியிலையும் நிம்பத்தோலைத்
தானரைத்துக் கோசலத்தில் விரவிக்கொண்டு
உகட்டிலே சாணியிலே பொதிந்துகொண்டு
உமிபிரட்டிக் கெசபுடத்திற் போடுபோடு
பகட்டிலே செம்பாகுஞ் சிகப்புமெத்த
பாய்ச்சுவாய் மூன்றுவெள்ளி நாகமேழில்
திகட்டிலே யுருக்கிப்பார் மாத்தெட்டாகும்
சிற்பரையு மென்றனக்குச் செப்பினாளே. (61)

செப்பியதோர் சூதத்தைச் சேரவாங்கிச்
செயமான வெள்ளவரைச் சாறுவார்த்து
அப்பியதோர் பீங்கானில் ரெண்டும்விட்டு
அப்பனே மத்திப்பாய் நிம்பச்சாற்றால்
கொப்பியதோர் மத்தித்த சூதம்வாங்கிக்
குழியொன்று விரல்நீளம் மெழுகினன்றாய்
சொப்புபுளி யம்பொருக்கிற் றணலுண்டாக்கிச்
சூழவந்தத் தணல்கொண்டு அணைத்திடாயே. (62)

அணைத்திடுவாய் ஆறாறு மூன்றுவாட்டி
அப்பனே வலிந்துரசங் குளிகையாகும்
இணைத்திடுவா யின்னமொரு முறைதான்கேளு
இயல்பாகக் காந்தம்ரெண்டு பணந்தான்தூக்கு
புணைத்திடுவா யரபொடியவ் விடையத்தாகும்
புசலாக மடையனொரு பணந்தான்தூக்கு
துணைத்திடுவாய் வெங்காரம் பணந்தானென்று
சோபமன்றிச் சேரவொன்றாய்க் கூட்டுகூட்டே. (63)

கூட்டிநன்று யுருக்கியதை யெடுத்துப்பாரு
குறையாது மாத்தாறு காணுங்காணும்
நாட்டியதோர் வங்கமிட்டால் இரைச்சுத்தள்ளும்
நயமாக யின்னமொரு முறைநையைக்கேளு
காட்டிலொன்றி யிலைச்சாறு தன்னைவாங்கிக்
கனகரச மொருசேரை விட்டுமைந்தா
ஆட்டியே தொலாந்தரமா மாட்டிவாங்கி
ஆனகம லாக்கினியா யெரித்திடாயே. (64)

எரித்திடவே யிப்படித்தான் மூன்றுவாட்டி
இன்பமுட னிதமாக யெடுத்துக்கொண்டு
மரித்திடவே பேய்ப்பீக்கின் படிசார்விட்டு
வரிசையுடன் முன்போல யெரித்துவாங்கு
அரித்தசிவன் வித்தங்கே குளிகையாச்சு
அதனாலே அஷ்டசித்து மாடலாகும்
பரித்தசிவ னுமையவட்குச் சொன்னமார்க்கம்
பரையெனக்குச் சொன்னபடி பார்த்திட்டேனே. (65)

சொன்னதொரு தொழில்தனையே கேளுகேளு
சூட்டுகிறேன் தனித்தனியே சுழுவாய்மைந்தா
அன்னதொரு கவுதும்பைச் சமூலம்வாங்கி
ஆனைக்கண் சட்டிக்குள் கருக்கிநன்றாய்
என்னதொரு யோண்டத் தயிலமூட்டி
இளக்கியே கரத்தகமும் புறமுந்தேய்த்தால்
வன்னதொரு கைதிறக்கும் பொருளுங்காணும்
வாலைகண்ட கம்மெனவே மதித்துப்பாரே. (66)

மதித்தபடி வங்கினியைச் சொல்லக்கேளு
மணிசிறிய தக்காளிச் சமூலம்வாங்கி
விதித்தபடி முன்போலே கருக்கிக்கொண்டு
வேகமுள்ள யோண்டத் தயிலமூட்டி
பதித்தபடி கரத்திலெண்ணெய் தேய்த்தபின்பு
பண்பாகக் கண்டகத்தை வட்டஞ்செய்தால்
கொதித்தபடி நாட்டிலுள்ள குறியுஞ்சொல்லும்
குவலயத்தில் வைத்தபணி குணமாய்ப்பாரே. (67)

குணமாக யின்னமொரு முறையைக்கேளு
கூறுகிறேன் காகத்தின் போக்கைமைந்தா
மணமாக வங்கினியை யறியமாட்டான்
ளரண்டங் காகத்தின் சக்குவாங்கிப்
பணமாகப் புத்துத்தேன் சிறுதேனுதல்
பரிவாக யிரண்டிலொன்றிற் குளப்பிக்கொண்டு
கணமாகச் சாயத்தில் தேய்த்தாயானல்
கைதிறந்து வெகுதூரம் ஓடுந்தானே. (68)

ஓடுமப்பா பிலாக்கொட்டை அய்யைக்கேளு
உத்தமனே பூமிக்குட் பழுத்தகொட்டை
ஆடுமப்பா அண்டரண்டம் புவியனைத்தும்
ஆகாகா தேனதனி லரைத்துக்கொண்டு
நாடுமப்பா முன்சொன்ன பாலர்கையில்
நலமாகக் கண்ணிலே தேய்த்துப்பார்க்கப்
பாடுமப்பா உலகத்தில் திருக்கியெல்லாம
பண்பாகச் சொல்வரந்தப் பாலர்தாமே. (69)

சொல்லுதற்குப் பாலருடன் வயதேதென்ருல்
சூட்சமப்பா பன்னிரண்டு பதினுலாகும்
மெல்லுதற்குச் சூதவெள்ளி வகையைக்கேளு
மீருமலொருசேரை யெள்ளினெண்ணெய்
மல்லுதற்குச் சூதமொரு சேரைவாங்கி
மைந்தனே கரண்டியிலே உருக்கும்போது
கொல்லுதற்குத் தும்பிமாங் கனியைச்சீவி
கூருகக் கரண்டிக்குட் பழமும்போடே. (70)

பழம்போடத் தங்கமாங் காய்க்கும்வெள்ளி
பாரப்பா தேவிதனைப் பணிந்தபேர்கள்
பழம்போடச் சாக்கெல்லாங் கொன்றுதின்னும்
பண்பாக இலைக்குள்ளே சாரங்கட்டும்
பழம்போடச் சூதமுந்தான் கட்டிப்போகும்
பாஷாண சாக்கெல்லாம் கட்டிப்போகும்
பழம்போடப் பூவிலப்பி ரேகங்கட்டும்
பட்டடனே வேதைசொல்வேன் தங்கமாமே. (71)

தங்கமென்ற தாளகத்தின் வேதைகேளு
        சாதகமாய்த் தாளகமோ பலந்தானென்று
பொங்கமென்ற மனோசிலையோ பலந்தானென்று
        புகழாக யெருக்கம்பால் கொண்டுமோட்டி
துங்கமென்ற வயிரம்போல் குகைதான்கட்டிச்
        சுகமாகத் தாளகத்தை குகைக்குள்வைத்துப்
பங்கமென்ற சில்லிட்டுச் சீலைசெய்து
        பார்வதியே தொழுதுபுடம் பரிவாய்ப்போடே. (72)

பரிந்திதனை யெடுத்திடவே மணியாய்நிற்கும்
        பருமணியிற் குன்றியிடை தூக்கிக்கொண்டு
பிரிந்தசெம்பு விராகனென்று கொடுத்துருக்கிப்
        பேசாம லுருக்குவெள்ளி சமனுக்கூட்டு
சரிந்தந்த மாற்றேது பதினாலாகும்
        சாதகமா யின்னமொரு வகையைக்கேளு
எரிந்துவிழும் அரிதாரம் விராகனென்று
        இனருள்ள மனோசிலைதான் விராகன்காலே. (73)

காலென்ற சாம்பிராணி யரைத்துருட்டிக்
        கடுகவே சட்டியிலே யுறைபோற்சுத்தி
வாலென்ற மடத்துத்த மதற்குள்வைத்து
        வரிசையுள்ள செம்பருத்தம் பூச்சாற்றாலே
மாலென்ற சுருக்கிடவே மெழுகுமாகும்
        மைந்தனே வேதையுமெட் டெட்டும்வெல்லும்
கோலென்ற சொன்னஇந்தச் சரக்குக்கெல்லாம்
        குகைசெய்து அப்பிரகங் குழைத்துச்சேரே. (74)

சேரப்பா யிரும்பிய முறையைமைந்தா
        செப்புகிறேன் வகையாகத் திறந்துதானே
மாரப்பா கல்நாறுங் கீழ்க்காய்வேரும்
        மைந்தனே சம்பழத்தா லரைத்துக்கொண்டு
ஏரப்பா சல்லியிலே பிசரிநன்றாய்
        இதமாக வுருக்கிடவே யியமாகும்
பாரப்பா பார்த்திடவே அயத்திலீயம்
        பார்முறையைத் தவறாமற் சொல்லுவேனே. (75)

தவறாது மேதியுட கொம்பைச்சீவிச்
சட்டியிலே போட்டதனைத் தண்ணீர்விட்டுத்
தவறாது கனைத்திடவே கொழுவைக்காச்சி
தான்வைக்கக் கொழுமுனையோ ஈயமாகும்
தவறாது பெருவாயின் நீருக்குள்ளே
தவசியென்ற முதலியார் பட்டைச்சாற்றில்
தவறாது புகட்டியே கொழுவைக்காய்ச்சித்
தான்வைக்க யீயமாந் தப்போயில்லை. (76)

ஈயமாம் வெள்ளியுமாம் சத்தவேதை
இன்னமுண்டு மிளகுதக் காளிச்சாற்றில்
வாயமாய் வைத்திடவே யீயமாகும்
மைந்தனே மாதளைச்சார் பெருவாய்நீரும்
ஆயமாய் ஆடுதின்னாப் பாளைச்சாற்றில்
அப்படியே தோய்த்திடவே யீயமாகும்
காயமாம் வல்லாரை நீராலாட்டிக்
கடுஞ்சல்லி பின்னுருக்க வங்கங்கேளே. (77)

பின்னென்ற அப்பிரே கத்தைச்சொல்வேன்
பேரப்பி ரேகம்நீர் முள்ளிச்சாற்றில்
நன்னயமா யாட்டிஆவின் நெய்யிலாட்டி
நயமாக முடக்கொத்தான் சாற்றில்தானே
முன்னரைத்த படிபோலே மயனமாக்கி
முதிரவே பிசரியதை வைத் துக்கொண்டு
வன்னியென்ற சூட்டடுப்பில் தீயைமூட்டு
மைந்தனே அதன்மேலே சட்டியேற்றே. (78)

ஏற்றியே முருங்கையுட குச்சியாலே
இருகடிகை வறுத்திதனை யிறக்கிக்கொண்டு
மாற்றியே பச்சரிசி தீட்டிக்கொண்டு
வரிசையுடன் சோறாக்கி வாங்கியந்தச்
சோற்றிலே மருந்தையிட்டுப் பிசரிமைந்தா
சோர்வன்றி யுண்டைசெய்து குகைக்குள்ளிட்டு
சாற்றியே சில்லிட்டுச் சீலைசெய்து
தயவாகத் துருத்திதனை மேலேயேற்றே. (79)

மேல்வைத்து மண்ணிட்டுக் கரியுமிட்டு
　　மேலான பராபரைக்குப் பூசைசெய்து
மால்வைத்து மாதாவே அருள்தாவென்று
　　வணங்கிநின்று ஒருசாமம் ஊதவூது
கால்வைத்த அப்பிரேகந் தண்ணீர்போலே
　　கனலிட்டு வுருகியது குகைக்குள்நிற்கும்
போல்வைத்துத் திப்பிரித்து ஆறவைத்து
　　புகழாகப் பார்த்திடவே சவளையாமே. (80)

சவளையென்ற யியத்தை யெடுத்துமைந்தா
　　தனித்ததனை யாட்டிப்பின் மூசைசெய்து
துவளையென்ற மூடியுமப் படியேசெய்து
　　சொற்பெரிய அரிதாரங் கழஞ்சியாட்டி
திவளையென்ற குகைக்குளரி தாரத்தூளை
　　சிறக்கவதிற் பாதியிட்டுக் கழஞ்சுரசம்விட்டுக்
குவளையென்ற மேல்மூடிச் சீலைசெய்து
　　கூசாமற் சட்டியிலே மூடுமூடே. (81)

மூடியதோர் சட்டிக்குள் மணலுமிட்டு
　　முசியாம லதன்மேலே யுப்புமிட்டு
நாடியதோ ரதன்மேலே குகையைவைத்து
　　நலமாக அரைப்படிதான் மணலுமிட்டு
ஆடியதோர் உப்பிட்டுச் சட்டிமூடி
　　அப்பனே சீலைசெய்து மண்ணும்பூசி
பாடியதோர் சூட்டடுப்பிற் றீயைமூட்டிப்
　　பண்பாக அடுப்பேற்றி யெரித்திடாயே. (82)

எரித்திடுவாய் சட்டியின்மேல் நெல்லைவைத்து
　　யென்மகனே நெற்பொரியி லிறக்கிக்கொண்டு
எரித்திடவே வெள்ளீயம் பணந்தானூட்டில்
　　யீராறு மாத்தாகும் யிடுக்கமில்லை
எரித்ததிலே பணவிடைதா னெடுத்துமைந்தா
　　எழிலான செம்புதனி லீய்ந்தாயானால்
எரித்ததொரு மாற்றேது பதினாலாகும்
　　இப்படியே செம்புக்கு என்தாய்நாதம். (83)

நாதமென்ற நாதாக்கள் கோடாகோடி
நால்வகைக்கும் பலநூல்கள் பாடினார்கள்
நீதமென்ற தென்னூல்சத் தியமதாக
நிச்சயித்துப் பலபேர்கள் நிலைத்துநின்றார்
போதமென்ற முந்நூறும் பலதிரட்டும்
பொய்யாம லுள்ளபடி பொருளைச்சொன்னேன்
வேதமென்று சொன்னதெல்லாங் கதைபாடாகும்
வேதாந்தி யானுக்கா லஞ்சும்பாரே. (84)

அஞ்சாமற் றுறையொன்று சொல்லக்கேளு
அப்பனே முப்பிரண்டை வெள்ளைச்சுண்டை
மிஞ்சாமற் சாரணையுஞ் சமனாய்க்கூட்டி
வெண்ணெய்போ லாட்டியதைக் குகைபிடித்துத்
துஞ்சாமல் மூன்றுபலஞ் சூதந்தூக்கிச்
சூட்டுவாய் குகைக்குள்ளே மைந்தாநீயும்
கஞ்சாமற் செங்கல்பொடி சட்டிக்குள்ளே
கனக்கவதின் மேலுப்பை யமைத்திடாயே. (85)

அமைத்ததின்மேற் குகைவைத்து யுப்புமிட்டு
அப்பனே செங்கலிட்டுச் சேலைசெய்து
சமைத்ததொரு கமலவன்னி சாமமூன்று
தானெரிக்கச் செந்தூர மருணன்போலாம்
இமைத்தபணத் தூக்கம்நீ யுண்டாயானால்
ஈரெட்டு வயதாகும் எட்டுமெய்தும்
உமைக்குமுன்ன னீஸ்பரனார் சொன்னகற்பம்
ஒருவருக்குஞ் சொல்லாதே யடங்கியாடே. (86)

ஆட்டியதோர் ஐவங்க மின்னஞ்சொல்வேன்
அசையாமற் பிரூய்வேரைத் தயிலம்வாங்கி
நாட்டியதோர் தயிலத்திற் கொளுவைக்காச்சி
நயமாகத் தோய்த்திடவே யியமாகும்
ஓட்டியதோர் பேய்ச்சுரையின் சாறுவாங்கி
உத்தமனே தோய்த்திடவே யியமாகும்
வாட்டியதோர் தேட்கொடுக்கின் சாறுவாங்கி
மைந்தனே தோய்த்திடவே யியமாமே. (87)

ஈயமாம் பளுபாகல் சமூலம்வாங்கி
இப்படியே தோய்த்திடவே யீயமாகும்
ஈயமாம் பெருவாயின் நீரைக்கூட்டி
யிடித்திடுவாய் கிழங்குவகைக் கெல்லாம்நீயே
ஈயமா மிவையெல்லாம் மெய்யென்றெண்ணு
இரும்பதனிற் செம்படுக்கு மியல்புகேளு
ஈயமாம் வெள்ளியுமாம் பொன்னுமாகும்
எட்டெட்டுச் சரக்கெல்லாங் கொல்லுந்தானே

தானென்ற அயச்செம்பு விபரங்கேளு
தனிச்செம்பு நெரிஞ்சிக்குட் பழச்சார்விட்டு
தேனென்ற கல்வத்தி லாட்டிநன்றாய்த்
திரமாக வப்பாலிற் கூட்டியாட்டி
ஆனென்ற அயச்சல்லி தன்னிற்பூசி
யாட்டியே வூதிடவே செம்புமாகும்
கானென்ற தாயைநித்தம் போற்றினுக்காற்
கருணைவைத்துச் சித்தெல்லாஞ் சாற்றுவாளே.

வாளென்ற பருவதங்க ளெப்போதும்போல்
வளர்நாக சுத்தியதை வழுத்தக்கேளு
வேளென்ற நாகமது கழஞ்சிபத்து
மேன்மையுள கண்டருமோ நாற்பதாகும்
மாளென்ற மான்செவியின் கள்ளிச்சாற்றால்
மயினம்போ லாட்டிநா கத்திற்பூசி
கோளென்ற பதினெட்டுப் புடந்தான்போடக்
கூசாதே குடவனுமாற் றுழுகாணே.

காணப்பா கழஞ்சிபத்து நாகந்தூக்கிக்
கட்டாக மான்செவியின் கள்ளிச்சாற்றில்
பூணப்பா பத்துவிசை யுருக்கிச்சாய்க்கப்
புசலுவேன் சூதந்தா னிதற்குநோய்க்
கோணப்பா கண்டருமோ கழஞ்சிரண்டு
கூசாமல் முன்சாற்றி லரைத்துக்கொண்டு
தோணப்பா யிப்படியே புடமும்போடச்
சுகவேதை வெள்ளிசெம்பில் மாத்தெட்டாமே.

ஆமப்பா ஆதலேச்சா றுழக்குவாங்கி
அதனேடுகழஞ்சுபத்துச் சூதம்விட்டு
வாமப்பா குச்சிபட்டை யால்பின்மத்தி
வளமாக முன்னரைத்த பட்டைக்குள்ளாய்
பாமப்பா பட்டைமுதற் பாலாலாட்டிப்
பாங்கான குகைபண்ணி யதற்குள்விட்டு
மோமப்பா ஜெலம்விட்டுச் சீலேசெய்து
மோகினியை அர்ச்சித்துப் பூசைசெய்யே. (92)

செய்யப்பா குக்குடமாம் புடத்தைப்போடு
திரும்பவே பட்டைதனே யாட்டிக்கொண்டு
அய்யமின்றிக் குகைபிடித்து ஆரவைத்து
அதற்குள்ளே இம்மணியை யடைத்துநன்றாய்
வையப்பா விரைப்பொடியைக் கீழ்மேலிட்டு
வளமாக அடைத்துத்தான் சில்லுப்போட்டு
உய்யப்பா சீலேசெய்து மூடிமைந்தா
உத்தமியைப் பூசித்துப் புடத்திற்போடே. (93)

புடமதனே யாறியபின் னெடுத்துப்பாரு
புகழான சூதமங்கே கட்டிப்போகும்
தொடர்ந்ததந்த வரையாறுந் தூக்கிப்போகும்
சொல்லாதே போகர்முறை பார்ப்போரில்லே
கடமதனே மாயையென்ற பிரட்டையெல்லாம்
கடவாட்டால் வைராக்யக் கரையில்நில்லு
முடவனுமே தேனுக்கு யிச்சைகொண்டால்
முன்வருமோ பின்னுமில்லே மோசந்தானே. (94)

மோசமில்கொல் லன்கோவைச் சமூலம்வாங்கி
மூவராட்டிக் குகைபிடித்து மூசைக்குள்ளே
வாசமுடன் அறுகழஞ்சி சூதம்விட்டு
மைந்தனே கிழங்காலே வாயைமூடிப்
பாசமுடன் சில்விட்டுச் சீலேசெய்து
பண்பாகக் குக்குடமாம் புடத்தைப்போடு
நேசமுடன் மனேன்மணியை வஸ்துவாலே
நிசமாகச் சித்திசெய்யக் குளிகையாமே. (95)

சித்தியா மெட்டெட்டுங் குளிகையாலே
செப்பார்கள் பெரியோர்க ளிந்தமார்க்கம்
முத்தியாம் உண்மையைக் காணலாகும்
முன்நந்தி மூலநக்கு மொழிந்தஞாயம்
பத்தியாம் ஆத்தாளின் சித்திசொல்லார்
பாசமெனும் ஆசையெலாம் பாழாய்போகும்
எத்தியே திரியாதே நல்லோர்தம்மை
இறையாகு மிக்குளிகை யீசனுமே. (96)

ஈசனென்ற குளிகையொன்று சொல்லக்கேளு
இயல்பான குக்குடத்தின் சாதிச்சாவல்
வாசமுடன் கொண்டுவந்து நிறுத்திமைந்தா
வாளம்நெல்லி கெந்திபலம் மூன்றுதூக்கிப்
பாசமுடன் குருவைமாவி னுள்ளேசேர்த்துப்
பண்பாகத் தீன்போட்டா விறந்துபோகும்
மோசமன்றி வாய்க்குள்ளே சேரைரசம் விட்டு
முன்வாயும் பின்வாயும் தைத்துவையே. (97)

வைத்துசிலை செய்துகெச புடமும் போடு
வலிந்தப்பா சூதமது குளிகையாகும்
வைத்ததொரு சாவலுட காயமெல்லாம்
வாகாகச் சத்திறக்கி மைந்தாகேளு
வைத்ததைக்கேள் நவலோகம் வெவ்வேறாக
வரிசையுடன் பத்தொன்று உதவியப்பா
வைத்துநீ யுருக்கிடவே மாற்றெட்டாகும்
வாழலாம் யுகாந்தம்வரை வாழலாமே. (98)

வாழவே வெள்ளைநீர் முள்ளிதன்னை
மைந்தனே சமூலமங்கே பிடுங்கிவந்து
காழவே யாட்டியதைக் குகைசெய்தாறு
கழஞ்சிரசம் விட்டிறக்கிச் சீலைசெய்து
நீழவே கோழிபுடம் மத்தங்காய்க்குள்
நினைவாக விரைகளைந்து மருந்துசெய்து
ஆழவே மூன்றுபுட மிப்படித்தான்
ஆச்சரியஞ் சூதமங்கே குளிகையாச்சே. (99)

ஆச்சப்பா சிவமட்டனு செப்பக்கேளு
அரகரா சூதமொரு சழஞ்சிதூக்கி
ஓச்சப்பா காற்கழஞ்சி செந்திதூக்கி
உறவாகத் தூளாக்கிக் குகைக்குள்ளிட்டு
நீச்சப்பா சூதம்விட்டுப் பொடிமேலிட்டு
நேர்பாகச் சில்லிட்டுச் சீலைசெய்து
பாச்சப்பா உப்பிட்டு மணலுமிட்டுப்
பருவமுடன் மேலுமந்தப் படியேமூடே. (100)

மூட்டுவாய் கடிகையஞ்சு யெரித்தாயானால்
மோசமன்றிச் சூதமங்கே கட்டிப்போகும்
நீட்டுவாய் காற்கழஞ்சி தூக்கியப்பா
நேராக வெள்ளிதங்க மிரண்டுஞ்சேர்த்துச்
சூட்டுவாய் நாகமஞ் சாடிசேர்த்துச்
சுகமாக வுருக்கிடவே மாத்தெட்டாகும்
கோட்டுவாய் அரிதார மிருதார்சிங்கி
கொழுகிநின்ற சூதமங்கே நேருநேரே. (101)

நேராகப் பொற்றலையின் சாற்றாலாட்டி
நினைவாகக் குகையிலிட்டுச் சீலைசெய்து
வாராகக் குழிகெல்லி சாண்நீளத்தில்
வரிசையுடன் மணலிட்டு குகையைவைத்துப்
பேராக மேலுமிந்த மணலையிட்டுப்
பிசகாம லாட்டெருவை நிரம்பவிட்டுச்
சீராகப் புடம்போட்டு வாங்கிமைந்தா
சிறக்கவே ஆறவிட்டு யெடுத்துக்கொள்ளே: (102)

கொள்ளடா பொற்றலையின் சாற்றாலாட்டிக்
கூசாம லெடுத்தந்தப் புடத்திற்போடு
விள்ளடா யிந்தவிடை வெள்ளிசேர்த்து
வியனாக வுருக்கியே தகடுதட்டித்
தூள்ளடா கறியுப்பு பழச்சாற்றாலே
துயரான தகட்டுக்குட் பிசிறிநன்றாய்த்
தள்ளடா புடத்திலே செம்பு அற்றால்
சாதகமாய்த் தாய்கூட்டி யுருக்கிடாயே. (103)

உருக்கவே யின்னமொரு வேதைகேளு
உத்தமனே குடவனைத்தான் தகடுதட்டிப்
பெருக்கவே மருதோன்றி தொட்டால்வாடி
பேராம லாட்டியே தகட்டிற்பூசி
கருக்கவே காரமிட்டு உருக்கிச்சாய்க்கக்
காரணமாய்ப் பச்சைமஞ்சட் சாற்றிற்சாய்க்க
பருக்கவே ஊரல்போய் கனகமென்றும்
பசும்பொன்னு மென்பார்கள் பாருபாரே. (104)

பாரப்பா நாகமொரு கழஞ்சிதூக்கிப்
பருவமுட னிவ்விடைக்கு இந்த்ரகோபம்
பாரப்பா இதுவெல்லாம் மணத்தக்காளிப்
பால்விட்டு ஆட்டியே வாங்கிக்கொண்டு
பாரப்பா அயக்கிண்ணி ரண்டுண்டாக்கிப்
பாச்சியே சீலைசெய்து ரவியில்வைத்துப்
பாரப்பா கனபுடமாய்ப் போட்டெடுக்கப்
பானுபோற் செந்தூரம் பாரிலாடே (105)

ஆடப்பா யிதனாலே கோடாகோடி
அதனாலே நவலோக மெல்லாந்தங்கம்
ஓடப்பா யிதனாலே குளிகைசெய்து
ஓட்டினு லீரேழு வுலகந்தாண்டும்
ஊடப்பா காயசித்தி மண்டலந்தான்
உண்ணவே அருணனைப்போற் றேகமாகும்
தேடப்பா மனோமணியைத் தெளிந்து போற்று
சேர்த்திடுவாள் தம்மோடே சேர்ப்பாள்பாரே. (106)

பாரப்பா மூன்குகைதா னுருக்கிப்பார்க்கப்
பதினாறு மாத்தாகும் பொய்யோயில்லை
காரப்பா கார்த்திகையின் கிழங்குதன்னைக்
கனமாகக் குடைந்ததற்குட் சூதம்விட்டுச்
சேரப்பா மூடியந்தக் கிழங்கால்மைந்தா
சிறப்பாயிப் படியஞ்சு புடமேமோடு
நேரப்பா காரீயஞ் செம்பிரண்டு
நேராக இருமூன்று களங்கமொன்றே (107)

ஒன்றிடவே ஒன்பதரை மாத்துமாகும்
உள்ளபடி சொல்லிவிட்டே னிருஞ்சொல்லார்
வென்றிடவே கொன்றைவேர் பழச்சார்விட்டு
வெண்ணெய்போ லாட்டியே வாங்குமைந்தா
கொன்றிடவே செம்புருக்கிச் சாய்த்தாயானாற்
கோதன்றி யூறல்போய் சுத்தியாச்சு
சென்றிடவே செம்பொன்று வெள்ளிநாலு
சேர்த்துருக்கி வுண்டைபோற் சிமிழ்தான்தட்டே (108)

சிமிழேது மனேசிலைதான் கழஞ்சியொன்று
சிவவிந்து அவ்விடைக்குக் கழஞ்சிகூடச்
சிமிழேது இவைமூன்று முருக்கஞ்சாறு
செப்பரிய புளியாரைச் சாறுவிட்டுச்
சிமிழேது இலுப்பைநெய்த் தீபமேற்றித்
திருவட்ட ணைக்காலிற் றீபம்வைக்க
சிமிழேது யெல்லாந்தான் சித்தியாச்சு
சித்தர்களைக் காணவிளக் கேற்றுவாயே. (109)

விளக்கேற்றி யெண்ணெய்நன்றாய்ச் சுவறினுக்கால்
விருப்பமுடன் வாங்கியே வெள்ளீயத்தில்
அளப்பமுடன் ஒன்றிடவே பழுக்குங்கண்டாய்
அப்பனே சாதிலிங்கம் கழஞ்சிவாங்கிக்
குளப்பமன்றி ஆவிநெய்யிற் றெலாந்தரம்போல்
குறையாம லொருபடிதான் வற்றுமட்டும்
இளப்பமன்றி மெழுகாகும் வெள்ளீயத்தில்
ஈய்ந்தாக்கால் மாத்ததுவு மேழாங்காணே. (110)

காணவே சிலையொடு லிங்கங் கானும்
களங்கமில்லா அந்தரத்தா மரையுங்கூட்டித்
தோணவே பிரட்டியொரு புடத்தைப்போட்டுச்
சுகமாக யெடுத்துபின் முன்போலாக
நாணவே புடமூன்றிப் படியேசெய்தால்
நன்றாகத் தாம்பிரத்தி னூறல் போகும்
பூணவே மூன்றுசெம்பு வெள்ளியேழு
பூட்டிடுவாய் மாத்தஞ்சு புரிந்துபாரே. (111)

பாரப்பா சூஸ்திரத்திற் பொருளையெல்லாம்
பகர்ந்தேனே பரியாச மல்லவுண்மை
பேரப்பா தேவியுட பூசைமார்க்கம்
பேரின்ப யோகமொடு ஞானமார்க்கம்
ஆரப்பா அஞ்சனமுந் தம்பனங்கள்
அட்டகர்ம மாடுகிற மார்க்கந்தானும்
நேரப்பா மறைப்பின்றி நூற்றுப்பத்தில்
நிலைபலிக்கச் சொன்னேன்சூத் திரந்தான்முற்றே. (112)

பலித்திடவே தாம்புரத்தின் சுத்தியேது
பண்பாக மூன்றுபலங் குகைக்குள்ளிட்டுப்
பொலித்திடவே அண்டத்தோல் தூளாயாட்டிப்
போட்டப்பா செம்பிடைக்குத் தூளைத்தூவிக்
கெலித்திடவே பொடிதூவி யுருக்கினுக்கால்
கேள்மகனே விராகனென்று வீரஞ்சேர்த்துச்
செலுத்திடவே அண்டத்தோர் செம்பிடைக்குச்
சேர்த்துமறு படியுந்தானுருக்கி வாங்கே. (113)

வாங்கியே வெள்ளியேழ் செம்புமூன்று
மாட்டியதை யுருக்கிடவே மாத்தேழாகும்
பாங்கியே தாம்பிரத்தின் தொழிலுக்கெல்லாம்
பண்பான வேதையதாம் பாருபாரு
ஏங்கியே திரியாதே இல்லத்தோடே
இருந்து கொண்டு காயசித்தி யிதமாச்செய்து
நாங்கென்ற சாதியிலே சஞ்சரித்து
நந்தியைப்போல் வாழ்பவர்க்கு முத்திமுற்றே. (114)

கருவூரார் குருநூல்சூஸ்திரம் ௱௰௪.

முற்றிற்று.

☞ கருவூரார் சாஸ்திரங்களில் அநேக இடங்களில் மறைபொருளாகவும், கருப்பொருளாகவும், கூறப்பட்டுள. அவைகளை வைத்திய பரிபாஷைக் கருப்பொருள் அகராதியில் பார்த்துக் கொள்க.

உ

குருவே துணை.

157-வது:

கொங்கணர் திருவாய்மலர்ந்தருளிய

# ஆதியந்த சூஸ்திரம் சச.

அகண்டபரி பூரணமா யாவுந்தானாய்
ஆதியந்த மில்லாவம் பரத்தைப்போற்றிப்
புகண்டவொளி யாய்மூல வன்னிக்குள்ளே
பொருட்சுடராய் நின்றவிநா யகன்றாள்போற்றி
இகண்டமுத முண்டுசிலம் பொலிக்குட்புக்கி
யிருந்துரைக்கும் பூரணமா யெங்குந்தானாய்த்
துகண்டுநின்ற மூலர்பதஞ் சிரமேற்கொண்டு
சொல்லுகிறேன் ஆதியந்தச் சுருக்கந்தானே. (1)

சுருக்கமா யறுகாண்டம் முன்பின்சொன்னேன்
சொல்லாகப் பெரியோர்கள் சொன்னநூலும்
திருக்கமறப் பார்த்துடனே யிப்படிநாம்சொன்னால்
செகத்திலுள்ளோர் சிவக்கியானந் தெளியாரென்று
பெருக்கமுட னறுகாண்டம் பிரிவாய்ச்சொன்னேன்
பெரியோர்க ளென்பிழையைப் பொறுத்துக்கொள்வார்
தருக்கமற முக்காண்டஞ் சுருக்கியானும்
சாற்றினே னைந்நூறுங் கற்பம்நூறே: (2)

நூறான அஞ்ஞூறுங் காண்டம்மூன்றும்
நுணுக்கமாய்ச் சொன்னேன்காப் பேழுலட்சம்
தாறான ஏழுலெட்சச் சுருக்கமூன்றும்
தனைக்குறுக்கிச் சூத்திரமாய் நாலுபத்துப்
பேறாக அஞ்சுபத்தும் நூறுக்குள்ளே
பேசினேன் கண்டுகொள்வாய் பெருமையாக
வேறாகச் சுருக்கியொன்றாய்ச் சொல்வேன்சித்தர்
விளங்கடியைப் பேணியிச்சாத் திரந்தான்பாரே. (3)

நூல்.

சாத்திரந்தா னறுகாண்டம் விரித்துச்சொன்னேன்
தனைக்குறுக்கி முக்காண்ட மைஞ்ஞூறுகும்
சூத்திரந்தான் மூன்றுரைத்தேன் கற்பம்நூறும்
தோசமில்லை மோசமில்லை சொன்னேன்கேளு
சேத்திரந்தான் நாற்பதுக்குள் வழலைமார்க்கம்
திறமாகப் பாடினார் சிலநூலெல்லாம்
கோத்திரந்தான் மூலகுரு சீஷவர்க்கம்
கூறினேன் கணபதியின் கடாட்சத்தாலே. (4)

கணபதியைத் தினம்போற்றி நந்திபோற்றி
கயிலாசச் சட்டைமுனி பதமேபோற்றி
கணபதிக்கு மேல்நின்ற ஐயர்போற்றி
கருணைமனோன் மணித்தாயின் கழலேபோற்றி
கணபதியும் ஆத்தாளுங் கூடும்போது
காசினியிற் பூரணத்தின் கலையைப்போற்றி
கணபதியை மூலத்தே யறிந்துபோற்றி
கனலெழுப்பக் குண்டலிக்குள் நந்தியாச்சே. (5)

ஆச்சப்பா நந்திசொல்ல ஞானமார்க்கம்
அறிவோடே கூடிநின்று மேற்கொண்டேறிப்
போச்சப்பா யென்னசொல்வேன் பூரணந்தான்
புருவமையத் தமர்திறந்து சிலம்பொலியைப்போற்றி
வாச்சப்பா போச்சுதென்று மிருந்தேன்நந்தி ✓
மதியிருந்த பட்டணத்துக் கப்பாற்சென்றேன்
பேச்சப்பா லகிரிகொண்டு திரும்பிவந்தேன்
பேரான பூரணத்திற் சிக்கினேனே. (6)

பூரணமாய் நின்றதொரு மனத்தின்வீதி
புகழான சூரியன்றன் பிரபைக்குள்ளாய்க்
காரணத்தின் வெளிபோலே ஒளியாய்நின்ற
கதிரொளியை வாசியினாற் கண்டுதேறு
சீரணமாய்ப் போகாமற் செப்பக்கேளு
திரமாகச் சொல்லுகிறேன் தீட்சைமார்க்கம்
பாரணத்தில் மூன்றுபத்தோ டிரண்டுஞ்சொன்னேன்
பரிவாக அறுபதுக்குட் பரிந்துகாணே. (7)

காணப்பா தீட்சைபெற்ற வழலைமார்க்கம்
கைமுறையாய்ச் சொல்லுகிறேன் கபடுநீக்கி
மூணப்பா யெண்ணெய்விட்டுக் கழற்றுமார்க்கம்
முறையாகச் சொன்னேன்கேள் நாற்பதுக்குள்
தோணப்பா சட்டைமுனி யுரைத்தசூத்ரம்
✓ சுந்தரனே பாடிவைத்தா ரிருபத்தஞ்சில்
நாணப்பா பதினெண்பேர் பாடலெல்லாம்
நலம்போலப் பாடினா ரிரசங்கண்டே. (8)

கண்டதொரு நூலெல்லாம் பார்த்துப்பார்த்துக்
கைமுறையை யறியாமற் சுடுவார்கோடி
விண்டதொரு முப்பூவு முடிக்கக்கேளு
விதமான முப்பூவின் பேரைக்கேளு
உண்டதொரு விந்துவென்றும் வட்டமென்றும்
உப்புறைந்த சமுத்திரத்தில் நாதமென்றும்
பண்டையிலே கயிலாச மூர்த்திசொன்ன
பார்முப்பூத் தீக்ஷைவிதி கிழித்திட்டாரே. (9)

கிழித்திட்டார் மூலரிரு நூறும்வாங்கிக்
கெடிதாகப் பின்பதைநான் தெண்டம்பண்ண
அழித்திட்டா ரடக்கமதாய்ப் பாடச்சொல்லி
அப்போது நாற்பதுசூத் திரத்தைச்சொன்னேன்
ஒழித்திட்டார் நவகோடி சித்தரெல்லாம்
ஓகோகோ கொங்கணன்யான் வெளியிற்போட்டேன்
பழித்திட்டா ரிப்படித்தான் வழலைமார்க்கம்
பரிபாஷை யில்லாமற் படித்திட்டாரே. (10)

படிப்பதிலே யிந்துவுடைப் பிறவிகேளு
பாரடிப்புக் கால்சுட்ட தென்றுமந்த
மடிப்பதிலே மண்ணென்றும் மாத்தானென்றும்
மாதினுவ ருதிரமென்றுஞ் சுரோணிதந்தான்
குடிப்பதிலே யிணங்கியுறக் கூட்டியென்றுங்
கொல்லாமற் கொல்லுகிற சத்தியென்றும்
வெடிப்பதிலே காரியென்றும் விசமியென்றும்
வேதாந்தம் வண்ணாத்தி கதிரின்மேலே. (11)

மேலாக ரவியினுட பேரேதென்னில்
விளம்புவேன் முடியென்றும் விண்தானென்றும்
பாலான வித்தென்றுஞ் சிவமென்றும்பேர்
படுபாதி வழலைபடைத் தளிக்கும்வண்ணன்
சேலான மதயானை கல்லுப்பென்றும்
செகசால மாடுகிற உப்பிதென்றும்
காலான காலென்றுஞ் சவுக்கனென்றும்
கட்டுகிற வித்தைவிதங் கரைகொள்ளாதே. (12)

கொள்ளாத காமியென்றும் குசவனென்றும்
குடிகெடுத்த உவச்சாரமென்றுமாகி
விள்ளாத கொள்ளியென்றும் வேதனென்றும்
வெட்டவெளி யாயிருந்த விமலனென்றும்
கள்ளாத வனல்செறிந்த உப்பிதென்றும்
கட்டாக வழலையென்றும் செய்தேனியண்ணெய்
ஒள்ளாத கருப்பனென்றும் ஐவனென்றும்
உவருப்பின் குலமிதுதான் கல்லுப்பாமே. (13)

கல்லுப்பின் வகைசொல்லக் கேளுகேளு
கருணைபெறு மகத்தீசர் கடல்நீருண்டே
வல்லதொரு சவர்கொளுப்புச் சமுத்ரமாச்சு
வளமான ஞானியுப்புச் சித்தர்போதம்
வெல்லுகின்ற நீருப்பு மண்ணேயென்றும்
மேலென்றும் வாயுவென்றும் ஆதியென்றும்
சொல்லுவேன் பாறையுப்பு விதனினோடு
சுத்தகெங்கை முதற்சுத்தி யொன்றுபாரே. (14)

ஒன்றான தீட்சைவிட்டு யூசிநீரில்
உத்தமனே ரவிமுகத்தில் உருவிப்பாயச்
சென்றாலே பஞ்சகெண தீட்சையாறு
தீட்சைவிட்டுந் தேசிபிலே திறந்துகாய்ச்சி
நன்றாயுப் பெடுக்கவெழு பிறப்புமாச்சு
நந்தியையும் அஷ்டகர்மந் தணக்கும்பிட்டு
என்றநவக் கிரகத்தாற் பாண்டத்தூரில்
இசைந்தவுப்புப் பிடரியிலே யிருக்கும்வாங்கே. (15)

வாங்கியவுப் பெடுத்துதச தீட்சைக்குள்ளே
வளமான விந்துவுட நாதம்நீரும்
ஓங்கியதோ ரேகதசம் அதுநீர்சொல்வேன்
உற்றதொரு பாறையுப்புப் பலந்தானென்று
தாங்கியதோர் வெடியுப்புப் பலந்தானெட்டு
தனக்குபரி சீனமுமுப் பலமேகூட்டிக்
காங்கிசையா யிந்துப்புப் பலந்தானென்று
கடியதொரு சாரமொன்று கூடனென்றே (16)

ஒன்றான பலவிதம் அரைப்பைக்கேளு
உணர்வெருக்கம் பால்சேரை அண்டம்பத்து
நன்றாகத் சிறுநீராம் பத்துச்சேரை
நாலுக்கொன் றுய்நாலு சாமமாட்டு
சென்றுடி யோர்விருத்தம் சத்துப்போகும்
திரமாக ரவிமுகத்தில் பக்கங்காய
அன்றுட கம்மரைப்பாய் சாமமொன்று
அப்பனே பொடித்தூளா மதுதான்பாரே. (17)

பாருநீ யறுசரக்கைச் சொல்லார்சொல்லார்
பரிபாசை யூகமதாய் மறைத்துவைத்தார்
தேருநீ பனியில்வைக்கச் சலமதாகும்
செப்பார்கள் சத்திக்குள் ஏகதீட்சை
காருநீ சிவத்துக்கு நீரைச்சொன்னேன்
காட்டாத கருமறைப்புச் சொல்லக்கேளு
சாருநீ முதற்றீட்சை பூமிநாதம்
சமனாக நவச்சாரந் தாக்கியாட்டே (18)

ஆட்டையிலே நெட்டெழும்பு மடங்கவேதான்
அரைத்திடுவாய் நாற்சாமம் அண்டநீரால்
வாட்டையிலே தினமொன்று சாமமொன்று
வாகாகப் பொடித்தூளாம் பக்கமொன்றிற்
கேட்டையிலே பனியில்வைக்க நீரதாகும்
கெடியாக ரவிமுகத்தி லிருந்துவற்றிக்
கோட்டையிலே வடமுகத்தி லிருந்தசொக்க
குபேரனுடைத் தனமெல்லாங் கொள்ளையாச்சே. (19)

கொள்ளையிட்டான் வாதமெல்லாங் கூகூஐயோ
குபேரனென்ன கபிலையென்ன யிவர்க்கிடுண்டோ
தள்ளையென்பார் பிள்ளைகள்தாங் கோடாகோடி
தருவான யோகதச தீட்சையாச்சு
வெள்ளையென்ற பாறையுப்புப் பிறப்பேழானல்
வெள்ளமன்றி யூசியில்நீர் விருதாமொன்றில்
எள்ளளவுந் தப்பில்லா துரைத்தேனெட்டும்
எளிதல்ல தேசியிரு தயத்துநீரே. (20)

நீராலே நவமாச்சு தீட்சைமார்க்கம்
நெறியாகச் சாமமது பத்தேகண்டோம்
பாராதே முப்பூவு முடித்தாயானுற்
பாழாகும் வாதமெல்லாங் குளிகையில்லை
வாராது ஞானமங்கே மனம்பேயாகும்
வாயிலடை திருடருடன் மனம்செல்லாதே
ஏராதே பிணங்களுக்கு நேராயப்பா
யிசைந்தபழம் புளிகூட்டி யாட்டிடாயே. (21)

ஆட்டியே தீக்கொளுத்தி வெந்தசுண்ணம்
அஞ்சுதரங் காய்ச்சிவிட்ட உப்புச்சுண்ணம்
மாட்டியே புரியட்டம் பூவையர்க்கு
வளமான பூரணத்தின் நோட்டம்பாரு
காட்டியே கனிநாலுந் தினமேசேளு
கைமுறையில் வெண்கருவாஞ் சுக்கிலந்தான்
பாட்டிலே சொல்லார்கள் விந்துவாலே –
பகலவன்றன் முகத்திலரைத் திடுவர்தாமே. (22)

ஆமப்பா வில்லைசெய்து காயப்போடு
ஆறுதின மானபின்பு சூடனுக்கு
காமப்பா நித்தமொருக் காலேகுத்திக்
கட்டாகக் காத்தாட மூலைக்குள்ளே
தாமப்பா சூடுகொண்டு சூடன்சாகும்
தருவான தலைதெரிக்கப் பக்கந்தன்னில்
வேமப்பா நெறிகனியின் சாற்றினலே
விளம்பவே நாற்சாம மரைத்துக்கூட்டே. (23)

அரைத்ததனை வில்லைசெய்து காய்ந்தபின்பு
அஞ்சுசுண்ணக் குகைக்குளிதை வைத்துமூடி
நிரைத்ததொரு சுண்ணக்கல் நடுவேவைத்து
நேராக அஞ்செருவிற் புடத்தைப்போடு
பரைத்தாய்க்குங் கஞ்சனுக்கும் பூசைபண்ணு
பாங்காக ஆறினபின் னெடுத்துக்கொண்டு
விரைத்தலத்தாஞ் சுக்கிலத்தை யுண்டகூடன்
விளங்கிடவே நீருமொரு பலத்தைவாங்கே. (24)

வாங்குவா யிந்தவிடை பாறையுப்பு
வளமான சிவமப்பா கண்டிடைக்குத்
தாங்குவாய் நீமுலைப்பால் தன்னாலாட்டிச்
சார்வாக ரவிமுகத்திற் காய்ந்தபின்பு
பாங்குவா யாறுதின மானபின்பு
பகருவே னின்னமொரு பழிகொள்பிண்டம்
ஓங்குவாய் மின்னடியைக் கலசத்திட்டு
உற்பனமா யரன்மூடி யதன்மேல்வையே. (25)

வைத்ததின்மேல் மூந்தினமின் னடியைத்தானும்
வளமாகச் சில்லிட்டுச் சீலைசெய்து
நைத்ததொரு கசபுடமே தீர்ந்தபின்பு
நமியாலே அரைத்ததனை வில்லைசெய்து
மெய்த்திடவே யுலர்ந்தபின்பு வெளிப்புடத்தில்
வெண்மையதாம் நின்மலமாம் வெளுத்தபூவாம்
கைத்தகனி யமுரிபடி நாலுக்கொன்று
காட்டியெரி யுப்பாகும் ரவியில்வையே. (26)

ரவியிலே யுலர்ந்தவுப்பும் நற்பூவொன்றும்
நாட்டியதோர் கற்பூர மொன்றுங்கூட்டிச்
செவியிலே யிருந்ததொரு குருவுமொன்றுந்
திரமாக நால்மருந்துங் கழஞ்சுயேழும்
புவியிலே யிருந்தமான் புருஷன்வாழ்க்கைப்
புகழ்ச்சியில்லா புரைத்தேனைப் போதவாங்கித்
தவியிலே வீரமொரு கழஞ்சுகூட்டு
சணத்திலே நீராகும் படிதான்ரெண்டே. (27)

ரெண்டுபடி நீருட்சோ டசமாம்பூரம்
    சேராகப் பலம்நிறுத்தவ் விதம்போடு
கண்டதொரு நீருண்ண ரவியிற்போடு
    கலங்காதே திங்களொன்று காய்ந்தபின்பு
விண்டதொரு அஞ்சுசுண்ணக் குகையில்வைத்து
    மிதமாக மேல்மூடிச் சீலெசெய்து
பண்டையிலே கற்சுண்ணங் கீழ்மேலிட்டுப்
    பாங்காகச் சாமமொன்றுக் கெரித்திடாயே. (28)

எரித்திடவே நாற்பத்து முக்கோணத்தைத்
    இன்பமுறப் பூசைபண்ணு நந்திபூசை
பெருத்தசிதம் பாபூசை யீசன்பூசை
    பெலக்கவே கணபதிக்குப் பூசைபண்ணு
பொருத்திடவே பதினெட்டுச் சித்தருள்ளம்
    பூரிக்க மவுனத்தைத் தியானம்பண்ணு
தரித்திரம்போம் ஞானமுண்டாய்ச் சண்டாளம்போம்
    சாற்றினேன் முப்பூவின் வழலேதானே. (29)

தானென்ற வழலையிலே எண்ணெய்கூட்டிச்
    சவுக்காரஞ் செய்திடுவார் சித்தரெல்லாம்
ஊனென்ற எண்ணெய்தனைக் கழற்றிப்போட்ட
    ஊதியல்லோ சுண்ணமதா யெடுத்துக்கொண்டு
வானென்ற கடுங்கார மதின்மேலேற்றி
    மகத்தான வழலேதன்னைச் சுண்ணமாக்கி
ஏனென்ற குளிகைசெய்வா ருபாசந்தான்
    இதமாகச் சாரணையுந் திருவாரே. (30)

வாரமுப ரசமிரண்டு பத்தோடாரும்
    வளமாகச் சோதிதங்க மோடுசூதம்
வீரமுடன் கெந்தியுஞ்செந் தூரம்செய்து
    வெவ்வேறே தின்றிடுவீர் தேகசித்தி
சாரமுள்ள வழலேதொட்டார் கோடாகோடி
    சாஸ்திரமுஞ் சூஸ்திரமும் நிகண்டுஞ்செய்தார்
சோரவுமே சுண்ணமதாய்ப் பாடிச்சூத்ரம்
    சுட்டலேந்து கெடுகிறதாச் சூட்டினாரே. (31)

சூட்டியதோர் வழலைக்கு முறைசெய்யாமற்
சோம்பலா யணுவளவுந் தப்பிற்ருனல்
தாட்டிகமும் போராது சாரமில்லை
தாடிகளை வளர்த்திருக்குஞ் சடையர்போலாம்
ஏட்டிலே யெழுதிவைத்த பாடமெல்லாம்
இகத்திலே பொய்யாகு மென்மேற்ரோஷம்
சாட்டினுல் யானேது செய்வதப்பா
சலிப்பானுல் வாதமது தலைப்படாதே (32)

தலையோடே காலறிந்து முடிக்கவேணும்
தவருமல் ரவிமுகத்திற் காயவேணும்
மலையாதே தீட்சையெல்லாம் உறவும்வேணும்
வாசமிகுங் கற்பூரம் மருவவேணும்
கொலையானைச் சேர்ந்துவரும் பஞ்சபூதம்
கொடியதொரு புரியட்டம் பாழ்மூன்ரென்றும்
கலையான சோடசத்தை மறவாதேநீ
கடுங்காரச் செயநீரை மறந்திடாதே. (33)

மறவாதே கடுங்காரச் செயநீர்சொல்வேன்
மகத்தான அண்டமது நூறுவாங்கி
உறவாப்பீங் கானில்வெண் கருசேரைவாரு
உத்தமனே யெருக்கம்பால் சேரைவாரு
திறமான மாங்காய்ப்பால் சேரைவாரு
திருகுகள்ளி திரிக்கள்ளி சதுரக்கள்ளி
துறையான கொடிக்கள்ளி படர்ந்தகள்ளி
சுத்தகா ணுங்கள்ளிப் பாலோடாறே. (34)

ஆரான யிலைக்கள்ளி வெள்ளெருக்கு
அப்பனே எட்டுமொன்ருய்ச் சேரைவாரு
கூரான நாகவிஷம் இருவிராகன்
கொளுகொளுத்த சேங்கோட்டைத் தயிலங்காசு
வீரான தயிலமுடன் பாலேர்டெல்லாம்
வெண்கருவிற் சேர்த்துவிடு மருந்துசொல்வேன்
பேரான சுத்தரசம் வீரம்பூரம்
பெருத்ததொரு மூதண்டச் சுண்ணமஞ்சே. (35)

அஞ்சோடு அஞ்சுசுண்ண பண்டச்சுண்ணம்
அதனோடு முதல்தீட்சை பூமிநாதம்
நஞ்சான கருநாவி கெவுரிவெள்ளை
நவச்சாரம் பொரிகாரம் சீனக்காரம்
துஞ்சுகின்ற சூடனொடு வளையலுப்பு
துறவான எவச்சாரம் பாறையுப்பு
மிஞ்சியதோர் வெடியுப்பு மதியினுப்பு
மேலான இந்துப்பு காதுநஞ்சே. (36)

காதிலுறை பிசினோடு கோழிக்காரம்
கவுதையுப்பு அமுரியுப்பு மலநீருப்பு
நீதிபெறும் புழுகினொடு யிருபத்தாறும்
நிசமாக வகைக்கிரண்டு காசுதூக்கு
மாதினுடை யொருவியுப்பு வேதியுப்பு
வாலையுப்பு உமுரியுப்பு மூலவுப்பு
சாதிநறுந் தேனிலுப்போ டாறுங்கேளு
தானுமிடு கழஞ்சுபழச் சாற்றிலாட்டே (37)

ஆட்டியதோர் முன்மருந்தோ டாகச்சேர்த்து
அப்பனே சுண்ணநீர் விட்டுஆட்டித்
தாட்டிகமாய்ச் சாமமொன்று அரைத்தபின்பு
சாதகவெண் காரப்பா வுள்ளேமத்தி
பூட்டியதோர் பூட்டெல்லா மிதுவேபூட்டு
போக்கன்றிக் கடுங்கார மரைத்துப்போட்டுக்
காட்டியதோர் கடுங்கார முள்ளபடிசொன்னேன்
கைகண்ட வாதமெல்லா மிதனாற்காணே. (38)

காணப்பா செயநீராம் நாலாநாளிற்
கடுங்காரி மகாகாரி யென்றநாமம்
தோணப்பா சுண்ணமெல்லா மிதனால்வேதை
தொடுகின்ற வித்தையெல்லா மிதுக்குள்ளாச்சு
பூணப்பா பதினெண்பேர் சொன்னநூலின்
போக்குப்பா ரிதனுடைய போக்கும்போரு
வீணப்பா சொல்லவில்லை நீருண்டாகில்
விஷமான குருவண்டி னரிசிபோடே (39)

போடப்பா நாறரிசி பொடித்துப்போடு
புகழான சுக்கிலந்துட் டிடைதான்வாரு
ஆடப்பா யிதுகொண்டே அண்டமெல்லம்
ஆமம்மா அண்டமொடு சொட்டால்தீரும்
சாடப்பா நவலோகங் கண்டால்தீரும்
சரக்கோடு உபரசங்க ளெல்லாம்தீரும்
பாடப்பா யெனிற் பனையி லோலையில்லை
பார்த்ததொரு நீராலே தொந்தமாமே. (40)

தொந்தமென்றாற் கரைகாணு தப்பாகேளு
தொடுகுறிபோல் வழலையின்மேற் றென்றிநின்று
அந்தமென்றே ஆதியென்றே ஆடப்போறேம்
ஆரகரா வாராலும் முடிவுகாணர்
இந்தவகைக் கடுங்காரம் யாருஞ்சொல்லார்
இதைவிட்டுக் கடுங்காரம் வெவ்வேறும்பார்
இந்தையிலே ஞானவொளி கூட்டினற்போற்
றிருமூல நாயனென்னை மெச்சிட்டாரே. (41)

மெச்சிட்டார் சட்டைமுனி நாயன்றானும்
மேலான பாகருமோ என்னைப்பெற்றார்
மெச்சிட்டார் மச்சமுனி கருவூராரும்
வெளியிலே போட்டாரே வாதமெல்லாம்
மெச்சிட்டார் கட்டியதோ ருப்பைக்கண்டு
விண்ணெழும்பும் குளிகைமணி யென்பாரையா
மெச்சிட்டார் சிவயோக ஞானமார்க்கம்
வேதாந்த சாத்திரத்தில் விளம்பினாரே. (42)

விளம்பாத சாத்திரத்தைப் பார்த்தாலேது
விடியுமட்டும் பொழுதுமுற்றம் படித்தாலேது
விளம்பாத வேதத்தி லுளதுசொல்லார்
வியாசர்மேற் குற்றமில்லை இவனுத்தாரம்
விளம்பாதே போனதென்ன உலகம்பேயாம்
மேதினியிற் சமுசார வாழ்க்கையில்லை
விளம்பாதே போனதுவும் மெத்தநன்று
விருதுபெற்ற சஞ்சீவி யிந்தநூலே. (43)

இந்தநூல் பாராட்டால் வாதமேது
எடுத்ததொரு கைமுறையிற் றவறெண்ணாது
இந்தநூல் பாராட்டால் முப்பூவேது
எழுமசபை கடப்பதற்குக் குளிகையேது
இந்தநூல் பாராட்டால் தீட்சையேது
என்மக்காள் ஞானமொடு அறிவங்கேது
இந்தநூல் நாற்பத்து நான்குஞ்சித்தர்க்
கியம்பினேன் சாஸ்திரத்துக் கிதுதான்முற்றே. (44)

கொங்கணர் ஆதியந்த சூஸ்திரம். சச.

முற்றிற்று.

மதுரை வடக்குமாசிவீதி ஸ்ரீ'பரப்பிர்ம பக்தராகிய ஆறுமுகஞ் சேர்வைகாரர் அவர்கள் ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குமரன்றுணை

158-வது:

கோங்கணர் திருவாய்மலர்ந்தருளிய

# வாதகற்பசூஸ்திரம் ௱உ௰

ஆதியா முதற்காண்டந் தன்னைத்தேர்ந்தே
அப்பனே நடுக்காண்டக் கருவையெல்லாம்
நீதியாம் வாதகற்ப சூஸ்திரம்போல்
நெறியாய்ந்தே யின்னூலின் சூக்ஷங்கண்டேன்
வாதியாஞ் சிவயோக னவனேசித்தன்
மகத்தான சித்திதரு மிந்நூலைத்தான்
சோதியாம் போகருட கடாட்சத்தாலே
சொல்லுகிறேன் விபரமதாய்த் தொகுத்துத்தானே. (1)

தானென்ற முப்பூவை நூல்கடோறும்
சவுக்கார வழலையென்று சித்தர்சொன்னார்
வேனென்ற கைபாகம் புடமெரிப்பு
விளங்கியதோர் கருவெல்லா மூடிப்போட்டார்
கோனென்ற பராபரத்தில் நிறைந்ததாய்பால்
குருவென்ற வகையென்ன தாயேயென்றேன்
பானென்ற ரவிகாந்தி பூமினுதம்
பாங்குனக்குச் சொல்லிவிட்டேன் பாரென்றாளே. (2)

பாரென்று சாகாத காலைநோக்கிப்
பண்பான வேகாத தலைகொண்டே டத்தி
சீரென்ற நடுவான புருவமய்யம்
செகசாலப் பூரணத்தில் நின்றுகொண்டு
காரென்று சொன்னகண பதியைப்போற்றக்
கருணையுண்டா மென்னுளுங் காட்சிமுத்தி
கூறென்று போகர்சொல்லச் செய்தமார்க்கம்
கூறினேன் விஞ்சைதனைக் கூறினேனே. (3)

கூறுகிறேன் திரிகோணம் நந்திபீடம்
　　கொளுந்தான பிரணவத்தால் மேலேகட்டி
மாறுகிறேன் ஹரிஓம்சண பதிவாவென்று
　　வழுத்திடுவாய் லெக்ஷமுரு நித்தம்பாரு
நூறுதர மாதார மாறும்பார்த்து
　　நூற்பெரிய வாதவித்தை யட்டகர்மம்
ஏறுகிறேன் மனஞ்சொக்கி அறிவுகூட
　　யென்மக்காள் பாசவினை யெல்லாம்போச்சே. (4)

முப்பூ

போச்சென்ற முப்பூவின் கருவைக்காண
　　புகலிப்போ சொல்லுகிறேன், மக்காள்நீங்கள்
ஆச்சென்ற உறப்பென்ன வென்பாராகில்
　　அவர்கையிலே வாதமில்லை யறிந்துகொள்ளு
நீச்சென்ற உப்பைவிட்டால் வாதவேலை
　　நிலைக்கரிது நிலைக்கரிது நிலைக்கவென்றால்
ஓச்சென்ற வழியின்னால் சொல்லவேணும்
　　உற்றபுவிதனில்விளைந்த உவர்தான்முப்பே. (5)

உப்பான பூநீற்றைச் சலத்திற்கொட்டி
　　ஒளிவான தெளிவிறுத்துப் பஞ்சகாச்சல்
கொப்பான வெடியுப்புப் பலந்தானுலு
　　கூட்டதிலே சீனம்ரெண்டு இந்துரெண்டு
ஒப்பான சத்தியெட்டு சோடசந்தான்
　　உத்தமனே கல்வத்தி விட்டுக்கொண்டு
செப்பான வெண்கருவி லெருக்கம்பால்வார்
　　சிறந்தபழச் சாறூட்டி அரைத்துப்போடே. (6)

போட்டரைக்கிற் சூடனொரு காசுபோடு
　　புகழான சரக்கெல்லாஞ் சேரவொன்றாய்
நீட்டரைக்கிற் சாமம்ரெண்டுக் கதிகம்வேண்டாம்
　　நிலையானவில்லைசெய்து கொண்டு மக்காள்
காட்டரைக்கில் ரவிதனிலே காயப்போடு
　　கனமான சுண்ணும்புக் குள்ளேவைத்து
ஆட்டரைக்கி லடுப்பேற்றி யெரிப்பாய்சாமம்
　　அத்தோடே வாங்கிமெள்ளப் புடத்தைப்போடே. (7)

புடமெடுத்து முப்பூவைப் பார்த்தால்மக்காள்
        புகழான தந்தம்போல் வெளுத்துக்காணும்
குடமெடுத்த கொங்கைமின்னாள் மாலின்தேவி
        குதிகொள்வா ளூன்முகத்தில் குறையொன்றில்லை
தடமெடுத்த தலையாரி யிதுவேசேரில்
        சரக்கான கள்ளரைத்தான் சண்ணுஞ்சண்ணும்
விடமெடுத்த சவுக்காரக் குருவிதாச்சு
        வெள்ளாட்டுக் கெதிர்ப்பட்ட வேங்கையாச்சே. (8)

வேங்கையென்ற முப்பூவின் பேர்தான்சொல்வேன்
        வெறித்தசிங்கம் பேரண்டம் வெள்ளைச்சாரை
தாங்கையென்ற சிவனாகம் பட்சிராசன்
        சரக்கென்ற செந்தூவுக்குக் காலன்காலன்
ஓங்கையென்ற உப்படங்க ஒடுங்குமெல்லாம்
        உரைக்கரிதாம் வெளியாகச் சொன்னேன்பாரு
பாங்கையொன்று கண்டவனே வாதஞானி
        பரிசான வழலையுப்பு குன்றதாமே. (9)

குன்றதுபோ லாகவென்றால் தொந்தித்தேறு
        கோடிமட்டுங் குறையாமற் றொந்தமேறும்
வென்றிதரும் கற்பூரம் பூமியுப்பு
        வேர்கீழும் பணர்மேலாய் விளங்கிற்றப்பா
பொன்றிடும்புண் உள்த்துடையிற் பெண்ணுங்காணுல்
        புகழாருங் கடைத்தெருவில் புண்காட்டாள்போல்
கன்றலில்லா முப்பூவும் நிசங்காண்மக்காள்
        கைவிட்டால் சீஷனுக்குள் தாழ்த்திநீரே (10)

தாழ்த்தியெந்த நாள்வருமோ மக்காள்கேளீர்
        சண்டாளச் சீஷனுக்கு உபதேசிக்கில்
வாழ்த்தியென்ற மனம்புண்ணும் கீர்த்திபோகும்
        வருமப்பா வெகுபாவ மனம்பேயாகும்
ஆழ்த்தியென்ற கோபத்தில் சபித்தாயானால்
        அடியோடே தவமெல்லா மழிந்துபோகும்
சூழ்த்தியென்ற நித்திரைபோல் வாயைமூடில்
        துன்பமென்று மெய்தாது சுகந்தான்காணே (11)

சுகமான சிஷன்வந்து அடுத்தானுனல்
சோதிப்பாய் பனிரெண்டு ஆண்டுமக்காள்
அகமில்லாத் தொழில்செய்தா லெல்லாம்போதி
அளிம்புசற்றே நடந்தாக்கா லகலத்தள்ளு
தகமான உப்பேது பாணுபாணு
சாதகமாய் மதியேது பூரம்பூரம்
உகமான மென்னசொல்வேன் பூரணமேஅய்யா
உயிர்பூர முடனுப்பு ஆடுமோடே. (12)

ஆட்டுகிறேன் மதியோடே துருசுசீனம்
அப்பனே மூன்றுசுன்ன மிடைக்குவீரம்
கூட்டவே ஒன்ருகச் சிவந்துபோகும்
குறையாமல் தங்கத்தில் பத்துக்கொன்று
ஊட்டுகிறேன் ரவியில்வைத்துப் புடத்தைப்போட
உத்தமனே பரிசுன்ன முயர்வுமெத்த
மூட்டுகிறேன் பரியோடே வீரமப்பா
முத்துப்போ விருந்ததுவும் பவளமாச்சே. (13)

பவளமென்று முத்தென்று நீலமென்றும்
பாடினதோர் நூலெல்லா மிதுக்கேபேரு
சவழமென்ற துருசுகண்டால் மூன்றுமாச்சு
சாதகமாய்த் துருசுவிட்டா லெல்லாம்போச்சு
கவளமென்ருல் வாய்திறக்கும் புரவியப்பர்
கடிவாள மென்ருக்கால் வாயைமூடும்
சவளமென்ருல் தடிக்காரன் அஞ்சினுற்போல்
சண்ணித்துத் துருசுஉப்பு ரெண்டும்பாரே. (14)

ரெண்டினமும் உப்புஉப்பு மக்காள்பாரு
நேர்பான வெடியுப்புப் பூமிநாதம்
ஒண்டினமாங் கல்லுப்பு கடலினுதம்
ஒடுங்கப்பி லொன்றுபிரு திவியிலொன்று
கண்டினமாம் ரெண்டறிந்தா லவனேவாதி
கைமுறையா லதைக்கட்ட விதைத்தான்கட்டும்
மண்டினமா யிதைக்கட்டி லதைத் தான்கட்டும்
மக்களே உப்பாலே உப்பைக்கட்டே. (15)

கட்டியதோர் வெடியுப்பைப் பூநீர்கட்டும்
கலந்துளபூ நீரைவெடி யுப்புக்கட்டும்
ஒட்டிவெடி யுப்புக்கா ரத்தைக்கட்டும்
உயர்கார மதுதுருசு முதலெல்லாந்தான்
தட்டினதோர் விராட்டியைப்போல் திருப்பிப்போட்டு
சண்ணியப்பா சரக்கெல்லாந் தனித்துக்கொல்லும்
மட்டினது வென்றுசொல்ல முடியாதப்பா
மகத்தான முப்பூவின் வளப்பந்தானே. (16

தானென்ற பூரணத்தில் மனஞ்சென்றேத்தித்
தற்பரா நந்தமென்ற அறிவைநோக்கி
வேனென்ற காலையுந்தா னிழுத்துவாங்கி
மென்மேலுஞ் சதாநிஷ்டை தனிலிருந்து
மானென்ற சிவகாமி பாதம்போற்றி
வழங்கியதோர் மெய்ஞ்ஞான அதீதங்கண்டு
கோனென்ற புருவத்தி னடுவேநிற்குங்
குறிப்பான அருள்தானே மேலதாமே. (17)

மேலான சீனத்தைத் தொட்டுஆட
மேருவுக்கு அரைவாசி யதிகமாத்து
கோலான கவரெல்லா முன்னேகாட்டில்
கோடான கோடிதுறை விரிந்துஆடும்
சேலான கண்ணுடைய சிவகாமித்தாய்
செப்பினுள் சீனத்தின் திரத்தையெல்லாம்
ஆலால முண்டஅரன் சீனவர்ணம்
அவருக்குப் புரியட்டம் வங்கமாச்சே. (18)

ஆச்சப்பா சீனமது சேர்ந்தமுப்பூ
அப்பனே அரிதாரம் வீரங்கூட்டி
ஓச்சப்பா வங்கத்திற் பூசிக்காய்ச்சி
உத்தமனே புடம்போட உயர்ந்தசுண்ணம்
வாச்சப்பா வாசனைக்குச் சூதஞ்சாகும்
மற்றதெல்லாங் காற்றடித்தால் மாண்டுபோகும்
வீச்சப்பா கவர்சங்கஞ் சொல்லமாட்டேன்
மென்மேலும் மென்மேலும் விசைமெத்தாச்சே. (19)

விசைமெத்த வங்கசுண்ணந் தொந்தங்கோடி
மேலான கவர்கோடி சங்கமாகும்
பசைமெத்த உடலுக்குப் பூதமைந்தும்
பாங்கான தொழில்வேறு செய்யும்பாரு
தசைமெத்த நரம்பெலும்பு உதிரம்வேறு
தான்கூடி முறைபலது தளம்பும்பாரு
அசைமெத்த தத்துவங்கள் பொறிபாயாமல்
அறிவொடுங்கி மேலேறித் திரியலாமே. (20)

திரியலாங் கண்டத்தி லேறியோடில்
தேசமென்ன அண்டமென்ன கைக்குள்ளாச்சு
திரியலாங் கூடுவிட்டுக் கூடுபாய்ந்து
சிவசிவா வென்றெழுத்தை மூலத்தூன்றி
திரியலாங் கண்டிப்போ வில்லேதேகம்
செகசால மத்தனையு மிதுக்குள்ளாச்சு
திரியலா மலைதோறு மெதிரேசித்தர்
சிவனேவா வென்பார்கள் சிறந்துகூடே. (21)

கூடப்பா தாளகத்தில் வங்கம்வீரம்
கொள்கியதை அஞ்சுவகைக் குகையிலூது
ஆடப்பா சொல்வதற்கு முடிவுகாணேன்
ஆட்டெல்லா முன்னூட்டுக் கதிகமாகும்
போடப்பா துருசியின்மேல் வீரங்கூட்டிப்
புகழாக அஞ்சுவகைக் குகையிலூதி
மூடப்பா மால்தேவி கிமேயாச்சு
மூதண்டத் துருசு அடி மேலுமாச்சே. (22)

ஆச்சப்பா துருசினுட போக்கைச்சொல்ல
அரியயற்கு முடியாது அடியேன்காணேன்
போச்சப்பா வித்துருசு பரியில்வீழ்ந்தால்
பொற்சுண்ணப் போக்கையந்தப் போதங்காணும்
வீச்சப்பா பின்காண்டந் தள்ளிவிட்டு
விளங்கியதோ ரடியெல்லாம் வெளியாய்ச்சொன்னேன்
மூச்சப்பா அத்திடத்துக் கொக்குமொக்கும்
முட்டியதோர் கடுவேகந் துருசுபாரே. (23)

பாரப்பா யெதினாலே வாதஆட்டு
பராபரமாந் திருசாலே சூதத்தாலே
பாரப்பா யெதினாலே தங்கத்தாலே
பறக்கிறதோர் குளிகையென்ன வங்கத்தாலே
பாரப்பா சத்தெல்லாங் காரத்தாலே
பருகியதோர் செயநீரோ சாரத்தாலே
பாரப்பா சுண்ணமெல்லாம் வீரத்தாலே
பருகிநின்ற குருவேது திருசுதானே. (24)

திருசுவிட்டால் சூதமது கட்டாதப்பா
துலங்கியதோ ரறுபத்து நாலுதானும்
உறுதியுற்று சாரம்விட்டால் ஒன்றுஞ்சாகா
ஒழுக்கமுறுந் திசையண்டத் துண்மைகேளு
விருதுபெறும் வீரம்விட்டா லொன்றும்நீறு
விளங்கியதோர் காரம்விட்டால் சத்துமாகா
தருகியதோர் தங்கம்விட்டால் வேதையாகா
சாதனங்காண் கண்டுகெண்டு சாதிப்பீரே. (25)

சாதிக்க யிதனாலும் நாலுவேதம்
தப்பாது தப்பாது தாய்தான்சொன்னாள்
வாதிக்குங் கருவிதுதான் வர்மமப்பா
மகத்தான துறைநாலும் வளமாய்ப்பாரு
வேதிக்கும் நவலோகங் கல்லுசெங்கல்
விளங்கியதோர் மண்மாமும் வெருவிப்பொன்னும்
ஆதிக்கு மனாதிக்கு மிதுதான்மூலம்
அம்மம்மா யென்னசொல்வே னறிந்துபாரே. (26)

அறிந்துநால் முகம்பாரு வாதசித்தி
அறியாமற் சுடாதேநீ தோசமெத்த
மறிந்துநின்று வாய்வாதங் கேட்டுச்சுட்டால்
மாண்டபின்பு நாய்ப்பிறப்பாய் மனிதன்போவான்
நெறிந்துநின்று மாயிபதம் நித்தம்பூசி
நினைவாலே ஆதாரம் நீட்டிப்பாரு
செறிந்துநின்ற வாதம்வந்து சித்தியாகும்
தேசிகனும் நன்னூலு மாகும்பாரே. (27)

பாடினதோர் சூஸ்திரத்தில் சித்தர்சொன்ன
பலனாலே யாராய்ந்து பார்த்தால்கிட்டும்
கூடினதோர் நந்திசொன்ன குறிநன்றாச்சு
குறையாத பூரணத்தின் குணமோ அய்யா
ஆடினதோ ரகண்டத்தில் கவடேயானால்
அரகரா ஆச்சரிய மப்பாகேளாய்
தேடினதோ ரின்னூலில் தேறுயானால்
சீயென்பார் சித்தரெல்லாம் செப்பினேனே. (28)

செப்பினதோர் கும்பமுனி பூரணத்தில்
திறமான மவுனமென்ற தேகசூக்ஷம்
செப்பினதோர் மந்திரந்தான் காணப்போமோ
திறந்துசொல்வேன் சிங்குசிவா ஐயென்றோது
செப்பினதோர் மந்திரங்கள் போலேயல்ல
சிவனோடு தாய்வந்து சிறந்தாட்கொள்ளும்
செப்பினதோர் சகலசங்க வித்தையெல்லாம்
சித்திக்குங் கோடான கோடியாமே. (29)

வங்கச்சுண்ணம்.

ஆமின்னந் துருசொன்று சொல்லக்கேளு
அரகரா யிதின்சுருக்கு யாருங்காணார்
வாமின்னம் வங்கத்தைத் தகடுபோட்டு
வளமாகக் கத்தரித்துப் பலமேயொன்று
வேமின்னம் வீரங்காற் பலமேபூசு
வேறல்ல சிருநீரால் விரவிப்பூசு
காமின்ன மரசுடைய பட்டைவாங்கிக்
கலக்கவிதைப் பரப்பியதை மேல்த்தோல்மூடே. (30)

மூடியந்த நாராலே சுத்திக்கட்டி
முழங்கவொரு சீலைமண்ணை முனையப்பண்ணி
கூடியந்தக் கனபுடமே போட்டாயானால்
குணமான நெல்ப்பொரிபோல் காணும்பாரு
ஊடியிந்த வங்கந்தான் சுண்ணமாச்சு
ஒருவருக்குஞ் சொல்லாதே ஊரல்போகும்
ஆடியந்த மேக்கிநின்ற வாதியர்கா
ளறிந்துகொள்ளுந் துருசுகொல்ல அதுவாம்பாரே. (31)

பாரந்தச் செம்பற்று வெள்ளையானால்
பணபேதி சணபேதி சத்தபேதி
வாரந்தத் தூபமொடு தீபபேதி
வகையான தெரிசனத்தில் பரிசபேதி
சேரிந்தப் பரிசனசந் தானபேதி
திகட்டாத குளிகையுமாம் திறமாய்ப்பாரு
ஆரிந்தத் தருசினுட கூத்தைக்காண்பார்
அரகரா யின்னூலி லறிந்துபாரே. (32)

அறிந்துநீ வாதத்தைப் பார்க்கவென்றால்
அப்பாகே ளுண்மையுனக் கறிவிப்பேன்யான்
பிறிந்தொன்றை யெடுத்தெடுத்துப் பார்க்கவேண்டாம்
பேரான துருசதிலே நுளைந்துபாரு
மறந்திந்தத் துருசுவிட்டால் வாதம்போச்சு
மகத்தான மனதுவிட்டால் ஞானம்போச்சு
கறந்துநின்ற சூதம்விட்டால் வர்ணம்போச்சு
கைமுறையால் தங்கம்விட்டால் புடமும்போச்சே. (33)

வேறு.

போச்சென்ற கருவை யெல்லாம் புகழ்பெற வுனக்குச் சொன்னேன்
காச்சென்ற பூணீரோடு கண்டந்தச் சரக்கு வெவ்வே
றாச்சென்ற சூக்ஷ மெல்லாம் அளைத்தளைத் தது வே செய்யில்
வாச்சென்ற வேதை சித்தி மனதுள்ளே மாட்டி வாங்கே. (34)

லிங்கக்கட்டு.

வாங்கிய லிங்கத் துக்கு மாத்திரந் துருசு சிங்கி
தாங்கிய கவசஞ் செய்து சமர்த்தாக வாட்டு வாட்டு
பாங்கிய கருப்பே யோடிப் பாருநீ யுருக்குப் போல
ஓங்கிய லிங்க சூதம் உறுதியாய்ச் சாரும் பாரே. (35)

பாருநீ யின்னூல் தன்னில் பலவினலா முணர்ந்து கொண்டு
பாருநீ மனதுக் கேற்ற பக்குவ மெல்லாந் தோணும்
பாருநீ போதந் தன்னைப் பளிச்சென்று யேறவோடும்
பாருநீ பாரு பாரு பார்த்துரை முத்தி யாமே. (36)

பாரிந்த லிங்கம் போலப் பருவமாய் வீரம் வாட்டுப்
பாரிந்த லிங்கம் போலப் பருவமாய்க் கெந்தி வாட்டு

பாரித்த லிங்கம் போலப் பாஷாண மெல்லாம் வரட்டு
பாரிந்தத் துருசு சிங்கி படுமுன்னே சூதஞ் சாமே. (37)

சாமது வொன்றோ டொன்று தனிச்சரக் கதனைக் கண்டு
போமது வெவ்வே றாகப் பூட்டிடில் கட்டுங் கட்டும்
வேமது காந்தி போல விளங்கிய உவருப் பாதி
நாமது வெளியாய்ச் சொன்னோம் நலமுற்ற வாறு கேளே. (38)

ஆறுகேள் துருசு கொண்டு மழகான வேதை யாடத்
தாறுகேள் திரிவங் கந்தான் தான்மூன்று விராகன் மூன்று
மாறுகேள் கரண்டிக் குள்ளே வாரதில் ரெண்டு சூதம்
பேறுகேள் வெள்ளைக் கண்டர் பெலமான ரெண்டும் போடே. ()

போட்டதைக் கிண்டிப் போடு பொடியாகு மெல்லா மப்பா
மாட்டதில் பூரங் கால்தான் வழலையா முவர்ப்பூக் கால்தான்
நீட்டதில் வீர மொன்று நேர்ந்தரை கருவை விட்டுப்
பூட்டதை வில்லை போலப் புகழாகப் புடத்தைப் போடே. (40)

புடந்தீர்ந்து கொண்ட பின்பு போடதில் சூதம் பாதி
அடந்தீர்ந்த சூதம் போல அப்பனே கெந்தி போடு
கடந்தீர்ந்த தென்று வாதக் கருவினால் வளையம் போடு
தடந்தீர்ந்த கருவா லாட்டித் தனிப்பட வில்லை கட்டே. (41)

கட்டிய வில்லை தன்னைக் களங்கறக் குகையில் வைத்து
ஒட்டிட புடத்தைப் போடு ஓகோகோ சிவந்து போகும்
அட்டிய விதற்குப் பேர்தான் ஆனந்த குருதா னப்பா
எட்டிய நிமிளை நாவில் பிதுஒன்று பூசு பூசே. (42)

பூசியே வாட்டி மெள்ளப் புகழாகப் புடத்தைப் போடு
ஆசிய நிமிளை தானும் அப்பனே சிவந்து போகும்
காசிய நிமிளை யொன்று கடுந்தங்கம் நாவில் பூசி
தேசியே புடத்தைப் போடச் சிவந்திடுந் தங்கம் பாரே. (43)

பாருநீ யகாரந் தொட்டுப் பகர்ந்திடும் உகார மிட்டு
சேருநீ ஒகார மிட்டுச் சிறந்ததில் மகார மிட்டு
காருநீ சத்தி யிட்டுக் கலந்திடுஞ் சூல மிட்டு
ஏருநீ சிங்கு வங்கு பேகஅச் சரமுள் ளிட்டே. (44)

உள்ளேதா னிருந்த சிந்தை ஓமென்று வெளியை நோக்கத்
தள்ளேதான் தூப தீபஞ் சாத்தினேன் சமர்த்து நன்று
நள்ளேதான் பூசை செய்யில் நாவது பேசு மோதான்
அள்ளேதா னண்டரண்டம் அடங்கலு நிறைந்தார் காணே. ()

காணிந்தத் தெய்வ மன்றிக் காசினி தனிலுண் டோசொல்
பூணிந்த மனதை விட்டால் போதமென் றறிவு செல்லா [ல்
தாணிந்த அருள்நோக் காட்டால் யாருக்கும் அருளுண்டோசொ
நாணிந்த அப்பைத் தொட்டால் நரைக்கிழஞ் சாகா தப்பா. ()

சாகிற சரக்கை யெல்லாம் சாத்திர யினத்தைக் கண்டு
போகிற லோகத் துள்ளே போக்கொடே கொடுத்துப் பாரு
வாகுற வர்ணங் காணும் மாற்றது ரெம்பக் காணும்
வேகிற பிணத்தைக் கிண்டி விறகொக்கப் போட்ட வாறே. (47)

ஆறுன போக்கில் நீங்கி ஆடிநீ திரிய வேண்டாம்
மாறுன சொல்லும் வேண்டாம் மந்திர வட்டம் வேண்டாம்
கூறுன பொய்யும் வேண்டாம் கொலைகளை வனுவும் வேண்டாம்
பேறுன தாயின் பாதம் பிடித்துநீ தொழிலைப் பாரே. (48)

தொழிலைநீ பார்க்கும் போது சூக்ஷங்கள் தப்பும் தப்பும்
தொழிலைநீ பார்க்கும் போது சூட்டிய கனலே யேறும்
தொழிலைநீ பார்க்கும் போது சொல்முறை மறதி யாகும்
தொழிலைநீ பார்க்கும் போது சூக்ஷமா மின்னால் பாரே. (49)

தங்கநீறு.

பாருநீ தங்கம் நீறப் பார்க்கிற வித்தை சொல்வேன்
தாருநீ கண்டர் சாரம் சமனுக அரைத்துக் கொண்டு
கோருநீ வீரன் மேலே கொளுகியே வாட்டு வாட்டு
தாருநீ சத்தாய் வீரந் தனிப்படக் கட்டுந் தானே. (50)

கட்டிய வீர மொன்று கடுந்தங்கம் நாலி லூட்டி
ஒட்டிய குகையில் வைக்க ஓகோகோ பொருமிச் சிந்தும்
மட்டிகாள் வாதம் பாரு வாய்வாதம் போடு போடு
கொட்டிய தங்க நீற்றைக் கூவென்றூர் பறக்கும் பாரே. (51)

பாருநீ யின்ன மொன்று பருவத்தைச் சொல்வேன் யானும்
தாருநீ யிருபத் தஞ்சிற் தனிமுப்பூ ஒன்றுய்க் கூட்டி

கோருநீ கருவா லாட்டிக் கொளுகிய அடைபோல் தட்டி
காருநீ ரவியில் வைத்துக் கடுக்கென உலரப் போடே. (52)

உலர்ந்தபின் வட்ட வோட்டில் உள்வைத்து ஓடு மூடி
அலர்ந்தபின் சந்து தோறும் அப்பனே சீலை செய்து
கலந்தபின் முளங்கால் மட்டும் கடியதோ ரெருவைப் போட்டு
அலர்ந்தபின் முப்பூச் சுண்ணம் அப்பனே அறைகி றேனே. (53)

அறைகிறேன் காரி ரெண்டு அப்பனே நாரி யொன்று
பறைகிறே னிணங்க ளென்று பருமாலின் தேவி யொன்று
நிறைகிறே னஞ்சு மஞ்சு நேராக விராகன் தூக்கித்
துறைகிறேன் குருவைப் போட்டுச் சுழலவெண் கருவா லாட்டே. (54)

ஆட்டியே வெள்ளை மேலே அப்பனே யிதுதான் பூசி
பூட்டியே வாட்டிச் சீலை புகழாக ஒன்று சுத்தி
நீட்டியே உப்புப் பூசி நிலைபெற ஊதிப் போடு
காட்டியே வெள்ளை யுள்ளே கலங்காதே சுண்ணம் வாங்கே; (55)

வாங்கியே சூக்ஷங் கேளு மகத்தான துருசு சிங்கி
பாங்கிய வமுரி சிங்கி பருகிய கார சிங்கி
தாங்கிய கெந்தி சிங்கி சாரமாங் காரஞ் சிங்கி
வோங்கிய நாவி சிங்கி யுப்பொன்று மில்லைக் காணே; (56)

வங்கநீர்.

காணுநீ வங்கந் தானும் கலங்காதே சுண்ண மாக்க
வேணுநீ யோயத் தோடு வெள்ளாட்டு எருவுங் கூட்டு
தோணுநீ பொடியாய்ப் பண்ணி சுகமாக வைத்துக் கொண்டு
மாணநீ வங்கந் தன்னை வளமாகத் தகடு போடே. (57)

தகடது பெலக்க வேண்டாந் தளமாகத் தகடு போடு
நிகடது தாள கத்தை நீற்றுவாய் சுண்ணத் துள்ளே
வகடது வீரங் கூட்டி வார்த்தரை யண்ட நீரால்
பகடது வங்கத் துக்குப் பாங்காகப் பூசு பூசே. (58)

பூசியே ஓமத் தூளைப் புகழ்கோணிக் குள்ளே தூவி
யாசியே வங்க ரேக்கை யப்பனே பாத்தி வைத்து
வாசியே மேலே ஓமம் வளமாகப் போடு நன்றாய்
காசியே பாயைப் போலே கடுகவே சுருட்டிக் கட்டே. (59)

கட்டியே பதனமாகக் கடுகவே யெருவைப் போட்டு
வட்டியே தீயை மூட்டில் வாகாக நீறிப் போகும்
ஒட்டியே வங்கச் சுண்ணம் ஒடுக்கத்துக் கெல்லா மாகும்
மட்டிகாள் வாத மென்ற வாருதி யோட லாமே. (60)

ஓடலாங் கோடா கோடி யுற்றதோர் தொந்தங் கோடி
ஆடலாஞ் சரக்கைத் தொட்டு அப்பனே சங்கங் கோடி
தேடலாஞ் சொர்ன சித்தி சிவயோக கற்ப சித்தி
நாடலாங் கண்டு பாரு நவில்கிறேன் நன்றாய்க் கேளு. (61)

கேளுநீ வெள்ளை யொன்று கெடிமாலின் தேவி யொன்று
தாளுநீ சூத மொன்று சங்குமாத் தார மொன்று
வாளுநீ சாரமொன்று வழங்கிய பூர மொன்று
ஆளுநீ களஞ்சி யாறும் அப்பனே தூக்கு தூக்கே. (62)

தூக்கியே யண்ட நீரால் சுகமாக அரைத்துச் சாமம்
தாக்கியே பழச்சார் குத்தி தனியரை வாலை யாகும்
வாக்கியே வாலை யோடே மாட்டியே கார சாரம்
தேக்கியே சமனாய் மூன்றும் சிறக்கவெண் கருவா லாட்டே. ()

ஆட்டியே நாகம் பத்தில் அப்பிடு மப்பா மூன்றும்
பூட்டியே புடத்தைப் போடு புகழாக உருக்கிப் பாரு
நீட்டியே கண்விட் டாடும் நிலைத்தது நாகக் கட்டு
கூட்டியே சமனாய்ச் சூதங் குறைபாமற் குளிகை பண்ணே. ()

பண்ணவே சூக்ஷம் பாரு பதினாறு மணியாய்க் கோர்த்து
நண்ணவே மூல மந்திரம் நாடோறு மேத்து வேத்து
உண்ணவே கெவுன வீதி யோடலாந் தகையு மில்லை
திண்ணமே நோய்கள் நாசம் சிறந்துடல் காந்தி காணே. (65)

காணவே மனதிற் பூசை கவடறச் செய்வா யானால்
பூணவே ஞானத் துள்ளே புக்கலாம் புக்க லாம்பார்
சோணவே யென்ன வென்று சோம்பியே விட்டா யானால்
ஆணவே வாத ஞானம் அடியோடே தகைந்து போமே. (66)

போகுமே மர்மம் விட்டால் பொலிவான வாதம் பொய்யாம்
வாகுமே யாட்டித் தப்பில் மலர்ந்ததே உலர்ந்து போகும்

வேகுமே புடங்கள் தப்பில் விரைந்தங்கே கட்டிச் சேரும்
பாகுமே யுருக்கத் தப்பில் பண்பான கிட்ட மாமே. (67)

கிட்டம்போ லூதிப்போட்டு கெடிநூலைப் பொய்யென் றூதே
திட்டம்போற் செய்வா யானால் சேரவும் பலிக்கு மப்பா
மட்டம்போ லாச்சு தென்பார் வளமான காவிக் கோடும்
இட்டம்போல் கண்ட மாத்து மியல்பாய்நான் சொல்லக் கேளே.

கேளுநீ நாலு மூன்று கெடியாக வர்னங் கண்டால்
தாளுநீ யீயம் போட்டுத் தாக்காதே யெல்லாம் போகும்
வேளுநீ தங்கங் கூட்டி விரைந்தங்கே புடத்தைப் போடு
ஆளுநீ தங்கத் தோடே அதின்களை யிறங்கும் பாரே. (69)

இறங்காமல் கடித்துக் கொண்டு யிருந்திடுஞ் சிலது பாரு
உறங்காமல் மகனே நீயும் ஊட்டியே தங்கஞ் சேரு [கும்.
திறங்காண மிறங்கும் பாரு திருட்டெல்லாம் வெளியாய்ப் போ
அறங்காண மட்ட மெல்லா மாமிந்தப் பருவங் காணே. (70)

பருவமாய்க் கன்னி தானும் பாங்காகப் பூத்தா ளானால்
நிருவமா யஞ்சா நாளில் நிருபனுங் கெச்ச ணித்தால்
தருவமா மலமே மிஞ்சத் தனியூமை யாகும் பிள்ளை
அருவமாஞ் சலமே மிஞ்ச அந்தக னாவான் காணே. (71)

காணவ னுதரத் துள்ளே கடுவன்னி மிஞ்சி னாக்கால்
பேணவள் கெர்ப்ப மெல்லாம் பெரும்பாடாச் சாய்த்துப்போடும்
தோணவன் வாயு வேறின் சுக்கில முருஞ்சிக் கொள்ளும்
பூணவள் பரமே மிஞ்சில் புகழிலா மலடி யாமே. (72)

ஆமிந்த வரிசை போல அப்பனே யேம கெற்பம்
போமிந்தப் பிருதி விப்பால் புடத்துக்குக் கடித்துக் கொள்ளும்
தாமிந்தச் சிலமே யேறில் தழுக்கென ஊற லேறும்
காமிந்த வன்னி யேறில் கண்டபொன் புடத்தில் போமே. (73)

போகுமே வாயு வேறில் புத்துப்போல் கருத்த தப்பா
வாகுமே வானே மிஞ்சில் வர்னங்க ளொன்று மில்லை
பாகுமே யிந்த மார்க்கம் பண்பாகப் பாரு பாரு
வாகுமே வயசு மாற்று வளமே ற்றங் கேளு கேளே. (74)

கேளுநீ யிடையில் மண்ணில் கெடியாகப் பூரித் தோடில்
வாளுநீ பெண்ணே யாகும் வயசங்கே நூறு மாகும்
தோளுநீ சலத்தி லோடில் சுகமாக வெண்ப தாகும்
காளுநீ தீயி லோடில் கன்னிக்கு மறுப தாமே. (75)

ஆமிந்த வாய்வி லோடில் அடங்கிற்று நாற்ப தப்பா
தாமிந்த விண்ணே யோடில் சமைந்தது யிருப தாகும்
ஓமிந்தப் பஞ்ச பூத ஒடுக்கத்தில் கெற்ப மானல்
கோமிந்தக் குழந்தை சாவு கோடான கோடி தானே. (76)

தானென்ற பூத மொன்றில் தனியஞ்சு மாகுங் காலம்
வேனென்ற கடிகை தன்னை விளங்கவே பிரித்துப் பாரு
வானென்ற கடிகைக் குள்ளே வயசெல்லாம் வெளிய தாகும்
ஆனென்ற வந்த மைய மாதிரிற் பிரிக்கச் சொல்லே. (77)

பிரிக்கையில் வயசு மர்மம் பேருக வெளியாய்ப் போகும்
மரிக்கபின் கலைக்கே யானல் மார்க்கந்தான் முன்போ லப்பா
தரிக்கத்தான் கண்டு காரு சாதக மிதுதா னப்பா
நெரிக்கத்தான் பிறந்த நாளை நேரென்பார் மூடர் தானே. (78)

நேரான கெர்ப்ப மெல்லாம் நிலையாகச் சொன்னே னப்பா
காரான யேம கெர்ப்பங் கண்டந்தப் படியே சொன்னேன்
தாரான ரெண்டும் பாரு சாதக வாதி யானல்
வேரான பஞ்ச பூதம் விரைந்திட்ட சரக்கைப் பாரே. (79)

வேறு.

பாரேநீ யெவரேனுஞ் சீஷரென்று
பணித்தவுடன் அவன்முகத்தைப் பாருபாரு
தாரேநீ உறக்கமுற்றுத் தூங்கிடாதே
சற்றுமுகக் களையையறி சண்டியானல்
கோரேநீ யவன்முகத்தில் மூத்தாள்நிற்பாள்
கொளுவியதோர் வாதமெல்லாங் குப்பைமண்ணும்
போரேநீ யிளையாளே பூண்டாளானல்
பொற்கஞ்சம் போல்முகந்தான் பொருந்தும்பாரே. (80)

பொருந்துமென்ற கண்மவரை நாசிமீதில்
பூரணமாய் மேல்நோக்கி யதிவிற்கூடி

அருந்துமென்ற மதியமூர்த மூண்டுதேறி
    ஆறுதலங் கடந்தபொரு ளாயிபாதம்
வருந்துமென்ற மூலமந்தி ரத்தைஓது
    வாதவித்தை சகலசித்தும் வசமதாகும்
திருந்துமென்ற சிவயோக ஞானசித்தி
    சேரவே யறுகாசு துருசுதானே. (81)

வேறு.

அறுகாசு துருசு தொட்டு ஆடுவேன் இலிங்கம் பாரு
மறுகாத வீர மொன்று வளமான கார மொன்று
தறுகாத தருவே யொன்று தனிமூன்றும் விராகன் மூன்று
ஒறுகாத அண்ட நீருல் ஒக்கவே அரைத்துக் கொள்ளே. (82)

அரைத்திட்ட மருந்தை யப்பா அப்பொரு பல்லிங் கத்தில்
விரைத்திட்ட சாரம் ரெண்டு விளங்கிய துத்தம் ரெண்டு
நிரைத்திட்ட அரைப்பிட் டப்பு நிலையாக உலர்ந்த பின்பு
கரைத்திட்டபேரண் டத்தைக் கடுகவே பொடியாய்ப் பண்ணே.

பொடியிலே பத்துக் கொன்று போட்டிடு வீர மப்பா
பொடியிலே பத்துக் கொன்று போட்டிடு மாலின் தேவி
பொடியிலே கருவா மஞ்சள்க் கருவதைப் புகட்டி மாட்டிப்
பொடியெல்லா மரைத்து மேலே புகழாகக் கவசம் பண்ணே. ()

பண்ணியே சீலை சுற்றிப் பரிவாக மணலில் வைத்தே
தண்ணிய புடத்தைப் போடு சட்டென உறைக்க நீயும்
அண்ணியே யிலிங்கங் கட்ட அப்பனே வயிர மாகும்
ஒண்ணிய யிலிங்கத் துக்கு உற்பனம் நேர்சொல் வேனே. (85)

நேரவே வாத சித்தி நிலைக்கிற பழக்கஞ் சொல்வேன்
ஆரவே முப்பூச் சுண்ணம் அப்பனே முன்னே பண்ணு
தாரவே உப்புச் சுண்ணம் தனிப்பின்பு சுருக்காய்ப் பண்ணு
ஓரவே பூரச் சுண்ணம் ஒடுக்கத்தில் தீரு தீரே. (86)

தீர்ந்தபின் துருசு பண்ணு திரமான சூதம் பண்ணு
ஆர்ந்தபின் தங்கம் பண்ணு அப்பனே ஆறுங் கேளு
சார்ந்தநல் வாதத் துக்கு தனியிது ஆறு தாரம்
ஏர்ந்திந்த ஆறும் பார்த்தா ரெவரேனும் வாதி தாமே. (87)

வாதியாம் பேரே யானால் மவுனமூன் றெழுத்தைப் போற்று
ஆதியாம் வாத வித்தை அடங்கலுஞ் சித்தி யாகும்
சோதியாம் புருவ மையஞ் சுடரொளி தானுங் காணும்
நீதியாங் கவர்கள் கோடி நிலக்கிற தறைகிறேனே. (88)

வேறு.

அறைகிறேன் குருசொன்று சாரமொன்று
அரகரா அரைத்துடனே சலமுமாகும்
பறைகிறேன் வீரமிடு சிவப்பாய்நீறு
படுமுன்னே சூதமுதல் தாதுவெல்லாம்
நிறையிலே நீருகுஞ் சிலதுகட்டும்
நிலைபாத வேதையெல்லாம் நிலைத்துப்போகும்
உறையிலே உள்ளசிவன் மூலப்பாரு
ஒருசொல்லுந் தப்பாது ஒக்கவாமே. (89)

ஆமெனவும் ஊமெனவும் ரெண்டுங்கூடில்
அப்பனே ஓமெனவே யடங்கும்பாரு
சாமெனவுஞ் சொல்லாது மாலயநீக்கும்
சச்சிதா னந்தமென்ற தாயைப்போற்றி
வாமெனவே யுட்கொண்டு வேறுகாமல்
மவுனமுற்றுப் பூரணத்தில் வாசியேற்றித்
தோமெனவே அண்டபகி ரண்டமெல்லாம்
துடர்ந்தேறிக் குளிகையிட்டு உருகினேனே. (90)

வேறு.

உருகியே வீழும் போது ஓகோகோ மணியைக் கேட்டேன்
பருகியே பின்னுஞ் சென்றேன் பரவிய முரசுங் கேட்டேன்
தருகியே பின்னுஞ் சென்றேன் தனிச்சங்கு நாதங் கேட்டேன்
அருகியே பின்னுஞ் சென்றேன் அறைந்தபேரிகைபோ லாச்சே. (91)

ஆச்சௌனப் பின்னுஞ் சென்றேன் அப்பனே மேக நாதம்
வாச்சௌனப் பின்னுஞ் சென்றேன் மகத்தான யிடிபோல் நாதம்
ஓச்சென வதன்மேற் செல்ல ஓகோகோ சிலம்பி னோசை
மாச்சௌனச் செவிடு மாச்சு மயக்கிற்றுக் கண்கெட் டேனே. (92)

கண்கெட்டேன் செவியுங் கெட்டேன் கருதிய நினைவுங் கெட்டேன்
பண்கெட்டேன் குளிகை கெட்டேன் பறக்கிற விசையுங் கெட்டேன்
விண்கெட்டே னறிவுங் கெட்டேன் மேவுறு பொருளுங் காணேன்
தெண்கெட்டேன் சிலம்பி னோசை சேர்ந்திருக் குதல்கா ணேனே. ()

வேறு.

சேர்ந்தஅய முருக்கொரு வித்தைகேளு
திறத்திலயம் பலபநாலு கிழிபோல்ச்கட்டி
வார்ந்துணர்ந்த வாழைபுடைக் கிழங்குள்வைத்து
மறுகிழங்கு மண்போட்டு மூடிவைத்து
கூர்ந்துணர்ந்து பக்ஷமொன்று நிறைபின்பு
குறிபருவத் தெடுத்துவந்து பாங்காய்க்கேளு
ஏர்ந்துணர்ந்த யெரிகால னெண்ணெய்வார்த்தே
யிதம்பெறவே டக்ஷமொன்று யிருத்திப்பாரே. (94)

இருத்தியதோ ரரபொடியில் போடக்கேளு
இதமான வெண்கண்டர் சாரகாரம்
பொருத்தியதோர் புல்ப்போலா மணக்கின்வித்தும்
புகழ்பெரிய சவ்வீர மிளகுங்கூட்டி
அருத்தியதோர் தாளகமு மிலிங்கங்கூட்டி
ஆகயெட்டு விராகனெட்டும் அயத்திற்கூட்டி
வருத்தியதோர் குகையிலிட்டு மாட்டியூது
மணிபோல நிற்குமதை யறிந்துபாரே. (95)

அறிந்தறியா திருந்தோர்க்கு மறியசொல்வேன்
அரகரா வின்னூல்போ லாருஞ்சொல்லார்
பிறிந்தினமூங் கட்டினசெந் தூரம்பாரு
பேராக வர்ணமுண்டாம் புடமும்பாரு
மறிந்தவஞ்சுங் காணுட்டால் வாதியல்ல
வழுவாதே தொழிலிலொன்று மயங்கிடாதே
யெறிந்தகல்லா காசம்தில்லா தப்பாவாத
மேதேது பார்த்தாலு மிறங்கிடாதே. (96)

இறங்கரிதே ஒருமாற்று யிறங்கினாலும்
யேறலா மிதைத்தொட்டு நூறுமட்டும்
பிறங்கயிலே வர்ணமெத்தக் கண்டாலென்ன
பேயரே நிலையாது பெருக்கவூறும்
அறங்கயிலைச் சிவன்பேரு வாதியென்றேன்
அவனிருக்கு மிடங்கண்டா லவனேவாதி
நிறங்கருதி ஆறதலம் நினைவாய்ப்பார்த்து
நிலைத்ததுண்டால் ரசவாதம் விளங்குங்காணே. (97)

நாகரசகெந்தி.

விளம்புகிற நாகரச கெந்தங்கேளு
வேதையிட யிதுசுழுவாம் வெளியாய்ச்சொல்வேன்
தளம்புகிற லிங்கரசம் பலமொன்றப்பா
தனக்கேற்க சுத்திசெய்த நாகங்கூட்டு
குளம்புகிற விதுரெண்டுக் கொக்கக்கெந்தி
கூட்டப்பா விராகமென்று துருசுதானும்
கிளம்புகிற காரமொடு சாரந்தானும்
கிளரவொவ்வார் விராகனிடை அதுக்குள்மாட்டே. (98)

மாட்டுநீ சவ்வீரம் விராகனஞ்சு
வளமாகக் கல்வத்தில் வளைந்தேஆட்டி
ஊட்டுநீ வயல்வேளைச் சாற்றைவார்த்தும்
ஒருபகல்தான் முழுதுமரைத் துலர்ந்தபின்பு
காட்டுநீ சரக்கொன்றைப் பழத்தைப்பாண்டங்
கடுகடைத்துப் பூப்புடத்தில் தயிலம்வாங்கி
நீட்டுநீ விட்டரைப்பா யெட்டுச்சாமம்
நிலையாக உருட்டியதை வைக்கக்கேளே. (99)

கேளுநீ பொன்னாலே சிமிழ்போற்பண்ணி
கெடியாக அரைத்தஉண்டை நடுவேவைத்து
தாளுநீ மேல்மூடிச் சீலைசெய்து
தனியான வாலுகைக்குள் மணலைப்போட்டு
மீளுநீ தீயெரிப்பாய் யெட்டுநாளும்
விளங்குமந்தப் பனிரெண்டு சாமந்தீயில்
மாளுநீ பராபரையுங் கணேசனோடு
வயிரவனைப் பூசித்து வேதைகாணே. (100)

அண்டசத்து.

வேதையிடு மண்டோடு சத்தாய்ப்போக
வெகுகடினம் வெகுகடினம் வெகுவாய்ச்சொல்வேன்
பேதையாந் துருசொன்று பூநீரொன்று
பேறான வீரமொன்று பேணிக்கூட்டி
பாதையெனும் வெங்காரம் நாலுபோட்டு
பரிந்திறுகுஞ் சாரமதிற் கால்தான்போட்டு
ஆதையிது வெல்லாந்தா னரைத்துக்கூட்டி
அதுக்குள்ஒரு காசிடைதான் ரெங்குபோடே. (101)

போட்டெல்லாங் குளப்பியொரு சிமிழில்வைத்துப்
பொரித்தெடுத்த அண்டத்தோல் தகட்டில்பூசி
கீட்டெல்லாங் குகைநிறைய வைத்தூதூது
நிலையாக உருகியது சத்தாய்நிற்கும்
ஆட்டெல்லா மண்டரண்டஞ் சுண்டைக்காய்போல்
அரகரா நவலோகங் குருவேயாகும்
மூட்டெல்லா முபரசங்கள் குருவேயாகும்
முறைமுறையாய் வேதையிடக் கோடிகாணே. (102)

வங்கங்கட்டு.

காணவினி வங்கமது கட்டுச்சொல்வேன்
கைவிட்ட சூஸ்திரந்தான் கருதிப்பாரு
தோணவொரு குகைக்குள்ளே வங்கமிட்டுச்
சுழன்றுருகிற் போடுகிற மருந்துகேளு
பேணவரும் பூநாகங் கொண்டுவந்து
பிரம்பாகக் காயவைத்துப் பிசறக்கேளு
ஆணவரும் வெங்காரம் நாலுதூக்கு
அதுக்குளரை சாரமிட்டு வீரங்காலே. (103)

காலான வீரமுடன் மூன்றுங்கூட்டிக்
கருவாலே விட்டரைத்து அதின்மேற்பூசி
கோலான பூநாகம் பொடித்துக்கொண்டு
கொடுத்துவா வங்கமங்கே யாடும்போது
சேலான சத்தையுண்டு வங்கங்கட்டும்
திறமாக ஒவ்வொன்றாய்ச் செலுத்தநன்று
மேலான பொருளிதுதான் பாருபாரு
வேதைக்குக் குவிந்தபடி விளம்பினேனே. (104)

குவிந்ததென்று சொன்னமொழி எளிதோசொல்லு
கூடுவது வெகுகடினம் கூடப்பார்நீ
அவிந்துதென்றால் விளக்கேற்ற நெருப்புவேணும்
அரகரா ஆச்சரிய மொன்றுகேளு
உவந்துநின்ற விளக்கினிற்கெந் தகத்தைச்சுண்ட
ஓடிமுன்போ லொளியாகும் வாறுபோல
தவிந்துநின்ற வாசியைக்கொண் டங்கேயூது
தப்பாது தீபவொளி தானும்பாரே. (105)

தானென்ற வஸ்துவுக்கு நிலப்பயிர்க்குச்
சந்திரன்போல் முகமலர்தான் விளங்கவேணும்
வானென்ற மேகம்போல் இலவம்வேணும்
மணியதரம் பவழம்போ லிருக்கவேணும்
தேனென்ற கஞ்சம்போல் கோக்கள்வேணும்
சிறந்தகுழை ரவிமதிபோ லிருக்கவேணும்
ஊனென்ற ஆரியமின் உற்றுப்பார்த்தால்
ஓகோபொன் தகடோசம் பழமோயென்னே. (106)

சம்பழம்போல்,மேனிகண்டால் வாசங்கேளு
சம்பங்கி யிருவாட்சி ரெண்டும்வீசும்
சம்பழம்போற் பிடிக்குளுக்கம் அடங்கவேணும்
தாயம்ரெண்டு மதயானை கைக்குநேராம்
உம்பளமாம் பால்மதுர மிட்டேஉண்ண
ஓகோகோ புரைத்தேனு மொழுகுமெத்த
கும்பமெனக் குயமிரண்டுங் கோடோகஞ்சக்
குடமருப்போ யிளநீரோ கூறிலேனே. (107)

கூறான வாரிரண்டில் கேசம்பார்க்கில்
கொளுகியதோர் பொற்கலத்துள் கீரைவித்தாம்
தாறான முல்லைப்பூப் போலாம்மூரல்
சார்ந்தநடை யன்னம்போற் றுவுவார்கேள்
வேறான மனிதரையும் உற்றுப்பாரார்
வெகுசாரி வெகுசாரி மோடிமோடி
ஆறான தொகைக்குள்ளே முதலாம்ஆதி
அம்மம்மா முதற்சுளைததா னறிந்துகொள்ளே. (108)

அறிந்துகொண்டே அவ்வினத்து மின்னைப்பார்த்து
அழைத்துவா பன்னிரண்டு பதினைந்துக்குள்
மறிந்துநின்ற தயிலமிட்டு நீரையாட்டி
மண்டலந்தான் மதுரத்தை மெத்தவூட்டி
பிறிந்துநின்ற சமற்பமா லுமியாய்ப்பண்ணு
பேரான அடைகாயை யன்பாய்நல்கு
கறிந்தகற்கண் ணங்காட்டு நத்தைநீரில்
கடுகிமுன்னீற் றியதில்கற் பூரம்போட்டே. (109)

போட்டெடுத்துப் பொற்சிமிழில் வைத்துக்கொண்டு
போடுங்கால் கொடியிலையிற் பூசிக்கையில்
நீட்டெடுக்கக் கொடுத்துவா நினைவாய்நீயும்
நேரிதற்குள் பூப்பானால் கலத்தில்வாங்கு
காட்டெடுத்துக் குருவிதற்குள் போடக்கேளு
கலங்காதே முப்பூவாஞ் சுண்ணம்பூரம்
ஊட்டடுக்க வீரமிடு மூன்றுங்கேளு
உத்தமனே முக்களஞ்சி மூன்றுங்காணே. (110

காணிந்த மூன்றையுந்தா னெலியினூட்ட
கண்ணிமைக்குள் சலமாகும் காணுகாணு
ஊணிந்தச் சலம்பட்டா லெல்லாஞ்சாகும்
உத்தமனே உற்பனந்தான் சொல்லக்கேளு
பூணிந்த நீரைப்பீங் கானில்வார்த்துப்
புசழான சீனமொரு பலந்தான்போடு
தோணிந்தப் பூனீருச் சுண்ணமொன்று
சுகமாகக் கற்பூர மொன்றுபோடே. (111)

போட்டந்தப் பீங்கானை மூடிவைத்துப்
பொருந்துதற்கு மார்க்கமினி புகலக்கேளு
நாட்டந்த மொசுமொசுக்கைச் சாறுநெய்யும்
நலம்பெறவே காய்ச்சியதைக் கலக்கிவாங்கி
ஊட்டந்தப் புடீர இலஞ்சி தன்னிற்பூசி
ஒருசேரை யுள்ளுக்குக் குடிக்கச்சொல்லு
தீட்டந்த வாழையிலை கீழேபோட்டுத்
திடமாகச் செப்புவண்ணம் பொருந்திப்பாரே. (112)

செப்பியதோ ரேந்தலென்றால் வகிரத்தூணு
திறமாக வெழுதவென்றால் முகட்டிலூணு
ஒப்பியதோர் சாய்தலென்றால் அகண்டத்தூணு
ஓகோகோ சரிதலென்றால் கவுளிலூணு
அப்பியதோர் குறிகளெல்லாங் கனிக்காம்பப்பா
அகிரியைநீ யிணைக்கிறதோர் நேரங்கேளு
தப்பியதோ ரேந்தலென்றால் விடியக்காலம்
தயவாக யெழுதலென்றால் முகட்டிற்கூடே. (113)

கூடுமே சாய்தலெலன்றால் மாலைநேரம்
கொளுவியது சரிதலென்று விருளிற்சங்கம்
நீடுமே யிதற்குள் ஒரு பூச்சுக்கேளு
நிமிஷத்திற் சுரதமெல்லாம் நெகிழுதற்கு
ஊடுமே தூதுவளை சங்கோடப்பா
உயர்ந்துநின்ற மொசுமொசுக்கை சுண்டையோடும்
ஆடுமே புளிநரலை யஞ்சுங்கேளு
அப்பனே பழச்சாறு சமனுய்வாங்கே. (114)

வாங்கியித்தப் பழச்சாற்றைப் பீங்கான்வார்த்து
வளம்பெறவே செவ்வலரிப் பூச்சாற்றோடும்
ஓங்குமந்த சுரதப்பால் காரத்தூட்டி
உயர்ந்துநின்ற துண்டிற்பால் காரத்தூட்டி
பாங்கினந்தக் காரமொரு காசுதூக்குப்
பரிவான புழுகுஒரு காசுதூக்கு
தேங்கியிந்த அதிமதுரங் கோஷ்டம்பூரம்
சிறப்பான கிறும்போடு சாதிக்காயே. (115)

காயோடு கஸ்தூரி சவ்வாதுகூட்டு
கடிகியதோர் வால்மிளகு யேலமொக்க
வேயோடு ஓலைப்பூத் தூழுங்தேனும்
வித்தகனே அண்டத்தோ லுயர்ந்தகுன்றி
வாயோடு பதிமூன்று மிடையேகேளு
வகைக்கொவ்வோர் காசிடைதான் மாட்டுமோட்டு
தேயோடு சூதமொரு காசுபோடு
திறத்தரைபூச் சாறுபழச் சாற்றால்தானே. (116)

தானென்ற விதற்குள்ளே யாவின்வெண்ணெய்
தான்மூன்று காசிடைதான் சாற்றில்தோய்த்து
மானென்ற சிமிழினுள்ளே யடைத்துக்கொண்டு
வளமாக லிலிங்கத்தில் மாட்டிப்பூசி
பானென்ற துடியுண்டு தானந்தட்டிப்
பரிவான நேரத்திற் பரிந்துசங்கம்
வானென்ற இரேதசொடு பெருக்கிரெண்டும்
வாழையிலே தனிற்பெருகும் வாங்கிக்கொள்ளே. (117)

வாங்கியிதை முன்வைத்த பெருக்கியோடே
மைந்தனே கூடவிட்டுச் சேர்த்துக்கிண்டி
பாங்கிலிதை ரவியிலவைக்கப் படிகம்போலாம்
பட்டவிடந் தொட்டவிட மெல்லாம்வெல்லும்
ஏங்கியிந்தக் குருக்கண்டால் சித்தர்சொல்லார்
யிதின்பேரே சோரகுரு விதற்குநாமம்
ஓங்கியிந்தக் குருவுண்டேல் வேதையாகும்
உரைக்கரிதாம் உத்தமனே உண்மையாமே. (118)

ஆவெனவும் முதற்சுதைதான் கிடையாவிட்டால்
அடுத்தரெண்டைக் கண்டுநீ யறிந்துபாரு
தாவெனவே யிதுமூன்று லாகும்வித்தை
சமுசயங்க ளொன்றுமில்லை தப்பாதொன்றும்
பாவெனவே நிலையறிந்தே மைந்தாமைந்தா
பாருலகிற் கிட்டுமிது தவத்தாலப்பா
கோவெனவும் வாயடங்கிற் கொள்ளைபோகும்
குறிகெட்ட வாதிகளே குறிப்பாய்ப்பாரீர். (119)

பாரப்பா காந்தமாம் பொடியினோடு
பரிவான மிருதார சிங்கிசெம்பு
சேரப்பா பலமொன்று கூடன்வீரம்
திறமான கெந்தியரி தாரம்லிங்கம்
கூறப்பா வெங்கார மாறுங்சேரு
குறிப்பாக ஒருகளஞ்சி வீதமொக்க
வீரப்பா பழச்சாறு விட்டேயாட்டி
வில்லைசெய்து உலர்ந்தபின்பு புடத்திற்போடே. (120)

போடப்பா குக்குடங்கா ணதிகம்வேண்டாம்
புகழ்பெரிய சஞ்சீவி செந்தூரந்தான்
ஆடப்பா கடுகளவு சகலநோய்க்கும்
அனுப்பானங் கண்டறிந்து மூட்டும்போது
சாடப்பா பிணியகலுந் தேகசித்தி
சரியான சிவயோகக் கற்பங்கற்பம்
ஓடப்பா சித்தியெல்லாஞ் செந்தூரத்தால்
உத்தமனே உண்மையிது உரைத்திட்டேனே. (121)

கொங்கணர் வாதகற்ப சூஸ்திரம் ௱௨௰.

முற்றிற்று.

உ

குமரகுருபரன்றுணை.

159-வது:

தத்துவராயர் திருவாய்மலர்ந்தருளிய

# ஞானசுகாதீதம் ௰௬.

வெண்பா.

நாடரிய முத்திதரு ஞானசுகா தீதத்தைப்
பாடியிடும் வெண்பா பதினாறும்—நீடமிகும்
அற்புதனே நிற்குணனே யத்திவத னத்துவெற்றிக்
கற்பகமே மெய்ப்பொருளே காப்பு.

நூறுகோடி நாளிருந்து நூல்கள்பல கற்றாலும்
ஆறுகோடி சித்தி யடைந்தாலும்—பேறில்லை
நித்தன் மலரடிக்கே நீக்கமற நின்றுமற்றை
அத்துவிதங் காணா தவர். (1)

ஒளியி லொளியை யொளியான வொன்றை
வெளியில் வெளியான மெய்யைத்—தெளியாமுன்
மண்ணிட்டு நீரிட்டு மாய்பவரே மெய்ஞ்ஞானக்
கண்ணிட்டுக் காணா தவர். (2)

உய்வா னுயிர்க்குயிரா யுன்னுணை யென்னுணை
மெய்யாக வொன்று விளம்பக்கேள்—பொய்யுள்ளோர்
காணரிய வுண்மைதனைக் காணிலுனை மாணாநீ
ஆணவம்பொய் நின்போத மாம். (3)

மாசற்ற மெய்ஞ்ஞானம் வந்தாலும் வந்ததற்பின்
ஆசற்ற மாணவோ ரற்புதங்கேள்—நேசத்தால்
நாட்டாதே யொன்றிரண்டாம் காடாதே நற்சிவத்தைச்
சூட்டாதே நீட்டாதே தூங்கு. (4)

கல்விக் கடலமுழுந்திக் காசினிக்கு ளோதிரிந்து
சொல்லித் தலைவெடித்துச் சோராதே—யெல்லையுளே
யில்லாமல் நின்று நிறைந்தபரி பூரணத்தைப்
புல்லாமற் புல்லிப் புணர். (5)

நின்போதங் காட்டாதே நிட்டையெலாம் ஞானத்தின்
தன்போத மென்றுநீ சாராதே—அன்பாக
வேண்டாதே யுள்ளுறவே மேவாதே யெப்போதும்
தூண்டாதே நீங்காதே தூங்கு. (6)

தூண்டி லவியுமது தோன்றுமே லன்னியமாம்
தூண்டாமற் றூண்டத் துலங்குமே—தூண்டாத
தொண்டருளம் நீங்காது சுத்தபரி பூரணமாக்
கொண்டருளும் ஞானக் கொழுந்து. (7)

விள்ள வரிதாகும் மேல்கீழா யோங்கி நிற்கும்
எள்ளவும் நின்போதத் தெட்டாதே—யுள்ளதுகாண்
ஆங்காரந் தான்கெட் டறிவழிந்தே யுண்மைதனில்
தூங்காமற் றூங்கச் சுகம். (8)

உன்னாதே யோடாதே யூன்றியொரு மந்திரத்தைப்
பன்னாதே சாத்திரங்கள் பாராதே—யென்னுணே
அப்பாலு மொப்புவமை யற்றசுகா தீதத்தில்
எப்போதுஞ் சும்மா விரு. (9)

எங்கெங்கும் பார்த்தாலு மெப்பாலு முள்ளுறவே
அங்கங்கும் பார்த்தாலு மப்படியே—மங்காத
மெய்யனே அன்பருள்ளம் மேவியுற வாழ்ந்திருக்கும்
ஐயனே நீயல்ல தார். (10)

தானும்பொய் மந்திரம்பொய் சாத்திரம்பொய் யும்பரும்பொய்
வானும்பொய் யிந்திரன்பொய் மாலயன்பொய்—தேனித்தும்
காதலித்துங் காக்ஷியுற்றுங் காணுப் பெருமைபெற்ற
ஏதுமற்ற மெய்ஞ்ஞானிக் கே. (11)

நேரறிவி னேரறிவாய் நீங்காத நின்மலமாய்
ஓரறிவுக் கோரறிவா யோங்கியே—நேரறிவில்

தட்டாமற் றட்டியென்றுந் தாக்காம லோரிரண்டுக்
கெட்டாம லொன்றிருந்த தே. (12)

சும்மா விருக்கவைத்த சூத்திரத்தைச் சாராதே
விம்மிக் கதறுவதும் வேலைகளுந்—தம்மறிவை
நீட்டிப் பிடித்திருக்கும் நிட்டைகளும் ஞானிகண்முன்
காட்டும் பரியாச கம். (13)

சடங்கற்றோஞ் சாத்திரங்க ளற்றோஞ் சமாதி
உடம்பற்றோ மூழ்வினையு மற்றோந்—திடம்பெற்றோம்
தில்லையுளே வாழுஞ் சிவனா ரருள்பாத
மெல்லையுளே யானோ மியாம். (14)

எல்லா வியாகுலமு மற்றோ மிடரற்றோம்
பொல்லாத வைம்புலனும் போக்கற்றோம்—நல்ல
குருவி னருள்கண்டு கும்பிடவும் பெற்றோம்
ஒருபொருளும் வேண்டோ முவந்து. (15)

உற்றுணர்ந்த தெல்லா முணர்வாகு முண்மைதனிற்
பெற்றிருப்ப தற்றவிடம் பேறாகும்—கற்றநூல்
பேசவினி வேண்டாம் பிரிவில்லை யத்துவிதம்
ஆசையற நின்றவிட மாம். (16)

தத்துவராயர் ஞானசுகாதீதம் ௰௬

முற்றிற்று.

சாப்ட்டூர் களஞ்சியம் கணபதிச்சாமியாரவர்கள் கொடுத்த ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவேதுணை.

160-வது:

ஏகநாதரென்ற

பிரம்மானந்தச்சித்தர் திருவாய்மலர்ந்தருளிய

# சமாதி சூஸ்திரம் ௰௨.

இடந்தருஞ் சித்தர் யெவரேநம் கூறினர்
அடந்தரும் பொருளை யாதி யறியார்
விடந்தனை யுண்டவர் மேவி யுரைத்தார்
படர்ந்தனை யுயிரிற் பகர்ந்த சமாதியே. (1)

சமாதியார் பூவை சமைத்திடு அக்கரு
உமாதித் திங்க ளுட்கரு வானது
இமாதி வருஷ மேகம்ப நாதன்
தமாதியாம் வடுவது தானது வேண்டாம். (2)

தானது வான சதாசிவங் கண்டால்
ஏனது சமூல மெடுத்துநீ வந்து
ஊனது வாகி உருப்படக் களித்துக்
கோனது துண்டங் குறிகி யெடுத்திடே. (3)

குறியப் பலம்பத்துக் கொண்டிடு யினிமை
நெரிபல நாத்தம் நேரரி தேவி
அரியப் பலமொவ் வோர்பல மிடுவதில்
வெரியப் பலமூன்று வெதிபலம் பத்தே. (4)

பத்தெனப் பலந்தான் பாருமின் னீரைக்
கொத்தென மூலங் கொடுமுடி யேகம்
வித்தெனப் பாண்டம் வெங்கல மதுவாம்
சித்தென அதுக்குட் டெளிபட வையே. (5)

வையேது மூடி வைக்குஞ் சமாதி
ஐயே அரைமட்டக் கலங்குழி வெட்டிச்
செய்யேது பற்பங் திரம்படப் பகுதி
உப்பேது மூடி ஒருமுழ மேத்தியே. (6)

ஏத்திய சிவஞ்சத்தி யியம்பரச் செய்யப்
போத்தியக் கண்டத்திற் பொருந்திவை வாசி
தோத்திய பூசை துணிகொள மண்டலம்
பாத்தியஞ் செய்யப் பதுங்கிடு மயனமே. (7)

மயனமோ ராண்டு மதித்ததுண் ணுங்கால்
மயன மூகர்தா னுமக்கினிப் பிறபையாம்
சயனமிடுங் தேகங் கரைசொல்லப் போகா
வயனம தாக வளர்கின்ற யுகமே. (8)

வளர்கின்ற யுகங்கள் மதித்திடப் போகா
அளர்கின்ற வாசி அறுகோடி ரவியாம்
தளர்கின்ற மேனி சதாசிவ மொக்கும்
பளர்கின்ற சித்தர் பராபரங் தானே. (9)

பராபர மான பரப்பிர்ம சொரூபம்
தராதல மேழுங் தானென அவனும்
கராகர மாகக் கட்டுண்ணும் வாசி
உராகரத் தொளிதா னுகாந்த வரையே. (10)

வரையெனத் தேகம் வச்சிர காயம்
உரையென அமுதம் உபரசங் கட்டும்
பரையென யீசன் பவுத்திர யோகியாம்
திரையெனை நீங்குங் தெகுட்டாது சித்தனே. (11)

சித்துப் பிறந்தது தசவாய்வு பத்தில்
முத்துப் பிறந்தது மோகினி அக்குளம்
வித்துப் பிறந்தது மேவின சுக்கிலம்
சத்தம் பிறந்தது தலைவனு மாமே. (12)

பிரமானந்தச்சித்தர் சமாதி சூஸ்திரம் ௰௨
முற்றிற்று.

உ

குருவேதுணை.

161-வது

ஏகநாதரென்ற

# பிரம்மானந்தச்சித்தர் பாடல் ௩௪.

காரண மான கணபதி சற்குரு கர்த்தனுங் காப்பாமே
நாரணன் நான்முகன் நல்ல குருமுனி நாதனுங் காப்பாமே (1)

முன்கலை யான முடிவான சோதியின் முற்றிலுந் தானறிந்தே
பின்கலை யான பிரமாண்ட சோதியைப் பேணித் துதிப்பேனே. (2)

புத்தியும் வித்தையுந் தந்தருள் பாதலைப் போத மயமாக்கி
சித்தியும் பத்தியும் கண்டருந்த நாதனைத் தேகல யத்துள்வைத்து. (3)

சித்தம் பலத்திலச் சிதம்பர வித்தையைத் தேறித் தெளிந்தேதான்
சத்தம் பிறந்திட வாசி யறிந்து தானும் நடந்தேனே. (4)

நத்து மூலகத்தோர் சித்தை யறிந்திட நல்ல ததியெனவே
தத்துவ மான வெழுத்தஞ்சு ஞாலே தான்வரை கீறினனே. (5)

அங்கி பொருந்தின வீட்டுக்கோ ரஞ்சு அஞ்சுக்கு மஞ்சாக
தங்கி யிருந்திடு மந்திர விஞ்சையைத் தான்கண்டு பேறும்பெற்றேன்.

அங்கங்கே மாறினல் அஷ்டகர் மத்தொழில் ஆடு மிதுதானும்
சங்கை யுடனே துகையைப் பெருக்கித் தான்வரை கீறிடுவாய். (7)

தானு யிருக்கும் பிர்மத்தின் றன்செயல் தன்னை யறிந்தாக்கால்
வானுகி நின்று மறைபொரு ளானதை வாய்கொண்டு சொல்லுவரோ;

அருவு முருவும் திருவும் பலவுமாய் ஆதிசி தம்பரத்தைக்
கருவுங் குருவுங் கண்டறிந் தோர்கள் கையா லெழுதுவரோ: (9)

தானந்த மான தத்துவங் கண்டோர்கள் தானேதா னெவ்வுயிர்க்கும்
ஆனந்த மாகி யறிவை யறிந்தவர் அச்சரந் தானறிவார். (10)

ஏக வெளியி லிருக்கின்ற சக்கரம் ஏது மறியார்கள்
சாகாக்கா லென்றும் வேகாத் தலையென்றும் தானே யறிவாரோ. (11)

வாதங்கள் செய்வது வேறொன்று மில்லை வாசி யறிந்தோர்க்கு
நாதம் பிறந்திடக் கண்டறிந் தோர்கள் நானென்று சொல்லுவரோ. ()

யோகமும் ஞான முகந்து அறிந்தோர்க ளுண்மை யறிவார்கள்
தாகமும் பசியுங் கோபமும் வந்தவர் தாமு மறிவாரோ. (13)

தானென்ற தத்துவ மாயை யறுத்தவர் தன்னை யறிந்தோர்கள்
ஊனென்ற ஊமை யெழுத்தை யறிந்தவர் உற்பனந் தானறிவார். (14)

சூக்ஷாதி சூக்ஷங்க ளென்று மௌனத்தின் சொல்லும் பொருளறிந்தால்
பேச்சோடே பேச்சாக பேசி யிருப்பவரைப் பெரியோர் தாமறிவார்()

பேசா திருந்த மௌனங்க ளென்பது பேசத் தெரிந்தோர்கள்
ஆசா னுரைத்த உபதேச மென்று அறிவுள்ளோர் தானறிவார். (16)

வாதமும் ஞானமும் ஒன்றென்று சொல்வது வையகத் தோரறிய
சூதகங் கெந்தியும் தாளகம் வங்கமும் சொல்லும்நா தங்களல்லோ. ()

ஆடுஞ் சரக்கு அறுபத்தி னாலும் அவரவர் தாயறிவார்
காடு மலையுஞ் செடியுஞ் சரக்கென்பர் காணாதார் காணுவரோ. (18)

தானே அறிவது சித்தி யிதுவென தத்துவந் தானறிந்தோர்
வீணே அலைந்து திரிந்துநம் வேதத்தை விரும்பித் தேடுவரோ. (19)

தங்க ளிடத்தி லிருக்கும் பொருள்தனைத் தாங்களே தானறிந்தால்
எங்கே யிருக்கு தெனச்சொல்லித் தேடி ஏங்கி யலைவாரோ. (20)

பண்டு பழுத்த கனியைப் பொசிக்கப் பறிக்கப் பொருளறிந்தால்
உண்டு சுகித்து உடம்பை வளர்த்து உறங்கித் திரிவாரோ. (21)

இத்தனை சித்தையுங் கண்டு தெளிந்தவர் ஏது மறியார்போல்
பித்தனைப் போலவே வஸ்துவைத் தேடிப் பேசா திருப்பாரே. (22)

தாங்காமல் விட்ட குறையாளர்க் கெய்திடும் தத்துவத் தைநினைக்க
பாங்கான ஐவரும் கட்டின வீட்டில் பரம சுகம்பெறுவார். (23)

ஓங்கார மேலோங்கும் பிரம சொரூபத்தின் உண்மை தனையறிந்தால்
நீங்காத செல்வம் நிலைபெற்ற மாதவம் நின்ற பொருளறிவார். (24)

எங்கெங்கு பார்த்தாலும் எங்குங்குருநாதன் இருப்பிடந்தானறிந்தோர்
பங்கமா யுள்ள பரம சுகத்தையே பார்த்துத் திரிவாரோ. (25)

அற்பமா யெண்ணியே கற்பங்கள் தேடி அலைவர் வெகுகோடி
சொற்பங்க ளல்ல சுருதி முடிவல்லோ சொன்னது கற்பங்கள்தான்.()

வாசம் பொருந்துஞ் சதுர கிரியின் மகத்துவங் கண்டோர்கள்
தேசங்கள் தோறுங் கற்பங்கள் தேடித் திரிவரோ தானறிந்தோர் (27)

கண்டதை விண்டிலர் அண்டர்க ளானாலும் கருத்தைச் சொல்லார்கள்
விண்டிலர் கண்டிலர் வேணது சொல்லுவர் வேத முடிவறியார் (28)

பாசம் பொருந்தும் கருநெல்லிவெண்சாரை பார்த்தோர்க்குத்தான்றெறியும்
பேசப் படாதென்று சித்தர்கள் சொல்லுவர் பேசத் தெரியார்போல்

நீத்தின செந்தூரம் நேரான பூரணம் நின்ற நிலையறிந்தால்
சாஸ்திர மேதுக்குத் தானறி யாருக்குச் சகலமும் வேணுமென்பார்.

வீட்டுக்குள் வாசலின் பூட்டுக்குள் பூட்டது வேணது உண்டுயிங்கே
பூட்டக்கமின்னதெனத்தெரிந்தோர்சாவி போட்டுத் திறந்திடுவார்.31)

கண்டபேர் கொண்டதை விண்டுதான் பேசுவர் காரியா காரியமாய்
கண்டு மறிந்து மறியாதார் போலவே காணாதார் போலிருப்பர். (32)

நித்திய பூசையும் நேமாநுஷ் டானமும் நேரான பூரணத்தைப்
புத்தியு டனறிந் தேயனு போகமாய் பூசைகள் செய்திடலாம். (33)

காலையு மாலையுங் கண்டது கொண்டு கற்பூர தீபமுடன்
மாலை மனோன்மணி தாய்பதம் போற்றி வணங்கியே வாழ்ந்திடலாம்.

பிரம்மானந்தச்சித்தர் பாடல் ௱௪

முற்றிற்று.

சாப்டூர் பச்சமலையப்பர் கோயில் பூசாரியும், சுந்தரமகாலிங்க சுவாமிகோயில் சாமியார் பெரியசாமிப்பூசாரி மகனுமான வைத்தியம் பெரியசாமிப் பூசாரியிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

பரமபதிதுணை.

162-வது:

சுந்தரானந்தர் திருவாய்மலர்ந்தருளிய

# குரு நூல் ாய.

ஆதியந்தம் மிகநிறைந்த சட்டைநாதர்க்
　　கன்பான சேயென்ற பிள்ளையாகிச்
சோதியந்தத் துள்ளிருக்குஞ் சுடரைப்போற்றிச்
　　சுந்தரமென் றெனக்குப்பே ரிட்டாரெங்கள்
நாதாந்தத் திருமூலர் புண்ணாக்கீசர்
　　நாதரகத் தீசர்பதம் போற்றியேதான்
மேதினியி லம்மையுட வாதம்பார்த்தேன்
　　வேதாந்தப் பரையாள்பூ வண்டங்காப்பாம். (1)

பூவண்ட மும்நிறைந்த பொருளைவாழ்த்திப்
　　பூமுதலாய் ரவிவன்னி யிருபான்தீட்சை
தேவண்ட பிண்டமொன்று பஞ்சமித்ராஞ்
　　சிறந்தாக்காற் கூத்தியல்லோ செலமாஞ்சித்தி
கோவண்ட மதிலேழு லட்சமாகக்
　　குருக்கினூர் சூதவித்தைக் கூட்டாய்க்கண்டு
மூவண்ட முங்குருவாய் முடிக்குஞ்சட்டை
　　முனியாகுங் கயிலாச மூர்த்திகாப்பாம். (2)

காப்பதற்குச் சித்தரிடஞ் சென்றோர்க்கெல்லாம்
　　கருணைபெறுஞ் சித்தியுண்டாம் கலையெல்லாந்தான்
கூப்பறிந்து யோகவிதி யறிவானல்லாற்
　　கோடான கோடிவித்தை வாதஞ்செய்வான்
நேப்பமுடன் பூரணத்தை நோக்கச்செய்வான்
　　நிருவாண தீட்சைவிதி கற்கவேணும்
ஆப்பனத்துக் கழிவில்லான் சித்தனாவான்
　　ஆகாசத் தனையறிந்தோன் வாதியாமே. (3)

ஆமப்பா அண்டத்தாற் கோடிவித்தை
        ஆடலாம் பிண்டத்தாற் கோடிவித்தை
வேமப்பா வெடிச்சத்தங் கண்டபோதே
        விசையான சந்திரனு லுப்பதாச்சு
போமப்பா காரத்தின் சாரவித்தைப்
        போக்கறிந்தா லவன்வாதி சித்தயோகி
நாமப்பா கைமுறையாய்ப் பாடிப்போட்டோம்
        நலமாக ஒருநூற்றுப் பத்துமுத்தே. (4)

பத்திமுத்தி யானதொரு மனமேவேணும்
        பதறாமல் வாதவித்தை செய்யவேணும்
சித்திபெற்று உடலமப்பா யிருக்கவேணும்
        செகமொன்று மில்லையென வெண்ணவேணும்
கத்தனுட பதம்பணிந்து யிருக்கவேணும்
        கற்பமுண்டு யோகத்தி லிருக்கவேணும்
சத்தியடி முடியறிந்து என்னூலோடு
        சட்டைமுனி நூலறிந்தோன் வாதியாமே. (5)

வாதியென்ற சுந்தரமென் றுண்மைசெய்தேன்
        மகத்தான வாதமெல்லா மாடச்சென்றேன்
பூதலத்தி லிருந்தோர்க்குப் பிழைக்கச்சொல்லி
        பூமியெல்லாம் பொன்னாக மருந்துண்டாக்கி
நீதிபெற வெளியில்விட்டேன் வாதம்பார்த்தோர்
        நிசமாகக் கண்டெடுக்க வழியுஞ்சொல்லி
பாதமடி பஞ்சமித்ரம் பாறையுப்பு
        பரிவாக எழுபிறப்பாய்ப் பணிந்துபோற்றே. (6)

பணிந்திந்தச் செலமகிமை யாருங்காணார்
        பாரிலே பதினெட்டு முழத்தின்கீழே
தணிந்திருந்து வாரவுப்புச் சம்புநாதம்
        சத்திகெங்கை தன்னுடனே சமாதிகொண்டு
துணிந்தபேர் குப்பெனவே சோதியாகிச்
        சுகமாக முப்பூவும் முடித்துக்கொண்டேன்
அணிந்தார்கள் கோகுலத்தி லுப்புக்காய்ச்சி
        அடங்காத கற்சுண்ண மானவாறே. (7)

வாறான களிதனக்குச் சாராயந்தான்
வாய்ப்பாக நாலுபடி களியொன்றாக
தேறவே கலக்கியொரு புதுப்பாண்டத்திற்
சிறக்கவிட்டு ரவிதனிலே காயவைத்துக்
கூறாக மூன்றுமுழை நாட்டிக்கொண்டு
கொடியதொரு களிப்பானை யுயரவேத்தி
மீறுகின்ற வாயிலிளஞ் சீலையொன்று
வேடுகட்டி ரவிதனிலே வைத்திடாயே. (8)

வைத்திருக்கப் புரந்தனிலே உப்புண்டாகும்
வாச்சுதப்பா வாதமடை திறந்துபோச்சு
நித்தியந்தான் பிரத்தியிலே வாரவுப்பை
நிசமாகக் கத்திகொண்டு வழித்துவாங்கி
சுத்தியதாம் காரோட்டில் வைத்திருந்தாற்
சுகமான வெள்ளையுப்பு ரவிகண்டேதான்
சித்தரெல்லாம் மெச்சுதற்கு யிதற்குக்காரம்
சேர்ப்பதற்கு வகைவிபரஞ் செப்பக்கேளே. (9)

கேளப்பா யேறியிலே வளர்ந்தபிண்டம்
கெடியான மாங்கிஷத்தோ டெடுத்துவந்து
வாளப்பா மாங்கிஷமஞ் சாடிசூடன்
வளமாகப் பொடித்துவைக்கத் தண்ணீராகும்
நீளப்பா நாழியிலே நாழியுப்பு
நிறையவே வெடியுப்பு யெட்டிலொன்றாய்
தூளப்பா சீனமது யெட்டிலொன்று
துடியாகப் போட்டதிலே கரைத்துப்போடே. (10)

போடப்பா கமலத்தாற் காய்ச்சிவாங்கிப்
புகழ்பெறவே உப்பெல்லாங் கட்டிப்போச்சு
தேடப்பா யிதுதனையே சுண்ணமாகச்
செப்புகிறேன் வெடியொன்று புளியோமுக்கால்
சூடப்பா யெரித்தபின்பு சுண்ணமாகும்
சுகமாக நவச்சாரங் கூட்டியாட்ட
நாடப்பா யிச்செலத்தில் வீரம்பூரம்
நஞ்சான பிசிறோடு உறமூந்தாக்கே. (11)

தாக்கப்பா சிலமென்ன ரத்தமாச்சு
　　சங்கைபெற்ற உப்பதனைக் கட்டிப்பாரு
போக்கப்பா பூரீரிற் புடத்தைப்போடு
　　புகழ்பெறவே உப்புசுண்ணங் குடோரமெத்த
காக்கப்பா வெந்துவிடுங் கடுகுபோலே
　　நாவில்மேல பட்டவுடன் னீறுய்த்தட்டும்
தூக்கப்பா ஒருபலந்தா னுப்புதன்னைச்
　　சுகமாக வொருகழஞ்சி வீரம்போடே.　　(12)

போடுவது சீனமொரு கழஞ்சியப்பா
　　பூராக நீருமொரு கழஞ்சிபோடு
தேடுவது புனுகுமொரு கழஞ்சிதாக்குத்
　　திறமாகப் பூரமொரு கழஞ்சிபோடு
ஆடுவது துருசியின்மே லேறிச்செல்லு
　　அப்பனே பூரீரிற் புடத்தைப்போடு
சூடுபெற்ற பசப்பில்லாச் சுண்ணமாகும்
　　துருசுவெள்ளைக் கொப்புமுண்டோ சுண்ணப்போக்கே. ()

சுண்ணமொடு வீரத்தை மத்தித்தேதான்
　　சுகமான தாளகத்திற் பூசிக்கொண்டு
எண்ணமுடன் சிப்பியினிற் பதனம்பண்ணி
　　எடுப்பாகப் பூரோற் சீலைசெய்து
சுண்ணமதிற் புடம்போடச் சுண்ணமாகும்
　　சுகமாகக் கருவங்க மிதினால்மீறும்
வெண்மையுள்ள வங்கசுண்ணம் நிமிளைக்கப்பி
　　வேதாந்தப் பூரோற் புடத்தைவேண்டே:　　(14)

வேண்டியதோர் சாரமப்பா இதினாற்சுண்ணம்
　　வெகுசுருக்கு துருசின்மே லப்பிப்போடு
மாண்டுதப்பா மாயவனு மிறந்துபோனான்
　　மதயானை யிதனாலே சுண்ணமாச்சு
பூண்டதொரு தங்கமப்பா இதனாற்சுண்ணம்
　　போக்கேது நீக்கேது கரையோகாணேன்
ஆண்டதொரு காரியச் சுண்ணங்கூட்டி
　　அப்பனே விரவியிட்டுச் சவ்வாதுகூட்டே.　　(15)

சவ்வாது பொரிகாரச் சுண்ணங்கூட்டிச்
சாதிலிங்கந் தன்னுடனே ஆட்டிக்கொண்டு
செவ்வையாய்ப் பூரணத்தின் ஜெலத்தாலாட்டித்
திறமாகச் செம்புதலா மொன்றுக்கேதான்
கவ்வவே களங்கமப்பா கழஞ்சிதாக்கு
கருணைபெற்ற மூன்னூறு மாத்துமாச்சு
இவ்வேதை போடாதே லோகவாதி
ஏகாந்தத் தனிச்சுண்ண வேதையாமே. (16)

ஆமப்பா நவலோகம் பழுக்கும்பத்தாய்
அப்பனே யிலாவிட்டால் மலையிலேறிப்
போமப்பா கற்பத்தைக் கொண்டுயேற்றிப்
புகழ்பெறவே சாகாம லிருந்துகொண்டு
நாமப்பா சிவனடியைப் போற்றிசெய்து
நாதாந்தச் சட்டைமுனி மகனேயென்று
ஏமப்பா வந்தோர்க ளெனக்குத்தம்பி
என்றேயா னழைத்திடுவேன் சித்தராமே. (17)

சித்தியுட னிருப்பதற்குக் கற்பங்கேளு
திறமாக அறுசுவையுங் கழற்றிப்போட்டு
மூத்திபெற வல்லாரை வருஷமொன்று
முடிந்தபின்பு கடுக்காயை மைபோற்செய்து
நித்தியந்தா னொருவருஷங் கொண்டபின்பு
நிசமாக வழலைதனை வாங்குவாங்கு
சத்தியமாய்க் காந்தைதனைப் பின்புகொள்ளு
சஞ்சீவி சிந்திகொள்ளு சாவுபோச்சே. (18)

சர்வென்ற பேச்சதுதா னொழிந்துபோனால்
தாரணியி லிருப்பானேன் மலையிலேறு
தேவென்ற தேவனப்பா சித்தனவான்
செகமெல்லா மிவ்வளவே யென்றுமாச்சு
ஆவென்றால் வாராது வாதமார்க்கம்
அப்பனே கற்பமுண்டால் வாதங்காணும்
பூவென்று லாயிரத்தெண் மலர்ப்பூவைத்தான்
போற்றியே தீமூட்டு யோகமாமே. (19)

யோகியென்று பேரானு லவனேசித்தன்
உத்தமனே வாதத்தில் வழலைமார்க்கம்
யோகியென்று லவனறிவான் மற்றோர்காணார்
உலகத்து வாதியெவன் காணப்போறான்
யோகியென்று லவனறிவான் வகாரமூன்றும்
உற்றதொரு அண்டபிண்டங் கண்டால்வாதி
யோகியென்று லடிமுடியைக் காணவேணும்
உரையறிய வென்தங்கை நூலைப்பாரே. (20)

பாரப்பா அகஸ்தியருங் கருவூராரும்
பார்ப்பதற்கு வெட்டவெளி யாகச்சொன்னார்
தேரப்பா நூலெல்லாங் கண்டுதேர்ந்தார்
சித்தனும் வாதியுமாம் யோகியாவான்
சீரப்பா அகஸ்தியர்நூ லொளிப்பதொன்று
செப்பினார் களிச்சுண்ணந் தேறுட்டாமல்
ஆரப்பா யெனைப்போலச் சொல்வாரில்லை
அப்பனே களியுப்பு ஆனவாறே. (21)

வாறான வுப்பல்லோ வழலையப்பா
மகத்தான வாதமெல்லா மிதனாலாச்சு
நீறான நீறெல்லா மிதனாலாச்சு
நிலைத்துநிற்கு மிடமெல்லா மிதனாலாச்சு
ஊறான ஊற்றெல்லா மிதனாலாச்சு
உலகமெல்லாம் பொன்னாவ திதனாலாச்சு
ஆறான குளங்களெல்லாம் சிப்பிப்போக்கு
ஆடியும்பின் மறைத்துவைத்தா ரலையவென்றே. (22)

உப்புக்கட்டு.

அலையாத சிப்பியிலே ரவியைப்போட்டு
ஆகாச விந்தாற்பூ ரணமாய்ப்போச்சு
நிலையாத சேதியுண்டே வழலைமார்க்கம்
நோரக வெடியுப்புச் செயநீர்தாக்கி
மலையாமற் கரியுப்பு அரைத்துக்கொண்டு
மயமுடனே களிக்குருவுங் கூட்டிக்கொண்டு
துலையாமற் பூநீராய்ப் புடத்தைப்போட்டு
சுகம்பெறவே கட்டுமேப்பா உப்புத்தானே. (23)

தானான உப்பதிலே சரியாய்ச்சூதம்
தாக்கியே சிப்பிநீர் விட்டேயாட்டி
ஈனமோ வென்றுசொல்லி யிருக்கவேண்டாம்
இச்சையுடன் வில்லைதட்டிப் பூநீரப்பிக்
கானாலவுங் காடையப்பா புடத்தால்நீறும்
கட்டான சூதமிதில் தொந்தமேறும்
வானாலவுஞ் சூதபற்பந் தருசுக்கப்பி
மகத்தான பூப்புடத்திற் சுண்ணமாமே. (24)

சுண்ணமென்றாற் காரியமாய்ச் சொல்லக்கேளு
துறையான தங்கமிட்டு ஆட்டிக்கொண்டு
எண்ணமுடன் ரவிமதியு மிரண்டிற்சேரு
இதமாகக் கழஞ்சிக்கு எட்டுமாச்சு
உண்ணவே கொடுத்தாலே முறையாமப்பா
உத்தமனே யிதுகொண்டு செலவுசெய்து
வண்ணமுள்ள மேற்றொழில்கள் பிறகுபாரு
வருமைவந்து மூடாமல் மனதிற்காணே. (25)

காணப்பா காயசித்தி வாதமெல்லாம்
கைமுறையாய்ச் சொல்லுகிறேன் கேளுகேளு
வீணப்பா காயசித்தி வாதமென்றும்
விருப்பமுடன் செய்யாட்டா லொன்றுமில்லை
நாணப்பா வில்லதிலே யேற்றினாற்றான்
நன்றாக ஐம்பதிலே தொடுக்கலாகும்
ஊணப்பா வல்லமையாய் வழலைமார்க்கம்
உற்பனமாய்ச் சொல்லுகிறேன் பூவுள்ளோர்க்கே. (26)

தும்பிடுகற்சுண்ணம்.

உள்ளபடி யேதென்றாற் சொல்லக்கேளு
உத்தமனே கும்பிடுகற் சுண்ணமார்க்கம்
விள்ளுகிறேன் வெடியுப்புப் பலமதொன்று
வேதாந்தப் பிண்டமது நாலுகூட்டித்
துள்ளுகிற சீனமொன்று பூநீரொன்று
துடியான உவச்சார நீராலாட்டி
வள்ளலே வில்லைதட்டி ரவிகண்டேதான்
மகத்தான பூநீராற் புடத்தைப்போடே. (27)

போடப்பா சனபுடமே தீர்ந்துபின்பு
 பொருந்தவே நவச்சாரம் நாலுக்கொன்ருய்
ஆடப்பா கல்வத்தில் நீரதாச்சு
 அப்பனே பீங்கானில் வழித்துவாங்கி
நாடப்பா பூரமிதிற் பொடித்துத்தூவு
 நல்லசெல மாச்சுதப்பா வழலைமார்க்கம்
தேடப்பா செலவுசெய்துக் கொள்ளச்சொன்னேன்
 செலத்துடனே இதையாடத் தெளிந்துபாரே. (28)

தெளிந்துகொண்டு பார்த்தாக்காற் செலவுசெய்யத்
 திறமாகப் பொன்னதிலே யுண்டாமப்பா
அழிந்தகுரு செய்யாதே மூன்றுமொன்ருய்
 ஆட்டினும் காணுமது பொய்யோயில்லை
மொழிந்தமொழி தப்பில்லை கருவங்கத்தை
 மூட்டோடே கட்டுதற்குப் பாறையுப்பைத்
தெளிந்தசெலத் தாலாட்டிப் பூவைக்கூட்டிச்
 சிறப்பாக அப்பியொரு புடத்தைப்போடே. (29)

புடமாறி யெடுத்தபின்பு காரங்கூட்டிப்
 புகலாம வுருக்கப்பா கண்விட்டாடும்
நடமாடுந் தங்கமப்பா சரியாய்த்தாக்க
 நாதாந்த வேதையுட போக்கீதப்பா
படபடத்துச் செய்யாதே தெளிந்துபாரு
 பாரப்பா துருசில்லா வேதையில்லை
திடமான ரசபற்பம் உப்புச்சுண்ணம்
 செம்பொருமா வெள்ளியிரு பதுக்குத்தானே. (30)

தானான வேதையிது அறியார்மூடர்
 தாதுருவாம் வாதத்துக் கடிதான்பாரு
ஊனைவிட்டா லொன்றுமில்லை பொருளோகாணர்
 உலகத்திற் பூவைவிட்டா லெல்லாம்போச்சு
சீனமுடன் வெடிச்சத்தங் காணுகில்
 சிதறிப்போம் வித்தையெல்லாந் திறமாய்ப்பாரு
சோனகந்தான் வைத்துவருஞ் சாரம்விட்டாற்
 சொல்லுகிறேன் செயநீரும் போச்சுபோச்சே. (31)

உருக்கினசரக்கு.

போச்சுப்போம் புரங்கிதனை மறந்துவிட்டால்
போக்கான சுண்ணத்தின் கருவும்போச்சு
வாச்சுப்போம் புழுகோடு பூரஞ்சீனம்
வளங்குதற்குச் சுண்ணமிதிற் கருவுண்டாகும்
ஆச்சுப்போம் உருக்கினத்துக் காதியென்ன
அப்பனே சவ்வாது காரச்சுண்ணம்
மூச்சுப்போம் ரெங்குடனே யுருவியுப்பு
மூதண்டச் சித்திரத்தின் மூலந்தானே. (32)

தானான கல்லுமுத விரும்புதொட்டுச்
சாதகமா யுருக்குதற்கு வகையைக்கேளு
தேனுடனே உருக்குதொட்டி செம்புத்தொட்டி
திறமான வங்கமொடு கெவுரிவெள்ளை
மானான அரிதாரங் கருத்தக்குன்றி
வகைவிதந் தனித்தனியே யுருக்குவார்கள்
பூநீரு மிதற்கெல்லாங் கூட்டியாட்டப்
புகழான பருவதமு முருகிப்போமே. (33)

கருமூன்று விபரம்.

போமப்பா வழலையுட பிறவிகேளு
பொற்பிறவி யுண்டாகும் வகாரமூன்றும்
நாமப்பா ஒளிக்கவில்லை சொல்லிவிட்டோம்
நாதாக்க ளெல்லோரும் மறைத்துவைத்தார்
வேமப்பா அண்டமொன்று குடுகுடானை
வேறான பிண்டமொன்று கும்பிடானை
ஆமப்பா இதுக்கெல்லாங் குருவேயொன்று
ஆகாசப் பிறவியப்பா சத்தியாமே. (34)

சத்தியுட னிப்பேர்கள் மூன்றுபேர்கள்
தன்னுக்குள் மெய்த்தவர்கள் வேதியோர்கள்
புத்தியதா யொவ்வொன்றைக் கொண்டுஆட்டப்
பூலோக மேலோகங் கொள்ளாதப்பா
சித்திரமாய்ப் பித்ததனை யாடக்கேளு
செப்பார்கள் நாதாக்கள் செப்பாதெல்லாம்
முத்திரையாய்க் குருமுடித்து அண்டபிண்டம்
மூதண்ட மூலமுதற் சொல்லுவேனே. (35)

சொல்லுகிறேன் மூன்றுவகைக் கருவதாகத்
தொடுமுன்னே அண்டரண்டஞ் சுண்ணமாகச்
சொல்லுகிறேன் சித்தரெல்லா மிளைத்துயேங்கத்
துடியானே பட்டுவிழக் கருவுண்டாக்கிச்
சொல்லுகிறேன் பூநீரை யூசிநீரில்
துலங்கவே அஞ்சுதரங் காய்ச்சிப்பின்பு
சொல்லுகிறேன் வெடியுப்புக் கொப்பதாகத்
துடியாமற் கிடக்குமப்பா யிரவிதானே. (36)

இரவியென்ற உப்பதுதான் மஞ்சளுக்கு
எத்தனைதான் போட்டாலுஞ் சிவப்புக்காணேன்
அரனென்ற பேராகுங் கெங்கைதன்னில்
அறுபதுநா ழிகையிருக்கத் தெளிந்துபோகும்
உரமான காரோட்டில் வைத்திருக்க
உத்தமனே யிரவியது ரெண்டுதிங்கள்
திரமான வெள்ளையதாய்க் கட்டிப்போச்சு
சிவமதுதான் பூவடுக்க வாழுவாரே. (37)

வாழுகின்ற அகத்தீசர் கடல்தானேழும்
வாங்கினார் குண்டலியால் கீழேவிட்டார்
மீளுகின்ற செலமெல்லாங் கைப்புண்டாகி
மிகுந்திருந்த உப்பாச்சு சமுத்திரத்தில்
ஆளுகின்ற பருவதமங் கங்கேயுண்டாய்
அப்பனே அதன்மேலே உறைந்துகொண்டு
நாளுமொரு கரியுப்பாய்க் கட்டிப்போச்சு
நலமான பாரையுப்பு வயிரந்தானே. (38)

வயிரமின்னிக் கண்விட்டு மணிபோலாடும்
மகத்தான உப்பிதுதான் தீயிற்போட்டால்
உயிருண்டாற் போகாது கடுந்தீயானால்
ஓடிப்போங் கரியினுள்ளே உரிஞ்சிக்கொள்ளும்
தயிரியமா யிவ்வேதை யென்றன்தந்தை
தானுரைத்தார் நானுரைத்தேன் மற்றோர்சொல்ல
கயிலாசங் கொள்ளைபோ மென்றுசொல்லி
கபடநா டகசூஸ்திரங் கட்டினாரே. (39)

கட்டியதோர் நூலெல்லாந் தோணுதப்பா
கருவாகக் கண்டறிந்தோ னவனேவாதி
வெட்டியதோ ரிந்தவுப்புச் செலத்தினாலே
மீறவே காய்ச்சியபின் சத்தியாகும்
ஒட்டியதோர் முப்பூவு முடிக்கக்கேளு
ஊசிநீர் படிமுக்கால் முப்புமுக்கால்
திட்டமுடன் காய்ச்சியபின் தேசிநீரிற்
சிறக்கவே வத்தவைக்க உப்பதாச்சே. (40)

ஆச்சப்பா முப்பூவை யுப்பதாக்கி
ஆடுகின்ற வரிசையினி சொல்லக்கேளு
பேச்சப்பா வெள்வேலாம் பட்டையோடு
பேரான பனங்கள்ளுச் சுண்ணங்கூட்டிப்
போச்சப்பா அரைத்துவில்லை ரவியிற்போட்டு
போக்குடனே தயிலமது யிரக்கியேதான்
ஆச்சப்பா தயிலமது நாழிக்குள்ளே
அழகான நாழியுப்புக் கரைத்துப்போடே. (41)

கரைத்துரவி முகந்தனிலே யிருந்துதானால்
கைமுறையாய் உப்பாச்சு காரம்மெத்த
உரைத்ததொரு வீரமுடன் பூரஞ்சீனம்
உற்றதொரு புழுகுவகை வீதமொன்று
வரைக்கடங்கா முப்பூவும் பன்னிரண்டும்
மகத்தான வெடியுப்பு நீராலாட்டித்
துரைக்குருவாய் வில்லைதட்டி யுலர்ந்தபோது
துடியான பூநீறு சுண்ணத்தோடே. (42)

சுண்ணமுடன் ரேகித்து அரைத்துக்கொண்டு
துரைக்குருவி லப்பியொரு புடத்தைப்போடு
எண்ணமுள்ள வழலையப்பா இந்தச்சுண்ணம்
இதுக்குமிகக் காரமுண் டாக்கக்கேளு
வண்ணமுள்ள சிப்பிநத்தைச் சுண்ணமோடு
மகத்தான குக்குடத்தின் முட்டைச்சுண்ணம்
வெண்மையுள்ள சங்குநண்டின் சுண்ணமோடு
விளங்கும்பூச் சுண்ணமொடு சரியாய்த்தூக்கே. (43)

தூக்கியே வெண்கருவா லாட்டிக்கொண்டு
　　துடியான குகைபிடித்து வெயிலில்வைத்து
தாக்கியே யுலர்ந்தபின்பு வழலைச்சுண்ணம்
　　தளர்ந்தப்பிச் சுண்ணநீர் விட்டுஆட்டி
வாக்குடனே ஐங்குகையில் வைத்துஊத
　　மகத்தான காரமிட்ட சுண்ணமாச்சு
போக்கேது நீக்கேது கரையோகாணேன்
　　பொன்வெள்ளி யிரண்டுவித்தை யிதுக்குள்ளாச்சே. (44)

உள்ளாச்சு அண்டரண்ட சுண்ணமாகும்
　　உத்தமனே களவறிந்து முறையாய்ச்செய்ய
உஃளாச்சு வாதசித்தி ஒளிப்போயில்லை
　　உணர்வாக யென்னைப்போ லாருஞ்சொல்லார்
உள்ளாச்சு யிதுவப்பா சத்திமார்க்கம்
　　உரைக்கரிது வுரைத்தேனு னுலகோர்க்காக
உள்ளாச்சு வாதசித்தி காயசித்தி
　　உடனேயென் நூல்பார்த்தோன் வாதியாமே. (45)

அண்டக்கட்டு.

வாதியென்றாற் சொல்லுகிறே னண்ட.வித்தை
　　மகத்தான கோழிமுட்டைத் தோடுவாங்கி
நீதிபெறச் சவ்வுதனைத் தள்ளிப்போட்டு
　　நேசமுடன் ஊசிநீர் பூவுங்கூட்டிக்
கோதறவே காய்ச்சியபின் வெயிலுலர்த்திக்
　　கொண்டேதான் நாலுக்கொன் றாகத்தானே
ஆதிவெடி யுப்போடு சீனங்கூட்டி
　　அப்பனே வெடியுப்பு நீராலாட்டே. (46)

ஆட்டியே வில்லைசெய்து உலர்ந்தபின்பு
　　அப்பனே சுண்ணாம்பு நீருங்கூட்டி
ஆட்டியே சீலைசெய்து புடத்தைப்போடு
　　அண்டந்தா னடங்காத சுண்ணமாச்சு
மூட்டவே யுட்கருவின் செய்திகேளு
　　முழுவெள்ளைக் கருவெல்லா மொன்றில்வாங்கி
ஆட்டுமென்ன பேதிபழச் சாற்றாலாட்டி
　　அதிற்கலக்கி யேகாச்சர வுப்புமாச்சே. (47)

உப்பெடுத்துக் காட்டெருமைப் பாலிற்போடு
உத்தமனே செலமாகும் உசிதமாகும்
தப்பில்லா வெண்கருவி லிதுவொன்றாகத்
தாக்கப்பா வெண்கருத்தான் தண்ணீராச்சு
வெப்பெடுத்த செலமிறுத்துப் பூவைத்தூவி
விருதாகப் பீங்கானில் வைத்துக்கொண்டு
தப்பில்லா மஞ்சள்நிறக் கருவைக்கட்டச்
சாத்தினேன் பழச்சாத்தி லொன்றுவிட்டே. (48)

விட்டிடுவா யரைப்படிதான் மூட்டைரெண்டு
மீறுமஞ்சள் கட்டுதற்குக் களஞ்சிவிதம்
திட்டமுடன் வெடியுப்பு ரெண்டுசீனம்
திடமாக யிரண்டுபூ நீருங்கூட்டிச்
சட்டமுட னேழுநாள் வைத்துப்பின்பு
சாதகமாய் மஞ்சளப்பா கட்டிப்போச்சு
ஒட்டியதோர் சவ்வெல்லாம் பேந்துபோகும்
உண்மையாய் முட்டையோ டுருகும்பாரே. (49)

பாரப்பா உருகினதோர் முட்டையோடு
பரிவாக ரவியில்வைத்து உலர்ந்தபின்பு
நீரப்பா உண்டாகச் சாரமொன்று
நேசமுடன் பொடித்துப்பீங் கானில்வைக்க
நீரப்பா வுண்டாம்வெண் கருத்தண்ணீரை
நேராகச் சாரித்து நவச்சாரத்தை
பாரப்பா யிதையரைத்து ஓட்டில்மூடிப்
பதனமாய்ச் சிறுகவொரு புடத்தைப்போடே. (50)

போட்டதொரு நவச்சாரங் கட்டிப்போச்சு
புகழான மஞ்சளைத்தான் சரியாய்த்தூக்கி
நாட்டமாய்ப் பீங்கானிற் செலமதாச்சு
நல்லதோ ரண்டசுண்ணந் தன்னையாட்டு
மூட்டெடுத்த சாரமப்பா காரச்சுண்ணம்
மூதண்டங் கிளித்தாடு மண்டப்போக்கு
ஆட்டியபின் வில்லைதட்டி யுலர்ந்தபின்பு
அப்பனே சுண்ணாம்புச் சீலைசெய்யே. (51)

சீலைசெய்தே வுலர்ந்தபின்பு புடத்தைப்போடு
        திறமான சுண்ணமிது நாலுமாக
வேலைகொண்ட நவச்சார மொன்றதாக
        வீரமுட னுட்டையிலே செலமதாச்சு
வாலையென்ற நீரப்பா வொன்றில்வாங்கு
        மகத்தான பூரமிதிற் பொடித்துத்தூவு
ஆலமுண்ட கண்டரப்பா நீறிப்போவான்
        அடங்காத வித்தையிது அண்டந்தானே. (52)

தானென்ற துரிசுசுண்ணம் சீனச்சுண்ணம்
        சாதகமாய்ப் புழுகோடு வீரம்பூரம்
மானுலவு பூநீருங் கூட்டிக்கொண்டு
        மகத்தான தாளகத்துக் கப்பிக்கொண்டு
பானுலவு அஞ்சுசுண்ணக் குகையில்வைத்துப்
        பாரப்பா வூதையிலே சலவையாகும்
ஏனென்று பேசுமது சரக்கையெல்லாம்
        யியம்போற் சத்துண்டா யிளக்கும்பாரே. (53)

பாரப்பா யிக்குருவில் வங்கம்நீறும்
        படுபாவி காரீயம் கோடிவித்தை
ஆரப்பா வங்கத்தால் நிமிளைசாகும்
        அப்பனே நிமிளையினாற் கோடிவித்தை
சீரப்பா நிமிளையினாற் சாரஞ்சாகும்
        சிறந்திருக்குஞ் சாரத்தாற் கோடிவித்தை
ஆரப்பா யிதற்கீடு துருசுக்கப்பா
        அப்பனே பார்க்கையிலே சுண்ணமாமே. (54)

சுண்ணமிது ரசந்தன்னைப் பழியாய்க்கொல்லும்
        சூதபற்பந் தங்கத்தை வெளுக்கநீற்றும்
சுண்ணமிது வேதையப்பா தொந்தமேறும்
        துகையாகத் தனித்தனியே சுண்ணவேதை
எண்ணவிது முடியாது கோடிவித்தை
        எடுத்தமுறை தவறாமல் நன்றாய்ப்பாரு
உண்மையுடன் சொன்னேனான் கருவைவிட்டு
        ஒளிக்கவில்லை யறிந்துபா ருலகத்தோரே. (55)

உலகத்தோர் பிழைக்கவென்று நமியைச்சொன்னேன்
உள்நமியும் புறநமியு மறிந்துதானே
கலைகற்றே மனமிருந்து பார்த்தாயானாற்
கனகமெல்லாம் பொய்யாது காண்பார்பின்பு
அலையாது சீவனத்தைப் பண்ணிக்கொண்டு
ஆடப்பா வித்தையினி வாய்த்துகொண்டு
மலையாதே யென்னூலின் வகையைப்பார்த்தால்
வாதசித்தி காயசித்தி வருகும்பாரே. (56)

கருமலைப்பழம்

பாரப்பா யின்னமொரு செய்திகேளு
பண்பான கருமலையின் பழத்தைவாங்கி
நேரப்பா செந்தபுஷ்பம் வில்லையின்பூ
நெறியான உருவியுப்பு உருக்குத்தொட்டி
காரப்பா கருங்குன்றிப் பருப்புங்கூட்டிக்
கைமுறையாய்ப் பலத்துக்குக் கழஞ்சிவீதம்
வாரப்பா சிவனார்தன் வேம்பினோடே
வாலுளுவை வித்துடனே தயிலம்வாங்கே. (57)

வாங்கியிந்தத் தயிலத்தை விட்டுத்தானே
வகையாய்முன் சொன்னமருந் தெல்லாமாட்டி
ஓங்கியதோர் பாக்குப்போல் வில்லைதட்டி
ஒருநாள்தான் ரவிமுகத்தி லுலர்ந்தபின்பு
தாங்கியதோர் சிறுகலசந் தன்னில்வைத்துச்
சாதகமாய் மேல்மூடிச் சீலைசெய்து
ஆங்குலவுங் கலசத்திற் பூரீரப்பா
அணியணியாய்த் தூத்தியந்தத் தயிலம்வேண்டே. (58)

வேண்டியதோர் தயிலமது பீங்கானிற்றான்
வீற்றிருக்க விட்டெடுத்து வீரம்போட்டு
ஆண்டதொரு கற்பூரம் பொடித்துப்போடு
அரகரா தயிலமாம் பலத்திலொட்டு
பூண்டதொரு இரும்புதனில் தடவிப்போடு
புகழான காடையொரு புடத்திலப்பா
தாண்டவமே யாடுமப்பா பதினோர்மாற்று
சத்தியந்தான் சிவனாணை தப்பாவாறே. (59)

வாறான தயிலமது விரத்தப்பி
மாட்டயிலே மெழுகாகும் வெள்ளியப்பா
நூறான துருசைகயிலே யொன்றுமேபோடு
நொடிக்குமுன்னே பழுத்திடுங்காண் பதினெட்டாக
வீறான வீரதனின் மெழுகுதன்னை
வெடியுப்பி லப்பியே விளக்கில்வாட்டக்
கூறான மெழுகாகும் காரீயந்தான்
கொள்ளவே ஐம்பதிலே தாக்குவாயே. (60)

தாக்கியபின் பழுப்பென்ன வகையைக்கேளு
தாரணியிற் பதினொன்று வயதுப்பிள்ளை
போக்கிதுதான் தயிலமப்பா குருத்தான்வேண்டாம்
பூநீரு மாத்திரமே போதும்போதும்
ஆக்கமுடன் தயிலமங்கே யிறங்கும்போது
அப்பனே கணபதிக்குப் பூசைசெய்வாய்
சீக்கிரத்தி லிரங்குமப்பா சிங்கென்றாதில்
திறமாக மூலத்தைச் சேவிப்பாயே. (61)

செம்மலைப்பழம்.

சேவிப்பாய் ஓம்நமசி வாயவென்று
செப்புவாய் நூற்றெட்டு உருவதாகப்
பாவிப்பாய் தயிலமங்கே இறங்கும்பாரு
பராபரையின் வஸ்துவப்பா தயிலப்போக்கு
ஆவிப்பா இதுகடந்து பின்புகேளு
அப்பனே செம்மலையின் பழத்தைவாங்கி
தாவிப்பாய் கெந்தபஸ்பம் வில்லையின்பூச்
சாதகமாய்ச் சரிகூட்டி வீரந்தாக்கே. (62)

வீரமது நாலுக்கொன் றாகக்கூட்டி
விளக்குதற்குக் கருங்குன்றிப் பருப்பினோடே
வீரத்தி னிடைபோடு உருக்குத்தொட்டி
மேற்படிதான் வேம்பினுட தயிலத்தாட்டிச்
சேரப்பா முன்போலே தயிலம்வாங்கிச்
சிறந்திருக்கும் பீங்கானில் வைத்துக்கொண்டு
பாரப்பா செம்புதனிற் றடவிப்போடு
பார்க்குமுன்னே புடந்தனிலே பதினேழ்மாத்தே. (63)

மாத்தப்பா முறிப்பதற்கு வெள்ளிசேரு
வளமான பசும்பொன்னு யிருக்குமப்பா
கூத்தப்பா ஆடுதற்கு இதுவேகூத்து
கோடான கோடிவித்தை குருவில்லாமற்
பார்த்தப்பா ஆடலாங் குருவில்லாமற்
படுபாவி தயிலமது வீரத்தாட்டி
சாத்தப்பா வெள்ளியம் நூற்றுக்கேதான்
தனிவீர மொன்றிடவே வெள்ளியாச்சே. (64)

வெள்ளியது மாத்திருபத் தஞ்சுமாச்சு
வேறான பூநீரு பட்டாற்போதும்
துள்ளுமப்பா சரக்கெல்லாம் பூநீராலே
துடியடங்கிப் பட்டுவிடும் வேதையாகும்
விள்ளுகிறேன் தயிலமென்ற செய்திக்கெல்லாம்
வேறான பூநீரு போட்டாற்போதும்
கள்ளங்க ளில்லையப்பா பழத்தைக்கண்டோன்
கனவிலுந்தான் பேசானே கருவைத்தானே. (65)

அறுசுவையைக் கழற்றல்.

கருவான வகாரத்தில் மூன்றுமார்க்கம்
கைமுறையாய்ப் பாடிவிட்டேன் செகத்தோர்க்கெல்லாம்
குருவான கற்பமினி விள்ளுறேன்கேள்
கொண்டணைக்குங் குருவில்லை நூலைப்பாரு
தருவான வென்னூலி லொளிப்பில்லாமற்
சாற்றினேன் வாதமடை திறந்துபோகத்
திருவான கற்பம்நூற் றெட்டுக்கெல்லாம்
தேகத்தைச் சுத்திசெய்யுந் திறத்தைக்கேளே. (66)

துர்மலநிவர்த்தி.

கேளப்பா அறுசுவையைக் கழற்றுமார்க்கம்
கெடியாகக் கழற்றுவதின் வகையேதென்றால்
நாளப்பா கடுக்காய்வெண் காக்கணத்தின்
நயமான வேர்பட்டை அரைத்துக்கொண்டு
வாளப்பா வகைக்குவகை மூன்றுபுன்னை
வளமான காயளவு வீதங்கொண்டு
தேளப்பா சித்தண்டத் தெண்ணெய்வார்த்து
செப்பமுடன் காற்படியாய்ச் சென்றுகயாச்சே (67)

சுண்ணம் நிவர்த்தி.

காச்சப்பா மெழுகுபத மாய்ச்சிவக்கக்
கருதிப்பின் மூன்றுநாட் கொண்டுதேரு
போச்சப்பா தேகத்தின் மலஞ்சீதந்தான்
பொல்லாத சுண்ணத்தைக் கழற்றவேணும்
ஆச்சப்பா பச்சைமஞ்சள் சமூலத்தோடே
அளந்துசெல மெட்டொன்ற தாகக்காய்ச்சி
பாச்சப்பா பரணியிலே பதனமாகப்
பார்த்துமே கிஷாயமது பண்பாய்வாங்கே. (68)

வாங்கியிந்தச் செலம்படிதா னரைக்காலுக்குள்
வளமான எள்ளெண்ணெய் பாதிவிட்டு
ஓங்கவே யிரண்டொன்றாய் ரேகித்தேதான்
உத்தமனே அஞ்சுநாளிப் படியேகொள்ளு
காங்கிஷத்துள் ளகப்பட்ட சுண்ணத்தோடு
கருத்தான வெண்மையெல்லாங் கழன்றுபோகும்
பாங்குடனே எண்ணெய்யெல்லாங் கழற்றிப்போடப்
பகருவேன் சீயக்காய் விரையைப்போக்கே. (69)

எண்ணெய் நிவர்த்தி.

போக்குடனே சீயக்காய் பொடித்துக்கொண்டு
புதியதோ ரிலுப்பைபிலே நுவைத்துக்கொண்டு
தாக்குடனே தாளியிலே இடித்துக்கொண்டு
சாதகமாய் வகைக்கொன்று பிடியதொன்று
வாக்குடனே அமுரிபடி யிரண்டிற்போட்டு
வாய்ப்பாகக் காற்படியாய்க் காய்ச்சிக்கொண்டு
ஆக்கியதோர் பூநீரும் சீனச்சுண்ணம்
அப்பனே அரைக்கழஞ்சி வீதங்கொள்ளே. (70)

கொள்ளப்பா கூட்டிடுவாய் கணக்கதாகக்
கொண்டுவிடு யிப்படித்தான் மூன்றுநாளும்
விள்ளப்பா எண்ணெய்யென்ற பேச்சும்போச்சு
வெகுசுருக்குப் பூநீறு வழலைசேர்ந்தால்
தெள்ளப்பா உப்பதனைக் கழற்றிப்போடச்
செப்புவேன் தேகத்திற் பெலமும்போச்சு
உள்ளப்பா உள்ளபடி யுப்புப்போக
உத்தமனே கரிசலாஞ் சாறுவாங்கே. (71)

உப்பு நிவர்த்தி.

சாறுபடி காலப்பா அஞ்சுநாட்கொள்
சாதகமாய் மறுபொழுது பின்னுங்கேளு
மாறுபடி தானைவிழு திடித்துத்தண்ணீர்
வாய்ப்பாகப் படிகாலா யஞ்சுநாட்கொள்
ஏறுதற்கு ரெண்டுமொன்றாய்ச் சேகரித்து
ஏகமெல்லாந் துவாலையிடு மூன்றுநாள்தான்
ஊறியதோ ருப்பெல்லாங் கழன்றுபோச்சு
உத்தமனே ரசனையினிக் கழற்றுவாயே. (72)

ரசனை நிவர்த்தி.

களத்துகிற வரிசையப்பா யாருஞ்சொல்லார்
காரமிட்ட கள்ளோடு ஆவின்வெண்ணெய்
உளத்தியதோர் பருத்திவிரைப் பருப்புங்கூட்டி
உத்தமனே வகைக்கியொரு கழஞ்சியாகத்
தளத்துறவே சடுதியினிற் கொண்டாயாகிற்
சலமஞ்சள் தோடெல்லாஞ் சாடிப்போச்சு
புளத்திரதோர் புளியதனைத் தள்ளிப்போடப்
பொறுக்குமோ சடலமினி பொறுக்கமாட்டா. (73)

புளி நிவர்த்தி.

பொறுப்பான சேதியப்பா புளிமேற்பட்டை
பொருக்கதனை மேற்புரணி சீவிப்போட்டு
உறுக்கவே புடம்வெள்ளைப் பொறுக்குப்பற்பம்
உத்தமனே தெளிகாடிச் செலத்திலாட்டித்
தறுகாம லெழுநாட்காற் படிதண்ணீரிற்
சாதிப்பாய் படியரைக்கால் பற்பமாக
வெறுத்ததடா புளியெல்லா மெங்கேபோச்சு
மேனியெல்லாங் கதிரொளிபோற் காந்தியாச்சே. (74)

காந்தியென்ற தேகமிந்தச் சித்தியாலுற்
கற்பமுறை கொள்ளுதற்கு வகையைக்கேளு
மாய்ந்தவல் லாரைச்சூ ரணமேசெய்தோர்
மாதமது கொண்டாலே சித்தியாச்சு
வாய்ந்ததொரு வாதமெல்லா மொடுங்கிப்போச்சு
வத்திநின்ற தாதுவெல்லாம் மருவலாச்சு
சாய்ந்ததொரு பித்தமெல்லாம் நிலைகொள்ளாமல்
தறுகியது கிடக்குமப்பா பயித்தியம்போச்சே. (75)

கற்பவிதி.

போச்சப்பா சிலேற்பனந்தான் கீழேநோக்கிப்
புகழ்நாடி மூன்றுமே யுள்ளாய்ப்போச்சு
காச்சப்பா கற்பம்வல் லாரைகொண்டு
கலங்காமல் மறுகற்பங் கொள்ளவேணும்
பேச்சப்பா ஒன்றுமில்லை கேளுகேளு
பித்தனு ராதியிலே பிறந்தமூலம்
மூச்சப்பா கடுக்காய்தான் பூலோகத்தில்
முளைத்துதென்று லெல்லோருஞ் சித்தராமே. (76)

சித்தராய்ப் போகவென்று பேசிக்கொண்டு
சிவசிவா யோசனைகள் செய்தார்பின்பு
சத்தியமாய்க் கடுக்காய்தா னறிந்தாருண்டோ
தாரணியி லெழுமரமாய் முளைத்துதப்பா
பத்தரெல்லாஞ் சித்தராய்ப் போவாரென்று
பரிவான கடுக்காயை ஒளித்துவைத்தார்
அத்தனுட கடுக்காய்தான் செங்கடுக்காய்
அரிக்கடுக்காய் குருக்கடுக்கா யானவாறே. (77)

வாறான வரிக்கடுக்காய் பெருங்கடுக்காய்
மாட்டுகிற வெங்கடுக்காய் மரமேழப்பா
தேறான சித்தருக்குக் கடுக்காயேது
செப்புகிறேன் செங்கடுக்காய் மெத்தநன்று
வாறுக இதைஇடித்துப் பொடியேசெய்து
வருஞ்சித்தா மணக்கெண்ணெய் தனிலேபோட்டுக்
கூறுக மெழுகுபத மாகக்கிண்டிக்
கொண்டெடுப்பாய் பதமாகக் கூறுங்காலே. (78)

காலான திதுதானே வழலைக்காதி
காரமென்று ஷிதுகாரங் கடுக்காயப்பா
சேலான கடுக்காய்தான் வருஷமொன்று
திறமாகக் கொண்டுவிடு மகத்தாஞ்சித்தி
மேலான வழலையினி வாங்குதற்கு
வேண்டியே கரிசாலை சுத்தியாட்டு
கோலான மேல்வாசல் திறந்துபோகும்
கொள்ளப்பா மண்டலந்தான் குறிப்பறிந்தே. (79)

அறிந்தபின்பு கரந்தையைக்கொள் ளாறுமாதம்
அதுகடந்த பின்புமொரு செய்திசேளு
செறிந்திருக்கும் பாதமொடு கையான்மேனி
சேர்மானம் நேராகத் தேனிற்கொள்ளு
அறிந்துதான் மண்டலமே கொண்டபின்பு
ஆச்சரிய மடங்காத வித்தையாச்சு
பிறிந்ததொரு வேதங்கள் சாஸ்திரங்கள்
பெலமாக வெட்டவெளி யாச்சுபாரே. (80)

பாரப்பா சஞ்சீவி சூரணத்தைப்
பழுதாவே கொண்டபின்பு சாவும்போச்சு
நேரப்பா கரியகொடி வேலிதன்னை
நிசமாக மண்டலந்தான் கொண்டபின்பு
ஆரப்பா உனக்கீடு கருநெல்லிதான்
அப்பனே பஞ்சாங்க மெல்லாம்வாங்கிச்
சேரப்பா தயிலமதை யிறக்கிக்கொண்டு
தினமொருமா வீதமுமண் டலமுந்தானே. (81)

தானவனும் முறைவிரிக்கப் போகாதப்பா
தாரணியிற் கோங்குப்பூச் சூரணித்து
ஈனமிலா தாறுதினங் கொண்டாயானால்
என்னசொல்வேன் சாகாத மூலமப்பா
வானுலவு சோதிவிரு க்ஷத்தின்கற்பம்
மகத்தான பஞ்சாங்கந் தயிலம்வாங்கி
மானமுட னூறுநாட் கொண்டாயானால்
மகத்தான சித்தியெல்லா மடிமைதானே. (82)

அடிமையென்றுந் தேவரொடு ரிஷிகளெல்லாம்
அப்பனே தெரிசிப்பா ரஷ்டதிக்கும்
குடிமையும்நீ கோலமும்நீ சார்பும்நீதான்
கூத்தான கூத்தெல்லாம் நீயேயாகும்
வடிவுடைய பார்வதிப்பெண் வரிசையாக
மகனெனவே மடிமீதில் வைத்துக்கொள்வாள்
துடிமீறிச் சிவனவனுஞ் சரியதொப்பாய்த்
தொல்லுலகி லவன்சரிதை துலங்குந்தானே. (83)

துலங்குகின்ற சோதியிவ னுகுங்காலம்
சோதிநின்ற மேருவனு வாகநிற்பன்
மலங்காதே கற்பமிந்த வகையாய்க்கொள்ள
மயமான யென்தந்தை நூலைப்பாரு
கலங்காதே அனுப்பானங் கூர்வாரப்பா
கைமுறைக்கு யெந்தனுட நூலைப்பாரு
பலம்பெறவே கருந்துவரைப் பழத்தைவாங்கிப்
பாரப்பா தயிலமதைப் பரிவாய்க்கொள்ளே. (84)

கொள்ளப்பா செந்துவரை தன்னிலேதான்
கூறுகின்ற செம்பெல்லாம் பதினென்றுகத்
துள்ளப்பா பழுக்குமிது இரும்பிலேதான்
சுகமாகப் பழுக்குமப்பா பதினாறுக
கள்ளப்பா ஒளிக்கவில்லை தேர்ந்துபாரு
கருமலையுஞ் செம்மலையுங் காணமாட்டார்
உள்ளப்பா பசுமலையின் பூகாய்பட்டை
உத்தமனே மூலமொடு இலைபூநீரே. (85)

நீருடனே வீரமொடு வெள்ளைநஞ்சு
நிலையான இலைச்சாத்தி லாட்டிக்கொண்டு
வீருடனே வில்லைதட்டித் தயிலம்வாங்கி
வெள்ளைநஞ்சிற் சுருக்கிட்டுச் செம்பிற்றுக்கு
கூருடனே வீரமதி லாட்டிக்கொண்டு
கொடுத்தாட்டு வெள்ளீய முகத்திலப்பா
தேரும்வகை ரெண்டுமப்பா வெள்ளியாச்சு
செப்பாதே தயிலத்தின் செய்திப்போக்கே. (86)

போக்கான தங்கமா வாரைத்தயிலம்
புகழான வெள்ளிவித்தை யாடுமாடும்
தாக்கான கருப்புவெள்ளை யாடுகின்ற
தயிலமப்பா அங்கமெல்லாம் முன்போல்தானே
வாக்கான ஆவாரைத் தயிலம்போல
மகத்தான வெள்ளாட்டுத் தயிலம்வாங்கிக்
காக்கான பீங்கானில் வைத்துக்கொண்டு
கருணையுடன் வித்தையெல்லா மாடுவாயே. (87)

ஆடுவார் நாதாக்கள் சித்தரெல்லாம்
அப்பால்நீ யெங்கேதா னோடப்போராய்
தேடுகின்ற பொன்னெல்லாஞ் செம்பினாலே
சிறந்திருக்கும் பூவரசின் வித்தைவாங்கி
நாடுவாய் பூநீரு வீரங்கூட்டி
நடமாட்டத் தயிலமது இறக்கிக்கொண்டு
ஆடுவாய் செம்புதனை யுருக்கிச்சாய்த்தால்
அப்பனே பொன்னிறமாய்க் கட்டுந்தானே. (88)

நாகக்கட்டு.

கட்டியதோர் செம்பையிட்டு வேதைசெய்தால்
கலங்காது வேதைமுகங் கருத்தைக்கேளு
ஒட்டியதோர் விரைபத்துப் பலத்துக்கேதான்
ஒருகழஞ்சி வீரம்பூ நீருபோடு
திட்டமுடன் நாகமதைக் கட்டக்கேளு
திறமான மணற்றவளைத் தயிலம்வாங்கி
ஒட்டியதோர் நாகம்திற் சுருக்குத்தாக்கு
ஒளிவான புடத்தையினி சொல்லக்கேளே. (89)

கேளப்பா மூலிகைதா னோடாதோடை
கிரும்பயுடன் சிறுகரைத்து நாகத்தப்பி
வாளப்பா இருபதுநாள் புடத்திற்கட்டும்
மகத்தான நாகத்தைச் செந்தூரிப்பாய்
ஆளப்பா மருதோணி பஞ்சமூலம்
ஆவரையின் பஞ்சாங்கம் சிவந்திருந்த
தாளப்பா முதலைதடந் தான்பஞ்சாங்கம்
சரியாகத் தரித்தேதான் வகையொன்றுக்கே. (90)

வகைவீதம் பலம்பத்து கெந்தகந்தான்
மயமான தடங்கினுட சாற்றிலாட்டித்
தகையாமல் மருந்தோடு மூன்றுமூலி
சாதகமா யணியணியாய் வகுத்துவைத்துப்
புகையெழுப்ப வொட்டாமற் பூவைத்தூவி
புகழ்பெறவே தயிலமது வாங்கிக்கொண்டு
துகையாக ரெண்டுபலங் கெந்திக்கப்பா
சுருக்கிட்டா லொருபிடிதான் கருக்கும்பாரே. (91)

கறுத்திருந்த நாகமப்பா வெள்ளிதன்னிற்
கடுகவே ஐம்பதுக்கு ஒன்றுபோடு
மறுத்திருந்த பொன்னுக்கு யீடோயில்லை
வகையான தயிலமெல்லா மிறங்கும்போது
வெறுத்துவிட்ட பூநீரை விட்டாற்போகும்
விளங்குதற்குப் பூநீரைக் கூட்டிக்கொண்டு
மறுத்துமொரு செய்தியப்பா சொல்லக்கேளு
மகத்தான நாகரச மெடுக்கும்வாறே. (92)

நாகரசம்.

வாறான பச்சைமூங் கிக்குழாயில்
வளமான நாகமது கழஞ்சிபத்து
வீறான வீரமொரு கழஞ்சிகூட்டி
விரவுவாய் பொடித்தேதான் நாகங்கூட
ஊறான ரசமாகும் நெல்லுப்பானை
உள்ளேநாட் பத்திருக்க விட்டபின்பு
தாறான ரசத்துடனே ரசத்தைச்சேர்த்துச்
சரியாகச் சேகரித்துச் சன்னியாட்டே. (93)

ஆடுதற்கு முத்தெருக்கஞ் செவியின்சாற்றால்
அப்பனே ஆட்டிவிடத் திரண்டுபோகும்
ஊடுதற்கு வீரமது சரியாய்த்தாக்கி
ஊட்டினால் ரசமாச்சு யேமத்தாட்டு
நாடுதற்குத் தங்கமது பலந்தானென்று
நலமான செந்தூரம் செய்யக்கேளு
பாடுதற்குச் சொல்லார்கள் பாட்டிலேதான்
பரிவாகச் சொல்லுகிறேன் பாருபாரே. (94)

பாரப்பா கெந்தகமோ பலந்தான்பத்து
பரிவாகக் காட்டுள்ளி பலமோபத்து
தீரப்பா பூநீரு பலந்தானென்று
செப்பமுடன் முத்தெருக்கஞ் செவியின்சாற்றால்
சேரப்பா ஆட்டிவில்லை தட்டிக்கொண்டு
சிறப்பான தயிலமதிற் செந்தூரிக்கச்
சாரப்பா புத்தடியின் பூநாகர்தான்
சார்வாக முத்தெருக்கஞ் செவிபிற்கூட்டே. (95)

கூட்டுமுன்சொல் நாகரசந் தன்னையப்பா
குளிகையாய்ச் செய்தபின்பு நாகஞ்செவ்வி
மூட்டுவாய்க் குகைசெய்து குளிகைவைத்து
முதிராமற் காடையொரு புடத்தில்வாங்கிப்
பூட்டுவாய் பிறகப்பா தயிலந்தன்னைப்
புகழாகச் சுருக்கிடவே முருக்கம்பூப்போல்
ஆட்டுவாய் செந்தூர மிரும்பிலேதான்
அப்பனே இதினுடைய கருவைக்கேளே. (96)

கேளப்பா மூன்றுவகைச் சிப்பிநீறும்
கெட்டியாய்க் கைமுறையாய்ச் செனித்துநிற்கும்
நாளப்பா யில்லாட்டா லொன்றுமில்லை
நாட்டிலே கரிசுட்டுப் பார்க்காதேநீ
மாளப்பா வென்றகரி நீரைக்கண்டால்
மாளுமே சரக்கெல்லாங் கட்டிப்போகும்
தேளப்பா கொட்டியது செயநீரப்பா
சிப்பியுடன் செய்கருவைச் செப்பொண்ணாதே. (97)

ஒண்ணான குருதனையெ முடிக்கவேணும்
ஒவ்வாட்டால் ஊமைபோ லிருக்கவேணும்
வண்ணானைக் கண்டபூ நீரேவேணும்
மகத்தான களங்குகள்தன் முறைகட்கெல்லாம்
விண்ணான குருவிதுதான் அண்டப்போக்கும்
வெளியான வரிவேரின் செய்திப்போக்கும்
கண்ணான மூலபூ ரணியாம்போக்கும்
கருதியே செய்தறிந்தோன் வாதியாமே. (98)

ஆமப்பா சவுக்காரச் சுண்ணமாக்கி
ஆடுகிற வரிசையொரு கோடியுண்டு
நாமப்பா வகாரத்தின் மூன்றுமார்க்கம்
நலமாகப் பாடிவிட்டோம் விபரமாக
ஓமப்பா அவரொடுகை முறையுஞ்சொன்னேன்
உய்வதற்குக் கற்பமுண்ணச் செய்திசொல்லிச்
சாமப்பா வேறேதா னுளிக்கவில்லை
சாஸ்திரத்தின் வகையறியச் சித்தர்தானே. (99)

சவுக்காரவைப்பு.

சித்தாட சவுக்காரஞ் செய்யுமார்க்கம்
செப்புகிறேன் பூநீரு கல்லுச்சுண்ணம்
ஒத்தாட நீருப்பும் பாறையுப்பும்
ஓகோகோ யெள்ளெண்ணெய் விட்டுக்காய்ச்சி
வத்திவரும் பதமாக விளாங்காய்போல
மகத்தான வுண்டைசெய்து தொழிற்பின்பாரு
சுத்தாகப் பொரிக்காரம் வைக்கக்கேளு
சொல்லுகிறே னுருவியுப்புப் பலந்தானென்றே. (100)

பொரிக்காரவைப்பு.

ஒன்றான சீனமது பலமோபத்து
உத்தமனே ஏரண்டத் தெண்ணெய்விட்டு
நன்றாக விரவியதைப் பாண்டத்திட்டு
நலமான எருக்குளியிற் புதைத்துவைத்து
தோன்றாக மேல்மூடி ரெண்டுதிங்கள்
தோணவிட்டாற் பொரிக்கார மாகும்பாரு
சென்றான சிப்பியினி லடங்கணத்தைத்
தெம்பாகப் பச்சைப்பூச் சூடன்தாக்கே. (101)

தர்க்கப்பா கோசமொடு நவச்சாரந்தான்
சதையான வரிவேர்தான் தண்ணீராச்சு
போக்கப்பா அறிந்துவிளை யாடுநீதான்
புகழான செம்புசுத்தி செய்யவென்றால்
நோக்கப்பா வெங்கலத்தின் சரியாய்வங்கம்
நொடித்தாடச் செம்பென்ன வெள்ளிமெத்த
ஆக்கப்பா இச்செம்பு உருகும்போது
அப்பனே சங்குபொடித் தாட்டுவாயே. (102)

ஆட்டுவாய் சரியிடையாய்க் கொடுத்தபின்பு
ஆராலுஞ் சொல்வதற்கு உவமையில்லை
தேட்டுவாய் பின்விரைத் தயிலந்தன்னிற்
சிறப்பாக விதுரெண்டு முருக்கிச்சாய்ப்பாய்
போட்டுவா யினியதனி லொருமஞ்சாடிப்
போடப்பா கழஞ்சிவெள்ளி யுருகும்போது
நாட்டுவாய் செந்தூர முருகியாட
நயம்பேசும் உரையில்லை தொழிற்குப்பொன்னே. (103)

துருசுச்சுண்ணம்.

பொன்னப்பா அண்டநீர்க் குறுதியென்ன
பூநீரு நவச்சாரஞ் சூடன்சீனம்
என்னப்பா உவச்சாரம் வகையொன்றுக்கு
இடைகழஞ்சி வீதமப்பா அண்டமஞ்சு
பண்ணப்பா கைமுறைநான் முன்னேசொன்னேன்
பாருநீ சுண்ணத்தின் சருவைக்கேளு
கண்ணப்பா சூதமொடு வீரம்பூரம்
கருவான குருவண்டு உறமீதஞ்சே. (104)

அஞ்சுபஞ்ச பூதமப்பா சரியாய்க்கொண்டு
அமுதமொடு கலசமப்பா அமுரிசங்கி
கொஞ்சலரும் பெருக்கினியோ டிதுவஞ்சாகும்
கூர்ப்பான பஞ்சமித்திரஞ் சரியாய்க்கூட்டி
பஞ்சபூ தந்தன்னைக் கடினியாட்டி
பச்சைதனை ரவியிலே யுலரவைத்து
மிஞ்சவொரு கவசமப்பா இனிமேற்கேளு
வீறான பூநீருஞ் சூடன்போடே. (105)

போடப்பா சரியாகச் சிப்பிநீராற்
பொங்கவே சீனமந்த யிடைக்குக்கூட்டி
ஆடப்பா நீருறவே யரைத்துக்கொண்டு
அப்பனே காய்ந்திருந்த பச்சைமேலே
சாடப்பா கவசமது பொதிந்தபின்பு
சங்கைபெற வரிவேரில் வைத்துமூடி
நாடப்பா பூநீருங் கல்லுச்சுண்ணம்
நயமாகச் சந்துவாய் சீலைசெய்யே. (106)

செய்யப்பா கரியோட்டி லூதுஊது
சிறந்திருந்த பச்சையது வெளுத்துப்போச்சு
மெய்யப்பா இதிற்சூதங் கட்டிப்போச்சு
வேணுமென்ற வித்தையெல்லா மாடலாச்சு
வையப்பா வஸ்துவித்தை துருசுச்சுண்ணம்
மகத்தான குருவப்பா வேதைகாணும்
பையப்பா முறைதவறிப் போகாதேகேள்
பாங்கான வெத்திலையின் கற்சுண்ணும்பே. (107)

சுண்ணமது பூரமப்பா சுருக்குமெத்தச்
சொல்லார்கள் வேதையுட சரக்கையப்பா
எண்ணமுடன் கண்டுபார் நாய்ப்பிள்ளைக்கு
இருக்குமந்த பீசமப்பா எருத்தின்மேலே
வண்ணமுடன் கண்டறிவா யுண்டைசெய்வாய்
மகத்தான குருவகையில் மேவியாடு
உண்ணவிட்டுப் பாரதிலே பொன்பொய்யாது
உத்தமனே யில்லாட்டா லுரைபொய்யாமே. (108)

ஆமப்பா திருமூலர் போகநாதர்
அவர்மக்க ளென்தந்தை முனிசித்தாதி
ஆமப்பா எண்சரக்குப் பாடினோரும்
அழிக்கருவாய் நாற்சரக்கும் சொன்னோன்பேரும்
தாமப்பா கண்டுகொள்வா ரென்றுசொல்லிச்
சாஸ்திரத்தி லழிகருவை மறைத்துவைத்தார்
நாமப்பா உள்ளபடி சொன்னோங்கேளு
நாற்சரக்கு மித்திரமா யரைப்புரெண்டே. (109)

ரண்டல்லோ சத்திசிவ மானகூறு
நாதனார் நாயகிக்கு மொழிந்தகூறு
ரண்டல்லோ நந்தீசர் சொன்னகூறு
நாதாக்க ளெல்லோரு மறிந்தகூறு
ரண்டல்லோ பொன்வெள்ளி யானதப்பா
நாதவிடை வஸ்துவித்தை யாட்டந்தானும்
ரண்டல்லோ வேணுபூ ரத்தினூட்டு
நவச்சாரஞ் சவுக்காரத் தாட்டந்தானே. (110)

தானென்ற மூலமிதை யறியவேணும்
சத்திசிவம் ரெண்டையுமே காணவேணும்
தானென்ற கும்பிடுகல் லறியவேணும்
தருவான அண்டவித்தை செய்யவேணும்
தானென்ற கற்பமதை யுண்ணவேணும்
சாதகமாய்த் தீக்ஷைவிதி கற்கவேணும்
தானென்ற பூசைவிதி யறியவேணும்
சாஸ்திரமா மொருநூற்றிப் பத்துமுற்றே. (111)

சுந்தரானந்தர் குருநூல் ௱ம.

முற்றிற்று.

உ

குருவே துணை.

163-வது:

சுந்தரானந்தர் திருவாய்மலர்ந்தருளிய

# தீட்சாவிதி ௫௱.

ஆதியந்த முந்தாண்டி யொளியுந்தாண்டி
அடைந்திருந்த சிவசத்தி பாதங்காப்பு
ஓதியந்தப் பிரணவத்து ளமர்ந்துநன்று
யுறைந்துநின்ற அற்புதன்றன் பாதங்காப்பு
சாதியந்த மாலயனுந் தேடிக்காணு
சதாசிவனார் மவுனமது தனதுகாப்பு
வீதியந்த மாதார முன்னிருந்த
விநாயகனும் வல்லபையும் விதியுங்காப்பே. (1)

பாரப்பா சொல்லுகிறேன் தீட்சையோகம்
பண்பான காயத்திரி பிராணாயாமம்
நேரப்பா புவனையுட ஆட்டத்தோடு
நிலைநிற்கக் கற்பமுறை பீசத்தோடு
சேரப்பா பதினெண்பேர் பாதந்தன்னைத்
தினம்பணிந்து ஆறுமுகம் பாதம்போற்றி
ஊரப்பா யிருந்துகொண்டு அறிவினாலே
உரைக்கிறேன் அருபியின்றன் வலையைப்போக்கே. (2)

போக்கடா வெகுபேர்க்குப் புவனையாட்டம்
புகலுகிறேன் தீட்சையிரு பத்திரண்டும்
வாக்கடா யோகமது பிராணாயந்தான்
மைந்தனே காயத்திரி பெருமைமெத்த
தாக்கடா காயத்திரி யறிந்தபேர்க்குச்
சகலசித்தி யாகுமடா சார்ந்துபாரு
வாக்கடா பெற்றதொரு சிவயோகிக்கு
வாகாகப் பேசுகிறேன் மருவிப்பாரே. (3)

மருவிப்பார் காயத்திரி பெருமையைத்தான்
மைந்தனே சொல்லுகிறேன் வரிசையாக
உருவிப்பார் பட்ட-யீ-புர அதிசயந்தான்
உறவான தறவுபெ அயிசாவென்றுந்
தருவிப்பார் மீசயிதான் பி-சொ-சேர்மத்
தயவான திசயோபாய் பேயன்காத்தான்
கருவிப்பா ரத்துவிழுங் காயசித்தி
கைக்குள்ளாய்ப் போச்சுதடா கருதிப்பாரே. (4)

பாரப்பா காயத்திரி சித்தியாகப்
பாடுகிறேன் தீட்சையுள்ளே பாகமாக
நேரப்பா மறையோர்கா யத்திரியென்பார்
நிலையறிய அவனாலே கூடாதப்பா
ஆரப்பா சித்தருட சாபம்நீங்க
அறைவேன்ஓம் சிவபநம அங்உங்கென்று
சீரப்பா சிங்கிலிறீங் கென்றுநீயும்
செபித்திடுவாய் சர்வசாப நசியென்றேதான். (5)

என்றேதான் லட்சமுரு மாட்டிப்பின்னே
இயல்பான மூவெட்டா மட்சரத்தை
நன்றெனவே லட்சமுரு மாட்டினக்கால்
நமனில்லை காயத்திரி சித்தியாகக்
கன்றெனவே அஷ்டகர்மப் புவனையாட்டங்
கடினமில்லை சித்தியாங்கா யத்திரியாலே
இன்றிதைநா னுனக்காகச் சொல்லிவிட்டேன்
இதையார்க்குஞ் சொன்னக்கால் நரகந்தானே. (6)

தானென்ற எழுகோடி நரகில்வீழ்வாய்
தயவற்ற பிள்ளைகட்கு யியலாகா
பானென்ற துன்மார்க்கப் பிள்ளைகட்குப்
பராபரைமே லாணையடா யியவேண்டாம்
ஊனென்ற யிருபதாண் டிருந்துகேட்டால்
உத்தமனே சிவயோகிக் கியலாகும்
நானென்ற மதமொழிந்தார்க் கியச்சொன்னேன்
காட்டினேன் காயத்திரி தன்னைத்தானே. (7)

தன்னைத்தான் சித்தாப்பா வொளித்துவிட்டார்
    தயவாக வுனக்காக யியம்பினேன்யான்
என்னைத்தான் மூலத்திற் கணேசன்கோவி
    விருக்கும்பா ரென்றுபிரா ணாயஞ்சொன்னார்
மன்னைத்தான் கோழிமுட்டை போலேகாணும்
    மக்களே காண்பதற்கு வகைகேளென்றேன்
அன்னைக்கா மாறுமுக முரைத்தார்பாரு
    ஆரென்றால் சட்டைமுனி பிள்ளைநானே. (8)

நானேதான் கைலாச நாதர்பிள்ளை
    நன்றாக யென்பேருஞ் சுந்தரன்றான்
ஊனேதான் சுமந்திருந்தே னிருபதாண்டு
    உத்தமனே அதன்பிறகு யோகம்பார்த்தேன்
கானேதான் கணபதியைக் கண்டேன்கண்டேன்
    கைலாச நாதருட கிருபையாலே
தானேதா னுந்தனுக்காய்க் கருவைச்சொல்வேன்
    தப்பிலியாம் பிள்ளைகட்குச் சாற்றொண்ணாதே. (9)

ஒண்ணான பிராணாயக் கருவைக்கேளு
    ஓகோகோ சொல்லுகிறேன் திறந்துமக்காள்
கண்ணான கண்மணியே ரேசகந்தான்
    கரைகடந்த பூரகமுங் கும்பகந்தான்
விண்ணான பீசம்நிற் பீசத்தோடு
    விளம்பினார் கொங்கணர்தா னஷ்டாங்கத்தில்
தண்ணான அவர்நூலென் னாலும்பாரு
    சரியாக விருக்குமடா சார்ந்துநில்லே. (10)

நில்லடா ரேசகந்தான் போவதப்பா
    நிலைத்ததொரு பூரகந்தான் வருவதாகும்
மல்லடா கும்பகந்தான் வந்திருக்க
    வாகுடனே பீசமறி விக்கலாகும்
வெல்லடா நிற்பீசம் வெளியில்நின்று
    விதமாகப் பூரித்தால் விபரமாகச்
சொல்லடா யினியெதுபி ராணாயந்தான்
    சொல்லிவிட்டே னாறுதலம் ஊதியேறே. (11)

ஏறுதற்குத் தீட்சையையா னியம்பக்கேளு
யிருபத்தி யிரண்டுகுரு முனிதான்சொன்னார்
கூறுதற்கு யிருபத்தி ரண்டோயில்லை
குறிப்பறிந்தா லொன்றிருபத் திரண்டுமோச்சு
ஆறுதற்கு ஐம்பத்தொன் றறைபக்கேளு
அப்பனே முதலெழுத்தே சிவமதாச்சு
தேறுதற்கு நாலைவிட்டு ஒன்றைச்சேரு
திடமாக வொருமனது சேருசேரே. (12)

சேர்த்தாக்கா லிதுதீட்சை யேகதீட்சை
செப்பினே னிருபத்தி ரண்டிதாச்சு
பார்த்தாக்கால் பிறப்பிறப்பு மிதுவேயாச்சு
பண்பான லோகமெல்லா மிதுவேயாச்சு
கார்த்தாக்காற் சத்திசிவ மிதுவேயாச்சு
காயசித்தி யாவதுவு மிதுவேயாச்சு
ஏர்த்தாக்காற் பிராணய மேற்கவேணும்
இதைவிட்டாற் காயசித்தி யில்லைத்தானே. (13)

தானென்ற புவனையுட ஆட்டத்தைக்கேள்
தப்பாமற் குறுக்கேதா னைந்துரேகை
வேனென்று நேரேதா னைந்துரேகை
விதமாகக் கூட்டிப்பார் பதினாறச்சு
நானென்ற நம்-மம்-வம்-யம் வீட்டினாலே
நன்றாக முதனுலிற் காயவைத்து
மானென்ற பெண்ணுக்கு நடுமுக்கோணம்
வைத்தாக்காற் பதினேழு வீடுமோச்சே. (14)

ஆச்சப்பா வசியத்தை அறையக்கேளு
ஆச்சரியம் ச-ந-மீ-யீ யீ-மீ-நா-சா
ஓச்சப்பா துருவமிது லக்கத்தைக்கே
ளுற்றதொரு சீ-ங-ம-யா யா-ம-நீ-சீ-தான்
தீச்சப்பா மோகனந்தான் நீ-சீ-யா-மா
சீ-நீ-ம- யா-அதின் துருவ லக்கந்தானும்
நீச்சப்பா யீ-மீ-நா- ச-மி-ந-யீ-சா
நிசமாகப் பதித்துத்தம் பனத்தைக்கேளே. (15)

கேளடா ய-ம-நீ-சீ சி-நி-ய-ம-த்தான்
செடி துருவம் மி-யி-சநா ந-ச-மீ-யிதான்
நாளடா லக்கமுச்சா டனத்தைக்கேளு
நவிலுகிறேன் மி-யி-சா-ந- நா-சா-மீ-யி
வாளடா துருவமதாம் லக்கத்தைக்கேள்
மைந்தனே ய-நி-சீ-மா சீ-யா-நீ-மா
ஆளடா அழைப்புலக்கம் ம-ய-சி நி-நி-சி
ய-மா-துருவம் மி-யி-சா-நா ச-யி-மீ-நாவே: (16)

நாவாலேசொல்ல மி-யி ந-ச-யீ-மீ-ச
நா-லக்கம் நீ-சி-மா-ய சீ-மா-யா-நீ
பாவாலே வித்வேசத் துருவமாச்சு
பார்லக்கம் மா-ய-நி-சிநீ-சி-மா-யாவே
தாவாலே யீ-ச-ந-மி ச-மி-ந-யீ-தான்
தப்பாமற் பேதனத்தின் துருவமாச்சு
மாவாலே சி-நி-யா-ம ம-ய-நீ-சீ-தான்
மைந்தனே லக்கமா ரணத்தைக்கேளே. (17)

கேளுநீ ந-ச-யீ-மி மீ-யி-சா-ந
கெடியான பருவத்தின் துருவமாச்சு
ஆளுநீ நா-வ-யி-மி மீ-யீ-வா-ந
அரிதான லக்கமப்பா நம்-மம்-வம்-யம்
நாளுநீ தினம்பார்க்க வெட்டுஞ்சொன்னேன்
நன்றாக அட்சரத்தை நயந்துகேளு
வாழுநீ யொன்றினிலே அகாரம்போடு
மைந்தனே ஓங்காரமது ரெண்டிற்றானே. (18)

தானென்ற உகாரமடா மூன்றிலாச்சு
தப்பாதே ருகாரமது நாலிற்போடு
வேனென்ற லுகாரமது அஞ்சிலாச்சு
வெகுசுறுக்கு ஏ-ஆறில் ஒவு-மேழில்
மாணென்ற ஆகார மெட்டிலாச்சு
வழியாக யீ-ஆவாம் மீம்-ரம்-ஆச்சு
நானென்ற நவ்விலுங் காரம்போடு
நலமாக வாருவாம் வவ்வில்லுவே. (19)

ஊவென்ற நா-விலடா-ஐயுமாச்சு
உத்தமனே மீ-யதிலே ஔவைப்போடு
தானென்ற யீ-யதிலே அஃகாவைத்தான்
சாத்துவாய் பதினாறு வீடுமாச்சு
நானென்ற துருவத்தில் ஹீயென்றிட்டு
நலமான லக்கத்தில் ஸ்ரீயைக்கட்டிப்
பானென்ற பதிநாலட் சரமும்போகப்
பகருவேன் முப்பதஞ்சும் பகருவேனே. (20)

பகருவேன் ஒன்றதிலே காலா-ரெண்டு
பரிவாக ரண்டதிலே இப்போ-ஷா-வாங்
தகருவேன் மூன்றதிலே ச-ஹா-ரெண்டுங்
தய்வாக நாலில்ரு இங்காவாகும்
மகருவே னஞ்சதிலே டீ-மா-ரெண்டு
மைந்தனே ஆறதிலே ட்டாணுவாம்
நிகருவே னேழதிலே பம்-ரம்-ரெண்டும்
நிச்சயமாய் ப்பா-யா வுமெட்டிற்போடே. (21)

போட்டல்லோ ஒன்பதிலே வாவீ-ரெண்டும்
புகலரிது பத்திலே ஸா-பா-வாச்சு
மாட்டல்லோ மா-யீ-பன் னொன்றிற்போடு
மக்களே ரா-லா-வும் பனிரண்டாச்சு
நீட்டல்லோ பதிமூன்றில் வாபீயாகும்
நிசமாகப் பதிநாலில் ஷாஒன்றாச்சு
காட்டல்லோ பதினஞ்சில் ஸா-ஹா-ரெண்டுங்
கடினமில்லை ளாக்ஷாவை கடசிவையே. (22)

வையடா ஐம்பத்தி யொன்றுமாச்சு
வகையாகத் திருமூலர் வளர்த்தாரப்பா
மெய்யடா மூலம்பம் கம்-வம்-தம்-தான்
மேன்மையென் மூலம்நம் மம்-வம்-யம்-தான
பொய்யடா சொல்லவில்லை யிரண்டுமொன்று
புதுமைமெத்தப் புதுமைமெத்தப் பேசப்போகா
ஐயடா ஐம்பத்தஞ் சொன்றும்போடு
அதின்பிறகு தேவதைகள் மூலங்கேளே. (23)

கேளடா தேவதைகள் மூலமெல்லாம்
கிருபையுடன் சொல்லாமல் மறைத்தார்சித்தர்
வாளடா ககாரமது நந்தீசர்க்கு
வகையான போகருக்குச் சகாரதீட்சை
நாளடா அகஸ்தியர்க்குத் தீக்ஷை-ஞா-வாம்
நலமான கொங்கணர்க்கு ணகாரம்போடு
ஆளடா யென்குருவும் டகாரமானர்
ஆச்சரிய மென்றனக்கு நகாரமாமே. (24)

ஆமப்பா தகாரமது ராமதேவர்
அன்பான பகாரமது கருவூரார்க்குப்
போமப்பா பிர்மமுனி மகாரமானர்
புதுமையுள்ள ரோமருக்கு ரகாரம்போடு
காமப்பா மச்சமுனி யகாரமானர்
கலங்காதே வகாரமடா புண்ணாக்கிசர்
தாமப்பா யிடைக்காட்டார் லகாரமானர்
தயவாக ளகாரங்கோ ரக்கர்தானே. (25)

தானென்ற வாசமுனி றகாரமானர்
தயவான ழகாரமிடு கமலருக்கு
வேனென்ற னகாரமடா அழுகண்ணிக்கு
விந்தைதிரு மூலருக்கோங் காரம்போடு
நானென்ற பதினறில் ரண்டுமிஞ்சில்
நலமாக யிரண்டையுந்தா னிரண்டுமூலே
மானென்ற அக்கினியும் வாயுவாச்சு
வகையாக நால்வாச லிட்டுத்தீரே. (26)

தீரடா அட்டகெச மட்டநாகர்
திரமான அட்டசத்தி அட்டபாலாள்
வாரடா அட்டதுர்க்கி கிரகராசி
வயனமுப் பத்துமுக் கோடிதேவர்
ஊரடா நாற்பத்தெண் ணுயிரந்தான்
உற்றரிஷி யுண்டவர்கள் பீஜம்போடு
பாரடா யிவர்களுட பீஜந்தன்னைப்
பண்பாக வுன்றனக்கு அறைகிறேனே. (27)

தீரடா அட்டகெச மட்டமாணுகங்
திறமான அட்டசத்தி அட்டபாலாள்
வாரடா அட்டதுற்கி கிரகராசி
வயனமாய் முப்பத்துமுக் கோடிதேவர்
ஊரடா நாற்பத்தெண் ணாயிரரிஷிதான்
உத்தமனே யுண்டவர்கள் பீஷம்போடு
பாரடா யிவர்களுட பீஷந்தன்னைப்
பண்பாக வுன்றனக்கு அறைகிறேனே. (27)

அறைகிறேன் சத்தசக் கரத்தின்மூலம்
அப்பனே சத்தியுட மூலத்தோடு
நிறைகிறேன் ரதமூவமூம மூலமூலம்
நேரான தேவதைகட் கெல்லாமாச்சு
பறைகிறே னுவல்லோ பிரிந்துதப்பா
பண்பாகத் தேவதைகள் வெவ்வேறென்று
நிறைகிறேன் மறைவாகச் சொன்னதென்று
நீதானுங் கிலேசிக்க வேண்டாங்கேளே. (28)

கேளடா நால்வாசல் மூரேகைக்குள்
கெடியாக யிருவீதி தன்னிலேதான்
நாளடா நாதமுள்ள சங்குசூலம்
நலமான சக்கரமு மழுவுமாட
ஆளடா நாட்டிப்பின் மழுவின்சக்ரம்
அப்பனே சூலமொடு சங்காகத்தான்
தாளடா தலைமாறித் தலைமாறித்தான்
தயவாக யிருவீதி தன்னில்நாட்டே. (29)

நாட்டிடவே மூலத்தினட் சரத்தைக்கேளு
நன்றாகச் சத்தசாக ரத்தைக்கேளு
ஆட்டிடவே சாகரந்தான் தண்ணீராச்சு
அப்பனே தண்ணீர்தான் மாலின்மூலம்
நீட்டிடவே அவர்மூல மங்கென்றானு
நிசமாகச் சத்தியுட மூலங்கேளு
தீட்டிடவே உங்கென்று யிட்டுப்பின்னே
திடமான ரதமூலம் விபரங்கேளே. (30)

விபரமென்ற ரதமூலம் வகாரம்நாட்டு
விளங்கவே மும்மூலம் மூலங்கேளு
தபரமென்ற கணபதியின் சுழியைநாட்டித்
தயவாக முன்சொன்ன மூலமத்தி
நபரமென்ற யிருவீதி தலைமாறியிட்டு
நன்ருக வதினடுவே அட்சரத்தைகாட்டில்
எபரமென்ற முப்பத்துமுக் கோடிதேவ
ரெல்லோர்க்கு மிப்பீசம் நாலுந்தானே. (31)

தானென்ற எட்டுவகை யாட்டத்தைத்தான்
தயவாகத் திருமூலர் முன்னூற்றுள்ளே
வேனென்று பாடிவைத்தார் மூலஞ்சொல்ல
வில்லையடா நான்சொன்னே னவர்நூலைத்தான்
ஆனென்று பார்த்தட்ட கர்மத்தைத்தான்
ஆடப்பா அவர்சொல்மந் திரப்படிக்குக்
கானென்ற அவர்நூலென் னூலுமொன்று
கருதியினி யறுசுவையுங் களறக்கேளே. (32)

கேளப்பா அறுசுவையுங் களற்றுமார்க்கங்
கெடியான வொருநூற்றுப் பத்துக்குள்ளே
நாளப்பா வரிசையுடன் பாடிவைத்தேன்
நன்ருக அப்படியே களத்திப்போட்டு
வாளப்பா கற்பங்கள் கொள்வதற்கு
வயனமா யென்தந்தை நூலைப்பாரு
கோளப்பா வாராது கற்பங்கொள்ளக்
கூறினர் நன்ருகக் கூர்ந்துபாரே. (33)

கூர்ந்துபா ரறுசுவையுங் களற்றுமுன்பே
கொள்ளுகிற கற்பத்தின் வரிசைகேளு
நேர்ந்துபார் பத்தியங்கள் வைக்கவேண்டாம்
நினைவாக ஐந்துமுதல் நூறுமட்டுந்
தீர்ந்துபார் மிளகதனைக் கொள்ளும்போது
சிறப்பான முதண்டக் கிஷாயங்கொள்ளு
சேர்ந்துபார் நூருன தினங்கொண்டேபின்
செப்பினே னுடல்தனிலே நோய்நாடாதே. (34)

நாடாதே அமுரிதனைத் தினந்தானப்பா
நன்றாக முன்விட்டு நடுவிலேந்தி
வாடாதே ஆழாக்குக் கொண்டுவாநீ
வரிசையுடன் மிளகைவிட்டு யிதைக்கொள்ளாதே
தேடாதே மிளகுசதங் கொண்டதின்மேல்
தினந்தவிரா தேமிளகை யுண்டுகொண்டு
ஆடாதே அமுரிதனைப் பின்னேகொள்ளு
ஆச்சரியம் நோயணுகா துடலிற்றானே. (35)

தானென்ற மிளகமுரி கொள்ளும்போது
தயவான கடுகெண்ணெய் நந்திக்காயாம்
வேனென்ற செம்மரியும் வராகந்தானும்
விதமான வுளுந்தோடே கூட்டிக்கொண்டு
மானென்ற கற்பங்கள் கொண்டுவாநீ
வரிசையுடன் பத்தியத்தால் முறிவாய்வீங்கும்
நானன்றாய்த் திறந்துசொன்னேன் சித்தர்சொல்லார்
நன்றாக ஆதிகற்பம் பாடினேனே. (36)

பாடினே னறுசுவையுங் களத்திப்போட்டால்
பத்தியமங் குண்டப்பா முன்னேயில்லை
நாடினேன் பேதையுடன் கூடும்போது
நன்றாக ரண்டுகற்பம் போதும்போதும்
மூடினேன் மிளகமுரி கொள்ளும்போது
மூலமது சுத்திசெய்து வழலைவாங்கு
கூடினேன் பிராணாயம் பண்ணிவாநீ
கொள்ளையடா யிந்தமுறை வுலகத்தோர்க்கே. (37)

கற்றோர்க ளிந்தமுறை கொண்டபின்பு
கனமாக விந்துகட்ட வேணுமென்றால்
முத்தான அறுசுவையுங் களத்திப்போட்டு
மூன்றுமண்ட லங்கடுக்கய்க்காய் கொண்டாற்கேளு
வித்தான விந்துவிது கட்டிப்போகும்
விள்ளாதே யிக்கருவைப் பெரியோர்சொல்லார்
வத்தென்ற விந்துகட்டிப் போனபின்பு
வல்லாரை கொண்டுவிடச் சாவுபோச்சே. (38)

போச்சப்பா யிருநூறு வருடத்துக்கு
பொறியாசை யுடன்போச்சு புனிதமாச்சு
ஆச்சப்பா யினிமேற்றான் கற்பங்கொள்ள
ஆச்சரியங் கொங்கணர்தன் னூலைப்பாரு
காச்சப்பா கைமுறைகள் நன்றாய்ச்சொன்னார்
கலங்காமற் கொண்டுவிடக் காயசித்தி
வீச்சப்பா யிதைவிட்டு யோகிக்கென்றால்
வெகுசுருக்காய்க் கற்பமது விள்ளுவேனே. (39)

விள்ளுகிறே னுநிகற்பம் ரண்டுங்கொண்டு
மேலான கடுக்காய்தான் கொண்டாயானால்
வள்ளுகிறேன் விந்துவது கட்டிப்போகும்
வரிசையுடன் பூசைவிதி முப்பத்தாறில்
கொள்ளுகிறேன் வாலைகற்பம் பாடினேன்யான்
கூர்ந்துநன்றாய்ப் பூசைசெய்து கற்பங்கொள்ள
மள்ளுகிறேன் மூன்றுகற்ப முன்னேகொண்டு
வரிசையுடன் வஸ்துவைத்தான் பின்னேகொள்ளே. (40)

கொள்ளப்பா அப்படியே முறித்துமுன்னே
கொண்டபின்பு தேன்கலந்து கொண்டுவாநீ
விள்ளப்பா மறுபடிதான் தனியேவாங்கி
விதமாகக் கொண்டுவிடச் சாவுபோச்சு
நள்ளப்பா தனியேதான் கொள்வதற்கு
ஞானமைம்பத் தொனறதிலே நயந்துபாரு
வள்ளப்பா நாற்பத்து முக்கோணபூசை
வழியாகச் சொல்லிவிட்டேன் வரிசைதானே. (41)

தானென்ற பூசைசெய்து கற்பங்கொண்டால்
தவறாது யிராறு தலமுந்தோணும்
பானென்ற பானத்தின் லகிரியிலேநின்று
பாரப்பா புருவத்தில் மனதைவைத்து
வானென்ற சுழினையது துறந்துபோகும்
மாச்சலமெத்தத் தீபவொளி கண்கொள்ளாது
கோனென்ற ரவிகோடி காந்திகாணும்
கூறெண்ணாக் காந்தியிலே மனங்கூசாதே. (42)

கூசாதே யென்றுசொல்லிக் கைலாசமூர்த்தி
கூறினா ரவாருளால் மூலங்கண்டேன்
ஏசாதே மேலஞ்சுங் கண்டேன்கண்டேன்
என்மக்காள் மேலாறு மேறிச்சென்றேன்
வாசாதே விட்டகுறை வந்துதானால்
மைந்தனே ஆதிகற்ப மூன்றுங்கொண்டு
பேசாதே முன்மவுனங் கொண்டாயானால்
பிலக்குமடா காயசித்தி பிலக்கும்பாரே. (43)

பாரப்பா மவுனமென்ற பக்குவந்தான்
பண்பாகச் சிவப்பான மூலியிலேகேளு
நேரப்பா முதற்றரத்தில் வாங்கிக்கொண்டால்
நிமிஷத்தி லீராறு தலமுந்தோணும்
ஆரப்பா லகிரிகொள்ளு மென்றீரையா
ஆப்பிடுமோ லகுவிலே மவுனஞானங்
காரப்பா கிடையாட்டால் பூரணலேகியத்தைக்
கைமுறையாய்ச் செய்துகொண்டு உண்டுதேறே. (44)

தேறென்றேன் பூரணலே கியந்தானப்பா
செய்துகொண்டு நன்றாக வுருட்டிவைத்து
வாரென்ற பிராணயஞ் செய்யும்போது
மைந்தனே கொண்டுமனம் புருவமத்தி
ஏறென்று வைத்தாக்கா லங்கேகிற்கும்
என்மக்காள் யோகத்துக் கிதுதான்மூலம்
நீரென்ற பானமது வந்தபோது
நீகொள்ளும் லேகியத்தைத் தினந்தான்கொள்ளே. (45)

கொள்ளுதற்கு லேகியத்தைச் சொல்லக்கேளு
கூறான மிளகொடுகி ராம்புஏலம்
விள்ளுதற்குச் சாதிக்காய் பத்திரியுஞ்சீரம்
வெண்சாரப் பருப்புடனே அபினுங்கூட
மள்ளுதற்குக் கசகசாவொன் பதையுமக்காள்
மகத்தான அபின்நிற்க வருத்துமெட்டை
தள்ளுதற்குப் பொடியாக்கி வைத்துக்கொண்டு
தனதான பீங்கானிற் கடக்கவையே. (46)

வைத்துக்கோ ரக்கரிதன் மூலிதன்னை
வரிசையுடன் நவபுடமுந் தீர்ந்திடித்து
வைத்துவடி கட்டிமுன் றாளில்ரெட்டி
வாகாகக் கலந்தடுப்பில் மறுசட்டியேற்றி
வைத்தபின்பு வெல்லமதிற் போட்டுருக்கி
மைந்தனே சர்க்கரையுங் கூடப்போட்டு
வைத்தஅபீன் போட்டுபொடி யெடுத்துக்கொட்டு
வரிசையுடன் கிண்டிநெய்யுந் தேனும்வாரே. (47)

வார்த்திரக்கு சிவப்பான மூசைதன்னில்
வஸ்துவைநீ யதில்வாங்கி விட்டுக்கிண்டிச்
சேர்த்துநன்றாய் குளப்பியதை வைத்துக்கொண்டு
சிவகாமி தன்னுடைய பூசைசெய்து
காத்துநன்று யோகமது செய்யும்போது
கனிவாகக் கொண்டுவிடக் காயசித்தி
பார்த்துடனே லேகியத்தை விட்டாயானாற்
பலநினைவு வந்துவிடும் பாருபாரே. (48)

பாரப்பா ஒருநூற்றுப் பத்திலேதான்
பாடினேன் வாதவித்தை யுலகத்தோர்க்கு
நேரப்பா யேழுபத் தஞ்சுதன்னில்
நேராக வைப்புமுறை நீட்டிச்சொன்னேன்
ஏரப்பா யைந்துபத்தா மொன்றுதன்னில்
இயம்பினேன் ஞானமினி உண்டோயேது
ஊரப்பா பூசைவிதி முப்பத்தாறில்
உரைத்தேனுன் கைமுறைக ளெணிப்பாரே. (49)

பாரப்பா யோகமது செய்தானானால்
பரிவான வாதமது பலிக்குஞ்சித்தி
நேரப்பா செய்யாட்டால் வாதமில்லை
நினைவாலே சுட்டழிந்தால் பலியாதொன்றுஞ்
சாரப்பா யோகத்தால் குளிகைசித்தி
தப்பாது சாரணையைத் தீர்ந்துகொண்டு
ஆரப்பா பொதிகைமேலே யேறிச்சென்று
அகஸ்தியரைத் தெண்டனிட்டு மேரிற்செல்லே. (50)

செல்லப்பா கைலாச மூர்த்தியங்கே
சிறந்திருந்தார் தெண்டமிட்டு மயேந்திரத்தில்
நல்லப்பா ஆயிரத்தெண் சித்தரோடே
நானிருப்பேன் வந்துதெண்டம் பணிந்தாயானால்
கல்லப்பா காயசித்திக் கேற்றகற்பம்
கனக்கவுண்டு தருவேனுன் சித்தனாவாய்
அல்லப்பா யெனையாண்ட கைலாசமூர்த்தி
அருளாலே சொல்லிவந்தேன் தீட்சைமுற்றே. (51)

சுந்தரானந்தர்தீட்சாவிதி ருமி,

முற்றிற்று.

மதுரை வடக்குவாசல் யானைக்கல்தெரு வித்வான் மு. குழந்தைவேலுப்பிள்ளை அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை:

164-வது:

சுந்தரானந்தர் திருவாய்மலர்ந்தருளிய

# மெய்ஞ்ஞானச் சுருக்கம்.

பூரணத்தா னுற்பவித்த சுந்தரன்றான்
புகட்டுகிறேன் சிவஞான போதந்தன்னைப்
பூரணமே பொருளென்ற பெரியோரெல்லாம்
புக்கினார் சிலம்பொலியிற் போதத்தாயைப்
பூரணமே பொருளென்றே நிலைத்தாய்நீயே
புரிசடையோ னருள்பெறவாய் போதமீறும்
பூரணத்தி லடைவதற்கு வகையுஞ்சொல்வோம்
புகட்டுவோம் சிவனருளைப் போதந்தானே. (1)

தானென்ற நிலைமறந்து குருவாய்நின்ற
தற்பரத்தி லாறுவரை தாண்டியேறித்
தேனென்ற மதுவிருக்கும் மனையிற்சென்று
தேவியிரு தாள்பணிந்து தேகந்தன்னைக்
கோனென்ற குருவடிவா யெடுத்துக்கொண்டாற்
கோடிரவி போற்காந்தி கூசுங்கண்கள்
பானென்ற குருவைவைத்துத் தாயைப்பூசிப்
பதினாறு மீய்ந்திடுவாள் பாருபாரே. (2)

பாரென்றே யிங்கமுறை யார்க்குச்சொல்வோம்
பரிவான சிவயோகி பரமக்கியானி
ஊரென்றே அறிந்திருக்கும் பெரியோரான
உத்தமர்க்கு முனக்குமல்லோ உரைத்தேன்யானும்
காரென்றே னுன்னுளே நம்மைவைத்துக்
கருணையுள்ள திருவடியாற் கண்டுதேறு
நேரென்றேன் ரவிமதியு மொன்றாய்நின்ற
நிலையில்நின்றேண நீகலந்த நினைவுநன்றே. (3)

சீடன் கேட்பது.

நினைவுநன்று யென்றுரைத்த குருவேஐயா
நீயல்லோ யென்மனதாய் நினைப்பாய்நின்றீர்
கனவுகண்டார் போலேதான் நினைப்பும்வாழ்வுங்
கரையில்லை நிலையில்லை காப்பாயென்னை
மனவடிவும் நீயாச்சு வழியோடென்னை
வான்முடியில் மலரடியில் மவுனமூட்டி
அனவரதந் திருநடனந் தன்னிற்சேர்த்து
அன்னையுட கிரியைசெயு மருள்செய்வீரே. (4)

அருள்செய்வே னென்மகனே உனக்குநன்றாய்
ஆதிமுத லந்தம்வரை தொடுத்துச்சொல்வோம்
பொருள்வெளியா மருள்சேரும் போக்குஞ்சொல்வோம்
போதமதாச் சுழினையென்ற பூட்டைவெட்டிச்
சுருளிபோ லாயிரத்தெண் மலரின்மேலே
சோதியுருக் கொண்டுமனஞ் சொக்கிநில்லு
அருள்மிகவே உண்டாகும் அர்ளைப்போலாம்
அதுவல்லோ சிவயோக மறிந்துகொள்ளே. (5)

அறிந்துகொள்வாய் சத்தியிரு பாதந்தன்னை
அடிசேர்ந்தா லரனுருப்போ லாக்கிவைப்பாள்
எறிந்துநின்ற பலநினைப்பு மொன்றாய்க்கூட்டி
ஏகநினைப் பாகிவிடும் இதைநீபாரு
பிறிந்துநின்ற மனமாயை மாண்டுபோகும்
பேச்சில்லை மூச்சில்லை பிறப்போயில்லை
செறிந்துநின்ற மும்மலங்கள் சேரமாறும்
செயலெல்லாஞ் சிவன்செயலாய்த் தெளியும்பாரே. (6)

தெளியும்பா ரென்றுக்கா லெளிதோமைந்தா
தில்லைவனச் சிவனருளாற் றெழியவேணும்
வழியோடே மனமொன்றாய் அடங்கிற்றானல்
மாசில்லா விளக்கொளிபோல் வடிவுங்காணும்
அழிவில்லை பேரொளியாய் அமர்ந்தாயாகில்
ஆச்சரியஞ் சொல்லுதற்கு வாயோயில்லை
மொழிகின்ற வசனமெல்லாம் வேதமாச்சு
மூச்சற்ற விடந்தனிலே மூண்டுநில்லே. (7)

நில்லென்ற நீராதாரந் தாண்டியேதான்
நிற்குணத்திற் சொக்குவதே நிஷ்களந்தான்
இல்லென்ற சமாதியிலே இருந்தாயானால்
இதுவுநன்று ஏகமென்ற எழுத்தைநன்றாய்ச்
சொல்லென்றுந் தொழுதிருக்கச் சோதிரூபம்
துரியநட னம்புரியுஞ் சோதிபோலாம்
வெல்லென்றேன் வெகுளிதன்னை மைந்தாசேரு
வேதாந்த மெய்ஞ்ஞானம் வெளிவிட்டேனே. (8)

விட்டேனு காமியஞ்சஞ் சிதம்பிரார்த்வம்
விமலனுருக் கொண்டுநின்ற விஞ்சையாலும்
எட்டாத வாசியென்ற எழுத்தினாலும்
என்தாயார் வாலையரு ளியல்பினாலும்
கிட்டாத பேரொளியாய்க் கேசரத்திற்
சேணுரென்ற சிலம்பொலியைக் கேட்டுமீண்டேன்
தட்டாதே நான்சொன்ன வுண்மையெல்லாம்
தன்மயந்தா னற்றிடத்திற் சார்ந்துபேரே. (9)

சார்ந்துபா ரென்வார்த்தை தட்டாதப்பா
தாரணியிற் பெரியோர்கள் தன்னைக்கண்டால்
கூர்ந்துபா ரவர்மனதைக் குருவாய்நின்றால்
கும்பிட்டு அவரிடத்திற் கூடிப்பேசு
ஆர்ந்துபார் வேதாந்த நூலையெல்லாம்
ஆதாரக் குறிகளையு மறிந்துதேறு
தேர்ந்துபார் வெளியான தெளிவிலேறிச்
சிவசிவா சிவனுருவாய்த் தேகமாச்சே. (10)

தேகமாச் சென்றக்காற் சோதிரூபம்
தில்லையென்ற மேருவிலே திறமாய்நில்லு
ஆகமபு ராணமெல்லாந் தானே ஆச்சு
ஐம்பொறியுந் தானுச்சு அகந்தைபோச்சு
மோகமென்ற பெண்ணாசை யொழிந்துபோச்சு
மூச்சற்ற விடந்தனிலே நாட்டமாச்சு
நாகமென்ற ஆபரணந் தரித்தோன்றானும்
நாமல்லால் வேறுண்டோ நாடிப்பாரே. (11)

காடிப்பா ரென்றுரைத்த குருவேஐயா
நாடியுனைப் பார்ப்பதுவும் நானும்நீயே
தேடிநின்று வாடாம லென்னையுந்தான்
திருவடித்தாள் தன்னிலென்றுஞ் சேர்க்கவேணும்
கூடிநின்று சிலம்பொலியைக் கூர்ந்துகேட்கக்
குருவருளும் மிகவேணுங் கோதைமெய்யா
ஆடுகின்ற குருநாதங் கண்டமூர்த்தி
அடியேனுக் கிவ்வளவு மருள்செய்வீரே. (12)

அருள்செய்வீரென்குருவே ஆதிமூலம்
ஆகிநின்ற அருளமுதே அடியேனுக்குப்
பொருளானது பாதமல்லால் வேறொன்றில்லை
போதத்திற் பொருந்துதற்குப் புத்திசொல்லு
மருள்மிகவே உண்டான பேர்கள்போலே
மாநிலத்திற் றிரிந்தாக்கால் வசைசொல்வார்கள்
அருள்மிகவே யுண்டாகி யானைபோலே
ஆகிநின்ற அருள்புரியென் னாசான்நீயே. (13)

நீயென்றும் நானென்று மிரண்டங்கேது
நிஷ்களமாய்ப் புத்தியினால் நேர்ந்துபாரு
தாயென்றுந் தந்தையென்று மிரண்டுமுண்டு
சற்குருவின் னருள்சேர்ந்தா லிரண்டுமில்லை
நோயொன்று மில்லையப்பா நினைப்புமில்லை
நோக்குவாய் பூரணத்தை நோக்கினாக்கால்
வாயென்றுங் கையென்றும் மனந்தானென்றும்
வடிவேது மனமோடு மவுனமாமே. (14)

மவுனமாய் மனமொன்றா யடங்கிற்றானால்
மாசற்ற வடிவாச்சு மாயைபோச்சு
கெவுனமாய்ப் பூரணத்திற் சொக்கிப்பின்னும்
கிழிரங்கி வாலாச்சு கிருபையாச்சு
புவனமுத லைம்பொறியு மொன்றாய்க்கூடிற்
புரிசடையோன் வடிவாச்சு போதமாச்சு
மவுனமென்ற பொருளிதென்றே அறிந்தாயானால்
மகத்தான தானவனும் மனதாற்காணே. (15)

காணப்பா வாசியென்ற எழுத்தைநன்றாய்க்
கண்டாக்கால் காயசித்தி காணவேணும்
பேணப்பா உன்மனதை யறியாமற்றான்
பேரொளியாய் நிற்பதுவே பிராணயோகம்
வீணப்பா மனம்பிரிந்தா லொன்றுமில்லை
வேதாந்த சற்குருவை விரும்பினில்லு
பூணப்பா சிவயோகந் தானேயாய்ப்
புகட்டியதோர் குருவருளும் போதமுற்றே. (16)

சுந்தரானந்தர் மெய்ஞ்ஞானச் சுருக்கம் ௰௬.

முற்றிற்று.

திருப்பழனியில் வசிக்கும் ஸ்ரீதெண்டாயுதபாணி ரிஷீஸ்வரசுவாமி யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்தசாஸ்திரம் அச்சிட்டப்பட்டது.

உ

குருவே துணை.

165-வது:

கல்லுளிச்சித்தர் திருவாய்மலர்ந்தருளிய

# சொரூப நிலை சூ சூ.

பேர்சொன்னேன் அவள்சிவத்துக் குறுதியென்று
பேசறியோ மென்றுசொன்ன அம்மைகள்ளி
ஊர்சொல்லு மிவள்பேச்சு நச்சுவாய்ச்சி
ஊதாரி வாய்க்கடுசுக் காரிகாப்பு
சீர்சொல்லக் காலாலே உதைத்தாள்பாரு
சீச்சீச்சீ அவள்குணந்தா னவள்க்கேயாகும்
நேர்சொல்லி அவளையுந்தான் பணிந்தேபோற்றி
நேர்ந்துபார்த் தவளையுநீ நிறுத்திப்பேசே. (1)

நிறுத்துவதுக் கெப்படியோ தன்னைத்தானே
நீமின்மான் வாநீவி உன்னைக்காண
மறுத்துமொழி பேசாதே தன்னைப்பாரு
வாய்மறந்து மறுபேச்சு விளம்பலாகா
சிறுத்தஇடை மதிதெரிவை வாலையப்பாரு
சிவந்தவாய் மலர்ந்தபூக் குவிதலாகும்
ஒறுத்துநீ பேசாமல மடக்கிக்காலை
ஊணிக்கை வாசிகொண்டு வாயில்வாங்கே. (2)

வாங்கினா லங்கனையே மவுனமாகும்
மாவடிவைக் காத்திருந்து கனிவாயுண்ண்
ஓங்கியெழு சபைதாண்டப் பலமுண்டாகும
ஓகோகோ கால்கெதியைப் பாருபாரு
ஆங்கதிகொண் டண்டரண்டஞ் சுத்திமீளும்
அர்க்கரா திரிகோணத் தாயினட்டு
மாங்கனிதா னுணடபல னென்னசொல்வேன்
வாய்மறந்தா லொன்றுமில்லை சூக்ஷம்பாரே. (3)

சூச்சாதி சூட்சமிவள் கால்தானப்பா
சூதுகப டுள்ளகா லிருகாலய்யா
மாச்சாதி இவள்சாதி காலைக்காண
மாதெரிவை அக்காலில் வாதமாச்சு
நாச்சானில் சோதிமதி அமுர்தமுண்ண
நாலுபே ரறிந்தபேச் சிந்தப்பேச்சை
சூச்சாதி சூச்சம்பின் னேதுமில்லை
சுகமினைத லனுபோகி யானல்பாரே. (4)

ஆனாலு மிவளாட்டுக் காலேவாதம்
அங்கனையே கண்டுபிடி வாதஞ்சித்தி
ஊனாலு முப்பாலு மப்பினாலும்
உள்ளபடி நீயறிவாய் தங்கத்தாயை
பூனாலு முப்பூவாற் கட்டும்வித்தை
போக்கறிந்தால் ரசவாதங் கொள்ளைகொள்ளை
ஞானர்பா ரிதைச்சொல்ல யார்தான்கேள்ப்பார்
நாயிலுமே கடையென்பா னேனைதானே. (5)

ஏளையிலே வனுத்துதென்பா ரென்னைப்போலே
ஏகஉப நிடமான சோதிப்பாலை
காலையிலே ஆவின்பால் கொண்டாராரோ
கண்டென்னைக் கண்டவர்க்குத் தொண்டுசெய்வேன்
வழையிலே கதலிகுலை சாய்ந்தமார்க்கம்
வையகத்தி லறியார்கள் மவுனஞானம்
தாளையிலே மாபூத்து நிற்கும்நிற்கும்
தனுகரணக் கலந்தலதால் காணுவாயே. (6)

காணுவது எளிதல்ல விதியேவேணும்
கண்டவர்கள் விண்டதுண்டோ சொல்லக்கேளு
பூணுவது மனம்பூணப் பூண்டுகொள்ளும்
போக்கெனவே நினையாதே போக்கைப்பாரு
ஆணுவது மும்மலமு மகன்றுபோகும்
அதீதமடா இந்நூலை யறிந்துகொள்வாய்
தோணுமது ஏகவெளி பரத்தின்சூக்ஷம்
சொல்பேச்சால் தெரியாது தொட்டுக்காட்டே. (7)

காட்டுவது தொட்டவிட மம்முகமாய்ப்பாரு
காரணத்தால் விட்டவிடங் கோமுகத்தின்சூட்சம்
நாட்டுவது பூரணமாய் நாட்டுங்காலை
நாதாந்த முக்காலும் யெழுகால்குள்ளே
பூட்டுவது திறவுகோ லறிந்துபூட்டு
பூரணமே காரணமாய் முடிந்தபேச்சு
சீட்டுகெடி காரமடா இந்தப்பேச்சு
செப்புமொழி தப்பாது அப்பாற்கேளே. (8)

கேளடா பரஞ்சோதி பதினைந்துஞ்சோதி
கிருபைபெற இன்னமொரு கிரிகைகேளு
நாளடா ஆதித்தன் பூசநாளில்
நலமான தசமிநா ளறிந்துகன்னி
வாளடா அங்கிவால் மூலைநோக்கி
மந்திரவாள் கைபிடித்துச் செபிக்கச்சொல்வேன்
கேளடா முனைமய்யம் அடியின்மூலம்
கிணேசனொடு ருத்திரன்றன் கெதியைப்பாரே. (9)

கெதியான சதாசிவமு முனையின்மையம்
கிணேசனடி யங்கணையே அங்கென்றாறு
பதியான மய்யமடா ருத்திரமூலம்
பதித்திடுவாய் சிங்கென்றும் உங்கென்றுந்தான்
விதியான சதாசிவத்தின் மூலஞ்சொல்ல
விளுப்பத்தும் ஓங்கென்றும் அங்கென்றாறு
கதியான மந்திரமாம் வாளைநீயும்
கைபிடித்த உச்சிதங்காண் இன்னங்கேளே. (10)

இன்னமுமே மந்திரவாள் தனக்குக்கேளு
ஈசனொடு சத்திநிரா மயத்தின்சத்தி
சொன்னமொழி யறிந்துபத்தி ஞானத்தாலே
சொல்மறந்து செய்யாதே மவுனங்கொண்டு
நன்னயமாய் ஆகவனம் கொடுத்துநீயும்
நாற்பத்தி முக்கோண சத்தியென்று
வின்னமது வாராமல் காவாவென்றே
மெய்யுருவே கையுருவே விமலியென்னே. (11)

விமலியே அமலிதிரி சூலிவாமி
விதரணமே உதரணமே மேன்மைத்தாயே
கமலியே சனகசபை நடனமாடிக்
கண்ணொளிக்குள் ஒளியான கருணைவாழ்வே
அமலியே அமரர்பணி ரூபாரூபி
ஆரணமே பூரணமே அருமைமாதே
சமலியே சரோருகமே சருவசித்தி
தந்திரமே மந்திரமே சத்திபென்னே. (12)

சத்தியென்று மவுனமுடன் பத்திவைத்துச்
சமர்முகத்தில் வெற்றிபெற வந்தாயென்று
சத்தியென்று சத்தியமாய் நினைந்துகொண்டு
சாஸ்திரமுஞ் சோத்திரமுந் தனித்தாயென்று
புத்தியுடன் விவேகத்தா லறிவினாலே
பூசைமுறை செய்புகிற வரிசைகேளு
கத்தியென்ற மந்திரவாள் அதனைநீயும்
கணபதிதாள் வைத்துநல்ல கதியைப்பாரே. (13)

பார்முழுதும் ஒருகுடையி லாளவென்றால்
பகர்ந்தசொல்லை மறவாதே நூலைப்பாரு
சீர்பெறவே எண்திசைக்கும் கும்பமெட்டு
செயல்பெருகும் பிரதான கும்பமொன்று
பேரறிவா லிந்திரன்றன் திசையைநோக்கிப்
பேரெட்டுப் பேரையும்நீ மவுனம்வைத்து
கூரறிஓம் சிவாயகுரு நீயேயென்று
கும்பமதுக் கடியரிசி டடிதானென்றே. (14)

படியான படியரிசி திசைதானெட்டு
பரத்திமே பிரணவத்தை நன்றாய்ப்போடு
வடியான சத்திநிரா மயத்தின்கும்பம்
வாகுபெற நடுமையத் திருக்கக்கேளு
அடியான அரிசிபடி மூன்றேயாகும்
ஆகமத்தின் டடியாகப் பரப்பிவைத்து
நெடிதான எழுத்தறிந்து பிரணவமேநீயும்
நீவாவா வென்றிட்டுச் சொல்லக்கேளே. (15)

கேளடா பிரணவத்தில் முக்கோணமிட்டுக்
　　கெதிபெறவு மதினுள்ளே விந்துபோடு
கோளடா ஒருநாளு மில்லையப்பா
　　கும்பமெல்லாஞ் செலத்தைவிட்டுப் பூரித்தேதான்
ஏழடா யென்றுசொன்ன எழுத்தைப்பாரு
　　ஏகமய மானஅந்த எழுத்தையோதி
வேளடா மன்மதன்று னவனேநீதான்
　　வெற்றியடா உலகமெல்லாஞ் சித்திதானே. (16)

சித்தித்த பூசையடா யென்தாய்பூசை
　　திசையெட்டும் வெற்றிகொள்ளு மிந்தப்பூசை
எத்திக்குந் தானவரீ தப்போயில்லை
　　எமிழன்ற ஆதியெழுத் ததனைநீயும்
புத்திக்கு ளதையறிந்து பூசைபண்ணப்
　　பூதலமும் விண்ணுலகும் ஆளப்பெற்றாய்
முத்திக்கு மிதுபாதை அறிவைப்பாரு
　　முன்னவனே முன்னின்ற மூலந்தானே. (17)

மூலமென்றால் நவமூல மேகமூலம்
　　மூலாதி கும்பம்நவ கும்பமெல்லாம்
சீலமுடன் மாவிலையும் தெற்பைசாத்தி
　　செயல்பெருகச் சொர்னபுஷ்ப மதிலேபோட்டுத்
தாலமதிற் பிரதான கும்பத்துக்குத்
　　தங்கமுக்காற் கழஞ்சிதங்கத் தகடுசெய்து
ஆலவிட மமுதாகும் புவனைமாது
　　அச்சரத்தை யடைப்பதற்கு வகையைக்கேளே. (18)

கேளடா கீத்தஞ்சு குருக்கேஅஞ்சாய்க்
　　கீறினாற் பதினாறு அரையுமாச்சு
கேளடா முதலரையில் அகாரம்போடு
　　கிருபையுடன் அகாரம்பின் இகாரம்போடு
கேளடா அதின்பிறகே உகாரம்போடு
　　கெட்டியாய் உகாரம்பின் எகாரம்போடு
கேளடா இல்லமென்ற அரைகள்நாலும்
　　கிலேசமற நாலெழுத்தும் போடுபோடே. (19)

போட்டபின்பு மறவீதி ரெண்டாம்வீதி
புகழாக இகாரமதைப் புகழ்ந்துபோடு
போட்டபின்பு இகாரம்பின் உகாரம்போடு
புத்தியுடன் உகாரம்பின் எகாரம்போடு
போட்டபின்பு பிரணவந்தான் பின்னேபோடு
பூரணமாய் ரெண்டான வீதிவிட்டு
போட்டிடுவாய் மூன்றான வீதிதன்னிற்
புண்ணியனே உகாரமதைப் போடுபோடே. (20)

போடடா உகாரம்பின் எகாரம்போடு
புதுமையுடன் எகாரம்பின் ஒகாரம்போடு
போடடா ஒகாரம்பின் அகாரம்போடு
போட்டபின்பு நாலான வீதிதன்னிற்
போடடா எகாரமதை நன்றாய்ப்போடு
புனிதமுடன் எகாரம்பின் ஒகாரம்போடு
போடடா ஒகாரம்பின் அகாரம்போடு
போதறிவாய் அகாரம்பின் இகாரம்போடே. (21)

இகாரமே நாதாந்த இன்பமாகி
யிருந்ததைநீ கண்டுகொள்ள நாதன்நீயாம்
உகாரமே சிவசத்தி ரூபமொன்றாய்
உற்பனமாய் நின்றதிது உண்மைசொன்னேன்
எகாரமே வகாரசத்தி மயேசனாகி
இருந்துபரி பூரணமா யெங்குந்தானாய்
அகாரமே முதலெழுத்தாய் விந்துநாதம்
அச்சரத்தில் அரிவோமென் றமர்ந்தவாறே. (22)

வாரான திப்படியே வந்தமார்க்கம்
வகைபிரித்துச் சொல்லவென்றா லென்னாற்கூடா
கூறான அஞ்சிலாறாய் நின்றவாறு
கூறுகிறே னெழுத்தறிந்து தகட்டிற்றாக்கு
பேரான அகாரமதில் நகாரஞ்சேரு
பின்னிருந்த இகாரமதில் மகாரஞ்சேரு
வீரான உகாரமதில் சிகாரஞ்சேரு
மேன்மைபெற எகாரமதில் வகாரஞ்சேரே. (23)

வகாரமே அந்தமது முதலாம்வீதி
மறுபடியும் ரெண்டான வீதிதன்னில்
இகாரமதில் மகாரத்தை யிருத்திப்போடு
இப்பாலும் உகாரமதிற் சிகாரஞ்சேரு
எகாரமதில் வகாரத்தை இணங்கப்போடு
இதுவன்றிப் பிரணவத்தில் யகாரஞ்சேரு
செகவாழ்வை நம்பாதே நூலிற்சொன்னேன்
திறத்தையுந்தான் கண்டறிநீ திண்ணந்தானே. (24)

திண்ணமிது மூன்றான வீதிதன்னிற்
செப்புகிறேன் உகாரமதிற் சிகாரஞ்சேரு
எண்ணுமிது ககாரமதில் வகாரஞ்சேரு
இயல்பான பிரணவத்துள் யகாரஞ்சேரு
மண்ணுமுத லாதியென்ற அகாரத்துள்ளே
வழியுடனே நகாரத்தைச் சேருசேரு
ஒண்ணுமுதல் மூன்றான வீதியாகும்
உத்தமனே நாலான வீதிகேளே. (25)

நாலான வீதிதனில் எகாரத்தோடே
நலமான வகாரத்தை நன்றாய்த்தாக்கு
மேலான பிரணவத்துள் யகாரஞ்சேரு
மேன்மைபெற அறிவிருந்த அகாரத்துள்ளே
சேலான நகாரமதைச் சிறக்கப்போடு
செப்பினேன் இகாரமதில் மகாரஞ்சேரு
காலான ததுபார்த்து நடக்கவேணுங்
கண்டவர்கள் விண்டதில்லை கண்டுபாரே. (26)

பாரடா உடலாகி உயிருமாகிப்
பகரரிதாய் நின்றபொருள் எழுத்ததாகும்
சேரடா கிரிகையென்ற பேச்சுக்கெல்லாம்
சிவனறியத் தாயறிய வலுத்தசித்தி
ஊரடா உலகமெல்லாம் வணங்கும்பாரு
ஊடாடும் வாசிகண்டால் யோகமாச்சு
ஆரடா யிதையறிவா ரறியாவிட்டால்
அவனிதனிற் பிறந்திறந்து அலைவார்பாரே. (27)

அலையாம லசைந்தாடும் வகாரசத்தி
ஆச்சரியங் காட்சியென்ன ஐம்பத்தொன்றாய்
நிலையாமல் நிலைத்தாக்கால் வாசிபாரு
நீயறிந்து கண்டுகொண்டால் நீயேஞானி
சிலையான சிலைவளைத்து நாணைப்பூட்டிச்
சீக்கிரத்தி லச்சரத்தாற் குறியைப்பாரு
மலையாதே ரவிமாது எந்தாயாளுள்
மாநீலி யிருந்திட்ட வலுவைப்பாரே. (28)

வலுவறிந்த வழையடா வழிற்பிச்சை
வாங்கினே னங்கதுகொண் டம்பத்தொன்றாய்
வலுவறிந்த பெலத்தாலே ஒன்றைக்காண
வாதபா வேதியன்றா னெனக்குமாற்றான்
சலுவறிந்து தான்மாண்டு கண்டுகொண்டு
சொல்லிவிட்ட குறையறிந்து கண்டுகொள்வாய்
தலமறிந்த மகபதியாம் புவனைமாது
தன்பதியாய்ப் பதினாறு அரையும்பாரே. (29)

அரையான பதினாறு அரையிற்குள்ளே
அடங்கிநின்ற திருடியவள் சூக்ஷங்காணேன்
மறைவாகச் சொல்லுகிறே னறிந்துபாரு
மனதறிந்த மாதுகா லம்பத்தொன்றும்
அரையான முதலரையில் நகாரத்துள்ளே
அதிலசகம் இருபத்தி மூன்றுபோடு
துரையாருங் கண்டறியார் மகாரந்தன்னிற்
றோன்றவே யேகமொன்றாய்த் துலங்கப்போடே (30)

போட்டபின்பு சிகாரமிரு பதுமேனன்றாய்ப்
பொருந்தவே பதித்திடுவாய் வகாரந்தன்னில்
நாட்டவே வழதிலே கடைசியாகும்
நன்றான பதியறிவாய் ரெண்டாம்வீதி
நாட்டிமைகொண் டிம்மாவில் நவமும்பத்தாய்த்
தானறிந்து போட்டபின்பு சிகாரந்தன்னிற்
கோட்டரவு யில்லாத பெட்டைத்தாக்கிக்
கொண்டிடுவா யப்பாலும் குறியைக்கேளே. (31)

குறியறிந்து வகாரமிரு பத்திரெண்டு
கூறிந்து பதிகடைசி யகாரந்தன்னில்
நெறியறிந்து போடுரெண்டு மூன்றும்வித்தி
நிறைநின்ற சிகாரமதில் அஞ்சைத்தாக்கு
அறிவறிந்து வகாரமதிற் பதினெட்டாகும்
அப்பாலும் யகாரமதில் மூன்றைத்தாக்கு
பொறிகரணம் தம்பனமாம் நகாரந்தன்னிற்
போதரவா யிருபத்தி யஞ்சும்போடே. (32)

போடடா வகாரமதில் நாலைப்போடு
புத்தியுடன் யகாரமிரு பத்திநாலு
போடடா நகாரமதில் ஆறைத்தானே
போதரவா யின்பமென்ற மகாரத்துள்ளே
போடடா பதினேழுங் கடைசியாகும்
பூரணமா மொருவீட்டுக் கெழுத்துமூன்று
நாடடா உலகமெல்லா முன்னைத்தேடி
நாடிவந்து சரணமெனப் பணிவார்பாரே. (33)

பாரிலுள்ள அரசரொடு மனுக்களெல்லாம்
பத்தியுடன் நீசொன்ன படியேகேட்பார்
தேரிலுள்ள சித்திரத்தைப் பார்ப்பார்கோடி
செங்கமல முநித்தகண்ணாள் செய்தவேலை
ஊரிலுள்ளோர் அதோமுகத்தன் பேரைச்சொல்லி
உரைக்கறிவார் அவள்சாதி உரைக்கமாட்டார்
சீரிலுள்ள சிங்கார சத்திநின்ற
சித்திரத்தைக் கண்டுகொள்ள மாட்டாரென்றே. (34)

என்றுரைத்தேன் சொன்னமொழி சூக்ஷங்கண்டு
இருந்தபுத்தி கொண்டறிவாற் கண்டுதேரு
இன்றுரைத்தே னல்லாது விண்டுசொல்ல
என்னாலுங் கூடாது தன்னைப்பாரு
அன்றுரைத்த தந்தைமுதல் மவுனங்கொண்ட
ஆதிமுதற் றுயாதி யுனக்கேசொன்னேன்
நன்றுரைத்த மொழியறிவாய் பங்கைக்கேட்டு
நாடிநீ யெப்படியும் வாங்கிக்கொள்ளே. (35)

கொள்ளென்றேன் கண்டுகொள்ள அறியாப்பாவி
குறையன்றி விட்டகுறை யிந்தநூலே
உள்ளென்று உள்ளன்பாய் அறிவினாலே
உட்கொள்ளச் சொன்னதிந்த நூலைப்பாரு
கள்ளென்ற கள்ளமனக் கசடைத்தானும்
கசடறுத்துக் கொள்ளப்பா இந்தாசொன்னேன்
விள்ளென்று விள்ளாதே அம்பத்தொன்றாய்
மேவிநின்ற துட்காலைச் சொல்லக்கேளே. (36)

சொல்லக்கேள் நகாரமது மூன்றுமொன்றாய்த்
துலங்கிநின்ற எழுத்தறிவாய் மகாரமூன்றும்
சொல்லக்கேள் மாலெனவே ஹரீஓமென்று
சொற்பொருளால் அரிமுதலாய் நவமாய்நின்று
சொல்லக்கேள் உலகமெல்லா மாயையாலே
சுழுவாகத் தாய்மயக்கா லிறந்தேபோனார்
சொல்லக்கேள் பின்னுமது சிகாரமூன்றும்
தோன்றியொன்றாய்க் காலோடே சேரும்பாரே. (37)

பாரேநீ வகாரமென்ற காலேழுக்கால்
பகரீது பின்னாலே சொல்வேன்கேளு
பாரேநீ யகாரமது மூன்றும்யேக
பரவெளியாய் நின்றபொருள் யார்க்குந்தோணு
பாரேநீ அஞ்செழுத்து யேகமொன்றாய்ப்
பார்முதலா யாகாச வெளியாய்த்தோன்றிப்
பாரேநீ இன்னமுநான் சொல்லக்கேளு
பகருவேன் நகாரத்தில் அம்பத்தொன்றே. (38)

அம்புவைத்த மகாரத்திற் றொகையைக்கேளு
அப்பனே முப்பத்தி யேழுமாகும்
வம்புகளை யறுக்கும்நல்ல சிகாரந்தன்னில்
வழிதுறையு முப்பத்தி மூன்றேயாகும்
இம்புவைத்த வகாரத்தம் பத்திநான்கும்
இயல்பாகப் பின்புசொல்வேன் யகாரந்தன்னிற்
றெம்புவைத்த இருபத்தொன் பதுமேநன்றாய்ச்
சேர்ந்ததொகை இருநூற்று நாலுந்தானே. (39)

நாலான வகாரமது வெழுத்துநாலும்
நன்றான பூரணமா மம்பத்தொன்றாய்
மாலான பிரமாருத் திரனுமாகி
மயேசனொடு சதாசிவனுந் தானேயாகி
காலான திரிகாலு முக்காலாகிக்
கனகசபை திருநடன மாடுங்காலை
மேலான நாதாக்க ளறியுங்காலை
மெய்யறியக் கண்டறிநீ முக்காலென்றே. (40)

முக்காலுங் காலறிந்து நடக்கச்சொன்னேன்
முதலான தாயாதி பங்குஞ்சொன்னேன்
தக்காத பொருளுனக்குத் தக்குமென்றேன்
சமத்தில்லாப் பிள்ளையென்று லென்னசொல்வேன்
மிக்காரு மெதிரில்லை காலைக்கண்டால்
மேலான நாதனெனப் பெயருண்டாகும்
சிக்காதுஞ் சிக்குமடா அறிவில்நின்றால்
சிவயோகி யாவதுவுந் திண்ணந்தானே. (41)

திண்ணமிது அம்பத்தி யொன்றுங்காலை
சிதம்பரத்திற் றிருநடன மாடுங்காலை
ஒண்ணுமது ரெண்டாகி மூன்றுமாகி
ஓரைந்தா யெட்டாகி உலகமெல்லாம்
எண்ணுமிதை யறியார்க்குக் காலனாகி
யிருந்ததா லெவ்வுயிர்க்கு மிண்டமாகி
அண்ணுமுத லின்றுவரை யழியாக்காலை
ஆரறியப் போறார்க ளறிவாய்ப்பாரே. (42)

அறிவாய்நீ இன்னமுமே சொல்லக்கேளு
அஞ்செழுத்தில் நகாரமது மண்ணாய்ப்போச்சு
குறியான மகாரமது தண்ணீராச்சு
குறிப்பறியச் சிகாரமது அங்கியாச்சு
நெறியான வாயுவது வகாரமாச்சு
நீயறிவா யகாரமது வெளியுமாச்சு
பிரியாதே பிரிந்துநின்ற அஞ்சுங்கூடிப்
பேசாத நாதவிந்தாற் சடமுமாச்சே. (43)

சடமெடுத்தா யஞ்சாலே பஞ்சபாவி
தன்னறிவை விடாதேயடா யின்னங்கேளு
உடலெடுத்த விந்தவடா சிகாரமாச்சு
உற்றுப்பார் தசநாதம் வகாரமாச்சு
விடமெடுத்த நாதமது ஜடத்தைக்காட்டி
மேன்மையுள்ள பொன்னுருப்போ லுயிர்கட்கெல்லாம்
நடனமிட்டாள் சிலாக்கியம்போல் முக்கோணத்தில்
நச்சுவாய் நீலியுட நடனந்தானே. (44)

நாகவல்லி கமலவல்லி நாதாந்தவல்லி
நவச்சார மானறீங் காரவல்லி
மோகவல்லி மதனவல்லி ஞானவல்லி
மொழிந்தமறை நூலாகி மொழியும்வல்லி
தேகவல்லி சித்தாந்தந் தெளிந்தவல்லி
தேவிபரி பூரணமாய் நிறைந்தவல்லி
போகவல்லி போதறிவாய் விளங்கும்வல்லி
பூநாக வல்லிமா நாகந்தானே. (45)

மானுகம் அஷ்டமா நாகம்பூண்ட
மதனரதி மதரூபி வகாரசத்தி
தானுக மூலத்தெழுந்தாள் முன்னும்பின்னும்
தானொருத்தி பலரூப மானுள்பாரு
ஆனாலு மவள்நச்சு வாயில்நஞ்சு
அகோரவிஷ மதனைநான் தீண்டேன்தீண்டேன்
தேனான அமுர்தரச மானுளென்னைச்
சிறியான்றன் நங்கையெனச் செப்பினாளே. (46)

செப்பினாள் சிறியான்றன் நங்கைமூலம்
செப்பியபின் மூலத்தால் விஷங்கள்போச்சு
ஒப்பினாள் தசமியென்ற பத்தாம்நாளில்
உட்கொண்டு பாருமம்மா வாசியென்றால்
ஒப்பினான் பிரியாமற் றன்னைத்தானே
உறுதியந்த வாசியது நாற்காற்சீவன்
தப்பியே போகாம லின்னூற்கொண்டு
சரடாகி முருக்கியதைக் கட்டுகட்டே. (47)

கட்டடா எட்டாலே ரெண்டைக்கட்டு
கபடறிந்து கொண்டாலே விந்தைக்கட்டு
விட்டடா போகாது வாசிசொன்னேன்
மேலேறி யெட்டெட்டாம் வீதிபாய
ஒட்டடா பிசகாது இந்தவொட்டு
உட்கோட்டை பிடிபடும்நீ வாசியேறு
ஒட்டடா ரெண்டொட்டா லுலகமெல்லாம்
ஒருகொடியிற் போய்மீளும் உண்மைசொன்னேன். (48)

உண்மைஇந்தப் படிசொன்னேன் நூலைத்தானே
உற்பனமாந் தப்பாது இன்னங்கேளு
நன்மையென்ன பஞ்சகர்த்தாள் பீஷந்தனனே
நாட்டுவா யவரவர்கள் பதியும்போடு
இம்மையிலே நன்மைதரும் இந்துநூலை
யிகழாதே தவறாதே நூலைப்பார்த்துத்
தன்மையுடன் பரித்தகட்டிற் பரிக்கும்போது
சரமடக்கிப் பதித்திடுவாய் சத்யமாமே. (49)

சத்தியமாய்த் தகடுசெய்யக் கருவையெல்லாம்
தனையறிய அகஸ்தியருஞ் சொன்னார்பாரு
அத்தனையுங் கலைக்கியான சூஸ்திரத்தில்
அதன்விபரம் வழிதுறையாய்ச் சொல்லிப்போட்டார்
புத்தியுடன் அந்நூலைப் பாருபாரு
பூரணமாய் நின்றபொருள் நன்றாய்ப்பேசும்
சித்திதரும் மையொன்றில் வசியம்வாதம்
செப்பினார் அஞ்சனமு மறைப்புத்தானே. (50)

மறையாமற் சொல்லிவிட்டா ருலகவித்தை
மையொன்றில் சொன்னதைநீ கண்டுசோதி
விரையொன்றில் பலகலராய்த் தோன்றுமாபோல்
வித்தொன்றிற் சதாகோடி வித்தையாச்சு
நிரைநேராய்க் கால்தலைபாய் மவுனங்கொள்ள
நிலைத்தசித்தி கருவிடையம் நன்றாய்த்தோணும்
சுரைவிதையே போட்டாக்கால் பாகலாமோ
சொன்னமொழி நுணுக்கமதாய்த் தொகுத்துப்பாரே. (51)

தொகுப்பாக அகஸ்தியரு மின்னமுந்தான்
சொன்னவா யிரத்திரு நூறுதன்னில்
வகுப்பாக அதிற்பிரித்து முன்னூறாக
மகத்தான யோகமுதல் கிரியையெல்லாம்
முகப்பாக நவமூலம் ஏகமூலம்
முதலரிய நவகுளிகை செய்யச்சொன்னார்
அகப்பாழாய்ப் போகாமற் றீபமேற்றி
அதிலிருந்து வாழ்ந்திருக்கச் சொன்னார்பாரே. (52)

வாழ்ந்திருக்கத் திருவிளக்கை அமராமற்றான்
வளர்ந்தேற அரைப்படியா மெண்ணெய்தன்னில்
வாழ்ந்திருக்க ஆழாக்கு விளக்கில்விட்டு
வையகத்தி லகம்விளங்க வைக்கச்சொன்னார்
வாழ்ந்திருக்க உலகத்தோ ரறியாமற்றான்
மாண்டிறந்து போனார்கள் ஐயோஐயோ
வாழ்ந்திருக்கச் சொன்னார்பார் முக்கோணத்தில்
வதனவட்டம் புருவமையம் அருமைதானே. (53)

அருமையிலும் உருமைவைத்து ஆத்தாள்பாதம்
ஆனந்தத் திரிகோண மவுனங்கொண்டு
உருமையுடன் சட்கோண மேற்கோணத்துள்
உற்பனமாம் பரப்பிர்ம வித்தைவித்தை
திருவையறி யோகமதால் திருத்தாள்பற்றித்
திருவிளக்கும் அமராமற் றூண்டித்தூண்டி
பெருமையுடன் வாழ்வையெனச் சொன்னேன்புத்தி
பெலத்தபுத்திக் காரனென்றாற் பேணிப்பாரே. (54)

பேணிப்பார் சரியைமுதல் கிரியையோகம்
பேரின்பத் தடிமூல நாதஞ்சொன்னேன்
தோணிப்போம் மனமுகந்து கருவைப்பாரு
சொன்னதக்க அச்சரத்தின் பொருளையெல்லாம்
பூணிப்பாய்த் தகடுதனி லெழுதிக்கொண்டு
பூரணமாங் கும்பமதிற் போடும்போது
காணிப்பொன் னெனக்குமாப் பொன்னுமென்று
கருத்தில்வைத்துக் கும்பமதிற் றகட்டைப்போடே. (55)

போடுமுன்னே கும்பமெல்லாங் கன்னிநூலாற்
போதகமாய்ச் சுத்தியபின் தேங்காய்வைத்துத்
தேடுமுன்னே நீநினைந்த பொருள்தான்வந்து
சிக்குமடா சாலடியில் தப்போயில்லை
ஆடுகின்ற அம்பலவர் உன்னைவிட்டு
அகலார்பார் அமர்ந்திருந்த அதீதந்தன்னை
நீடுபுக ழோங்கும்சோ டசமேசெய்ய
நிச்சயமொன் றச்சயமாய் வளருந்தானே. (56)

வளந்தேறக் கும்பமெல்லாந் தூபதீபம்
வாகுபெறப் பாக்கிலையுந் தேங்காய்வைத்து
வளந்தேற அன்னமொடு பலகாரங்கள்
வர்த்தனையாய்ச் சுராபானம் வைத்துத்தியானம்
உளந்தேற சிவாயகுரு நீயாமென்று
உற்பனமாய்ப் பிரணவத்தை முன்னேஓது
இளந்தலையாய்ப் போகாது யேழாந்தானம்
இம்மையிலே நினைத்ததெல்லாம் பலிக்குந்தானே. (57)

பலிக்குமது கோடிசித்து தியானத்தாலே
பகர்ந்தசொல்லை மறவாதே மவுனத்தாலே
பலிக்குமது சிவசுருக்கங் கண்டாயானால்
பதியிலரி புவனைபிர சன்னமாவாள்
புலிக்குருதான் பூனையாங் கருவைச்சொல்லி
புலியூரிற் குடிபுகுதப் பொருளைக்காட்டிப்
புலிக்குஅரி சிங்கமென நின்றரூபம்
புகழுமறை நாலுமொன்றாய்ப் பொருந்திப்போச்சே. (58)

பொருந்தாது பொருந்துமடா இந்தப்பூசை
புவனைதிரி புரைசத்தி வாலைமாது
இருந்தாள்பார் சிவசுருக்கம் நாதரூபி
யென்தாயார் ஏழைவெகு வலுமைக்காரி
சிறந்தாள்நான் நீயெனவே சொன்னாளென்னை
சீச்சீச்சி வாவாவா வென்றாள்தன்னை
நிறைந்தாளே பூரணியா யுலகமெங்கும்
நின்றாளே வாதக்கால் வேதக்காலே. (59)

வேதக்கால் பிடித்தோர்கள் அனந்தங்கோடி
வேதாந்தத் துரையறிந்து மேன்மையானோர்
வாதக்கா லறிந்தபேர் வெகுபேர்கோடி
மகத்தான வாழ்வுபடைத் திருந்தோர்கோடி
சீதக்கா லனற்கால்ரெண் டொன்றாய்நின்று
சேர்ந்திருந்த கால்ரெண்டும் ஒன்றாய்க்கண்டு
நாதக்கா லெனவறிந்து கண்டோர்கொண்டால்
நாதனவ னென்றபேர் ராச்சுதானே. (60)

ஆச்சப்பா ராச்சரிய மிந்தவித்தை
அதோமுகத்தி லடங்குசிவ சுருக்கவித்தை
வாச்சுப்போச் சுனக்குமிந்த வித்தையென்று
வாய்மதத்தாற் கருவித்தை சொல்லிவிட்டேன்
காச்சுப்பா லுரையவிட்டுக் கடையாவிட்டால்
கனமான வெண்ணெய்யெடுத் துருக்கலாமோ
போச்சுபோ வென்றுசும்மா யிருந்தேவிட்டால்
புகழுமொழி சாஸ்திரங்கள் பொய்யாய்ப்போச்சே. (61)

பொய்யாம லஞ்சுசீர் அறிவாம்பூசை
போதறிவால் தியானத்தால் நூலைப்பார்த்துக்
கையாலே கொடுத்துபிச்சை யெடுத்துக்கொள்ளக்
கனபவுசு பெற்றுசிவ யோகியாவாய்
பொய்யாது நான்சொன்ன அறுபத்தாறும்
போதறிவாய் விட்டகுறை யறிவாயென்று
செய்யாமற் செய்தநிதி யுதவிபோலே
செப்பினே னிந்தமுறை தப்பாதென்றே. (62)

தப்பாது யென்றுசொன்ன மொழியேதென்றால்
தகடான தங்கமதை யுருக்கிப்பாரு
தப்பாது அக்கினிக்கு உருகாதென்று
சாஸ்திரத்தின் படியுரைத்தேன் யுருகிற்றானால்
எப்போதும் பொய்யெனவே இந்தநூலை
இகழ்ந்துசோ தித்துநீ பாராமற்றான்
இப்போது பொய்யெனவே யுரைத்தாயானால்
ஏழுதலை முறைபுனக்கு நரகந்தானே (63)

தானேநீ உன்னுடைய அறிவினாலே
    தான்வந்த வழிபார்த்து நூலைப்பார்த்துத்
தானேநீ மவுனத்தால் முறைதப்பாமற்
    சகஸ்திரத்தி யிருபத்தி நாலுமொன்றாய்த்
தானேநீ யான்சொன்ன தியானத்தாலே
    சத்திசிவ சுருக்கமெனத் தாயைப்போற்றித
தானேநீ கும்பமெல்லா மிருந்ததண்ணீர்
    தானொன்றில் விட்டுநீ தாமம்பண்ணே. (64)

பண்ணியபின் தாயேநா னுனதுபிள்ளை
    பசலைசிறு மதலையென்று பகர்ந்தேநெஞ்சில்
எண்ணுமெனத் திடத்திருந்து என்னைக்காக்க
    இருப்பாய்நீ யென்றுபரித் தகட்டைநீயும்
திண்ணமுடன் சிரசுதனிற் கட்டுகட்டு
    தீர்க்கமுள்ள மந்திரவாள் தன்னைநீயும்
மண்ணிலுள்ள யெனதுபகை மாற்றவென்று
    மாதவத்தால் சொரூபசிவ சுருக்கம்பாரே. (65)

சிவசுருக்கம் அறுபத்தி யாறுயொன்றாய்ச்
    செப்பினேன் கருவறிந்து கொண்டேகொள்க
பவமறுக்கும் கசடறுக்கும் மவுனந்தோன்றும்
    பதியான வுலகமெல்லா மொருவனாள
நவசுருக்க மாயறிவா யெந்தாய்பூசை
    நாதாந்தத் திரிகோணத் துள்ளாய்நின்ற
தவசுருக்கம் மவுனமதாய்ப் பார்த்தோரெல்லாம்
    தவயோகி யெனப்பேரு பெறுவார் முற்றே. (66)

கல்லுளிச்சித்தர் சொரூப நிலை சஉசு.

முற்றிற்று.

ஐயம்பாளையத்தைச்சேர்ந்த சித்துரேவுகிராமம் மகா-ள-ள-ஸ்ரீ ஸ்ரீமான் சின்னச்சாமி நாயக்கரவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்தசாஸ்திரம் அச்சிடலானது.

உ

பரமபதி துணை.

166-வது:

# கல்லுளிச் சித்தர் பாடல்.

## ஆனந்தக்களிப்பு.

பிர்ம சொரூபத்தை நாடு உன்
கர்ம வினையோட வழிதனைத் தேடு
மர்மந் தெரிவிக்கும் வீடு கண்டு
தர்ம நெறிமுறை தன்னிலில்நீ கூடு. (1)

ஆதி பரம்பொருளைப் போற்றி எந்த
னாத்தாளின் பாதத்தை மனதினி லேற்றி
சோதிச் சுடரொளியை நோக்கி எங்கள்
தூயகுரு பதமலரைச் சிரமீது தாக்கி. (2)

முத்தர்கள் தன்னைத் துதித்து மேலாம்
மோனத்தின் நிலையை மனத்திற் பதித்து
சுத்த நிராமயங் கண்டு வேதச்
சுடரெனும் பொருளையுன் னிதயத்துட் கொண்டு. (3)

ஞான நிலையறிய வேண்டி யிந்த
ஞாலத்தி லாபாச வழிதனைத் தாண்டி
மோன நிலையினிற் சேர்த்து ஆதி
முச்சுட ராகிய தீபத்தைப் பார்த்து. 4)

நித்தியா னந்தமெனத் தேர்ந்து சதா
நிர்மல மானதோர் பரவெளி சார்ந்து
பத்தியாய் வாழ்ந்திட வேணும் ஆசா
பாசத்தை நீக்கில்மெய்ஞ் ஞானமது தோணும். (5)

எட்டி பழுத்தாலு மென்ன காசு
யீயாத லோபிகள் வாழ்ந்தாலு மென்ன
கட்டி வராகனிருந் தென்ன அதைக்
காவல்பல பேரொடுநீ காத்திருந் தென்ன. (6)

மூலக் கணேசனைக் கண்டு அவர்
முன்னின்று போற்றியே தெரிசித்துக் கொண்டு
கோலத் துடனங் கிருந்தும் செல்லக்
குணமாயா னந்தப் பரவெளி பொருந்தும். (37)

ஜோதி சொரூபத்தைப் பார்த்து அதிற்
சொக்கியே நின்றிடத் தேகமும் வேர்த்து
ஆதி மகாலிங்கங் கண்டு அதில்
ஐம்புல னொடுங்கியே ஆனந்தங் கொண்டு. (38)

சுந்தரர் தெரிசனஞ் செய்து சிற்
சொரூப நிலையதனில் நின்றுநா னுய்து
அந்தரத் தோர்களைப் போற்றி யிது
ஆச்சரிய மென்றேதான் வாசியையேற்றி. (39)

கண்டுகொண் டேன்சிற் பரத்தை ஞானக்
கண்கொண்டு பார்த்தறிந் தேனச்சரத்தை
விண்டியான் சொல்லமுடி யாது இந்த
மேதினி யோர்க்குரெலகு விற்கிடை யாது. (40)

மனமான தடங்கியே போச்சு இந்த
மாயையை விட்டுக் கரையேற லாச்சு
சினமென்னுங் கோபமறுந் தாச்சு யோகஞ்
சித்திய தாகவே முத்தியு மாச்சு. (41)

ஆசையை யொருநாளும் வேண்டேன் மே
லாறு தலத்திலுங் கண்டதைப் பூண்டேன்
ஓசை யொளிக்குளே நின்றேன் அதை
யுற்றுற்றுப் பார்த்துப்பின் னங்கங்கு சென்றேன். (42)

ஆயிரத் தெட்டிதழுங் கண்டேன் கண்
டந்தந்த நிலையையும் மனதினிற் கொண்டேன்
தாயின் சொரூபத்துள் ளாச்சு இன்னும்
சகலபுவ னங்களும் பிண்டத்தி லாச்சு. (43)

அஞ்ஞான மென்பதும் போச்சு பர
மானந்த மென்ப ததுநீசப் பேச்சு

மெய்ஞ்ஞான மென்பது பொய்யோ இந்த
மேதினி யோர்க ளறியார்க ளையோ. (44)

இல்லற முள்ளதும் நாமே அதி
லேற்கையா யிருந்தோர்க்குச் சாதன யாமே
நல்லறந் தேடியலை யாதே மேலாம்
நாதாந்த வெட்டவெளி யாயிருக்கும் போதே. (45

மோன நிலைகண்டு தேறு பர
முத்திக்கு வித்தான கருத்தில்நின் றேறு
ஞான நிலையதுவுங் கிட்டும் பூவில்
நாடி யிருக்கலாம் வெகுகால மட்டும். (46)

சுழிமுனை திறக்கும்வழி பாரு அந்தச்
சூட்சாதி சூட்சத்தைக் கண்டதின் சீரு
வழியுடன் சுந்தரர் நூறே சொல்லும்
மார்க்கத்தின் வழியாகச் சென்றுநீ தேறே. (47)

முச்சரும் எண்ணூறிற் சதமாய்க் கொஞ்சம்
வாய்விண்டு சொல்லினர் தெரியவே பதமாய்
இச்சை யொழித்துநீ பாரு அதனை
விகபர மிரண்டையுங் காணவெகு சீரு. (48)

தீட்சையின் மார்க்கமுந் தெரிய குரு
தேசிக னிருநூறில் வழிதுறை யரிய
மாட்சிமை யாக வுரைத்தார் அதை
வாங்கித் திருமூலர் குகைக்குள் மறைத்தார். (49)

சட்டமுனி கற்பவிதி நூறு அதனைத்
தான்பார்த்து நல்ல வழியினிற் றேறு
வெட்டவெளி யாகவே தோணும் ரோமர்
விரித்துச்சொன் னாரந்த ஐஞ்ஞூறிற் காணும். (50)

செய்பாக மானதுவு முன்னே கருவைத்
தெரிந்துகுரு முறையாகச் செய்வாய்நீ பின்னே
கைபாகத் துடன்செய்தால் ஞானம் கிட்டுங்
கடத்தேற லாமந்தத் திடத்துடன் மோனம். (51)

பத்திய பாகங்க ளாக முறையாய்ப்
பாங்குடன் தானுண்பாய் நரைதிரை போக
முத்தி வழியைத் திறந்து பார்த்து
மோசங்கள் வாராமற் செய்வாய் சிறந்து. (52)

பூலோக ஆசையைத் தள்ளு ஞானம்
போதிக்குங் குருகண்டு அடுத்துநீ கொள்ளு
சாலோக பதவியது கிட்டும் வேறே
சம்பத்து வேண்டுமோ யிதுவந்த மட்டும். (53)

யோக முறைகை விடாதே விட்டுவிட்
டொன்றுந் தெரியாமல் நீயுங் கெடாதே
பாகம தாகவே செய்வாய் பய
பத்திபா யெப்போதுஞ் சரத்தினி லுய்வார். (54)

ஞான வழிகண்டு கூடு வரும்
நலமான முத்தி வழிதனைத் தேடு
மோன நிலையிலே நில்லு குரு
முத்திக் கிடமான வழியிலே செல்லு. (55)

வாழ்நாளை வீணில்வி டாதே கெட்ட
மாய வலையகப் பட்டுழ லாதே
பாழ் போகி லெதுவும்வ ராதே பரி
பக்குவ மாகிடில் நீபின்னி டாதே. (56)

தூக்கத்தி னாசைவை யாதே யிது
சுகமெனக்காண்பித்துமயக்குமப் போதே
ஊக்கத் துடனிருப் பாயே தூங்கி
லுலகோர் சிரிக்கவு டம்பெடுப் பாயே. (57)

மீறித் திரிவதும் வீணே பரியாச
மேசெயும் வார்த்தைக் கிடமது காணே
தேறித் தெளிவது பாரம் உந்தன்
சித்த மடக்கித் திரிவது சாரம். (58)

ஆணுவத் தால் வருங் கேடு அதை
யறியாமல் நடப்பது சுணைகெட்ட மாடு

தாணுவின் பாதத்தை நாடு என்றுந்
தன்தேகம் போகாமற் கற்பங்கள் தேடு. (59)

ஆசை மயக்கிற் செல் லாதே நீ
அன்புடன் தெரிந்ததை வெளியிற் சொல் லாதே
பாசத் தகப்படா நீயே ஞான
பரிபூர ணானந்த பதமடை வாயே. (60)

பார்த்துத் தெரிந்து கொள் ளென்றே எனக்குப்
பட்சமாய்ப் போகருஞ் சொல்லினா ரன்றே
ஆத்தும சுத்தியாய் நானே அவரை
அன்புடன் போற்றிப் பணிந்துகொண் டேனே. (61)

குருநாத னென்னை மதித்து பேர்
கொடுத்தாரே கல்லுளி யென்றே விதித்து
திருநாமம் பெற்றபின் னானே அவரைத்
தெரிசித்து யோகத்தின் சித்திபெற் றேனே (62)

கல்லுளிச் சித்தனென் றேதான் வாயாற்
கனிந்துமே கூப்பிட்டார் சித்தர்க ளோதான்
சொல்லிய படியென்னைத் தானே எவரும்
சுட்டி யழைத்திடில் நேரில்வரு வேனே. (63)

என்னாலு மறுபதோ டாறு நானும்
இயம்பினேன் சக்கரத் தியல்பதின் கூறு
முன்னாலு மின்னாலு மாய்ந்தே நீ
முக்கிய மின்னதென மனதுக்குள் வாய்ந்தே. (64)

சாத்திர மெத்தனையோ கோடி சித்தர்
தான்சொன்ன வாத வயித்தியந் தேடி
சூத்திரம் பத்தொன்ப தாக யானும்
சொல்லிய நூல்தனை வழிதுறை யாக. (65)

பார்த்துத் தெளிந்தவனே சித்தன் பரி
பக்குவ மாக அறிந்தோனே பத்தன்
நேர்த்தியா யென்னூல்கற் றோனே அவன்
நீடூழி காலம்வரை யோகம்பெற் றோனே. (66)

கல்லுளிச்சித்தர் பாடல் சுசு.

முற்றிற்று.

நித்தியம நித்தியமென் றெண்ணார் நிகழ்ஜெகத்தைச்
சத்தியமென் றெண்ணித் தளர்வார் தவிப்பார்கள்
புத்திபுகுதார்நின் பொன்னடியைப் போற்றுதற்குப்
பத்தியிலார்க் குண்டோ பலன்தாய் மனோன்மணியே. (5)

உண்டா மழிவு முணர்வா ருளவறியார்
பண்டுவிதி யென்றே பகர்வார் மனநினைவே
கண்டாரோ வுன்னைக் காணநினை யார்மயலிற்
றிண்டாடு வாருனருள் சேரார் மனோன்மணியே. (6)

தாரந் தனமென்றே சஞ்சலங்கொள் வார்தவிப்பார்
பாரா ருலகமயற் பற்றாலே யுள்ளுணர்ந்து
வாராரே மெஞ்ஞான வாழ்க்கை தனையடையச்
சேரா ரறிஞருளத் தெளிவே மனோன்மணியே. (7)

நெய்த்தோ னரம்பெலும்பு நிணமு மிறைச்சியொடு
கைத்து நிறையுடலைக் கண்டுபிரித் தாயாமன்
மைத்தீட்டுங் கண்ணா ரெனவரைவார் மங்கைதனைப்
பொய்த்தோற்ற மென்றறியார் புலனர் மனோன்மணியே (8)

தந்தைதாய் சுற்றமென்பார் தாரமென்பார் மக்களென்பார்
சந்தைபோய் மீள்வார்தந் தம்வழிச்செல் வார்போல
அந்த விதம்பிறிவா ரவர்வந்து போம்வாழ்நாள்
சிந்தியா ரெல்லாமென் செய்வார் மனோன்மணியே. (9)

சாடி நமன்வருங்கால் தடுப்பாரோ தங்கிளைஞர்
பிடித்த மக்களைத்தாம் பிடித்திழுத்துக் கொள்வாரோ
நாடுவார் பொய்யென்பார் நண்ணார் பினுமயலால்
வாடுவார் நல்லோர் மயங்கார் மனோன்மணியே (10)

பலமுள்ளோ ரானாலும் பாராள்வோ ரானாலும்
குலமுளோ ராலுனுங் கூற்றுவன்மு னில்லாரே
நிலையில் பெருமையிது நிசமலவே ஐந்தாகும்
புலன்கள் துயர்நல்லோர் பொருந்தார் மனோன்மணியே. (11)

ஆரிருந்தென் னார்போயெ னம்மா வுயர்துணைக்கே
சேருவரோ கங்கைநதித் தீரமுதுந் தேவிநின்னைச்

சாரிடினே சென்மமது சாபல்ய மாகுமெற்குத்
தாரகமாய் நின்றாயே தாயே மனோன்மணியே. (12)

வந்தாலும் போனாலும் வருவதுவே யானாலுஞ்
சிந்தா மதியுடையோர் சிறிதேனுஞ் சிந்துவரோ
எந்தாயே நீயஃதே தென்றே தெளிந்துணர்வாய்ப்
புந்திமகிழ்ந் தின்பப் புணர்வார் மனோன்மணியே. (13)

உப்பி னுடனப்பு மொன்றாய்க் கலந்தன்னத்
துப்பியற்றாள் வைத்தே தொழுதுதுதி செய்வாரே
லொப்பரிய சித்திமுத்தி யுண்டா மெனவறிஞர்
செப்பினர் சூட்சந் தெரியார் மனோன்மணியே. (14)

விண்ணுமண்ணு மொன்றாய் மேவுந் திருப்பதியில்
கண்ணொளியாய் நின்றதிருக் காட்சியே கற்பகமே
உண்ணும லுண்ணுகவென் றூட்டி யமுதளிக்குந்
தண்ணாருஞ் சாந்தகுணத் தாளே மனோன்மணியே. (15)

பூரகமாய்ச் சுழிமுனையில் பூரித்தால் பொன்னுலகத்
தாரகமா மெல்லாத் தவப்பயனுந் தான்கொடுக்கும்
தீரகமாம் யோகமுதற் சித்தியெலாம் செய்தருளப்
பேரகமாய் நிற்பருனைப் பெற்றார் மனோன்மணியே. (16)

வாசி தனைப்பிடரி வழியாக மேலேற்றும்
ராஜ சிவயோகம் நண்ணுவரே நன்னிலமாங்
காசிதனை மேவிக் காட்சியெலாந் தாங்காணப்
பூசனையா னன்று புரிவாய் மனோன்மணியே. (17)

பாலும் நறும்பழமும் பாகுந் தெளிதேனும்
காலுங் கலந்து நடுவணையின் மேலேறிக்
காலு மவர்சிரத்திற் கண்டூட்டிக் காண்பார்க்கு
மேலும் பெருவாழ்வு மேவும் மனோன்மணியே. (18)

இல்லா வுலகமய வில்லையெனத் தேர்ந்தாலும்
பொல்லா மனமயக்கம் போயொளிர்தல் வேண்டுமென்றே
வல்லாளே நின்னருடான் வாய்த்தவர்க்க தாகுமென்று
நல்லாரு மாமறையும் நவிலும் மனோன்மணியே. (19)

மகிழ நினைத்தால் வருமோ பெருவாழ்வு
திகழ நினைத்தார்க்குத் தேவிகுரு வாவாயேற்
பகழு மறிவும் பொருந்தும் பொறைதீரும்
நிகழுமா னந்தம் நிறையும் மனோன்மணியே. (20)

தன்னையறிந் தேதாயுந் தாயுந் தலைவனுமாம்
அன்னைநீ நானு யறிவாய் விளங்குதற்கே
மன்னும் படிக்குனருள் வந்து பெருவாழ்வு
என்னுள் வழங்குதியோ யிரங்கு மனோன்மணியே. (21)

மணியே வறிவுடையார் வான்பொருளாய் நின்றதிரு
வணியே வடியர்பெரு மன்பே யழைத்துணையே
பணியே தொடுத்தவர்கள் பண்பே யென்னையாளுந்
துணையாக நிற்குமருட் சோதி மனோன்மணியே. (22)

காண்பேனோ உன்னைக் கண்டவரை கண்குளிரப்
பூண்பேனோ வம்மா புகழே திருப்புகழே
வீண்காலம் போக்க விழையாம லுன்னடியே
ஊண்கால மும்மறவா வுள்ளருள் மனோன்மணியே. (23)

என்னாளும் பூம்பதத்தை யெண்ணித் துதித்தடியே
னின்னை மறவாம னிற்பதற்கே யாசைகொண்டேன்
உன்னை நினைத்தா ரொருதுயருங் கொள்ளாரே
அன்னையெனைக் கைவிடா யன்பே மனோன்மணியே. (24)

பன்னாளும் யோக பரிசயத்தில் நின்றவர்க்கே
அன்னை துஜங் கட்டிநிற்பா யறிபவர்க்கே யாரமுத
முன்னை நினைத்தா ருயர்பதத்தி லுய்வாரே
என்னைக் கடைத்தேற்றத் கெண்ணு மனோன்மணியே. (25)

நின்னை யறிந்தார் நிலமு மனைதனமு
மென்னநிலை யென்றே யிச்சைகொளா ரச்சமுறு
ரன்னை யுனையடைய வானந்த மாசைகொள்வார்
பொன்னடியைப் போற்றிப் புகழ்வார் மனோன்மணியே. (26)

நம்பினபே ரெல்லார்க்கும் நாயகமாய் நின்றாளே
உம்பர்கட்கு மாதாவா யோங்குநட னத்தாளே

செம்புருதி தீரந் திகழ்சச்சி தானந்தீ
யம்பிகையே நாயேற் கருளு மனோன்மணியே. (27)

ஆத்தா டிருவடியை யலேந்தலேந்து நான்தேடித்
தேத்தாத்தண் ணீர்போற் றியங்கினே றேனமுதே
காத்தாள வுன்றன் கடனதனேக் காத்திலேயே
மாத்தெட்டாப் பொன்னே வரந்தா மனோன்மணியே. (28)

ஆசை மிகக்கொண்டு மன்னே.திருவடியைப்
பூசித்து நின்றேன் போற்றுதற்கென் றேயறிவாய்
மாசறுதாள் வைத்து மகிழும் பெருவாழ்வைப்
பேசி வருகுதியோ பெற்றாள் மனோன்மணியே. (29)

பூரணமாய் நின்றும் பொதுநடன மன்றுளே
காரணியே கற்பகமே கண்ணேயென் கண்மணியே
யாரணமே யன்பே யற்புதமே யாரமுதே
பேரனந்தம் பெற்றவளே பேசு மனோன்மணியே. (30)

அடைந்தேன் திருவடியை யம்மா பிறப்பறுக்கப்
படிந்த நிலேயறிவின் பண்பு படைக்குதியேல்
விடிந்திடுமே யெல்லாமும் வெட்ட வெளியாமே
உடைந்திடுமே மாயை யுளதோ மனோன்மணியே. (31)

கயிலாசத் தாயே கனகசபை யின்மொழியோ
மயிலோ குயிலிசையோ வாத்தியமோ யாழ்வீணைக்
கயலோ புகல்வதற்கு மப்பாற் றிகழுமுன்றன்
செயலறிவார் யாரே தேவி மனோன்மணியே. (32)

மின்னேமின் னுரொளியே விளக்கே விளக்கொளியே
பொன்னேபொன் னுரொளியே பூஞ்சுடரே புத்தமுதே
சொன்னார் மனநிறைவே சோதியே தூவெளியே
நின்னார் புகழறிய நிகழ்த்து மனோன்மணியே. (33)

வாரா வரவாய் வருவாய் மகிழ்வதற்கே
போராருய்ச் செந்தேனுய்ப் பெருகிவருந் தெள்ளமுதே
யாரோ வறிவருனே யறிவா ரறைவாரோ
தாராது தந்தருளுந் தாயே மனோன்மணியே. (34)

சும்மா யிருப்பதெனச சொன்னார் தொடர்ந்தநிலை
யம்மா நிலைத்துநிற்க யஞ்சுவதேன் யஞ்சைமனம்
யெம்மா வடங்குநிலை யேகிசதா னந்தியம்மே
வெம்மாயை சேடமற வேண்டு மனோன்மணியே. (35)

தொண்டர் மனந்திகழத் தூயவறி வானவளே
அண்டினர்க்கஞ் சேலென்ன வாதரித்து நிற்பவளே
மண்டுகின்ற வானந்தம் வளங்குபவ ளேவாழி
கொண்டணைத்தாய் வாழியின்பம் கொடுப்பாய் மனோன்மணியே

இராமானந்தர் ஞானமனோன்மணி நூ.

முற்றிற்று.

மதுரை யானைக்கல் தெரு சின்னபிச்சன் சேர்வைகாரரவர்கள் குமாரர் வீரபத்திரன் சேர்வையகாரரவர்கள் கொடுத்த ஏட்டுப்பிரதியின்படி இந்தசாஸ்திரம் அச்சிடலானது.

உ

குமரன் றுணை

168-வது:

திருமூலர் திருவாய்மலர்ந்தருளிய

# குருநூல் முப்புசூஸ்திரம்.

ஆதியென் னாத்தா ளறிவான சோதியை
நீதியாய்ப் போற்றி நிகழ்த்துமுப் பூவாம்
வாதிகள் தமக்கும் வயித்தியர் தமக்கும்
சோதனை தெரியச் சொன்னநூ லெண்ணே.

எண்ணா யிரத்தி லிருநூறு மந்திரம்
அண்ணாவி சொல்ல அடியே னறிந்தேன்
திண்ணாஞ் சிவப்பு சேர்பச்சை நீலம்
வண்ணா னறிவான் வகாரத் திரையமே. (1)

இறையான சூத்திர மிசைமேலை வாசல்
மறைவா யிருக்கும் மதியமு தந்தான்
அறைவாசற் பூட்டை அறிந்துளங் கொண்டால்
இறவா திருப்பா னிறையவ னாமே. (2)

ஆமே யமுத மருந்திட வாதந்
தாமே வருமே தரணியுள் ளோர்க்கு
நாமே கனவில் நாடி யுரைப்போம்
ஆமேபொன் வாத மடியினிற் றானே. (3)

அடியென்ற வாதம் அகலாத பூரணம்
அடியான இந்து ஆதி சிவமாம்
படியாகச் சிறுநீர் பரைசுத்தி யாகும்
திடமாய்ச் சிவத்துக்குத திராவகந் தானே. (4)

திராவக மான சிறுநீரிற் காய்ச்சு
சராவகந் தன்னிற் சதாசிவ மேவிக்
கராவக மாகக் கலக்கி ரவியில்வை
யொராவது வற்ற உப்பு வழலையே. (5)

வழலையும் இந்தும் வகையறி வோர்க்கு
வழலையி லேமம் வருடிக்குஞ் சத்தி
வழலையிற் பூவை மாட்டி மணந்தால்
வழலையைக் கொல்லும் வருமெண்ணெய் போமே. (6)

போமே கவர்கள் பொன்தூர மேரு
ஆமேபொன் னயிரத் தெட்டு மறியத்
தாமே யிரவி மதியிரண் டாலே
ஏமமன் னீரி லெடுத்துறைத் தாரே. (7)

உறைத்தார் சமாதிக் கமுரியி னாலே
விறைத்தா ரிருவர் வெளியிற் கிடந்தே
முறைத்தானந் தப்பி முழுதும் விடாமல்
மறைத்தார் பெரியோர் மானிலத் தோர்க்கே. (8)

நிலத்தோர்க் கடியி லிருக்கு மிரவிதான்
கலத்தோரண் ணத்தின் காலிலிங் தாகும்
மலத்தோர் கொளுஞ்சுத்தி வகையறி வாளற்கு
வெலத்தா னொளிர் ஞான வீடது வாய்க்குமே. (9)

வீட்டுக்கு ளொன்றும் வெளியி லிரண்டும்
கூட்டி முடிக்கக் குறிப்பறி யார்க்கு
ஏட்டுக்குட் சர்க்கரை யென்றே யெழுதி
ஊட்டினர் தித்திப்பு உண்டாகும் வாறே. (10)

உண்பார் மடையர் யோக மிரார்கள்
பெண்பால் மருவிப் பிறந்திறந் தார்கள்
நண்பாய்நந் தீச ரடிதொழா தார்க்கு
விண்பூ விரண்டும் விளம்புகி லாரே. (11)

புகலா யடியேய் பூரணி யம்மை
அகலாச் சிவமு மதன்வழிக் கூறும்
மகநீர் ஜலத்தா வலியா ரிவர்கள்
தகையாச் சலத்திற் சமாதிகொண் டாரே. (12)

ஆரு மறியா ரதிரூப சத்தியை
ஆரு மறியாச் சிவமேபே ரின்பம்

ஆரு மறிந்த சிவகங்கை யொன்றாற்
சேருமுட் பூவுந் தெளிகுருக் கொண்டே. (13)

கொண்டலாம் மேகக் குழலியீ தப்பா
பிண்டத்தின் வாழ்வு பேரின்ப சத்தி
அண்டத்தில் மேவ அருந்தநீ ராக்கும்
மண்டல மீதில் வளரிந்து பூவே (14)

பூவே காலாய்ப் புரிவழலை யிந்தாம்
பூவே பெருமை புகலரி மான்களே
ஆவேச மான ஆட்டெலா மிவ்வாட்டு
பூவா விருக்கும் புதுமையைக் கேண்மினே. (15)

புதுமா நிலத்திற் புற்கள்பற் றுது
அதுதான் குறிப்பா மடிமுடி யிரண்டுக்கும்
மதுவா னிலம்போல் வளரடி மூலம்
கதிர்கண் டுலாவக் கங்கையின் பேரே. (16)

பேறுயர் முத்திக்குப் பேரின்பஞ் சித்தி
தேறின தேங்காய் திருகின பூப்போல்
வீறுள்ள வுப்பு வெண்மைப்பிர காசம்
ஆறணி நாத ரவர்வளங் கேளே. (17)

வளங்கேள் நிலவுப்பு வழலையுப் பாகும்
தளங்கேள் நிலத்திற் சமா திருப் பார்கள்
இளங்கொண்டல் மேகத்தி னிந்தென்றும் பேராய்க்
களங்க மறவே கருதவண் ணானே. (18

வண்ணான் வெளுக்த வண்ணம தொக்கும்
கண்ணான கல்லுப்புக் கதிர்கண் டுணர்ந்தே
பெண்ணா ளடுக்கப் பிறவி யவர்க்கு
ஒண்ணாது சுத்த சலமிவ ராமே; (19)

இவர்சிவஞ் சத்தி யிவர்கள்தன் பேர்கேள்
சிவசத்தி யிரண்டு மிரவியிந் தாகும்
புவிவழ லைப்பூப் பூரண மென்றும்
ரவியென்றுங் காலென்றுஞ் நல்லடிப் பேரே. (20)

பேர்தா னடிதான் சுரோணித மென்றும்
வேர்சுட்ட தென்றும் விசைமூல மென்றும்
பேருவர்ப் பூவென்றுஞ் சத்திக்கு பேரே
சிருரை யாதி சிவநாமங் கேளே. (21)

நாமமிந் தென்றும் வழலையுப் பாகும்
நாமமுடி யென்றும் நற்சுக் கிலமென்றும்
நாமசிவ மென்றும் நற்பச்சை யென்றும்
நாமந் தானல மாவென்னுங் கல்லுப்பே. (22)

கல்லுப்ப தென்றுங் காருவ ருப்பென்றும்
சொல்லுவேன் கங்கை சிவசூத்தன் பேர்தான்
அல்லும் பகலு மாக வளர்ந்தோர்
வல்லமை சத்தி வளர்சிவந் தானே. (23)

தானவ னன சதாசிவங் கண்டவர்
தானவ னாகத் தரையி லிருப்பார்
தானவ னென்ற தரைநில வுப்புத்
தானவன் சுத்தி தானறிந் தோர்க்கே (24)

அறிந்தோர் புவியி லவரேமெய்ஞ் ஞானி
அறிந்தோ னவனே வாதத்தின் கூறு
அறிந்தோ னடியுப் பாதியச் சிவமும்
அறிந்தே யுணர்ந்தா லதுவாத மாமே. (25)

வாதமென் றூற்றுன் வருகுமோ சும்மா
வாதம் லபிக்க வருங்குரு வேணும்
வாதத்தின் சுத்தி மதியமு தங்கொள்
வாதங்கை மேலே வருமடி தானே. (26)

தானே வராது வருந்திருற் றங்கும்
தானே ஒருத்தன் செய்தொழி லேவலைத்
தானேசெய் தாலல்லோ கூலிகள் கிட்டும்
தானேநந் தீசர் திருவுளந் தானே. (27)

உளமே பலக்க வொருமுடி கண்டால்
பழமாங் கனிதான் பசியாறு வார்கள்

களமாய் நினைக்கும் கசடற்கு நல்கார்
வெளியான சிந்தை படைத்தோர்க்கு வீணே. (28)

வீணேவ ராது வெளிகண்ட மச்சம்
ஆணையா ணுக்கா லறிவான்வண் ணானைப்
பூணைநற் சத்திபிற் புறங்குடி யிருந்தாள்
மாணா வுனக்கு வகையிது தானே. (29)

தானென்ற முப்பு தன்னை யறியார்
நானென்று பேசார் நாவு மெழும்பார்
ஊனைக் கலந்தே ஒழுகுது நீர்தான்
தானுப்பு வென்ற சலமறி யாரே. (30)

அறியார்மெய் யுப்பறிந் தோனவன் வாதி
சிறியதீக் காய்ச்சல் தன்னிற் சிவக்கும்
உறிவெண்ணெய் யென்று மறியா துலுத்தன்
மறுகித் திரிந்து மலைத்துநின் றானே. (31)

நின்றானே கூத்தன் நிறைசெல்வ மாக
நின்றா னடியில் நிலைக்கும்பொன் வாதம்
நன்றாய் லபிக்க நாயகன் வேணும்
குன்றான தெல்லாங் கொடுமுடி தானே, (32)

முடிவான தெண்ணெண் சரக்கு மரிக்கும்
கொடிதான சூதங் குகையினில் வாடும்
கடிசெம்பு லோகங் களிம்பற் றுலாவும்
துடியான கெந்தி சுருக்கிடப் போமே. (33)

போமேநன் றாகப் பிரபை யிருக்கும்
சாமே சரக்குத் தளிர்தனைக் கண்டால்
சாமே யறுபத்து நாலு சரக்கும்
ஏமத்தைக் காணு மிடுகுறி தானே. (34)

குறியான தட்ட லோகமு மீயம்
குறியான தெண்ணெண் சரக்குக ளீயம்
குறியான ரத்தின மொன்பது மீயம்
குறியா யிருந்து குணங்கள்சொல் வேனே. (35)

சொல்வே னடியைச் சுத்திகள் செய்து
வெல்வாயிந் துப்பை மீறநற் சுண்ணம்
செல்லத் தளிரிணிற் சேர்ந்தணைத் தேதான்
கொல்வாய் குடகரிக் குளாடுங் காணே. (36)

ஆடிடு மெந்தச் சரக்குக ளானாலும்
ஓடிடுந் தூர மேரு வரைக்கும்
சாடிடுஞ் சத்துக்கள் பரிசன வேதி
சூடிடுஞ் சூதம் பிலத்திடுங் கட்டே. (37)

கட்டிய சூத மயநாக நாதமும்
கட்டிய லிங்கமுங் கற்பூர வீரமுங்
கட்டிய கெந்தித் தைலஞ் சுருக்கிடக்
கட்டிய மாற்று அறுபதக் காலே. (38)

காலான செம்புக ளீயங்க ளாகில்
பாலான வெள்ளியிற் பாச்சக் களித்திடும்
மாலான வீரனை மாட்டிடு சூதங்
கோலா கலன்பிர தானியைக் கூட்டே. (39)

கூட்டி யுருக்கக் களங்கம தாகும்
காட்டுத்தங் கத்தில் நாற்பதுக் கொன்றிட
மாட்டிடும் பூரி வளரீயந் தானும்
தாட்டிகக் கிண்ண மெனத்தட்ட லாமே. (40)

ஆமே சரக்கு அறுபத்து நாலும்
போமே புடத்திற் பெரியவ னாகச்
சாமேசெந் தூரந் தனித்தனி வேதை
ஏமந்தப் பாது இதுவுங்கை கண்டதே. (41)

கண்டது செம்புங் காந்தத்தி னீயமும்
உண்டு செமிக்க வுறவறி வாரில்லை
உண்டு செமிக்க வுறவறி வாளற்குக்
கண்டுண் ணு தேன்கனி கைக்கு ளிதாமே. (42)

கைக்குட் பலிக்கும் வகையினிக் கேளு
அக்காரச் சுண்ண மடிமுடி கூட்டி

ஓக்காரத் தெண்ணெய் ஒளித்துக் குருவண்டு
முக்கிய குருவில் முதறகுருவாமே. (43)

குருவிது கெந்தியிற் கூட்டிக் கலந்து
கருவினிற் சேரக் களங்கம தாகும்
பெருவித மாகப் பேரன்பு கொண்டு
ஒருமா களஞ்சி யுரியினிற் றூக்கே. (44)

உரியினிற் செம்பு பொற்செம்ப தாகும்
கரியது மைநூ றுருகுமன் னேரம்
சரியாச் செம்பொளி காட்டத் தங்கமாம்
விரியு மொன்பது மாத்தெண விள்ளே. (45)

விள்ளுவேன் சுக்கில மீதிற் சுரோணிதம்
துள்ளிய குட்டி துரைவீரன் கூடனும்
எள்ளவே யெழுநா ளரைநாகங் கட்டித்
துள்ளுகுட் டிக்குச் சுருக்கிட்டுத் தாக்கே. (46)

தாக்கான கெந்தித் தயில மிரக்கிச்
சேர்க்கல் லுப்பு சிவக்கச் செந்தூரப்
போக்கினிற் பால்வெள்ளி தன்னிலே போட்டுப்
பார்க்க வயசது பத்தரை மாற்றே. (47)

மாறுவரா து மாற்றுள்ள தங்கம்
பேறு புடத்திற் பெரியவ னப்பா
ஏறுபின் னேறு வேணிப் பழுவாய்க்
கூறு முறிக்கக் குளிசெம்பு கூட்டே. (48)

கூட்டுங் கருத்தான் குருவை யறிந்தால்
மாட்டலா மிந்த வகையுட னப்பா
பூட்டிய பூட்டுமுன் பூரண நாமம்
காட்டினே னந்தக் கைமுறை தானே. (49)

முறையை விடாதே முழுமோச மப்பா
இறையள வாகிலுந் தப்பி னிடர்வரும்
மறைகவி யென்று மென்னைவை யாதே
இரைகொண்ட கல்லுப்புச் சேஙியாம் போக்கே. (50)

போக்கினிக் கேளு புதுமா நிலவுப்பைத்
தாக்கிடு நாலுக் கொன்றெனச் சத்தி
பாக்கிடு வீரம் பதினோராஞ் சரக்கும்
சேர்க்கநற் சுண்ணாத் திறவுகோ லாமிதே. (51)

கோலான கோசச் சரக்குள வன்னமும்
சேலான் பீசச் சரக்குந் தெரிந்தார்க்கு
மாலான பொன்மயம் வந்தே யுலாவும்
ஆலா திருக்கி லழிகுருத் தானே. (52)

குருத்தான் முடிக்கப் பருவத மல்ல
கருத்தான்முன் சொன்ன கல்லுப்பைச் செய்யப்
பருத்தண்ட நீரிற் பருவதந் தண்ணீர்
பெருத்துமென் நந்தி பேசிய வாறே. (53)

வாறான சூஸ்திரம் ஆரு மறியார்
பேறான சூதனைப் பேதித்துக் கொண்டவர்
தேறுவ ரவர்குருச் செந்தூரங்கேளு
மீறுகுரு கெந்தி வீரனுங் கூட்டே. (54)

வீரனுந் தாளு பதிதாரஞ் சிலையும்
பூசனுஞ் சீனத்திற் பூரி துருசும்
காரங் கற்பூர சலாசத்துக் கைமுறை
பாரகு தகீர்பத்துக் கொன்றிடச் சரக்கே. (55)

சரக்கெல்லாந் தூக்கி ஒருநின்ற யாக
அரைக்கத் தயில மடைவினிக் கேளு
திருப்பனைக் கள்ளு தெளிந்திடும் வெல்லம்
கருக்கெந்தி ரெண்டுஞ் சமனாகத் தூக்கே. (56)

தூக்கியே காட்டுள்ளிச் சாற்றா லரைவில்லை
ஏற்குந் தயில மிறக்கி யிதிற்றாக்கு
தாக்குஞ் செந்தூர மருந்தை யரைத்து
மேற்கவ சங்கவு தாரிப் புடமிடே. (57)

புடமாறிச் சென்றாற் புலர்ந்த செந்தூரம்
கொட்டாநல் வெள்ளிக் குருபத்துக் கொன்று

இடவே வயது யிரஞ் சிருக்கலாம்
புடமே பிலக்குந் தொழிலுக்குப் பொன்னே. (58)

பொன்னடி பூரம் பொருந்த வரைத்துத்
தன்னடி மூலஞ் சமனாகச் சேர்த்து
அன்னபே திக்கு அதிகவ சந்தான்
மின்னுப்ப தற்கு நிமிளையைக் கொல்லே. (59)

கொல்லும் நிமிளை குருக்கூட்டிச் சேர்த்து
நல்லவங் கத்தில் நலமாக அப்பியே
செல்லப் புடத்திற் செயமான சுண்ணம்
சொல்லப் படாத துரைவங்கந் தானே. (60)

வங்கசுண் ணந்தான் மஞ்சாடி வாங்கி
லிங்கங் களஞ்சிதான் நேரா யுருக்கில்
வங்கம தாகும் வளர்லிங்க மப்பா
தங்கத்திற் சேர்க்கத் தங்கங் களிப்பே. (61)

களிப்பான தங்கங் களஞ்சி குருவிற்
குளிப்பாப் புடத்தில் கொடுக்கச்செந் தூரமே
துளிப்பான லோகந் தொண் ணூறுக் கொன்றை
யளிப்பா யுயர்வங்க மானது லோகமே. (62)

லோகவங் கத்தில் நுண்ணிய நாகம்
பாகமாய்ச் சேர்த்துப் பசுந்தங்கங் கூட்டி
வாகான லிங்கத்தை மாட்டக் களங்கம்
சேகர மான சிவப்புக் களங்கமே. (63)

களங்கமஞ் சாடி கருத்திடும் வெள்ளி
களஞ்சியிற் சேர்க்க வயதெட்டுக் காணும்
வளங்கிய வங்கச் சுண்ணத்தைப் பின்னும்
களங்கொண்ட வங்கத்திற் கவசம் பொதிந்தே. (64)

பொதிந்தூத யியம் பொன்சேர் சரியாய்
வதிந்திடுங் கிண்ணம் வளமாகச்செய்து
இதின்கிண்ணங் கண்ட சரக்குக ளெல்லாம்
அதில்விய னப்பா குளிகைக்கு மாமே. (65)

ஆமேகற் சூதக் குளிகையைக் கண்டால்
சாமே சரக்கு அறுபக்தி நாலும்
போமே கெவுனம் பொன்மேரு மட்டும்
ஆமே மெழுகு அருந்தண்ணீ ராமே. (66)

அருந்தண்ணீ ரான அப்பாகந் தன்னில்
திருந்துசீ னத்தின் சுன்னங் கலக்கிப்
பெருங்குருப் போட்டு ரவியினிற் காண
மருந்துற்ற பாகம் வாய்ப்பினிக் கேளே. (67)

வாய்ப்பா யறுபத்து நாலுபேர் வெவ்வேறாய்த்
தோய்ப்பாய் விளக்கிற் சுருக்கிட மெழுகாம்
எய்ப்பான சேதி யிதிலில்லை யப்பா
போய்ப்பார் மலையும் பழுத்திடும் பொன்னே. (68)

பழுத்திடுந் தங்கம் பத்துப்பத் தாக
வழுத்திடு மட்ட லோகமு மப்பா
கொழுத்திடுங் கோச பீசமி லாவிடில்
விழுத்திடும் பாரு வேதைகள் தானே. (69)

தானென்ற கோச பீச மகிமைய்ய
நானென்று சொல்ல நாவெழும் பாது
போனென்ற பொன்னைப் புகழ்கிட்ட மாக்கும்
தேனென்ற மித்திரா சேதிவிள் ளாதே. (70)

விள்ளக்கே ளப்பா வேதைச்சரக்கு
கொள்ளக்கேள் கோசம் பூரங் களஞ்சி
பிள்ளையின் பீசம் புழுகு களஞ்சி
வள்ளலே வீரங் களஞ்சிய தாமே. (71)

ஆமேகல் வீரம் பீசம தாகும்
கோமேகோ ரோசனை கோசம தாகும்
சாமே ரவிமதி தன்னையே சேர்க்க
ஆமே சரியிடை யாக நிறுத்தே. (72)

நிறுத்து மதுவால் நேர்கொண் டொருநாள்
வெறுக்க வரைத்து விடுமிது கோசம்

மறுத்தொரு நாள்தா னரைக்க முலைப்பால்
குறுக்துள கோச பீசமி தாமே. (73)

இதுதா னரைத்து ரவிகாணச் செய்து
பொதுபால்கற் பூரம் வீரம் புழுகு
அதுகொரோ சனையாண் பெண்ணுஞ் சத்தி
மதியாய்ப் பிழைக்க வகையறியாரே. (74)

அறியார்கள் கோச பீசத்தை யப்பா
செறியுந் தயிரைக் கடைந்திட ஆடை
உறிவெண்ணெய் யாரும் உருக்கநெய் யாகும்
பொறியாத நல்லபொன் வாதக் குருவதே. (75)

வாதச் சரக்கு வாகான வெண்ணெய்
வேதைச் சரக்கை அறியாத மட்டை
போதமிருந் தென்ன மடைய னவனுக்கு
வேதமிருந் தென்ன விளங்காதென் றாரே. (76)

ஆர்க்குந் தெரிய அடக்கிவைத் தேனன்
ஏர்க்குமென் பாடல் இருநாற்றி லப்பா
பார்க்கப் பலன்றான் பலாபல முண்டாம்
மூர்க்கத்தின் மூலம் ரவிஇந்து மூழே. (77)

மூழாத வாத முனையில்லை யப்பா
வாழாத பெண்ணுக்கு மாப்பிள்ளை யுண்டோ
சூழேது சும்மா மதியதி னாலே
ஆழமது குருவி னடிமுடி தானே: (78)

அடிமுடி யான ரவியிந்து கண்டால்
அடிதொழு தேத்தி அரனைப் பணிவாய்
படியென்பார் சத்தி பாதம் பணிந்தே
திடமாய்ச் சிதம்பரஞ் சேர்ந்தறி வாயே. (79)

அறியார்பின் வாதம் அடங்கியே போச்சு
பொறியார் பிரமன்!பொறிதப்ப லாச்சு
மறிகாளிற் காலன் வந்தாற் பணிவான்
அறுவகை நீரி னதிசயங் கேளே. (80)

அறுவகைச் செயனீர்.

கேளாய் புளிரெண்டு கெடிபூர மொன்று
தாளார் வெடியுப்புத் தானிரெண்டு சீனம்
ஆளான காரமொன் றடிமுடி சேரு
மாளாத் துருசொன்று மாட்டி யரையே. (81)

அரைப்பாய்நீ யந்தப் பழச்சாற்றி னாலே
விரைப்பாக ஆறுநா ளறைத்துநல் வில்லை
தரைப்பா விரவிகண் டெடுகவு காரி
யுரைப்பாரப் பாவொரு புடத்திற்சுண்ணம் (82)

சுண்ணந்தா னஞ்சுக் கொன்றிடு சாரம்
வண்ணம் பிறக்க வடித்திடு லோகத்தின்
கிண்ணியில் வைத்துப் பனியிலிருக்கத்
திண்ண மறுவகைச் செயநீரி தாமே. (83)

ஆமடி யொன்று வழலையுப் பஞ்சு
தாமக்கரியுப்புத் தான்பத்துச் சேர்த்து
ஏமரு நீரா லறைத்துக் கதிரவன்
தாமுகங் கண்டபின் தான்புடம் போடே. (84)

புடங்கோழி யாறி யெடுக்கநற் சுண்ணம்
திடமான சூடன் சேர்த்தரை நீரால
அடமாய்ப் புடமிட் டெடுக்கவாஞ் சுண்ணம்
திடவீரன் மேவச் சிலமாகும் பாரே. (85)

செலமே மகத்தாஞ் செயநீ ரிதப்பா
வெலவிட்டுப் பூர வீரமுங் கூட்டி
வலமாந் துருசிற் கவசம தாக்கி
நலதிரு சாமம் நயந்திட் டெரியே. (86)

எரிரெண்டு சாமம் ஆறி யெடுக்கத்
துருசது சுண்ணஞ் சொல்லப் படாது
புரிவீரங் கூட்டிப் பொன்னரி தாரம்
தரிகவ சந்தான் தானூது சுண்ணமே. (87)

சுண்ணம் நிமிளை துடிவங்கநீரும்
கண்ணுத லிலிங்கம் கதுப்புள்ள சுண்ணம்

எண்ணுள்ள வீரம் இவரால்நற் சுண்ணம்
பண்ணுந் துருசு பாண்டம தாமே. (88)

ஆமே துருசு சிங்கிக் கிதாகும்
போமே சவ்வீரம் போட்டாற் சிவப்பு
ஆமே மால்தேவிக் கப்பியே வூது
வேமேநற் றாளகம் வெள்ளைய தாமே. (89)

வெள்ளைமால் தேவியில் வீரனைச் சேர்த்து
ஒள்ளிய வங்கத்தி லப்பியே யூத
வள்ளலே மல்லிகைப் பூமலர்ச் சுண்ணம்
தெள்ளு நிமிளை சிறந்திடும் பாரே. (90)

பார நிமிளையில் வீரத்தைக் கூட்டிச்
சாரத்தி லப்பி யூதநீர் வாங்கிற்
காரநற் சுண்ணங் கரைகண்ட தில்லை
வீரனைக் கூட்டி வெண்காரத் தப்பே. (91)

அப்பிப்பின் னூத அரிதாரச் சுண்ணம்
ஒப்புமிக் காரம் ஊறுமுச் சாரமும்
செப்பிய வீரமும் சேர்த்தரை நீரால்
அப்பித் துருசை அதிபுடம் போடே. (92)

புடத்திற் றுருசு புகழ்பெற்ற சுண்ணம்
குடத்தில் ரசத்தைக் குறையாக விட்டுப்
புடத்தின் முகத்திற் குறிபொட் டதாக
குடத்துத் துருசுநீர் கொடுத்தெரித் தெடுத்தே. (93)

எடுத்தபின் சூத மிருகிய போது
தடுத்துச்செந் தூரந் தான்வகை கேளு
கடுத்துக் கருநெல்லிப் பழத்தைப் பிழிய
தொடுத்த முருக்கம்பூ நிறமாஞ்செந்தூரமே. (94)

செந்தூரங் காணி கோடியைப் பேதிக்கும்
அந்தமாற் றுயிரத் தெட்டுஞ் சரியாய்
வந்தே பழுக்கும் வலுத்தசெந் தூரம்
உந்தனுக் குள்ளே அருந்த வோர்மாவே. (95)

உதரத்தி னுள்ளே உறையு மமுதம்
அதரத் தமிழ்நீ ரதுரசங் கட்டும்
பதமட்ட லோகம் பழுக்குஞ் சிறுநீர்
இதமட்ட யோக மிருக்கவல் லாரே. (126)

வல்லாரை கொண்டு மருகற்பங் கொள்ளு
வல்லாரை ஆதித்தன் சந்திர னுளில்
வல்லாரை மூலம் வயமாய்க் கழுவி
வல்லாரை தன்னை நிழலி லுலர்த்தே. (127)

உலர்த்திப்பின் சூரணஞ் செய்திடு காடி
ஜலத்திற் குழைத்து விழுங்கு வெருகடி
மலைப்புக ளில்லா மனசுத்தி கொண்டு
கலக்கமில் லாதே குகைதனைக் காரே. (128)

குகையி லிருந்து கொள்ளப்பா கற்பம்
பகைகள் வராது பதினாறு நாள்மட்டும்
தகைகொண் டிடர்பண்ணுஞ் சதாநந்த வண்மை
நகையாம் பெரியோர்க்கு நலிவுகொண் டாலே. (129)

கொண்டாற்பின் கோப மாகாது சொன்னேன்
பெண்டா ளுறவும் பிளளையி னுறவும்
கண்டாசைப் பட்டாற் காயங்க ளற்பம்
தொண்டாரைப் போலே துணிந்திருப் பாயே. (130)

இருப்பா யிருமூன்று திங்கள் கழித்தால்
நரைப்போய் திரைபோய் நல்வச் சிரகாயம்
திருப்பால்கந் தீசர் தெரிசனை யுண்டாம்
வரைப்பாற்படி மன திரங்குவார் பாரே. (131)

பாராய்நீ இச்சா பத்திய மாயிரு
வாராயுன் கோப மாத்திரங் தள்ளிடு
ஆரேனும் வந்து அழிம்புகள் செய்வார்
போரா டிடாமற் பொறிகோபம் விடுவாய் (132)

விடுவா சிவங்கற்ப மழிக்க வென்று
கடுகோபஞ் செய்யாக் கருத்தனு சரிப்பார்

படுபாவி கற்பம் பழுதுண்டு போகாமல்
திடமா யிருந்து செய்துகொள் கற்பமே. (133)

கற்பந்தா னென்ன கடினங்க ளில்லை
அற்பங்க ளாகும் அதிகோபத் தாலே
தற்பரத் திட்பட் டிருக்கவே மாட்டார்
உற்பனஞ் சொல்லி யுளம்நினை பாரே. (134)

நினையார்கள் கற்பத்தை நீத மறியார்
மனைவிசேய் மாதா பிதாவென்பார் மாண்பர்
கனவினுந் தானே கருதா திருந்தால்
கனிவுறு வண்ணங் காத்திடு வாரே. (135)

இடுகோபம் நீக்கி யிருவடே குகையில்
மடுவூறும் பால்போல் வருடிக்குங் கற்பம்
திடமாயீ ராறு திங்களுங் கொண்டால்
உடல்மீறி யுன்றன் வயதிரு நூறே. (136)

இருநூறல் லாது இனியுந்தான் கற்பம்
திரமா மமுதந் தேக்கிடப் பாரு
கரியானும் ஆநெய் கலக்கு மிதமாய்ப்
புரிவாய்மேல் வாசற் புடையினிற் செல்லே. (137)

செல்லுவாய் நாலு திரவலஞ் சுற்றி
வெல்லுவாய் மண்டலம் மீள அருந்தப்
புல்லுவா யைந்து கதவினுட் பூட்டுஞ்
சில்லென விட்டுத் தெரிக்குங் கதவே. (138)

கதவு திறந்தாற் கயிலாச மப்பா
கதவு திறந்தாற் காரண மப்பா
உதவா தமுதம் உதவிகள் செய்தால்
சதகோடி காலந் தானொரு நாளே. (139)

நாளா யிருப்பான் நந்தீசர் சீஷனாய்
ஆளாவ னப்படி யுகமா யிரஞ்சென்றால்
தாளான யீசன் தழுவணை செய்வான்
வேளானும் பிரமன் விதிதட்ட லாமே. (140)

தட்டலாஞ் சக்கரா யுதத்தையுங் கூடத்
தட்டாலாஞ் சூலா யுதங்களை யப்பா
தட்டலாம் மகரிஷி சாபங்க டம்மைத்
தட்டலாந் தெய்வேந் திரனையுந் தானே. (141)

தானவ னனபின் னுரைத் தணப்பது
தானவ னனபின் னுரைத் தளைவது
தானவ் னனபின் னுரைநாஞ் சார்வது
தானவ னனவன் சதாசிவ சத்தியே. (142)

சத்திய மப்பா தவறில்லை சோதி
ஒத்த வழலையின் உப்பை யறியார்
சத்தி யுவர்ப்பூத் தையலைக் கண்டால்
சுத்தி யறியான் சுழல்கின்ற வாதியே. (143)

வாதிநீ கேளு மகத்தாங் குருமுப்பு
நீதி யறிந்தோன் நிலைத்திட்ட வாதி
ஆதிமூ லந்தான் அரனான உப்பு
கோதில்வா தத்துக் கடிதான் குருவே. (144)

குருமுடிந் தாலுங் கோசபீ சந்தான்
அருளை யறியா னவன்மட்டை வாதி
குருகோச பீச மறைத்திடக் கோசந்
தருநீருங் கூட்டித் தயவா யரையே. (145)

தயவான வங்கந் தன்னை லுருக்கி
சயமாம் வெடியுப்புக் களஞ்சி கொடுத்துச்
செயமாங் கெவுரியந் தப்படி சேர்த்தே
அயகெந்தி யொன்று அதிலீய்ந் திடப்பா. (146)

ஈவாய்கல் வீர னிருகாற் களஞ்சி
ஈவாய் அயநாக மீரிரண்டு கூட்டி
ஈவாய்பின் னாக மிடுகளஞ் சரைத்தே
ஈவாய் தழுவி லெடுக்கக் களங்கமே. (147)

களங்கமஞ் சாடிதங் கத்திற் சேர்த்துக்
களஞ்சிதங் கத்திற் சரிசூதங் கூட்டிக்

களங்க மறவே வுருக்கினங் கண்டு
களங்கறுத் தானே யிருகாற் கூட்டே. (148)

கூட்டிப்பின் கெந்தித் தயிலங் கொடுக்க
நாட்டுச் சிவப்பு நல்லசெந் தூரமாம்
மாட்டி விரும்பு மகா தூப வேதை
ஆட்டிடு மாமடை வந்த மெழுகே. (149)

மெழுகினிற் றூம வேதைக ளில்லை
தழுகோச பீசம் வேதைச் சரக்கு
கழுவடி நாய்போற் கழிந்தலை யாதே
ஒழுகுசெந் தூர மொருமா விடையே. (150)

மாவிடை செல்ல ரவிமதி கோடி
மாவிடை தன்னால் வயதிரு நூறு
மாவிடை கொள்ள வச்சிர காயம்
மாவிடை யூட்ட வங்கம் பழுப்பே. (151)

பழுக்குமே வங்கம் பத்தரை யாக
பழுத்திடும் லோக செந்தூரம் பார்த்தால்
பழுத்திடு மட்ட லோகமு மப்பா
பழுத்திடும் பூவைக் குருசெய்து பாரே. (152)

செய்திகள் சொன்னேன் திறமாகக் கண்ட
செய்திகள் விண்டேன் தேசத்துள் ளோர்க்கு
செய்துமுப் பூவு முடிந்திட்ச் சித்தி
செய்துகொண் டிந்தச் செயவேதை பாரே. (153)

வேதைபொய் யல்ல வெளிகண்ட துண்மை
வேதைச் சரக்கை மறந்து விடாதே
வேதைச் சரக்கு மிளிர்கோச பீசந்தான்
வேதை யெழும்பும் வெளிகண்ட போதே. (154)

கண்டரின் செம்புங் களிம்பற்ற செம்பும்
வண்டில் குருவும் வளர்ந்தமுப் பூவும்
கொண்டபூ நாகங் குளேரோமங் கூட்டி
அண்டத்தி னீரா லரைத்தே யுருக்கே. (155)

உரைத்தார் சிலசில நூல்தோறு மப்பா
புரைத்தா ரதையு மறியார் புவியோர்
பரைத்தாளிற் பூசை சிவபூசை பண்ண
தரைத்தான மூலந் தான்தோணும் பாரே. (186)

தோணும்பொன் வாதம் தொண்டடி மூலம்
காணலு மாகுங் களிச்சுண்ண மப்பா
பேணிய வெள்ளை பிறரறி யார்கள்
பூணுவான் நந்தி பூசையைச் செய்யே. (187)

செய்யுடன் வீரன் வாலையுஞ் சேர்த்து
மெய்யுடன் சூதம் வீரத்திற் சேர்க்க
ஐயனீ நாகம் அரைநாகங் கூட்டிச்
செய்யளவா யையைச் சேர்க்கச்செந் தூரமே. (188)

செந்தூர மாவிடை செம்பினிற் றூக்க
வந்ததும் எட்டு மாற்று யிருக்கும்
எந்த இடத்துக்கும் எய்திடும் பாரு
சுந்தர ராணை சொற்குரு சேரே. (189)

சேரா திருக்கச் சிதறி விடுங்காண்
வாரா யடியை வளம்பண்ணிச் சேர்ப்பாய்
சீரான தாளகத் தீயமெ டுத்து
வீரனுஞ் சூதனும் மேலாட்டு வாயே. (190)

ஆட்டிடு வாய்பதி னென்றுஞ் சரக்கைக்
கூட்டிடு வாய்குரு கெந்தியுங் கூட்டி
மாட்டிடு மாகுகை தன்னிற் களங்கம்
தீட்டிடு காலடயிற் செந்தூர மாமே. (191)

ஆமகாற் பொன்னட்ட லோகமு மப்பா
போமிதென் வேதை பொய்யல்ல கேளாய்
ஏமநீகண்டா லேமனும் வாரான்
காம மிகுந்த கற்பத்தைக் கொள்ளே. (192)

கொள்ளுவான் கையான் மிளகுமொன் றாகக்
கொள்ளுவாய் நீயேழு வருஷங் குறியாக

கொள்ளுவாய் பின்னருக் கொப்புநீ யப்பா
தள்ளிடு கோபத்தைத் தான்மாத் திரமே. (193)

இரமாகப் பத்தியஞ் சென்று வரவே
பரமான சக்கரை பால்பழ மாகும்
உரமான வூணும் மிகுதியா காது
இரவினிற் றாக்கமிக வென்றுமாகாதே. (194)

ஆகாநற் கற்பந்தான் ஆகத் துறைத்தால்
சாகாத வாழ்வு தான்வருங் கண்டாய்
போகரைப் போலே புணர்வாளிந் திராணி
ஏக மனதா யிருந்தோர்க்கி தாமே. (195)

ஆமே கெவுன மழகுள்ள காயம்
தாமே பெருகும் தனித்த ரிஷிகாண்
நாமேகை கண்டோம் நவின்றமூ வாயிரம்
பூமேலுண் டறிஞர் புலனறி வாரே. (196)

அறியாத மட்டை யடங்காத கோபி
அறிந்தோ ரொருவ னவன்சித்த னவன்
செறிந்தே யிருக்குஞ் சிரத்தி னமுதம்.
உறைந்த மதியமு தந்தனை யுண்ணே. (197)

உண்டவன் ஞானி யோகி யவனும்
உண்டவன் வாதி யுலகசித் தாதி
கண்ட கெவுனன் கடலுங் கடந்தோன்
தொண்டர்கள் கோடி தொழுதுசெல் வாரே. (198)

செல்லு மிரவிதான் திரமான சத்தி
செல்லுமிந் தப்பா சிவமான ரூபம்
செல்லுந் துளிர்தான் சிறுநீர் சிவகங்கை
செல்லுமுப் பூவுஞ் சிறந்த குருவே. (199)

குருவான தந்தையென் நந்தீச ரப்பா
திருமூலர் நானே செய்தொழில் சொன்னேன்
கருவூரன் கொங்கணன் கமல னிவர்கள்
தருபோக னென்சேய் தமிழறி முற்றே. (200)

முற்றிற்று.